உ

ஸ்ரீராமஜயம்.

தங்கம்மாள்.

என்னும்.

ஓர் இனிய செந்தமிழ் நாவல்

இஃது

பண்டித கே. எஸ். இராமகிருஷ்ண பிள்ளை. பீ. ஏ.

அவர்களால் இயற்றப் பட்டது.

சென்னை.

திருவல்லிக்கேணி

ஸ்ரீ "வரணீபூஷணம்" பிரஸ், சொந்தக்காரர்.

R. வைத்தியநாதய்யர்.

அவர்களால்

வெளியிடப்பட்டது.

1914

[விலை அணா. 12.

காப்பிரைட்]

Printed at the

Sri "Vanee Bhooshanam" Press.

Triplicane, Madras.

முகவுரை.

பாரதநண்பர்களே !

தற்போது நம்தமிழ் நாட்டில் புத்தக மென்பதை எட்டுணையும் பாகுபாடறியாத குக்கிராமத்தில் கூட மன மகிழ்ச்சியை மகிழ்ந்தூட்டதக்க இனிய செந்தமிழ் நாவல்கள் பரவி வரினும் அவை இருவகுப்பாயுள எனின் அது நாவலென்றும் பெயர் பூண்டு கதையாக மட்டும் உலாவிவருவது தாம். ஆயுர்வேத பாஷைபரன்று இவ்விருவகுப்பி லிரண்டாவதுளது சாத்தியமென்றும் மற்றது அசாத்திய மென்பதையும் நேயர்கள் நன்கறியதக்கதே.

இனியும் நாவலென்பது கட்டுக்கதை யென்பதும் அதன் அங்கங்களான வீரம் ! கருணை ! சிருங்காரம் ! வைராக்கியம் ! வீரியம் ! விசித்திரம் ! வினோதம் ! ஆச்சர்யம் ! சோகம் ! சொல்வன்மை ! சாஸ்திரம் ! முதலிய இன்னும் அனேக பாகு பாடுகள் அமைந்த கதையாகி வாசிப்பவர் மனதைக் கவர்ந்து புன் மனத்தரையும் நன் மனத்தினராய் செய்வதன்றே சிறந்ததும் நூலாசிரியன் செய்வன்மையை "கிரிமேற்றீபம் போல்" விளக்குவது மாயிருக்கும். இது விஷயம் இந்நூலாசிரியன் வெகு சிரமத்தைத் தாங்கி யிருப்பான் "கற்றோரைக் கற்றோரே காமுறுவர்" என்றவாறு நாம் காமுறுதலினும். இவ்வாசிரியன் நம்மாணாக்கருள் ஒருவனாகி யிருந்து. இச்சிறுபிராயத்தில் இம்மாதிரி பெரும் பாரத்தைச் சுமந்து திரியத் தலைப்பட்டு விட்டானே. எதற்காக இப்பெரும் பாரம் சுமக்கல் வேண்டும் ? அந்தோ ! ஈசுவரச் செயல் அக்காலை மாணாக்கனை வருத்தமணுகாதிருந்ததே நம்மள் பாக்கியம் எனினும் நம் பெயர் வீணாப் போயதில்லையே எனமகிழ்வோம். நிற்க,

II

நம் மாணுக்கனுல் எளிய செந்தமிழ் நடையில் வரைந்து லாவு மிப்புத்தகம் எவ்வகுப்பாருள்ளும் பழக்க வழக்கங்களால் நேரிடும் தீமையனைத்தும் அனுபவத்திற் றேர்ந்தவாறு பற்பல விளக்கி யிருக்கும் இவைபன்றி தற்கால நாகரீகரீகத்தைச் சான்று, விவாஹம் தம்பதிகள் சம்மதத்தை அனுசரித்தே நடத்தப் படவேண்டு மென்பதும், ஹிந்துப்பெண்கள் கல்வி கற்றல் வேண்டு மென்பதும் வற்புறுத்தி வரைந்துளதற் கேற்றவாறு அனேகம் நீதிகளும் ஆங்காங்கு தொகுத்துளா ரென்றும் நாம் கூறியறியாது தாமேவாசிக்கு மளவு உணர்வீர்.

இனியும் இப்புத்தகம் எவ்வகுப்பினரும் எவ்வெச்சாதியாருள்ளும் ஆண்பெண்ணிருபாலரும் நன்கு கை வழங்கத்தக்க தென்றும் ஏனைய நாவல்களைப் போல் படித்தபிறகு அலுமாருவி லிட்டுப் பூட்டும் வகையற்று மென்மேலும் கையாட ஐயங் கொள்ளாரென்பதும் அனுபவத்திலறியத் தகும். நிற்க,

இப்புத்கத்தை அச்சிட்டு வெளியிடும் புண்ணி கைங்கர்யத்தை மேற் போத்துக்கொண்ட கனம் R. வைத்தியனுதய்யர். அவர்களுக்கும் ஆதரவோடிதைக் கைய்யாடக் காத்திருக்கும் பாரத சகோதரர்களுக்கும் மனப்பூர்வமான வந்தனங் கூறுவதுடன் எனது செல்வனும் K. S. இராமகிருஷ்ண பிள்ளை, இனியும் இத்தகைய முயற்சி எடுத்துழைக்கு மாறு வேண்டப் படுகிறது.

இங்ஙனம்.

Krishnan Coil 3—3—1914 } பண்டித சுப்பிரமணியம் அய்யர்.

உ

சிவமயம்

தங்கம்மாள்.

முதல் அத்தியாயம்

ஹா! ஹா! என்ன மனோஹரமான நந்தவனம். என்ன சுகந்தமான புஷ்பச் செடிகள். அந்த ரோஜா புஷ்பத்தைப் பார்த்தால் மிக ஆனந்தமாயிருக்கிறது. அதிலுள்ள ஒவ்வொரு புஷ்பமும் நெருப்பைப் போல் பளபள வென்று பிரகாசித்து வெகு ரமணீயமான இதழ்களுடன் மலர்ந்திருக்கிறது. அதன் வாசனையை என்னென்றுதான் சொல்வது. எப்பேர்க்கொத்த தபோதனர்களும் இப்புஷ்பத்தைச் சூட இச்சை கொள்வார்களே. ஹா! நவமல்லிகையானது வெண்மை நிறத்துடன் வருபவரைப் பார்த்து பதில் கூறுவதுபோலும் நிற்கின்றது. பாரிஜாதம் சிவப்பான காம்புடனும் மஞ்சள் நிறத்தையுடைய நுனியுடனும் ஓர்வித நல்முத்தைப்போல் பளபளவென்று பிரகாசிக்கிறது. அதன் கொடிகள் அதிதிகளை அன்போடு அடிபணிந்து ஆதரிப்பன போலும்வளைந்துகாணப்படுகின்றன, என்ன! இருவாட்சிவகுளம்புன்னகம்முதலிய செடிகளையும் யாராவது கண்டால் இந்திரனது உத்தியானவனமோ என்றையுறத்தக்கனவாயுமிருக்கிறது. அப்பா! இந்தமாருதத்தின் ஸ்பர்சம் இதுவரையில் உணர்ந்ததில்லையே? இதுபட்டமாத்திரத்தில் தானே என்ஜன்மம் சாபல்யமாயிற்றென்று சொல்லிக்கொண்டே அங்குள்ள மாளிகையின்மீதுட்கார்ந்து ஆடி சேடி! என்றதும் மங்கையொருவள் ஓடோடியும் வந்து அடிபணிந்து ஏதோ பேசிக்கொண்டிருந்தசிறிது நேரத்திற்குள் அன்னவள் எங்கேயோ ஏகினளும் அடியில் வருமாறு துக்கிக்கலானாள்.

ஐயோ! தெய்வமே! எனதாருயிர்த்தோழா! நீர் இந்தமழையில் எங்கே அகப்பட்டுக்கொண்டீர்? அந்நேரம் வருந்தி என்னை சிந்தித்தீரோ? வழிதெரியாமல் எவ்விடம் சென்று உயிரிழக்கலாயிற்றோ? என்று வாய்வறண்டு புலம்பி எவ்விடத்தும் ஓடி இடம் இடமாய்த் தேடியும் காணுமற்றுக்கித்து சிறிது நேரம் மூர்ச்சையாயிருந்து தெளிந்து பின்னும் சொல்லலானாள்.

ஓ! கண்ணே! உம்மை அறிந்த அந்நாள்முதல் இந்நாள் வரையினும் பிரிந்தறியேன். நீவிரும் என்னை விட்டுச்சற்றும் நீங்கினதில்லையே! உம்மையே நாயகனென்று உமக்கு உபசாரம் செய்துவந்தேனே! நாம் உடலிரண்டும் உயிரொன்றுமாகவிருந்து வந்தோமே! உம்மைப்பிரிந்த என்னுயிர் இன்னுமிருக்கிறதே! என்ன மோசம் போனீரோ! யார் துர்ப்போதனையால் எங்கு அகப்பட்டுக் கொண்டீரோ! ஆயினும் நீவிர் உயிர் துறந்தபரிதாபம் எவ்வகைப்பட்டதோ! ஹா! இப்பூலோகவாழ்க்கையை எவ்விதம் துறந்தீரோ! அந்தோ! உயிருடனிருக்க இக்கோள் முடித்துவிட்டார்களோ! உம்மைமறுபடியும் காண்பேனோ! என்னகத்தன்பே! இப்படியும் நமக்குப்பிரிவினை காலம் வருமா! தெய்வமே தெய்வமே! என்செய்வேன். இப்படியும் என்தலையிலெழுதி விட்டனையா? என்னைப்போல் கொடும்பாவி இனி இவ்வுலகில் யாரிருக்கப் போகிறார்கள், நான் பட்ட அவஸ்தைகள் எல்லாம் போதாதா? இவ்வொருவருக்காக யார் யார் பகையை எல்லாம் சம்பாதித்தேன். அதிருக்க இப்போது உம்மை இழக்கவும் நேரிட்டதே. அந்தோ! உம்முடனேரிரவிருந்தாலும் நான ஆறும் வழிகாண்பேனே? ஐயோ! கடவுளே இனி என்னசெய்வேன். எப்படி உயிர் தரிப்பேன். இனி இவ்வுலகில் யாரெனக்குதவி. ஐயோ! கேசவமுதலியாரே! உம்மை யன்றோ துணைகொண்டேன். நீர் எங்கேயோ போய்விட்டீரே! நான் பரதேசியாகிவிட்டேன். ஹா! ஹா! எனக்கு யாதேனும் ஒருவழி சொல்லிவிட்டுப் போகலாகாதா? என்னைத் தனியே இவ்வுலகில் விட்டுச்செல்லவும் மனந்துணிந்ததோ? என்று பலவாறு பிரலாபித்துக் கொண்டே ஒரு பாலை, படுக்கையினருகே உட்கார்ந்திருக்கிறாள்.

அவளுக்கு பதினாறு வயதிருக்கலாம். முகமலர்ந்து பூரணசந்திரன்போல் ஒளி வீசுகின்றது. பங்கஜத்தை யொத்த

கண்களிலிருந்து அருவிபோல் கண்ணீர் தாரைதாரையாய் வடிகிறது. வண்டுகள் மொய்க்கும் கூந்தலானது இருபுறங்களிலும் ஸ்தனங்களை மறைத்துக்கீழே விழுந்துபுரண்டுகொண்டிருக்கின்றது. அடிக்கடி உண்டாகும் பெருமூச்சுகளால் பங்கஜமொட்டையொத்த அவள் இருஸ்தனங்களும் அசைந்தாடுகின்றன. இராவுஒருமணி இருக்கலாம். அந்த அம்மாள் இவ்வித கோலத்துடன் தனியே அவ்வறையிலிருக்கிறாள். அங்கு மினுமினென்றுஓர் விளக்குமட்டும் மின்னுகின்றது.

ஆகாசமானது மேகபரிபூர்ணமாய் மழைவரும் சம்பவமாயிருக்கிறது. கார்மேக சகலங்கள் அதிகமாகக்கொண்டு அந்தகாரம் கவிழ்ந்து மரம் மட்டைகளொன்றும் தென்படவில்லை. அடிக்கடி பளீர் பளீரென்று மின்னலின்பிரகாசம் பின்னமின்றியே காணவும் படுகிறது. இவ்விதம் மின்னிக்கொண்டிருந்துசிறிது நேரத்துக்குமுன் பெய்த பெருமழையால் ஆங்காங்குள்ள துண்டுதுணுக்குகளை அடித்துக்கொண்டோடுகின்றன நீரின் சப்தம் ஸ்பஷ்டமானத்வனிகளை உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன. இனியும் அடிக்கடி ஓர் வித ஜந்துவால் "ஜீங் ஜீங்" என்னும் ஜீங்காரத்வனி உண்டாய்க் கொண்டிருக்கின்றன. மரத்தினின்றும் காற்று தட்டி விழுகிறநீரின்சப்தம், ஓடிக்கொண்டிருக்கும் வெள்ளத்தில் ஓடும் நாய் நரிகளின் காலரவம், மரத்தில் தங்கியிருந்தபறவைகள் நனைந்து குளிர்ந்து இருந்த இறக்கையை உதறிச்சிறகடியால்உண்டாகும்சப்தம், தற்போதுநின்றிருந்த வாயுபகவானின் உரத்தகர்ஜனை இவ்விதக்கோலத்துடன் கூடிய இராத்திரி நிசி நேரத்தில் இவ்வுலகில் பைசாசங்கள் கூடியும் தூங்கும் வேளை யாரும் துணையன்றி தனியே உட்கார்ந்து ஓர் மங்கை ஏதோ ஆற்றாமையால் அழுதுகொண்டிருக்கிறாள்.

இவ்வாறே பொழுதும் விடிந்தது. ஆதித்தனும் அவ் வணங்கியின் அந்தகாரத்தைநீக்கக் கருதிவந்தவன்போல் கீழ்திசையில் உதயமாயினான். பசுபக்ஷிகளும் கோலாஹலத்துடன் பாடவாரம்பித்தன பூலோகவாசிகளும் தம்தம்கருமங்களிற் பிரவேசித்தனர். ஆயினும் அக்கன்னியின் வீட்டுவாயில் திறக்கப்படவில்லை. நிற்க; தற்போது யௌவனப் பிராயத்துள்ளவன் அடர்ந்துவளர்ந்த கரிய கேசஜாலத்தால் அவனது மதி முகம் கவரப்பட்டிருக்கிறது. அவன் அரோக

இடகாத்திரமுள்ள சுந்தரபுருஷனாய் விளங்குகிறான். அவனது சர்வ அங்கமும் சந்தனப்பூச்சின்சோபையால் திகழா நிற்கின்றன. இவன் அவ்வீட்டுவாயில் திறக்காதிருப்பது கண்டோ அல்லது அவ்வீட்டாரிடம் யாதேனும்பேசவேண்டியதுகொண்டோ கதவில்தட்டி "தங்கம் தங்கம்"என்றிரண்டோருவிசை கூவினதும் ஓர் யுவதி கதவைத் திறந்து வணக்கமாய்நின்றதைக்கண்ட அந்தவாலிபன் தங்கம் நீயேன் இவ்வாறிருக்கிறாய்? உனது கண்ணும் விழியும் கறுத்திருக்கின்றன? உதடுவெளுத்திருக்கிறது. முகக்கமலம் வாட்டமுற்றிருக்கிறது. காரணம்யாது?என்றதும் ஒன்றுமில்லை அண்ணா. இரவுகொஞ்சநேரம்தூக்கமற்றிருந்தேன். அதுதானிப்படியிருக்கிறது. என்ற தங்கம்மாளை நோக்கி தங்காய்! நீ நேற்றுநடந்த பொய்யைக் கேட்டு இரவெல்லாம் தூக்கமன்றி ஏக்கத்துடனிருக்கிறாய் போலிருக்கிறதுஎன்றதும், அம்மங்கை பரிப்பிரமத்துடன் என்ன அண்ணா! நேற்று நடந்தவர்த்தமானம் பொய்யா?பொய்யாகத்தானிருக்கும். காலைதானே இங்கு வந்திருந்து போனார். அதற்குள் இறந்துவிடுவாரா? இதென்ன உலகமப்பா? இல்லாத பொய்யை எல்லாம் இசைக்கிறாப் போலிருக்கிறது. ஆனாலும் அண்ணா இறந்துவிட்டாரென்று சொல்லும் வதந்தி பொய்தானா? அண்ணா நன்குவிசாரித்ததுண்டா? அப்படியானால் உண்மைவிளங்குமே என்ற அவ்வாரணங்கையை நோக்கித் தங்காய்! நான் நன்றாய் விசாரித்தாயிற்று. நேற்றிரவு எனக்கு இதுதான் வேலை. நான் அவரை இராமபுரத்துக் கருகாமையிற்கண்டு இத்திருட்டுச்செய்தியை விண்டேன். அவர்எல்லாமிருக்கட்டும் "நொறுங்கத்திட்டின் நூறுவயது" என்ற பெண்டுகள் பழமொழிக்கொப்ப என்னை இறந்தானென்று சொல்லிக்கொள்வதெல்லாம் எனக்கு தீர்க்காயுள் தான். இதையிட்டு நீவிராவது தங்கம்மாளாவது கவலை கொள்ள வேண்டியதில்லை. நான் கூடியசீக்கிரம் வருவேன். எல்லாம் வந்து பார்த்துக் கொள்ளலாம். நீவிர் இந்த விபரம் தங்கம்மாளுக்குத்தெரியப்படுத்தி நாளைநம்மள்வீட்டுக்கு வரவேண்டுமென்றும்சொல்லிப் போயிருக்கிறார். நான்இச்செய்திஉனக்குத்தெரிவித்து சுந்தரபுரி செல்வதாய்த் தீர்மானித்துவிட்டேன். அன்றிச்சொல்வதெல்லாம் சுத்தப்பொய். தங்கம் இதெல்லாம் சோமசுந்திரத்தினது கலகம். நீ என் துக்கிக்கவேண்டும்"அவனன்றி யோரணுவுமசையா"தெனப் பெரியவர் மொழியை ஒப்ப நடப்பதெல்லாம் முறையே

நடக்கும்' என்றது கேட்ட அப்பெண்மான் கண்ணினள், சந்திரனைக்கண்ட குமுதம்போல்முகமலர்ச்சியுற்று அண்ணா! தாம் இப்போது சந்திரபுரிபோகப் போகின்றீர்களா வென்றதும் அந்த வாலிபன் ஆம் நான் இப்பொழுதே போகின்றேன். நான் அவ்விடம் போவது யாரும் அறிய வேண்டாம். உன்னிடம் யாராவது கேட்டால் எங்குபோனாரோ? என்று சொல்லிவிடு. இனியும் அப்பாகூடவும் அறிய வேண்டாம். ஏனெனின் நமது தாய் என்று இறந்தாளோ அன்றே அப்பா சிற்றப்பனாகிவிட்டார். அல்லாமற்போனால் நமது சிற்றன்னை தாகுபேசின தடியனுக்கு உன்னைக்கலியாணம் செய்ய விரும்புவாளா? அதிருக்கட்டும். நான் போய் வருமளவும் உன்னையார்என்னசொன்னாலும் நீமறுத்தரம் கூறவேண்டியதில்லை. நான் வருமளவும் நீ கடவுளையே பிரார்த்தித்துக்கொண்டிரு என்று சொல்லி அவ்வறையிலிருந்த ஓர் துப்பாக்கியை மட்டும் கையிலெடுத்துக்கொண்டு போய்விட்டான்.

மாதமோ புரட்டாசி மாதம். வெயிலின் வெப்பம் மகா உக்கிரமாயிருந்தது. காற்று தீப்பொறியைப்போல் நாலாபக்கமும் கனத்த உஷ்ணத்துடன் வீசியது. ஆகாயம் பழுக்கக்காய்ந்த செப்புத்தகட்டையொத்திருந்தது. தெருவிலெழும்பும்புழுதிப்பொடிகள் நெருப்புப்பொடிகளை நிகழ்ந்திருந்தன. ஆனால் அவன் உடம்பில் வேர்வை ஆறுய்க்கொட்டிற்று. அவன் ஒவ்வொருவேளை மரத்தின் நிழலில் ஒதுங்கி மகாகஷ்டத்துடன்நடந்து வழியிலே அழகாய் கருங்குளிர்களாலும் நறுமணம் கமழும் மலர்களாலும் பொலிந்து விளங்கியஓர் மரத்தினிழலிலிருந்து சற்றிளைப்பாறினான். கொஞ்சம் களைப்புத்தெளிந்தது. ஆனாலும் பசியினால் மிக்க வருந்தினான். அதையும் அவன் பொறுத்துக் கொண்டானபினும்தாகத்தால்படும்பாதைசகிக்கமுடியவில்லை. ஆதலால் அவன் மெல்லமெல்லநடந்து அந்தநெருப்பாற்றை நீந்திக்கடந்து அந்திநேரத்துக்கு முந்தியே ஓர்சத்திரமாகிய அக்கரைசேர்ந்தான். அங்குகுளிர்ந்த ஜலம் கொணர்ந்து குடித்துச் சற்றிளைப்பாறிசொற்ப ஆகாரமுண்டு தன் பிராணனைக் காப்பாற்றலாமென்று தனக்குள் தானே எண்ணிக்கொண்டு எங்கும் திரிந்தான். ஐயோ! அந்தவழி அம்பலம் இடிந்து பொடிந்து கிடக்கிறது. ஒருமனிதரும் காணப்படவில்லை. அவன் அங்கு

மிங்கும் சுற்றிச்சுற்றி உரத்துக் கூவினன். ஒருவரும் ஏனென்று
கேட்பாரில்லை இதுகண்டு துக்கமுற்றஅவன் தனிமையாய் அந்த
நிர்ஜனமானப் பிரதேசத்தில் அவ்விருளடைந்த வழி யம்பலத்தை
நாலாபக்கங்களும் பார்த்துக்கொண்டே இருந்தான். எங்கு பார்த்
தாலும் மாந்தர்யாரும் கண்ணுக்குத் தென்படுவாரில்லை மனுஷ்ய
சப்தமே இல்லை. கேவலம் நாய் நரிகளின் கூச்சல் செவிடுபட
முழங்குகிறது. இதுகண்டுபயமுற்றவனுகியும் பசியின்தாபம் சகிக்க
மாட்டாதவனுகியும் அவன் அந்த வழியம்பலத்திற்றுக்கிதனுய்பிஸ்
தோக் கைபனுப் இடை இடையே பெருமூச்செறிந்தவனுப்ச் சிறி
தயர்ந்து நித்திரைபோனுன்.

இவனுரெனின் இவ்வத்தியாயம் முன்னிற்குறித்த யுவதியான
தங்கம்மாளின் சகோதரனும் சுந்தரபுரி செல்வகேசவ முதலியாரின்
அந்தரங்க நண்பனுமாகிய பானுமார்த் தாண்டனென்னும் பெயரு
டையவர் தாம்.

2-வது அத்தியாயம்

மறுநாளிரவு உத்தேசம் பத்துமணி யிருக்கலாம். முதல்
அத்தியாயத்திற் குறித்த யுவதி தன் வீட்டில் ஜபதபாதி முடிந்து
போஜனமருந்தி முற்கூறப்பட்டுள்ள அறையில் ஓர் நாற்காலியி
லுட்கார்ந்து ஏதோ பாராயணம் பண்ணிக் கொண்டிருக்குந்தருவா
யில் அம்மா தங்கம்! நீயாது செய்கின்றாய் என்று சொல்லிக்கொண்
டே பெண்பாலொருவள் வந்து அங்குள்ள ஓர் சோபாவின்மீதுட்
கார்ந்தாள். அவளுக்கு வயது உத்தேசம் முப்பத்தாறிருக்கலாம்.
மூன்றாம்பிறையைப் போன்ற கபாலமும், கோவைக்கனியையொத்த
வாயும், ஆலிலையையொப்பான உதரமும், தாழம்பூவை யொத்த
தேககாந்தியும்உடைய அம்மங்கையைபார்க்கும்போதே அந்தஸ்தில்
கொஞ்சமும்குறைந்தவள் அல்லவென்பது யாதும்சமுசயமின்றியே
தோன்றுகிறது. இதுநிற்க,

அம்மங்கைக் காசியின் ஆகமனம் கண்டு தங்கம்மாள் எழுந்து வந்தனைசெய்து வணக்கமாய் நிற்பதைக்கண்ட அவள் அம்மா! உட்காரு ஏன் நிற்கின்றாய்? நீ என்ன! மிகக்களைத் தவள்போலிருக்கிறாயே! உனக்கென்ன களைப்புக்குக்காரணம் ஒன்றுமில்லையே? கல்வியிலோ பி. ஏ. வரையில் படித்தாய்விட்டது! இனியும் பெண்கள் நகைகளின் பேரில்தான் திருப்தி அடைவாரென்று சொல்வார்கள். ஆனால் உனக்கு அதுவும் இல்லை. வேண்டியமட்டும் நகைகள் செய்து வைத்திருக்கிறது. அவை உன்னைப்போல் இனியும் பத்துப் பிள்ளைகளுக்குப் பூராவாய் அணியலாம் எனினின் அவைகளை எல்லாம் நீ தானாகவே அணிந்து அனுபவிக்கிறாய். இதுவிஷயத்திலும் நீ கவலை கொள்ள இடமில்லையே? இனியும் உங்களப்பா நல்லதனவந்தரொருவரைப்பார்த்து உனக்குச்சீக்கிரத்தில்மணம் முடிக்கமுயற்சித்துவருகிறார். இந்நாளில் ஏற்கெனவே நம்மூர் வர்த்தகர் ஸோமசுந்திரம் அவர்கட்கு உன்மீது காதலிருப்பதாயும் அவர்தமக்கு உன்னைக் கன்னிகாதானம் செய்து தரவேண்டுமென வேண்டப் பட்டபடி இசைந்தாயிற்று. தங்கம்! நீ ஸோமசுந்திரம் அவர்கட்கு மனைவியாக என்னதவம் செய்துவிட்டனை? ஆம் கடவுளைப் பூஜிக்கும் பயன்கை மேலென்பது பொய்யாமா? நீ நாள்தோறும் சூரியநமஸ்காரம் செய்து வரும்பயனிதென்றெண்ணுகிறேன். எப்படியானாலும் நீ பாக்கியசாலி என்பதற்குத் தடையில்லை. இனியும் "யானைக்குப் பிறந்தது பூனையாய்ப்போமா"? அதுபோல் நீ நல்ல பாக்கியசாலி வயிற்றில் பிறந்து அதிர்ஷ்டமில்லாதவளாவையா? ஆனால் இவரன்னம் உனக்குக் கிட்டுமென்றும் நீ இவர் மனைவியாக பாக்கியம்செய்வாயென்றும் கனவிலும் நினைக்கவில்லை. ஏதோ முந்நாள்செய்த பூஜாபலமென்றே சொல்லலாம் தங்கம்! அவரென்னடி சொத்தில்லாதவரா? சுகமில்லாதவரா? அவர்நினைத்தால் ஆயிரம்பேர் வருவார்கள். ஆயிரம் ஆடவர்கள்உனக்குக்குற்றேவல்செய்வார்களே? அவரென்ன ஒருபிள்ளைதானே? அவருக்கு அக்கமுண்டா பக்கமுண்டா? அவருக்குள்ள சொத்து ஆயிரம்குடும்பத்தார் பிழைக்கலாமே? இப்படியுள்ளஉனது பாக்கியமே பாக்கியம். அம்மா இந்தப் பாக்கியம் நீ அடையவும் நாங்கள் அதைநோக்கி சுகிக்கவும் கிட்டினதே சிலாக்கியம். இனியும் நாளையன்றைக்கு நிச்சிதாம்பூலம்செய்து நிகழும் கொல்லம் 1816ம் ௵ சாதாரணவருஷம் தக்ஷிணாயனமான கார்த்திகைமாதம்

22ம் தேதி சிரவண நக்ஷத்திரமும்கூடினசுபதினத்தன்று உதயாதி பா நாழிகை12-க்கு மேல் 16-க்குள்ளாக கும்பராசிநோத்தில் திரு மாங்கல்யதாரணத்திக்கும் நிச்சயமாய்விட்டது. இன்று புரட்டாசி பூரா முப்பதாய்விட்ட தல்லவா? இனி ஒருமாதமும் சில்லரையு மிருக்கிறது. கலியாணத்துக்குநீ முன்போலிராமல் வீட்டுவேலைகளைச் சரிவரமுடிக்கவேண்டும். புருஷனைக் கடவுளாய் மதித்துப் பக்தி யாய்க் காரியாதிகள் நடத்தவேண்டும். இவைகளையிட்டு நான் உனக் குச் சொல்லவேண்டியதில்லை. நீ எல்லாம் கற்றவளாயிற்றன்றோ? என்றுசொன்ன அம்மாளை நோக்கித்தங்கம்மாள் ஒரு அக்ஷரம்கூட பதில் சொல்லாதிருந்ததைக் கண்ட அந்த அம்மாள் தங்கம் ஏது ஒன்றும் பேசுகிறாயில்லை இனியோர் வர்த்தமானம் கேள்விப்பட்டனையா? சுந்தரபுரம் செல்வகேசவ முதலியாரென் ஒருரு சிறுவனை எதிர்வீட்டுக் கமலாம்பாள் கலியாணம் செய்யக் காதல் கொண்டாளாம். அவளப்பா ஏகாம்பர முதலியாரறிந்து கம லாம்பாளைக் கண்டனை செய்தாரென்றும் கேள்வி. இது கேட்டு இதுவரை ஒன்றும் பேசாது மௌன முற்றிருந்த நமதுதங்கம் மாள் சிறிது வாய் திறந்து அம்மா நேற்று எதிர் வீட்டில் நடந்த சங்கதி என்னவென்று கேட்டாள்.

அந்த அம்மாள்—தங்கம் நம்பள் வீட்டுக்கு அடிக்கடி உங்க ளண்ணாவோடுகூட ஒரு சிறுவன் வருவானன்றோ? நீ அவனை அறி வாயா? நீ அறியக் கூடுமே.

தங்கம்மாள்— ஆம் அம்மா நான் அவரை நன்றாய் அறிவேன். நானும் அவரும் ஒரு கிளாஸில் படித்தவராயிற்றே?

அம்மாள்—அப்படியா? தங்கம் அவன் என்ன பாஸ் பண்ணி யிருக்கிறான்.

தங்கம்மாள்— அம்மா அவர் இரண்டுவருடங்களுக்கு முன்னர் என்கூட பீ. ஏ. பரீட்சைக்கு வந்ததில் இருவரும் ஜெயித்தோம். ஆனால் இவ்வருஷம் நான் பரீட்சைக்குப் போகவில்லை. அண்ணா வும் அவரும் பீயல் பரீட்சைக்குப் போனதில் இவர் சென்னை இரா ஜதானியில் முதல் வகுப்பில் பாஸ்பண்ணி இருக்கிறார்.

அம்மாள்—அப்படியா? உன் அண்ணா எந்த வகுப்பில் தேறினான்.

தங்கம்மாள்—என்ன செய்கிறதம்மா ஏதோ அாதிர்ஷ்டம். அண்ணு இந்தவருடம் பரீட்சையில் தோல்வி அடைந்துவிட்டார். அடுத்தவருடம் பரீட்சைக்கு எழுதமுயன்று வருகிருர்.

அம்மாள்—அந்தச்சிறுவன் செல்வகேசவ முதலியைக் கமலாம்பாள் கலியாணம் செய்துகொள்ளப் பிரியப்பட்டாளாம். அதையறிந்து அவள்தந்தை சண்டையிட்டாராம்.

தங்கம்மாள்—அவள் தந்தை எதற்காகக் கலியாணம் செய்ய இசையவில்லை?

அம்மாள்—தங்கம்! நீ இதை அறிபவில்லைபா? இவனென்ன தனவந்தனு? இல்லை; கொஞ்சம் கஞ்சிக்குண்டு. அதுவும் வருணபகவான்சற்று உபேக்ஷையாயிருந்துவிட்டால் திண்டாட்டம்தான். அல்லது ஜனக்கட்டுள்ளவனு? தைரியமுள்ளவனு? ஐயோ பாவம்! சின்னப்பையன். அவனுக்கென்னதெரியும். இன்னும் பால்நாற்றம் மாறவில்லையே. அவனுக்கு என்னவயது? இருபத்தைந்துதானே இருக்கும். என்னமோ "குருட்டுயோகம் கண்ணைக்கெடுத்தது" போல் தலையில் நல்ல எழுத்து. பி. ஏ. பி. எல். மட்டும் பாஸ்பண்ணிவிட்டான். அதுவும் கெட்டிக்காரத்தனமன்று. நீயும் இதுவரையில் படிப்பதாயிருந்தால் பி. ஏ. பி. எல். பாஸ்பண்ணியிருப்பாய். என்னசெய்யலாம், உன் துரதிர்ஷ்டம். நீ பி. ஏ. பாஸ்பண்ணினதும் புஷ்பவதியானதும் சரியாயிருந்தது. அதில் ஒன்றுமில்லை. இந்தக்காலத்தில் எத்தனையோபேர் பி. ஏ. பி. எல். பாஸ்பண்ணிவிட்டு 10-ரூபாய் கவர்மெண்டு சம்பளம்கிடைக்க எவ்வளவோ பிரயாசைப் பட்டும் கிடைக்காமல் துக்கிக்கிருர்கள். இந்தக் காலத்தில் இவனது பரீட்சையால் பயன் என்ன இருக்கிறது? தங்கம் ஒருகாரியம் மட்டும் சொல்லுகிறேன். நீ அதை உறுதியாய் வைத்துக்கொள். இந்தக் காலத்தில் பணம் ஒன்றுண்டானுல் யாருக்கும் பயப்படவேண்டியதில்லை. அவனிடம் எத்தனையோ பி. ஏ. பி. எல். கள் கைகட்டிக் காத்துக்கொண்டு ஏவினவேலையைத் தடையின்றி செய்வார்கள். அவன் எத்தனைகொலைபாதகங்கள் வேண்டுமென்றுலும் செய்துவிடலாம். அவன் எந்த ஜாதியாயிருந்தாலும் சரியே? அதை எல்லாம் பணம் மாற்றிவிடும். இனியும் "பணம் பாதாளம் மட்டும் பாயும்" என்ற பழமொழியை நீ அறிவாயா? திருஷ்டாந்தமாக உனக்

கிசைந்தபணுளன் சோமசுந்தரம் செய்திருக்கும் அடி தடிக்கும் அக்கிரமங்களுக்கும் அளவுண்டா? அவனைச்சிலர் நிரக்ஷாகுக்ஷி என நினைக்கக்கூடும். அதிலென்ன இருக்கிறது. ஒவ்வொரு நாளும் அவரை ஆயிரம்பண்டிதர்கள் வணங்கித் தொண்டூழியம் செய்வது எவ்வளவு சிலாகிக்கத்தக்கது. அப்பப்பா! அவர் செய்த கொலைபாத கங்களில் ஒன்றேனும் பிறர் செய்திருந்தால், அப்போதே அவரைக் கவர்மெண்டார் நமனுலகு அனுப்பியிருப்பார். இவருக்குப் பணமிருப்பதால் அங்ஙனம் செய்யக் கூடவில்லை. "பணமென்றால் பிணமும் வாயைத்திறக்கும்" என்பது பழமொழி. ஆதலின் நாம் சோமசுந்தர முதலியாரோடு உண்டாகும் ஸம்பந்தத்தால் எவ்வளவோ பாக்கியமடையப் போகிறோம். இதுநிற்க,

அந்த பீஎல்:பாஸ் பண்ணியிருக்கும் சிறுவன் சென்னைக்கு பரீட்சைக்குப் போயிருந்தபோது மகம்மதியர் கிளப்பில் காப்பி குடித்தானும். அன்றியும் அவன் தாய் தந்தையர் தம் தாய் தந்தையர்களின் அனுமதியின்றித் தாமே மணம் புரிந்து கொண்டவழக்கு இன்னும் தீரவில்லை. இப்படிக் கெல்லாமிருக்க இவனுக்கு யாரம்மா பெண் கொடுப்பார்கள்? அந்தக் கமலாம்பாள் சிறுமி ஆசைமிகுதியால் இவனைக் காமித்தால் அவள் தாய் தந்தையர் சம்மதிப்பார்களா?

தங்கம்மாள்—அம்மா அவர் மகம்மதியர் கிளப்பில் காப்பி குடித்ததாய் தாம் வைத்துக் கொண்டாலும் அதிலுண்டாகும்இழிவென்ன?

அம்மாள்—தங்கம் அதனால் ஜாதிப்பிரஷ்டம் நேரிடுகிறதல்லவா?

தங்கம்மாள்—அம்மா ஜாதி என்பதுயாது? அதன்பொருளென்ன?

அம்மாள்—தங்கம்! ஜாதி என்பது கடவுளால் வகுக்கப்பட்டுள்ளவசமுறை.

தங்கம்மாள்—அம்மா ஜாதி என்பது கடவுளால் ஏற்படுத்தப்பட்டதா?

அம்மாள்—தங்கம் இல்லாவிட்டால் மனிதரால் எங்ஙனம் சாத்தியமாகும்.

தங்கம்மாள்—அம்மா ஜாதி என்பது கடவுளாலுண்டுபண்ணப்பட்டதென்று எவ்விடத்தில் சொல்லப்பட் டிருக்கிறது?

அம்மாள்—தங்கம் நீ என்ன பைத்தியக்காரியா யிருக்கிறாய்? ஜாதிக்கும் சாஸ்திரத்துக்குமா ஸம்பந்தம். இது எங்கு கற்றுக் கொண்டாயடி செல்வமே.

தங்கம்மாள்—இல்லையம்மா மகம்மதியர் கிளப்பில் காப்பி சாப்பிடக் கூடாதென்றும், அது ஜாதிப்பிரஷ்ட மென்றும் சொன்னீர்களே? கள் சாராயம் அருந்தலாம். அது குல ஈனமாகாது. கள் சாராயம் அருந்துகிறவனுக்குப் பெண் கொடுத்தாலும், மற்றபாகத்தானுக்குப் பெண் கொடுக்கக் கூடாதென நீ கூறிபது எவ்வேதத்தின் கொள்கை, என்று நான் அறியவேண்டியது அவசியமல்லவா?

அம்மாள்—அடி உனக்கு வேதம் ஓத எனக்குத் தெரியாது. மூத்தவர்கள் சொன்னால் அப்படியாவென்று கேட்டுச்சும்மாவிரு.

தங்கம்மாள்—ஆம் அம்மா நீ கூறுவது சரியே. நம் இந்துக்கள் பெரும்பாலும் இந்தச் சங்கதியைக்கைக்கொண்டே ஒரு பெண் கொள்ளவேண்டியதானாலும், கொடுக்கவேண்டியதானாலும் மாப்பிள்ளையின் குலமென்ன கோத்திரமென்ன வென்று விசாரிக்கிறார்களேதவிர, அவன் கல்வி உடையவன், யோக்கியன், அயோக்கியன், இந்தப் பெண்ணை வைத்துநடத்தும் தகுதி உள்ளவன் என்பதை விசாரிப்பதாய்க் காணவில்லை. இதுநிற்க, மாப்பிள்ளை கள் உண்டுபுலம்பித்திரிகிறவனானாலும் ஸரி. வண்டிச் சக்கிரம்போல் ஓரிடமும் நிலைநில்லாதுருண்டு செல்லும் பணமும் குலமும் இருந்தால்மட்டும் போதுமானது. அப்படி யுள்ளவர்களுக்கே தங்கள் பெண்ணைக் கொடுத்துவிடுகிறார்கள். ஆனால் அவர்கள் தம் பெண்கள் அக்கணவருடன் கூடி வாழவேண்டுமென்ற எண்ணமிருந்தாலன்றோ முற்கூறிய நியாயத்தைக் கண்டுபிடித்து கொஞ்சமேனும் ஆராய்ந்து பெண்களை விவாகம் செய்விப்பார்கள். அந்தோ! பரிதாபம்! பணம் செய்கிற வேலை பெரிதுதான். பாருங்கள். கள் குடிப்பவனா இருந்தாலும் அவனிடம் பணம் இருக்கிறதல்லவா? என் பெண்ணைக் கொடுக்கக்கூடாது. சகோதரர்களே! முற்கூறிய யுவதிகளும் என்னைப் போன்ற பெண்களன்றோ? அந்தோ! அந்தப் பெண்களும் என்னைப் போன்ற பின்புத்திக் காரரன்றோ? அவர்கள்தான் என்னசெய்

யக்கூடும். அவர்கள் தம்மணாளன் கள்குடியானென்றும் அவனிடம் தருணம்பார்த்து சமாசாரம் பேசவேண்டுமென்று முள்ளநோக்க மறியாது கணவனென நேசிக்க, அந்த கள் உண்போன் அப் பெண்ணை வாயில் வந்தபடி திட்டி அடித்துத் துரத்தி விடுகிறதில் மானமுடைய பெண்கள் தன் தகப்பன் வீடுவந்துவாழாதிருந்துவிடு கின்றனர். சிலர் புருஷன் வீட்டிலேயே இருந்து தன் மனதிற் கிசைந்த புருஷனொருவனைக் கைவசம் செய்துகொண்டு நாள் கழிக் கின்றனர். சிலர் மானத்துக்கஞ்சி "எருமைக்கன்றை இறக்கக் கொடுத்ததுபோல்" பாஷாணமோ வீரமோ தின்று தன்னுடைய ஜன்மத்தை மாற்றிக் கொள்கின்றனர். சிலர்

"சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்"

என்றும் இன்னும் அநேக விதங்களாய் கபிலர் முதலிய மகா பிரபுக்கள் வற்புறுத்தி இருந்தும் இவ்விதம் செய்யும் தீச்செயலால் மேற் கூறிய ஸம்பவங்கள் நடப்பதையும் நம் நாடோறும் பார்த்து வரும் இவ்விந்துக்கள் மட்டும் தெளியாததென்னமோ? ஆனாலும் இது இந்துக்களைக் குடி கொண்ட பெரும் தெரியாமைதான் என்ப தில் கொஞ்சமும் ஐயமுண்டோ? இது நிற்க,

ஒரு புருஷனுடைய தாய்தந்தையர் தமது தாய்தந்தையரின் அனுமதியின்றித்தாமே மணமுடித்துக் கொண்டனர். ஆதல்பற்றி அது குல ஈனமென்று சொல்லுதலானது பெறும்தவறாகும். ஏனெ னில் அவர்கள் என்ன கற்பிழந்து விட்டார்களா? அன்றிப் பரபுரு ஷருக்கடிமைப்பட்டு விட்டார்களா? இல்லை. புருஷனும் பெண்ணும் ஏகமாய்ச் சேர்கிற காந்தர்வ மணமே யாவற்றிலும் மிக விசேஷ மெனப் பல நூல்களும் முறை இடுகின்றன. இனியும் புருஷனும் பெண்ணும் தாங்கள் ஏகமனமாய்க் கூடுகிறபக்ஷத்தில் அவருள் வேற்றுமை ஏற்படுவதற்கும் அதன்மூலமாய் முற்கூறிய ஆபத்துக் கள் உண்டாவதற்கும் இடமில்லை. இனியும் முன்காலத்தில் அநே கம் இராஜஸ்திரீகளும் இராஜ புதல்வரும் ஏகமனதாய் காந்தர்வ மணம் செய்துகொண்டதாய் இதிகாசங்கள் கூறுகின்றனவே தவிர அவ்விதம் செய்தவர்களை ஜாதிப் பிரஷ்டம் செய்ததாய் எந்த சாஸ்திரமும் கூறவில்லையே? பின்னர் இங்ஙனம் கூறுதல்

என்னுன் முறையோ யானறியேன். எனினும் இவைகளைக் கேட்க எனக்கு நகைப் புண்டாகின்றன. மேலும் கிரிஸ்துவர் கூறுவதில் எவ்வளவும் ஐயமில்லை.

அம்மாள்—கிரிஸ்துவர் என்னடி சொல்கிருர்கள்?

தங்கம்மாள்—அம்மா ஒன்றுமில்லை. ஒவ்வொரு மதஸ்தரும் தம்தம்இஷ்டப்படி ஒவ்வொரு விதமாய்க் கடவுளைப்பூஜித்து வருகிருர்களென்றும் ஆனுல் அது நியாயந்தானென்றும் பின்னும் ஒவ்வொருவரும் தம் தம் மதக்கோட்பாட்டுக்கு விரோதமின்றி நடந்து வரவேண்டுமென்றும் ஆனுல் இந்துக்கள் மட்டும் அவ்வாறு நடந்து வருவதில் கவன மில்லாதவர்களா யிருக்கிருர்களென்றும் சொல்கிறது தான்.

அம்மாள்—என்டி தங்கம்! இந்துக்கள் சாஸ்திர விரோதமாய் நடக்கிருர் களென்று கிருஸ்துவர் கூறுவதாயும் அது உண்மையென் றும் நீ கூறினையே? அவ்விதம் இந்துக்கள் சாஸ்திர விரோதமாய் நடப்பதென்ன?

தங்கம்மாள்—அந்தோ! நம்மிந்துக்களைப் போல் நியாயவிரோதமாய் நடக்கும் மதஸ்தர்யார்? ஒருவருமில்லை. "கைப்புண்ணுக் குக் கண்ணுடியா"வேண்டும். ஒவ்வொரு இந்துவும் தாம் நடப்பது நம் மதக் கோட்பாட்டுக்கு யுக்தமா அல்லது அயுக்தமா? என்பதைச் சற்றே ஆராயின் ஆன்றேரின் நெஞ்சம் அவரைச்சுடுமென்பது திண்ண மன்றே?

அம்மாள்— எசிறுமி! நீ ரொம்பக்கற்றவள் தான். அதிருக்கட்டும். பாரதமக்களான இம்முப்பது கோடிசகோதரர்களையும் ஒருங்கே ஆக்ஷேபம் செய்து விடாதே. அது பெருந்தவறு. நீ ஆக்ஷேபிப்பதெல்லாம் யாங்கனமெனின்.

"காணுமல் வேணதெலாம் கத்தலாம்
கற்றேர்முன் கோணுமல் வாய்திறக்கக்கூடாதே—நாணுமல்
பேச்சுப் பேச்சென்னும் பெரும்பூனைவந்தாக்கால்
கீச்சுக் கீச்சென்னும் கிளி"

என்பதை ஒவ்வும். ஆதலின் நீ நாவை அடக்கு.

தங்கம்மாள்—அம்மா! நீமுற்கூறியகவியும் மற்றும்சரியே? அதற்குத்தடை இல்லை. நான் கல்வியிற்றேர்ந்தவளெனக்கூறவில்லை. ஆயினும்எவனுயிருந்தபோதிலும்ஒருநல்ல இந்துவாயிருப்பானுகில்நான் சொல்லும் இவ்விஷயத்தைப் பெரும்பாலும் உணர்வானென்றும் அவ்வாறு செய்தலின் இந்துக்களாகியநம்முன்னிருக்கும் கெடுதியை விளக்குமென்றும் அதனால் இத்தெரியாமை நாடோறும் திசை தவறிச் சென்றுவிடும் என்பதிற் தடை இல்லை.

அம்மாள்—நீ என்னசொன்னுய்? எல்லாம் படித்தாய்விட்டது போலிருக்கிறதே? நிறுத்து பேசினது போதும், இந்துக்களை ஆக்ஷேபிக்கும்படியாக நீ என்ன படித்துவிட்டாய்? உனக்கென்ன தெரியும்? நீ உன்வயதுக்குத் தக்கபடி பேசிக்கொள். பெரிய எழவிலெல்லாம் ஏன் தலையிட்டுக்கொள்கிறுய்? நீ கூறியவாறு இந்துக்கள் ஒன்றும் தவறி நடக்கவில்லை. அவ்விதமெனின் இந்துக்கள் நடத்திவரும் துராசாரத்தில் ஒன்றைவிளக்கு?

தங்கம்மாள்—அம்மா! நீ எந்த இந்துக்கள் நடத்தையையும் எந்த இந்து சாஸ்திரத்தையும் கண்டவள். உனக்கு நான் என்ன சொல்லியும் கோபிக்கிறுய். இது என்மீதுள்ள பெரும் ஆத்திரமென்றெண்ணுகிறேன். இப்படி உள்ள உனக்குக் கூறும் சாஸ்திரம் "செவிடன் காதில் ஊதிய சங்கநாதத்தை ஒத்ததுபோல்" ஆய்விடுமென்றஞ்சி என் வார்த்தையை வீணுக ஏன் செலவு செய்ய வேண்டுமென்று எண்ணுகிறேன்.

அம்மாள்—அடி தங்கம்! நீ என்னசொன்னுய்? நீ இவ்விதம் கூறினது உனதுகல்வியின் கர்வமல்லவா? ஆம் "அற்பப்படிப்பு அகந்தையை உண்டாக்கும்" என்பது உண்மையே?

தங்கம்மாள்—அம்மா! நான் கல்விச்செருக்கால் இவ்விதம் சொல்லவில்லை. நீசாஸ்திரங்களெல்லாம்ஆராய்ந்தவளல்லவே? உனக்கு சாஸ்திரம் கூறினுல் எவ்விதம் அறிந்துகொள்வாய் என்றுதான்.

அம்மாள்—ஏ தங்கம்! நீ பார்த்தால் பதினுறுவயதுடையவள் போலிருக்கிறுய். உனது வயதுக்குத் தகுந்த புத்திதானே இருக்கும். நான் உனக்கு இருபது வருஷம் முந்தியே இவ்வுலகில் வாழ்ந்து வருபவள். ஆனுலும் என்னைவிட நீ அதிகம் அறிந்தவளா

யிருக்கிறாய்? அம்மட்டில் இந்துக்கள் சாஸ்திரவிரோதமாய்ச் செய்வதொன்றைச்சொல்.

இதுகேட்ட தங்கம்மாள் இதேது "பிள்ளையார்பிடிக்கக் குரங்காய் முடிந்தது" போலப்பேச்சு முற்றி இப்போது கோபத்தில் வந்துவிட்டது. நிற்க; கல்விஇல்லாதவரோடுசம்பாஷித்தலினும், சேர்க்கைசெய்தலினும் சிறுமை ஒன்றில்லையென்றான்றோர் கூறியுள்ளார். ஆதலின் நாம் இவளோடு அதிகப்பேச்சுக்கிடம் கொடுத்தால் அது பெரும்கெடுதியாய் நேர்ந்துவிடும். இவள் விவரமில்லாமல் தாறுமாறாய்ப் பேசுகிறாள். ஆனால் ஒன்றும் பேசாதிருந்துவிடுவோமென்றால் இவள் நம்மைவாயாலடித்து ஒட்டிவிடுவாள். என்னசெய்கிறது. இவளுக் கென்னசொல்லியும் தெரியாமல் "சன்னியாசிமேல் சடைநாய் "வள்!" என்று விழுந்தாற் போல்" கோபிக்கிறாளே? ஏ ஜகதீசா! இவளை எவ்வாறு தெளியச்செய்வது? இவளைத் தெளியச் செய்யாமலிருந்தாலும் நம் கல்விக்குப் பயனில்லையே! ஆதலின் எவ்விதமும் இவளைத் தெளியச் செய்தலே நமது கல்விக்கு அழகு எனச் சிந்தித்து அடியில் வருமாறு கூறத்தொடங்கினாள்.

ஆம் அம்மா நீகூறியது சரியே! நீ என்னைவிடவயதில்பெரியவளே. அம்மட்டிலும்புத்தியிற்சிறந்தவளாயிருக்கலாம். எனினும்தற்போது இந்துக்கள்ஆசரித்துவருகிற பலவகையான துராசாரங்களில் ஒன்றேனும் அறியாமற் போனதும் அதையிட்டு என்னிடம்வீண் வாதாடுவதுமே உனக்கிருக்கும் புத்தியின்னுட்பத்தை விளக்குகின்றது. அதை விரிக்கவேண்டிய அவசியம் இங்கில்லை. ஆனாலும் இவ்விந்துக்களால் நடத்தப்பட்டு வரும் தீய செயல்கள் பலவுள. நிற்க;

நியாயஸ்தலத்தார் மானிட உருவான உயிரொன்றை ஒருவன் வதைசெய்துவிட்டானெனின், அது கொலைபாதகமென்றெண்ணி அவனைப் பழிக்குப் பழி வாங்குகிறதென்ற தூக்குத்தண்டனைவிதித்து தூக்கிலிட்டுக் கொல்கின்றனர். இனியும் அதேமாந்தர் பேய்க்குடைமுதலியன களித்து, எத்தனையோ ஆயிரக்கணக்கான கோழிஆடுகளைநிமிஷநேரத்தில்நமனுலகேற்றிவிடுகின்றனரே? இதைத்துரைத்தனத்தார் பிரத்யட்சத்தில் கண்டும் கவனியாதிருப்பது ஏனோ? அந்தோ! இவ்வாறு குடை களிக்கவும் அதன் மூலம் ஆடு

கோழிகளை நமனுலகுக்குச் சொந்தமாக்கவும் வேண்டு மென்பது எந்த இந்து வேதத்தின் துணிபோ? எம்மதஸ்தனுயினும் எம்மத கிரந்தங்களாயினும் உயிர் வதை செய்ய வேண்டுமென்பதைக்கைக் கொள்ளக் காணவில்லையே? நிற்க;

தம் மதக்கோட் பாட்டுக்கு விரோதமாய் உயிர் வதை செய்வது தானே நம்மிந்துகளுக்கு யோக்கியம். இவை அயோக்கிய மன்றோ? இது போல் இந்துக்கள் ஆசரித்து வரும் தீயசெய்கைக்கு அளவில்லை. அவைகளை விரிக்கின் பெருகும். ஆதலின் சுருக்குகின் றேன். பொதுவாய்க் கூறுவோமெனின்"கொலை,களவு,கள், காமம், குரோதம்" என்ற செய்கைகள் தாம். இந்தச் செய்கைகள் இல்லா தவனே யோக்கியன். இவனுக்கே மானிடஜன்மத்தின் பயன் உண் டாம். தவறியவன் உயிரிருந்தும் பிணத்துக்குச் சமமாவான். அவன் இருந்தாலென்ன இறந்தாலென்ன. இருந்தாலும் இறந் தாலும் பூமிக்குப் பாரமேயொழிய காரியத்திலொன்றுமில்லை. இத் தத்தீயச்செயல்கள் நிரம்பியுள்ளவன் நீ கூறும் சோம சுந்திரமே யன்றி வேறுயாரும் இருப்பாரென்று நீ எண்ணவேவேண்டாம். மேலும் அவர்காரியம்நமக்கென்ன. பேசக்கூட நியாயமில்லை.எனின் இங்குகூறியதீத்தொழில்கள் எல்லாம் ஒழிந்தவர் கமலாம்பாள்காத லித்த நண்பராகிய செல்வகேசவ முதலியார் பி. ஏ. பி. எல் அவர் கள் தாம். அவருக்கு வாழ்க்கைப்படும் ஸ்திரீகளே பாக்கியம் செய்தவர்கள். இவ்வாறு இல்லாதவருடன் கூடிவாழ்தலினும் அம் மங்கையர், நிரம்பிய ஏரி ஜலத்தில் ஆழ்தல் நலம். பணம் என்ன பெரிதா? நீ பணம் பணமென்று பாதவிக்கின்றனேயா? பணம் இன்று ஒருவர் கையிலும் நாளை ஒருவர்கையிலுமிருக்கும். சிறகில் லாப் பட்சி என்பதை யறியாயா? அம்மா

"குடை நிழலிலிருந்து குஞ்சரமூர்ந்தோர்
நடைமெலிந்தோரூர் நண்ணினும் நண்ணுவர்,
சிறப்பும் செல்வமும் பெருமையுமுடையோர்
அறக்கூழ்ச் சாலை யடையினு மடைவர்"

என்ற அதிவீர ராமபாண்டியப் பெருமானது திருவாக்குக் கிணங்க எத்தனையோ வர்த்தகர்கள் கெட்டுச்சட்டி எடுத்ததை யும்,எத்தனையோ இரப்போர் கோடீச்சுவரனானதையும் நீ கண்ணால்

டதில்லையா? திருஷ்டாந்தமாக முன்னர் நளன், அரிச்சந்திரன் முதலிய அரசர்கள் அடைந்தகதியை நீ கேள்விப்பட்ட தில்லையா? இனியும் நம்மூரிலுள்ள சிலரைக் கவனிப்பாயெனின் இதனுண்மை நன்குவிளங்கும். "பணத்தைநம்புவோர்பிணம்" என்பது ஆன்றோர்வாக்கியம், ஆதல்பற்றி "அம்மா! இன்றுமுதல் பணமென்ற இப்பழிச்சொல் என் முன் கூறுதிருக்கும் பொருட்டிப்போதே வேண்டுகிறேன்" என்று கூறிய தங்கம்மாளின் வார்த்தை கேட்ட அந்த நிர்மூடி அம்மாளுக்கு விசுவாமித்திரரைப்போல் நிமிஷத்திற் கோபம் வந்து "அடி தங்கம்! நீ கூறினது என்ன. இவ்விதமெல்லாம் உன்னைச் சொல்லச்செய்தது உன் அற்பப்படிப்பன்றோ? நீ பேசுகிறாப் போல் பேசி முந்தி அனேகம் பெண்மணிகள் கெட்டுப் போனதை நீ: யறியாயா? இனியும் முன்னர் அநேகம் மாதர்கள் கல்வியின்கர்வத்தால் கெட்டுப் போனதாய் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அப்போது அவை வீணென்று எண்ணி இருந்தேன். அது இப்போ உன் மட்டிலும் உண்மையாயிற்று. தங்கம் நீ பங்கஜவல்லி என்னும் நாவலைப்படித்த தில்லையா? அப்பங்கஜவல்லி கல்விச்செருக்கால் நீட்டிப் பேசியபேச்சும், முடிவில் அவள் பிரௌடையாயிருக்கும் காலமே குழந்தை வயிறுனதையும், அதைப் பிறர் அறியாதிருக்க மருந்துண்டு சிசுஹத்தி செய்ததையும், பின்னல் கிழவனுக்கு வாழ்க்கைப்பட்டு மதனை வெல்ல அவனுல் முடியாமல் பலவிடபுருஷனைத் தேடித் தாசி போல் ஓடி நடக்கவும், தம் பெயர் உலகெல்லாம் பிரசித்தியாகவும் செய்ததை நீ அறியாயா? என்னமோ பங்கஜவல்லி அற்பப்படிப்புடையவள். நீ அவளிலும் பத்து மடங்கு அதிகம் படித்தவளாயிற்று. ஆகையால் அவளைவிடப் பத்து மடங்கு பெருமைபெறுவாய். அதற்குச் சிறிதும் தடையில்லை. நான் உனக்கு பிரத்தியேகமாய் எடுத்துரைக்கவேண்டுமா? அது வேண்டாம். அம்மா நீ அவளைவிட கெட்டநடத்தை யுள்ளவளாவாய்; "விளையும் பயிர் முளையிலேதெரியும், வித்துச் சுரைக்காய்பிஞ்சிற்றெரியும்" என்பது பொய்யாமா? அதுபோல் உன்காரியம் இப்போதே வெளிப்பட்டுவிட்டது" என்று இவ்வாறு கூறி அட்டகாசம் செய்யும் இந்தநடுராத்திரிநிசிநேரத்தில் பைசாசங்கள்கூட அயர்ந்து தூங்கும் தருணம் ஓர் கிழவி அவ்வறையைக் கடந்து என்ன செய்கிறீர்களடி அம்மா வென்று கூறிக்கொண்டே வந்தனள்.

கிழவியின் வரவுகண்டதும் பெரும் கோபியாகிய அந்த அம்மாள் வியாக்கிரத்தைப்போல் கர்ஜித்துக்கொண்டு அடி கிழட்டு முண்டே! உன்னால் எனக்குக் குடியிருப்புச் சுகமில்லை; எனக்கு எங்கேபோனாலும் உன்னெழவெடுக்கிறதே வேலையாயிருக்கிறது. நான் எங்கிருக்கிறேனோ அங்கெல்லாம் வந்து என்னை ஏன் தொந்தரவு செய்கிறாய்? நான் ஒருவருடன் பேசிக்கொண்டிருப்பது உனக்குக் கண்ணைக் கரிக்கிறதா? உன்னை விட்டு எனக்கு ஒழியும்காலம் எப்போ சம்பவிக்குமோ அப்போதான் நான் சௌக்கிய மடைவேன். கிழட்டுமுண்டை என்ன உல்லாசம் நடிக்கிறாள்! நல்ல மாப்பிள்ளை உண்டானால் இனியும் பன்னிரண்டு பிள்ளைபெறுவாள் என்று அட்டகாசம் செய்துகொண்டிருப்பதைக்கேட்ட தங்கம்மாள், வருகிறது யாரம்மா! பாட்டியாவாருங்கள். உட்காருகிறது தானே. என்று சொல்லிக் கொண்டே அவ்வயோதிகப் பெண்பிள்ளையின் ஊன்றுகோலென்று சொல்லும் மாறுகைப் பிடித்து அருகிலிருந்த ஓர்கட்டிலில் அமர்த்தினாள். அந்தக்கிழவி தன்னை வாயில் வந்தபடி வைத அந்த அம்மாளைக் கண்டதும் எஜமானிசமூகம் தாதிகள் பணிவதுபோல் பக்தியாய் அம்மா! கோபிக்க வேண்டாம். உங்களை சோம சுந்தரம் ஆள் ஒருவர் காணவந்திருக்கிறார். அதை உனக்குச் சொல்ல இங்கு வந்தேனே யொழிய உன்னை இங்கிருந்து போகச் சொல்ல வேண்டுமென்றல்ல என்றாள்.

அந்தம்மாள்—வந்திருக்கிறது யார்?

கிழவி—யாரோ அவன் பெயர் சுந்தரமாம். என்னமோ ரகசியமாம். உன்னிடம்தான் சொல்லவேண்டுமாம்.

அம்மாள்—அப்படியா! அத்தை உங்கள் மகன் அங்கில்லையா?

கிழவி—இல்லையம்மா. எங்கேயோ இப்போதுதான் போனான்.

அம்மாள்—இந்த நேரம் என்ன வேலை? ஆண்பிள்ளை தீபம் வைத்தால் வீட்டிலேகூட இருக்கிறதில்லை. என்னத்திற்காக இப்போவெளியில் போயி ருக்கிறது. பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடப் போயிருக்கிறதோ? நல்ல பெண். இந்தப் பெண்ணு ஒருவனிடம் இருந்து வாழப் போகிறது. நல்லது! வாழும் போல் தானிருக்கிறது. இது எவ்விடத்து வழக்கம்? தானே மாப்பிள்ளை தேடிக் கொள்கிற பெண் எங்கேயாவது கண்டதுண்டா? இவைகளைப்பற்றி

எவ்வளவோ சொல்லியும் ஆண் பிள்ளை அறிகிறதுண்டா? ஆனு லும்கண்டேன் கேட்டேன்; இந்தவீட்டாண்பிள்ளைபோல்தானடிச்ச மூப்பாத்திரிகிறவனைக் கண்டிலேன். அந்தோ! ஆணும் அப்படியே பெண்ணும் அப்படியே? நான்பெற்றபிள்ளையாகமட்டு மிருக்குமானுல் அன்னோமே முறித்து அடுப்பில் வைத்து எரித்து விடுவேன். அந்தக் காரியம் நமக் கென்ன. அதுவும் பேச நியாயமில்லை. இந்த வீட்டு ஆண் பிள்ளை திரிகிறது போல் எந்த ஆண் பிள்ளைகள் தான டிச்ச மூப்பாய் நடக்கிறார்கள். எல்லாம் வரட்டும்; இன்று படிப் பித்து விடுகிறேன். இன்று கொடுக்கிறகொடையில் இனிமேல்தீபம் வைத்தால் வெளியில் தங்காமற் செய்கிறேன் என்றுசொல்லி ஆர்ப் பாடம் செய்யும் அவ்வேளை மணியும் பன்னிரண்டடித்தது. இது கண்ட அந்த அம்மாள் மனவெறுப் புடையவளாய் இன்று விருதாவாய்த்தூக்கம்விழிப்பாயிற்று என்று சொல்லிக் கொண்டே அவ்வறையை விட்டுப்போய்விட்டாள்.

3-வது அத்தியாயம்.

இரவு மணி பன்னிரண்டாயிற்று. தங்கம்மாளும்கிழவியும் தனிமையாயிருக்கிறார்கள். தங்கம்மாள் கிழவி யோடு நிகழ்ந்தனவற் றை ஒன்றொழியாமற் கூறி முடிவில் தம்மைக் கெட்டவளெனச் சபித்த தையும் சொல்லித் தேம்பித் தேம்பிக் கண்ணீர் விட்டாள். இது கண்ட அந்தக் கிழவி அம்மா! தங்கம் அழாதே; நீ கற்ற வளா யிருந்தும் கலங்கு கின்றனையே? அடி பொன்னே உன்னை ஒரு தடவை கெட்டவளெனக் கூறினதற்கு நீ இவ்வாறு துக்கிக்கின் றனையே? அவ்வித மெனின் நான் நாளொன்றுக்கு எத்தனையோ சோ ஜலம் கண்ணிலிருந்து விடவேண்டுமே? என்னை இந்த ச்சிறுமி நாள் ஒன்றுக்கு எத்தனையோ வைட்டுக ளெல்லாம் திட்டி மாமி என்றும் பாராமல் வட்டியில் வாருகின்றாள். நான் அதையெல்லாம் கடவுளிடம் ஒப்புவித்து விட்டுச்சும்மாநெஞ்சைத்தடவிக் கொண்டி

ருக்கிறேன்.ஏ சண்மணீ "பொறுத்தோர் பூமியாள்வார், பொறுமை யுடையோர் சிறுமை அடையார்" என்னும் பழமொழியை நீ கேள் விப்பட்டிருந்தும் உன்புத்தி இவ்வாறு போமா? தங்கம் நீ என்ன நினைக்கிறாய்? "சூடுசூடெல்லாம் சுண்டக் காய்க்குக் கேடு" என்றது போல் நாம் பொறுத்த தெல்லாம் இந்த முண்டைக்குக் கெடுதல் தானே? அப்படி இருக்க அவளென்ன வேணுமோ வெய்யட்டுமே? உன்னை அடித்தாலும் பட்டுக்கொள். ஏன் அவள் என்னை அடிக்க வில்லையா? உன்னை அடியாமல் விட்டுவிட்டதே நலம். இதைஎல்லாம் இகத்திற் கேட்பாரில்லை. எனினும் பரத்திற்கேட்பாருண்டென்பது உறுதி.இதை மட்டும் நீ அறிந்து கொள். ஆனால் இவள் புத்திக்கு சிலக்ஷ அடைந்திருப்பாள்.ஆயினும் கேட்பாரில்லாமல் போயிற்று. இருந்தாலும் இன்னும் கொஞ்ச நாட்களில் நாம் காணப்போகி றோம். நீ யாதும் சஞ்சலப் படவேண்டாம். அவள் சொல்கிற மட் டும் சொல்லட்டும். தடியன் சோமசுந்தரத் துக்கு உன்னைப் பேசி நிச்சயித்து விட்டார்கள். இதற்கு உன்பிதாவும் இசைந்தாயிற்று. நாளையன்று நிச்சிதாம்பூலம் போலிருக்கிறது. நமக்கென்ன நிச்சிதா ம்பூலமோ எதுவோசெய்யட்டும். தாலிகட்டும்போதன்றோ பார்க்க வேண்டும்.

தங்கம்மாள்—பாட்டி! நான் இப்போது கூறுவது உறுதியி லும் உறுதியானது. சோமசுந்திரத்துக்கு நான் பெண்டாவது இச் சென்மத்திலும் இனியும் எடுக்கும் ஜென்மத்திலும் முடியாதகாரி யம். அதையிட்டு சிபார்சுக்கு யார்வேண்டுமோ அவாள் வரட்டும். அவர்கள் திருக்கொன்றும் என்னை உருக்காது. இனியும் செல்வகேச வமுதலியாரோடு உண்டான சேர்க்கை கிட்டினாலாச்சுது. இல்லை எனின் இச்சென்மம் வீண். இனி அடுத்த ஜென்மத்திலேனும் பார் த்துக்கொள்கிறேன். "ஒருநாளிருந்து ஒருநாளிறந்தாலும் மனதிற் கிசைந்தமணாளனோடிருத்தலே மாதற்குத்தகுதியாகும்." ஆனாலும் "பெற்றவம்மை போய்விட்டால் பெற்றவப்பன் சிற்றப்பன்" என்ற ஆன்றோர் திருவாக்கியம் என்மட்டில் உண்மை ஆயிற்றன்றோ?

இவ்வுலகிலுள்ள சில ஆடவர்கள் "பெண்டாட்டித்தாயே பெரியதாயே" என்றுவைத்து அம்மா சரணம் சரணமென்று அவள் பாதத்தில் பணிந்து அவள் சொற்களுக்குச் சற்றும்மாறாமல்நடந்து

வருவதுபோலன்றோ எங்கப்பாவும் சிறியதாயாரின் தலையணைமந்திரோபதேசத்திற் சிக்கிக்கொண்டு அவளது கட்டளையை சிரமேல்கொண்டு கட்குடியனுக்கு என்னைக் கலியாணம் செய்யநிச்சயித்துக்கொண்டனர். ஹா! தெய்வமே! இறந்துபோன என் அன்னை தன்னோடு என்னையும் கூட்டிக்கொண்டு போகலாகாதா? என்னையும் ஓர் பெண்ணென சிருஷ்டித்தது காலாகாலங்களில் தக்ககாதலனோடு கலக்கவிடாது, இக்கோலங்கள் காணவோ? ஹே! ஜகதீசா! இது உனக்குத் தகுதியன்று. இதை நோக்கும்போது நீ பக்ஷபாதி என்பது விளங்குகிறதல்லவா?

ஜனங்கள் உன்னைபக்ஷபாதமில்லாதவனெனக் கூறுகிறார்களே அங்கனமெனின் அது தவறன்றோ? இவ்வாறு பரீக்ஷிப்பது உனக்கழகா? ஹா! தெய்வமே! தெய்வமே! என்றுசொல்லி மூர்ச்சைபோன தங்கம்மாளைக்கண்டு நடுநடுங்கின கிழவி அவள் முகத்தைச் சற்றே நோக்கி பின்னர் தூக்கி இருத்தி சைத்தியோபசாரங்களால் தங்கம்மாளின் களைப்பை அகற்றினாள். தங்கம்மாள் சிறிது களைப்புத் தெளிந்ததும் கிழவி உயிர் பிழைத்ததுபோலாய் தங்கம்மாளை நோக்கி தங்கம் நீ என்ன சிறுமியன்றோ. உனக்குப் பொறுமை குறையத்தான் செய்யும். என்னசெய்கிறது. கிழவி விருத்தாப்பியருக்குத்தான் பொறுமை வரவேண்டுமென்று உலகம் கூறிக்கொள்வது. ஆனால் தற்போது யுவாயுவதிகளுக்குத்தான் பொறுமையைக்காணோம். நான் பொறுத்துக்கொள்கிறேன். ஏ தங்கம்மா! உனக்கென்ன? அவர்கள் யாருக்கு வேண்டுமோ பேசி நிச்சியதாம்பூலம் செய்துகொள்ளட்டுமே. அதுக்கெல்லாம் நானன்றோ இருக்கிறேன்.

நீ எதற்காக வருத்தப் படவேண்டும்; எல்லாம் வல்ல இறைவனிருக்கிறான். அவன் யாருக்கும் ஒன்றுபோ லுள்ளவன் பக்ஷபாதமற்றவன். அவன் நல்லவர்க்கு நல்வினையையும் தீயவர்க்கு தீவினையையும் செய்வதில் கண்ணா இருப்பான். உன்மனதுக்கு எவ்விதமான தீங்கையும் அவன் செய்வானென்று நான் எண்ணவில்லை. ஜகத்சுவரூபியும், கபடநாடகசூத்திரதாரியும், திரௌபதைத் துயில்காத்தோனும், பாண்டவச் சகாயனும், ஆதிமத்தியாந்தரகிதனுயும் இருக்கும் அந்தமுகுந்தன், உனதுகாதலனான செல்வகேசவனை எவ்விதமும் கூட்டி வைப்பான். நீசற்றும்மாசடையாதே. இது உறுதிமொழி,

என்றதும் அப்பங்களாவின் ஓர் மூலையில் கீச்சுக்கீச்சென்று ஒரு கௌளி அடித்தது.

கௌளி அடித்ததும் அந்தக் கிழவி தங்கம் கேட்டுக் கொண்டனையா? இத்தக் கௌளி நல்லது. இதன் பரீக்ஷை முன்பு நான் பல தடவை பார்த்திருக்கிறேன்.

இது கேட்ட தங்கம்மாள் புளகாங்கிதமுற்று பாட்டி இது நல்ல கௌளிதான். இதன் பரீக்ஷை நான் பார்த்தாயிற்று. நான் சென்னைக்குப் பரீக்ஷைக்குப் புறப்படும் சமயம் இவ்வாறு தான் கௌளி சொல்லிற்று. அப்போது அதை நான் அலக்ஷியமா எண்ணி இருந்தேன். ஆனால் அந்த வருஷமே எனக்கு பி. ஏ. பரீக்ஷை பாஸாகி விட்டது. அதனால் இது நல்ல கௌளிதா னென்பதிலும் நான் எண்ணிய எண்ணம் சீக்கிரம் நிறைவேறுமென்பதிலும் கொஞ்சம் கூடத்தடை யில்லை என்று சொல்லிக் கொண்டே யாழ்ப்பாணம் பஞ்சாங்கத்தை எடுத்துப் பல்லி சொல்லுக்குப் பலனைப் பார்த்ததில் தற்சமயம் உண்டான கௌளிக்குப் பலன் நினைத்த காரியம் சீக்கிரம் ஈடேறுமென்றிருந்ததைக் கண்டு ஆனந்த சிந்தை உடையவளாய் பாட்டி! நம்மிடம் ஆரூடமிருக்கிற தல்லவா? பார்போம் என்று சொல்லிக் கொண்டே அலமாரியைத் திறந்து ஒரு புத்தகத்தை எடுத்துப்பாட்டி! ஒரு லெக்கம்சொல். ஆரூடம் பார்க்கிறேனென, அக்கிழவி 101. என்ற எண்ணைக் கூறியதும் அதை முறையேபன்னிரண்டுக் கீந்து சேடத்தை மேடமுதற் கொண்டுவருகையில் விருச்சிக இராசி எட்டிற்று. அதை ஆரூடகிரம மனுசரித்து, கற்பத்துவார வான்மீகமாக்குங் கால் அவை வான்மீக ராசியைச் சேர்ந்தது. உடனே நினைத்த காரியம்முடித்தலறியும் காண்டம் விரித்து அடியிற்காணும் கவியை வாசிக்கலானாள்.

"நினைத்தது முடிக்கவன்று நின்றவர்கேட்பாராகில்
நினைத்தது முடிப்பதில்லை நிறைகர்ப்போ தயமாகில்
நினைத்தது துவாரமாகில் நிலைசிலநாளிற்கூடும்
நினைத்தது வான்மீகம் தான்நிச்சயம் கூறுமென்றே"

இச்செய்யுளின்முதல் இரண்டடியைக்கண்ணுற்றதும் தங்கம்மாள் சற்றேகவலை கொண்டனள்.எனின் அதன்கருத்தை அடியில்

வருமாறு• விரிக்கலாகவே கவலை நீங்கி முகத்தில் கமலாஸனியைக் கண்டனள்.

அதன்பொருள்.

நான்நினைத்தது முடியுமா முடியாதாவென்று ஒருவன் கேட்பானுகில் தற்போதுகண்டலக்கினம் சர்பராசியாக விருந்தால் முடியாதெனவும் துவார ராசியாக விருந்தால் சிலநாளில் கைகூடுமென்றும் வான்மீகராசியானுல் உடன் கைகூடுமென்றும் சொல்க. என்றுஇருந்தமையாலதன்பற்றி தமக்குக்கிட்டின இராசியும் வான்மீகராசியாயிருந்தமையாலும் அவ்விருத்தையும் யுவதியும் ஆனந்தசாகரத்தி லாழ்ந்து தம்மைக்கரையேற்றுவார் காணுதுபுரண்டு உருண்டுவரும் அளவிற் அவ்விருவரையும் அந்த சமுத்திரத்தினின்றும கரையேற்றுமாறு உபயோகிக்கும் ஓடம் போன்ற ஒருயுவா, பைசாசங்கள்கூட அயர்ந்திருக்கும் அவ்வேளைவதும்பீதியின்றி அப்பங்களாவில் புதைத்திருந்த பெரிய வாயிலைத்தட்டி இங்கிருப்பது யார்?என்று இரண்டொருதடவை கூவினதைக்கேட்டயுவதியும் அக்கிழவியும், கதவைத்திறப்ப தற்கு ஏற்கனவே உண்டாயிருக்கும் சமயபேதத்தாலும்தற்போது சோமசுந்தரம் மீதுள்ள பெரிதான அச்சத்தாலும் சற்றே அச்சமானதைக் குறிப்பினுலறிந்த அக்கோமளன்.

தங்கம்மாள்! நீ சிறிதும் அஞ்சவேண்டாம். உனக்கு ஒரு கடிதம் கொடுத்து வரும்படி சுந்தரபுரி செல்வகேசவ முதலியார் கொடுத்தனர். அக்கடிதம் இதோ பெற்றுக்கோள். நீ கதவு திறக்க வேண்டிய அவசியமில்லை. ஜன்னல்திறந்துகடிதத்தை வாங்கிக்கொள். நாளை பதில் கடிதமும் வேண்டும். கடிதம் இந்தா என்றவுடன் அவ்விருவரும் சிறிது பயம் அகன்றுராயினும் அந்தயுவதி லோகத்தாற்கு பயந்து கதவைத் திறக்க வில்லை. விருத்தை மெல்ல மெல்லச் சென்று ஜன்னலைத் திறந்து அக்கடிதத்தை வாங்கித் தங்கம்மாளிடம் கொடுத்தனள்.

தங்கம்மாள் தான் கடிதம் கைக்கொண்டாளாயினும் அர்த்தராத்திரியில் தம்வீடுநாடிவந்த அந்த வாலிபனுக்குப் பிரியவசனம் கூருதிருப்பதுதவறு, அங்ஙனம்கூறுதல் இகத்தைநோக்கின் இழிவு

என்றெண்ணி ஐயா! தாம் வீணுய்க் காத்து நிற்கவேண்டிய அவசியமில்லை. தம்முடன் சிறிது வார்த்தை யாடுவோமெனின் நான் தற்போது உலகத்திற்குப்பயந்து நடக்கவேண்டியவளாக இருக்கிறேன். இனியும்?

''சிறைகாக்கும் காப்பவன் செய்யும் மகளீர்
நிறைகாக்கும் காப்பேதலை''

என்றும்பொய்யாமொழிப்புலவர் வாக்கியத்துக்கிணங்க ஸ்திரீ ஜாதியான நான் எனது கற்பைக்காக்க வேண்டியவளாக விருக்கிறேன். ஆதலின் தற்போது உம்முடன் சுகக்ஷேமாதிகள் விசாரிப்பதைச் சுருக்குகிறேன். நீர் போய் நாளை இரவு இந்நேரம் இங்கு வந்தால் பதில் கடிதம் கொடுக்கிறேன். என்பது கேட்ட அந்த வாலிபன் அங்கிருந்து எங்கேயோ நடந்து சென்று விட்டார். நிற்க.

தங்கம்மாள் கடிதம் கண்ணுற்றதும் கனத்த சந்தோஷத்தில் மூழ்கினுளென்பதற் கறிகுரியாய் குலுங்க நகைத்துக் கடிதத்தை முகத்திலும் கண்களிலும் ஒற்றிக்கொண்டு திரும்பவும் நகைப்பதைக் கண்ட கிழவி என்ன தங்கம்! சிரிக்கின்றனையே? விசேஷம்யாது என்று வினவினுள்.

தங்கம்மாள்—பாட்டிவேறென்றுமில்லை. கடிதத்தைக் கண்ணுற்றதும் எனக்கு மெத்தச் சிரிப்புண்டாகின்றது.

கிழவீ—அப்படியானுல் கடிதத்தில் விசேஷம் யாதேனுமுண்டோ?

தங்கம்மாள்—ஏன் பாட்டி கடிதத்தை வாசிக்கிறேன் கேட்டுக்கொள்.

செல்வகேசவ முதலியாரது கடிதம்.

சௌபாக்கியவதி தங்கம்மாளுக்கு எல்லா நன்மைகளும்மேல் மேலும் உண்டாவதாக. இவிடம் எனது தாய் தந்தையர் முதலிய யாவரும் க்ஷேமம். அவ்விடத்தில் நீ உன்அண்ணு பானுமார்த்தாண்ட முதலியார் முதலிய சகலருடைய க்ஷேமத்தையும் நான் அறிய ஆவலாக இருக்கிறேன். நிற்க;

நீயும் நானும் சென்ற 1906-வது வருஷம் ஒரேகிளாஸ்மேடா யிருந்ததையும் தற்போது எனக் கவசியமான இஸ்டரிநோட் டொன்று உன்னண்ணு பானுமார்த்தாண்ட முதலியார் மூலம் உன்னிடமிருந்து எனக்குக் கிட்ட அதில் உனது பெயர்கண்ட யான் அன்றுமுதலே உன்மேல் காதல்கொண்டு உன்னை ஒருவாறு நேசித்ததையும், பின்னர் உங்கள் வீட்டுக்கு நான் அடிக்கடி வந்து போய்க் கொண்டிருப்பதையும், அன்னுள்முதல் இன்னுள்வரைக் கும் நீ அறிவாய்; இனியும், 1907-வது வூ டிசம்பர்மாதம் 27ந்தேதி காலை 9 மணிக்குச் சென்னை பச்சையப்பன் காலேஜ் மேற்குவராந் தாவில் நாம்பேசிக்கொண்டதை நீமறந்திராய் என்றும் நம்புகிறேன். அதற்கிணங்க நான் B. L. பாஸ் பண்ணி இப்போது மாதம் பதி னென்றுகிறது. ஆனல் நான் உன்னைப்போல் பணக்காரனல்ல. அது விஷயம் பற்றியே நாமிருவரும் செய்து கொண்ட ஒப்பந்தம் ஈடே றும் வழி இது வரையில் காணவில்லை என்றும், நீ அதைக்கருதி யிராய் போலும். அதற்குத் திருஷ்டாந்தமாக நான் உங்கள் வீடு அடிக்கடி வந்து கொண்டிருப்பதும் நீ இக்காரியத்தைச் சற்றும்கவ னியாதிருப்பதும் என்னிடம் பணமில்லாத ஒருகுறையாயிருக்கலா மென்று நினைக்கிறேன். இனியும்,

"வெம்புவாள் விழுவாள் பொய்யே மேல் விழுந்தழுவாள்பொய்யே
தம்பலம் தின்பாள் பொய்யே சாகிறேனென்பாள் பொய்யே
அம்பினும் கொடிய கண்ணுள் ஆபிரம் சிந்தைபாளை
நம்பின பேர்களெல்லாம் நாயினும் கேடுதானே."

"ஆலகாலவிஷத்தையும் நம்பலாம்
ஆற்றையும் பெரும் காற்றையும் நம்பலாம்
கோலமாமதயானையை நம்பலாங்
கொல்லும் வேங்கைப் புலியையும் நம்பலாம்
காலனுர் விடுதூதரை நம்பலாம்
கள்ளர் வேடர்மறவரை நம்பலாம்
சேலைகட்டியமாதரைநம்பினல்
தெருவினின்றுதியங்கித்தவிப்பரே"

என்றுள்ள கவிகளைக் கவனிக்குங்காலும் இகத்துள்ள நடத் தையைக் கண்ணுறுங்காலும், உன்னை விவாகம் செய்ய உன்தாய்

தந்தையர் வேறு புருஷனைத் தேடிவருகிற இக்காலம் நீ என் மீது பராமுகமாயிருக்கின்றாயோ வென்று கலங்கவேண்டியதாகத்தானிருக்கின்றது. ஆனால் நீ அவ்வாறுள்ள ஸ்திரீயல்ல வென்று விசாரிப்பினும், "எண்ணறக்கற்று எழுத்தற வாசிப்பினும் பெண் புத்தி பின்புத்தி" என்ற ஔவயார் வாக்கின்படி ஸ்திரீயாய்ப் பிறந்த நீ எவ்வளவுதான்படித்தும், ஸ்திரீகட்குரிய "நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு" என்னுமிக்குணங்கள் நன்கமைந்து முற்கூறியசிந்தாமணிச் செல்வியின் செய்யுளை சீர்தூக்கிற்றென்பதற்குக் கொஞ்சமும் பயமில்லை. ஏனெனில் நீயும் பிரௌடையாய்ச் சிலகாலமாய்விட்டது. நானும் கல்விபயிலுவது நிறுத்திச் சிலகாலமாய்விட்டது. இவ்வளவு நாளும் சும்மாவிருந்த நீ, உனக்கு வேறுபுருஷர் நோக்கி விவாஹம் செய்ய உனது சுற்றத்தார் முயன்றுவரும் தற்காலத்திலும், நேற்று நான் உங்கள் வீடுவந்திருந்தும் இவ்விஷயத்தைப் பற்றி நீ நம்மிடம் சிறிதும் ஆலோசியாதது பற்றியே நிற்க;

எனக்கு நேற்றுக் கவர்மெண்டாரால் ஒரு ஆடர் கிடைத்தது. அது ஓர் உபாத்தியாயர் வேலையாயிருந்தமையாலும், நம்மிருவரது மனோரதம் நிறைவேறாமையாலும், அதைத் தற்போது நிராகரித்துவிட்டேன். இனியும் நமதுகாலேஜ் பிருன்ஸ்பலாயிருந்து தற்போது கலெக்டராயிருக்கும் கனம் ஹண்டுதுரை அவர்கள் கூடிய சீக்கிரத்தில் தாமே எனக்கு ஓர் மாஜிஸ்டிரேட் வேலை ஆர்டர் அனுப்புவதாய்ச் சொல்லியிருக்கிறார். அது அவ்வாறிருக்க;

நான் நேற்றுக் காலையில் உங்கள் வீடுவந்து இவ்விடம் திரும்பின பிற்பாடு உன்னண்ணா பானுமார்த்தாண்ட முதலியாரை இராமபுரத்துக்கருகாமையில் கண்டு விஷயந் தெரிந்தேன். அவ்வாறு சொல்வது வெறும் பொய். அங்ஙனம் எனக்கு இதுவரையில் யாதொன்றும் சம்பவியாதது உனது பாக்கியமே? இனியும் அவ்விதமுள்ள இடையூறுகள் எனக்கு ஈசன் வைப்பாரென்பதில்லை. ஆதலால் என்னைப்பற்றி நீ கொஞ்சமும் கவலைப் படவேண்டாம்.

உனது சகோதரரும் எனது நண்பருமான மிஸ்டர் பானுமார்த்தாண்ட முதலியார் உனக்கு விவரம்தெரிவித்து இவிடம் வருவதாய்ச் சொல்லிஇருந்தார். இரவு மணி 9 ஆகியும் காணவில்லை. நிற்க,

உன்சிறியதாயார்உன்னை சோமசுந்தரத்துக்குவிவாஹம்செய்ய வேண்டுமென்று அவனோடு ஒப்பந்தம்செய்துகொண்டு உன்தந்தையின் மனதை விந்தையாக்கி வருகிறாளென்று கேள்விப்பட்டேன். இந்தச்செய்தியும் நீ அறியாமலிராய் என்று நினைக்கவில்லை. ஆனால் நீ எவ்வாறு செய்கின்றனையோ? ஈசனறிவான். இதெல்லாம் ஈசன் செயல். "தாரமும் தனமும் தலையிற் பாக்கியம்" என்றதற்கிணங்க நீ என்னை எவ்வாறு செய்துவிடுகின்றனையோ? பலசொல் வதிற் பயனென்ன? "நான் நினைத்தபடி நீ மனைவியாகக் கிட்டும்பாக்கியம் எனக்கு என்று இல்லாமற் போகிறதோ அன்றே நான் சன்னியாசம் கொள்வதுறுதி" இதையிட்டு அதிகங் கூறவேண்டியதில்லை.

இக்கடிதம் கொண்டுவரும் எனது நண்பன் கோபால சுவாமி முதலியார்வசம் என் மனமகிழ உனது பதில் கடிதம் கிடைக்குமென்று நம்புகிறேன்.

இப்படிக்கு,
உனது நண்பன்
செல்வ கேசவ முதலியார்.

சுந்தரபுரி
30-2-86

இவ்வாறு கடிதம் வாசித்து முடிந்ததும் அக்கிழவி கலகலகல கலவென நகைத்து தங்கம்! முன்னமே உங்களிருவருக்கும் சினேகமுண்டாவென்றதும் தங்கம்மாள் ஆம் பாட்டி! அது விஷயம் நீ கேட்டகவில்லையே? நான் மெட்டிரிகுலேஷன் கிளாஸில் படித்து வரும் போது இந்த செல்வகேசவமுதலியாரும் தன்னூரிலிருந்து இங்கு வந்து மெட்ரிகுலேஷன் கிளாஸில் படிப்பதற்கு அப்போது தான் வந்துசேர்ந்திருந்தார். எங்களிருவருக்கும் பள்ளிக்கூடம் எதிரெதிரேதான் இருந்தது. அந்தச்சமயத்தில் அண்ணாளைப்பேக்குவாசித்துவந்தார். நான்வழக்கம் போல் ஓர் தினம் ஆற்றுக்குக் குளிக்கச் சென்றபோது இவரும் அடுத்தபக்கத்தில் குளித்தார். அன்று இவரைக்கண்டதும் யாரென்று சூக்ஷ்மதிருஷ்டியால் பார்த்தேன். இவரும் என்னைக் கடைக்கண்ணால் பார்த்தவண்ணமே குளித்தார். நான் ஸ்னானம் செய்து வீடுதிரும்பினதும் இவரும் என்னைப் பின்தொடர்ந்து நமது வீடு வரைக்கும் வந்து கொண்டிருந்தார். இவ்வாறே அனேக நாட்களாய் நான்குளிக்கச் செல்லும் சமயம் அவரும் குளிக்க வருவார். நான் பள்ளிக்குச் செல்லும் சமயமும் என்

கூடவே வருவது வழக்கம். இவ்வாறிருக்க ஓர் தினம் வழக்கம்போல் நானும் எதிர் வீட்டுக்கமலமும் பள்ளிக்குச்செல்லும் போது இவரை ஓர் சிறிய சந்தில் சந்தித்தோம். அப்போது நாங்களிருவரும் தற்செயலாய் இவரைக்கண்டு சிரித்து விட்டோம். இது கண்ட அவர் ஒன்றும் சொல்லாது வேகமாய் நடந்துபோய்விட்டார். இது இவ்வாறிருக்க நான் பரீக்ஷைக்குப் போயிருக்கும்போது இவரிடம் சிறிது பேச்சுக்கு இடமாயிற்று. அன்று இவர் என்னிடம் உறுதிமொழி ஒன்று கேட்டார். அதுமுதல் இருவருக்கும் உண்டான சிநேகமேயன்றி வேறு ஒன்றுமில்லை.

கிழவி—தங்கம் அப்படியா; அவன் உன்னிடம் வாங்கிக் கொண்ட உறுதிமொழி என்ன?

தங்கம்மாள்—வேறு ஒன்றுமில்லை பாட்டி! அவரை நான் விவாஹம் செய்து கொள்ள வேண்டுமென்பது தான்.

கிழவி—அப்படியா! அதற்கென்ன நடக்கட்டும். சிறு பிள்ளைகளல்லவா? இருக்கிறது தானே?

என்றிவ்வாறு பேசி முடிந்ததும் அவ்வறையிலிருந்த கடியாரம் மணி இரண்டடித்ததைக் கேட்ட கிழவி தங்கம்! எனக்குத் தூக்கம் வருகிறது; நான் தூங்கப் போகிறேன். நீ தூக்கம் விழித்திராதே எல்லாம் பொழுது விடிந்து பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்லி அவ்விட மிருந்து அகன்று விட்டாள். தங்கம்மாளும் படுக்கை யறைக்குச் சென்று சயனித்தாள்.

4-வது அத்தியாயம்.

இவ்வுலகில் நீர்வளம் நிலவளம் முதலிய ஸகலவளங்களைப் பெற்றதும், வாழை, பலா, கமுகு, தென்னை முதலிய விசேஷத்தருக்களால் சூழப்பெற்றதும், பூமாதேவிக்குத் திலகம் போன்றதுமான நாஞ்சிநாடென்னும் நகரத்தில் பிரசித்தியான ஜம்புகாத்ரி என்னும் சிறிய நகரமுண்டு. அதில் ஸ்ரீ கிருஷ்ணசுவாமி ஆலயம் ஒன்றுள்

ளது. அவ்வாலயத்திலிருந்து கொஞ்சம் தெற்குமேற்கானமூலையில் ஓர் சந்துண்டு, அதில் கொஞ்சம் மேற்கே ஓர் பெரிய வீடொன்று கட்டி முடிவாயிருந்தது. ஆனால் இம்மாதிரி பெரிதான கட்டிடம் தற்போது எங்கும் காணப்படவில்லை. அக்கட்டிடமானது அனேக அறைகளுடனும் அனேக சித்திர வேலைசெய்த சுவர்களுடனும், அனேகபதுமைகள் அடித்த கல்தூண்களுடனும் கண்ணாடிகளால் வேலைசெய்யப்பட்ட அனேக ஜன்னல்களுடனும் மூன்றுமாளிகையுடனும் கூடியதாக விருந்தது. அதில் மூன்றாவது மாளிகையில் சில சயன அறைகள் ரமணீயமான கற்பதுமைகளால் அலங்கரிக்கப்பட்டும் இருந்தன.

அந்த மாளிகையில் அர்த்தராத்திரி வேளையில் அங்குள்ள பதுமைகள் மிகக்களிப்புடன் அங்குமிங்கும் நடப்பதுபோலும் காணப்படுகின்றன. இனியும் அங்கு ஜ்வலித்துக் கொண்டிருக்கும் ஓர்தீபத்தின்காந்தி அந்த கற்பதுமைகளில் தாக்க ஒவ்வொன்றும் ஒவ்வொரு தீபம் போல் பிரகாசிக்கின்றன. அவ்வறையில் நிற்கும் மாது ஒருத்தி மூக்கில் அணிந்திருக்கும் மூக்குத்தியானது சந்திர ஸ்பரிசத்தால் ஏராளமான ஒளியைக்கொடுக்கின்றன. இது இவ்வாறிருக்க, இரவு ஒருமணி இருக்கலாம். பைசாசங்கள்கூட அயர்ந்து நித்திரைசெய்யும்வேளையாயினும், "தூதுசெல்வோன், பிறர்தாரம் கவர்வோன், கள்ளன், கடன்கொண்டான் முதலிய சிலருக்கு இரவு தூக்கம் வராது" என்றான்றோர் கூறுவதுபோல் அவ்வர்த்தராத்திரி அம்மாளிகையில் தையலும் தலைவனுமாகிய இருவர் யாதும் பயமின்றி சமாசாரம்பேசிக் கொண்டிருக்கும் மகத்துவத்தை என்னென்று கூறுவோம்.

எனின் உச்சியில் காணப்படுகிற சந்திரனின் அம்சமோ அவன் பிரதிபிம்பமோ என்று சம்சயிக்கத் தக்கதான ஒரு ரூபம் காணப்படுகிறது. அடுத்தபார்வையில் தெரிவது அடர்ந்துபடர்ந்துவளர்ந்த கரியகேசஜாலங்களால்மூடப்பட்ட ஒருபெண்ணின்பங்கஜம்போன்ற முகமாயிருந்தது. ஆனால் அம்மாது நவயௌவன முதிர்ந்து நாள் தோறும் வளர்பவள் என்று சொல்லத்தக்க மோகினிகளான யுவதிகளது சரீர எடுப்பும் பால்வடிவும் அப்போது அவளிடம் பிரத்யக்ஷமாய் இருக்கிறது. அவள் கூடியவரையிலும் பார்வைக்குச் சிறிதும்

விகாரத்தை உண்டுபண்ணக் கூடாததாகவளர்ந்திருந்தனள். அவள் சகல உடுப்புகளும் ஒன்ருேடொன்று பொருத்த முள்ளதாயிருப்பதால் அவள் வளர்த்தியும் அவளுடைய அழகில் ஓர் பாகமென்று வர்ணித்தல் உசிதமாம். செண்பகவர்ணத்தை நாணச் செய்கிற கிரு சமான கர்த்திரம் விசேஷமாய் அதனது லாவண்யத்தாலும் மெதுவாலும் அழகுவாய்ந்திருப்பது, சூரியன் அஸ்தமன மடைந்தவுடன் காண்கிற சந்திரன் இம்மங்கையைக் கண்டுநாணமுற்று நாடெங்கும் மேகத்தோடே மறைந்து சஞ்சரிப்பது வழக்கமென்ருல் இம்மாதின் முழு அழகையும் எடுத்துச் சரியாய் வர்ணிக்க என்னுல் ஆகுமா? எனின் அவள் ஆடை ஆபாணங்கள் தரித்து அழகுவாய்ந்து நடக்கும் நடையைக் காமுகன் கண்டால் அவனது சிந்தையை வஞ்சியாமல் இராதென்பது உறுதி.

அவள் நாயகன்கீழ் நாயகி ஆனதுபற்றிச் சமயல் விஷயங்களிலும் மற்றக் காரியங்களிலும் கொஞ்சங்கூட அவகாசமில்லாதவளாயிருப்பினும் "குதிரையிருப்பறியும் கொண்டவள் குணமறிவாள்" என்னும் முதுமொழியைக்கடைப்பிடித்து அவளது நாயகரால் அவன்நாயகி இதரவிஷயாதிகளில் கொஞ்சம் அதிகாரமும் அதை யொட்டிக்கொஞ்சம் கடினநெஞ்சும் சில கபடங்களும் கற்றவளாயிருந்தாள். எனின் கருணை என்பதைக் காதால் கேட்டும் அறியாத அவளுக் கிருக்கும் தயவென்னும் திவ்யகுணத்தை எவ்வாறுயான் பிரசங்கிப்பேன். இதையிட்டுத் தற்போது ஆரோபிக்கும் மட்டும் யாதுளது? "குலத்தளவேயாகும் குணம்" என்பது போலவும் "அட்டையைக் கழுவிக்கட்டிலில் கிடத்தினுலும் அதுகிடக்கும் சகுதிக் குழியில்" என்பது போலவும், அற்பத்தன முடைய இவள் தற்போது என்ன உயர் பதவியை அடைந்தாலும் அவளது அற்பத்தனம் மாறுமா? அவ்வித மெனின் "பிறவிக்குணத்துக்கும் மட்டைவைத்துக் கட்டினுல் மாருதிருக்கும்"? நிற்க, வெளியில் அழகும், உள்ளம் அழுக்காகவுமன்ருே இருக்கின்றது. என்ன செய்யலாம். "வாய் சர்க்கரை கை கருணைக் கிழங்குபோலும்." நிற்க

இந்தஅம்மாளுடன் ஓர் புருஷன் ஏதோ சொந்தக்காரியாதிகள் பேசிக்கொண்டிருக்கிருரே? அவர் இம்மங்கையை நோக்கி

கொச்சக்கச்சி இன்னுரெண்ணு தெரியாதாக்கும். உங்கவீட்டு முதலாளி முதலானவருக்கு நண்ணுத்தெரியும். இவ்வூர் பெரிய முதலாளி இருக்கே! பெரிய முதலாளி சோமசுந்தரம் அவாளுடைய சொந்த சிநேகிதன் சுந்தரத்தைத் தெரியாதிருக்க வழி இல்லையே?

சுந்தரம் என்ற பேருடைய அந்த மனிதன் சில சேஷ்டைகளோடு தனது வாக் சாதுர்யத்தைப் பிரகடனம் செய்யத்தொடங்கின காலத்தில் அம்மாது சிரோமணி அச்சம் சிறிது சிறிதாய் அகன்று, தற்போது இரவு அக்காலத்தில் யாருடைய அனுமதியுமில்லாமல் அவன் அங்குவந்தது அவளுக்குப் பெரும்வருத்தமாயிருந்தும் சோமசுந்திரம் என்றவுடனே சந்திரசூடனைகண்டதுபோல் அச்சம் தொலைவில் அகன்றுபோயிற்று. நிற்க;

அவனுக்கு உத்தேசம் வயது நாற்பதிருக்கலாம். மூன்பக்கம் வளைவில்லாமலிருந்தால் அவனை ஏறக்குறைய மடார்ப்பனைக்குச் சமானமாகச் சொல்லலாம். குடுமியில் கெட்டி முல்லைமாலையும் சூடிவிரித்துப் பின்பக்கமாகக் கட்டியிருக்கும் அவன்குடுமி அந்தமாளிகையிலுள்ள துவாரங்களைத்தடவிக் கொண்டிருந்தன. நெற்றியிலுள்ள என்பு அகம்வளைந்திருந்ததால் நெற்றி உண்டோ இல்லையோ? வென்று சம்சயிக்க வேண்டியதாயிருக்கிறது. மிகவும் சிறியதாயுள்ள சிரசும் வெகுரமணீயமாகத் தானிருக்கிறது. சிந்தூரக்கோபியும், அதன்மேல் கறுத்தகண்ணுடியைப்போல் தெளிவான சாந்துப்பொட்டும் வாலியின் குடும்பத்தாரை நாணச்செய்கிற அந்த முகத்திற்கு அலங்காரமாக அணியப்பட்டிருக்கிறது. இரு கண்களிலும் மைதீட்டித் துடைத்ததுபோல் காணுவது கறுத்தமொழியினது சகஜமான பிரகாசம். அந்தக் கண்களிருந்து எங்கெயோ பிரயாணம் போயிருக்கிறதுகழுத்து. குறுகி நீண்டிருந்தாலும் அந்தமனிதனுடைய அழகுக்கு இதுவும் ஓர் உறுப்பென்றே நினைக்கலாம். நெஞ்சிற் பெரிதாயிருக்கும் குழியைமேல் வேஷ்டியால் மறைத்தும் காதில்ஒவ்வொரு முல்லைமலரைக் கடுக்கனுக்குப் பதிலாய் அலங்கரிக்கப்பட்டும் இருக்கிறது. இவன்தான் மலையாளதேசத்தனுய் இருந்தாலும் பாண்டியநாட்டு வழக்கம் தனக்கு நன்ருய் பரிசயமுண்டென அவன் மனதில் பெரிதாகக் குடிகொண்டிருந்தது. அது எவ்வாருகுமெனின் "அன்ன நடையைக்கற்ற காகம்போல்" சுயமான

மலேயாளபாஷை சம்பிரதாயத்தைவிட்டு புதிதான பாண்டியபாஷை பரிசயமும் பூராவாகாமற்போவது யாங்ஙனமெனின், இப்பொழு துள்ள தமிழர்கள் ஆங்கிலம்படிக்க ஆரம்பித்து அதிலும் தேர்ச்சி அடையாமல் அதன்காரணமாய் மாதுருபாஷையாகிய நம் தமிழ் அற்பமும் தெரியாமையால் ஒன்றுக்கும் உதவாமல் சோம்பேரி களாய்த் தம் மில்லத்தை சோம்பேரிமடமாக்கித் தூங்கிக்கொண் டிருப்பதுபோலவே யாகும். நிற்க;

சுந்தரத்தின் பாண்டித்தியத்தை இனியும் பகருவோமெனின் "நன்று" என்னும் சொல்லின்முதல் எழுத்தான "ந" என்னும் எழுத்தைச் சரியாய் மொழியத்திறமை இல்லை என்றால் அவனது பாண்டியபாஷையின் பாண்டித்தியம் இவ்வளவென்று யாம் கூரு தது நேயர்கள் தாமே அறியக் கூடுமாதலின், அதனைவிடுத்தோம். இனியும் "விதி எவ்வழியோ மதியும் அவ்வழி" என்னும் வாக்கியத் தைச் சற்றே கவனித்தால் பாக்கியசாலியான நம்முடைய சுந்தரத் தை யாதுவிஷபத்தாலும் நிர்மூடனென்று கூறுதல் எனது அறியா மையே?

சுந்தரம் அந்த அம்மாளுக்கு மனதில் பதியவேண்டித் தம் தாய்ப்பாஷையாகிய மலேயாளபாஷையை முழுதும்விட்டு நிறைந்த செந்தமிழில் சமாசாரங்கள் பேசத் தொடங்கினதற்கறிகுறியாய்த் தென்னைமரங்காற்றில் ஆடுவதுபோல் அவன் மண்டை உருளுகின் றது. இதை எல்லாம் கண்டும் அவன் சமாசாரங்களைக்கேட்டும் இரு ந்த அந்தம்மாள் சுந்தரத்தின்மீது அவ்வளவாய்நேசமில்லையாயினும் தனக்குச் சினேகிதரானசோமசுந்தரம் அனுப்பினஆளாயிருப்பதால் ஆதித்தனைக்கண்ட அரவிந்தம்போல்முகமலர்ச்சியோடு சுந்தரத்தை நோக்கி ஐயா! தாம் இவிடம்யாது காரணமாய் வந்தது என்றதும் கொச்சக் கச்சி! சோமசுந்தரம் இருக்காரே; அவரோ கண்ணுக்குக் காமன். கொடையிலே கர்ணன். வீரியத்திலே இந்திரஜித்து. நயத் திலே விதுரர். தனத்திலே குபேரன். கீர்த்தியிலே மிகுந்த பிரதாப முண்டு. அப்பப்பா! என்றிவ்வாறு மகாபிரதாபம் படித்துக்கொண் டிருந்த சுந்தரத்தின் சமாசாரங் கேட்க மனமில்லாத அந்த அம் மாள் கோபமுடையவளாய் ஏ ! சுந்தரம் என்ன? நீ வந்தகாரியம் இன்னதென்று சொல். எனக்குத் தூக்கம்வருகிறது.இன்று இதுவ

ரைக்கும் அந்தப்பாவி எழுவிலே நின்றுய்விட்டது. இப்போ உன் எழுவிலே நிற்கும்படி ஈசன் ஏற்படுத்திவிட்டான். என்னசெய்கிறது என்றுள்.

இதுகேட்ட சுந்தரம் தமது பிரசங்கத்தைவிட்டு அக்கச்சி என்ன நீங்கோ சொல்ரீங்கோ?

மாது—ஏது! ஏ சுந்தரம்! நீ வந்தகாரிய மென்னசொல்லு?

சுந்தரம்—அக்கச்சி! மகாபிரதாபசாலி சோமசுந்தரம் அவாள் இருக்காங்களே அவாள் காரியம் முடிக்கத்தான்.

மாது—அப்படியா! சுந்தரம் அவர் உன்னிடம் என்னசொல்லி அனுப்பினுர்?

சுந்தரம்—அவாள் உங்களிடம் சொல்லி இருந்த காரியம் தெரியுமே? அதைச் சொல்லவேண்டுமென்பதில்லையே? அது மிகவும் அவாளுக்கவசியமாம். ஜாக்கிரதையாய் சீக்கிரம் முடிக்க வேண்டுமாம்.

மாது—ஏ! சுந்தரம்! அவாள் விஷயத்தில் தானே நான் கண்ணும் கருத்துமாயிருக்கிறேன். அவருக்கு என் விஷயத்தில் கருத்தில்லைபோல் காண்கிறதே? நல்லது அவர்காரியம் மட்டில் நடந்தால் போதும். நம்காரியம் முடிந்தால் என்ன? முடியாமற் போனுல்தான் அவருக்கென்ன? இது புருஷர்களுக்கு ஏற்பட்ட தொழிலாய் விட்டது. அதையிட்டுக் கூறுவதிற் பயனென்ன? "காரியம் முடியும்வரை காலைப்பிடிப்பதும் பின்னர் குடுமியைப் பிடிப்பதுமேபாலிருக்கிறது." நல்லது என்னிடம் இதெல்லாம் காட்டவேண்டியதில்லை. நான் இதுபோல் ஆயிரம்கண்டிருக்கிறேன். ஆனுலும் அவருக்கிதுவழக்கமாய் விட்டது. இரவு எவ்விதமும் கொண்டுவருவதாய்ச் சொல்லிவிட்டுப் போனது இதற்குத்தானு?

சுந்தரம்—என்ன அக்கச்சி! ரொம்ப குறைப்படக் காரணமில்லையே? உங்கமட்டில் அவாள் அப்படிக்கெல்லாம் செய்யமாட்டாங்களே; அவாளுக்குங்கள் பேரிலிருக்கும் திருப்தி அளவிடமுடியுமா?

மாது—சுந்தரம்! உன்னிடம் அதெல்லாம் கேட்கவில்லை. (முகத்தைத் திருப்பி) அவாள் உன்னிடம் ஏதாவது கொடுத்தார்களா இல்லையா?

சுந்தரம்—அக்கச்சி! ஆயிரம் ரூபாய் நோட்டொன்று உங்களிடம் கொடுக்கும்படி கொடுத்திருக்கிறுர்.

மாது—அப்படியா! சுந்தரம் அதெங்கே எடு? பார்க்கட்டும்.

சுந்தரம்—இதோ பாருங்கள் என்று சொல்லி (நோட்டெடுத்துக் கையிற் கொடுக்கிறான்.)

மாது—(முகமலர்ச்சியுடன் நோட்டைக் கையில் வாங்கினதும்) கேட்டீரா சுந்தரம் பிள்ளை! சோமசுந்திரம் அவர்கள் இருக்கிறார்களே? அவர்களைப் போல் நல்ல மனிதர் கிடைப்பது அருமை தான். அல்லவா ஓய் ?

சுந்தரம்—அது உங்களுக்குத் தெரியாதா? விடிய விடிய நீங்கள் பழகின வாளாச்சுதே. நான் சொல்ல வேண்டுமா? எல்லாம் நன்றாய் அறிந்தது தானே?

மாது—ஓய்! சுந்தரம் பிள்ளை மேவேறொன்றும் அவாள் சொல்லி அனுப்ப வில்லையா?

சுந்தரம்—ஆம் சொன்னாங்கோ. உங்களிடம் சொல்லி இருந்தது சீக்கிரம் நடப்பித்தால் இனியும் இதுமாதிரி ஆயிரம் ரூபாய் நோட்டொன்று தருவதாயும், நீங்கள் இது விஷயத்தில் சோம்பலாயிருக்கக்கூடா தென்றும் சொல்லச் சொன்னாங்கோ.

மாது—ஓய்! சுந்தரம் பிள்ளை அப்படியானால் நான் அதை எவ்விதத்திலும் நிறைவேற்றுவதாயும், நீங்கள் கூறியது போல் ரூபாய் ஆயிரம் கொடுத்தால் போதா தென்றும், அதிகப் பிரயாசையிருப்பதால் ஐயாயிரம் தரவேண்டு மென்றும், இது விஷயம் என்னால் கட்டாயம் முடிக்கக் கூடுமென்றும், நான் இது விஷயத்தில் ஜாக்கிரதையாகத் தானிருக்கிறே னென்றும், நாளை யன்றைக்கு நிச்சிய தாம்பூலம் நடத்த ஏற்பாடா இருக்கும்படிக்கும், நான் உறுதியாய்ச் சொன்னதாகச் சொல்லும். எனக்குத் தூக்கம் வருகிறது. நீர் போய் வாரும் என்று சொல்லிக் கொண்டு இருவரும் அவிடமிருந்து மெல்ல இறங்கி இரண்டாவதுமாளிகையில் வந்ததும் சுந்தரத்தை நோக்கி அப்படியே ஆகட்டு மென்று சொல்லி அந்த அம்மாள் படுக்கை அறைக்குச் சென்று சயனிக்கலானாள்.

இவளாரென்பதை நாம் விளக்காமலே நேயர்கள் அறியக்கூடும். ஆனாலும் இவள்நமது தங்கம்மாளின் தந்தை ஸோமனாதமுதலியாருடைய இரண்டாவது மனைவி அம்மணி என்பவள்தாம்.

5-வது அத்தியாயம்.

இரவு மணி மூன்றிருக்கலாம். சுந்தரம் என்னும் பெயருடைய அந்த மனிதன் அம்மாளிகையினின்றும் கீழிறங்கும்போது படியில் தட்டி சட சடவென்ற ஓசையுடன் தொப்பென்று விழுந்ததும் தடபுடலாக எழுந்து ஏ! நனரு யிருக்குது படியே! நீயும் பயம் காட்டுகின்ருய்? ஆள் தெரியாமல் கொஞ்சு கின்ருப் போலிருக்குது என்று சொல்லிக் கொண்டே அவிட மிருந்து தப்பிப் பிழைத்தோமென ஒருவாறு ரஸ்தாவை அடைந்தான். ஆனல் அவனை வந்த வழி தெரியாமல் இவ்வாறு விழச் செய்தது வேலம் பட்டை சத்துக் கலந்த ஒபின் சக்தி யேயாம். ஆனுலும் அவன் மெல்ல மெல்ல நடந்து அங்குள்ள ஓர்சாராயஷாப்பை அடைந்து கையிலிருந்த பொருளை யெல்லாம் அங்கிடம் நாசம் செய்து விட்டு வெளிக் கிளப்புமுன் நமது சுந்தரம் அடைந்த பரிதாபத்தை எவ்வாறு வரையக்கூடும். எனின் அவன் அந்த ஷாப்பில் இருந்த பொருளை யெல்லாம் நாசமாக்கியது போதாதென்ற ஏக்கத்துடன் அந்த ஷாப்பினின்றும் தத்தித் தத்தி தரையில் கால்படாது நடந்து வரும் வழியில் ஐந்தாறு ஆடவர்கள் சாஞ்சாடி நிற்பதைக் கண்டு அவர்களோடு உல்லாசமாகப் பேசவேண்டு மென்று இறுமாப்புக் கொண்டு அங்கு நிற்பது யார்டாலே என்றதும் அவர்களில் தலைவன் அங்கு நின்று கேட்கும் புழுக்கைப் பயல் யாரடா வென்ருன்.

சுந்தரம்—குடிகாரப் பசங்களா! உங்களை இவ்வாறு செய்வது உங்கள் குடியல்லவா? அடே! யாரென்று நினைத்தாய்? அய்யா அய்யா! அரசே! என்று சமாதானம் சொல்கிறீர்களா பிலே உங்களைக் கொன்று விடட்டுமா? அடே பசங்களா! பத்திரமாய்ப் பிழையுங்கள். இது யாருடைய நாடென்று தெரியுமாடா? போக்கிரிப் பசங்களா என்றதும் அக்கூட்டத்திலுள்ள ஒருவன் அடே! அந்தப் படுக்காளிப் பயலைப் பிடித்துப் பனைமரத்தோடு கட்டுங்கோ பிலே. தடியன் இவனென்ன மாடுபோல் வளர்ந்திருந்தாலும் கள் குடிக்காத பயலாச்சே என்ருன்.

மற்ருெருவன்—பிலே கோமட்டி ஓடிவா. நாம் இன்று குடித்

தது குறைவாகத் தானிருக்குது. இவன் கையில் பணமிருக்குதா பார்ப்போம் என்றான்.

இன்னொருவன்— ஏ! நில்லுங்கோ ஆத்திரப்பட வேண்டாம். நம்பயஜமானிடம் வேண்டிய பொருளிருக்குது. இப்போது எவ்வளவு குடம் சாராயம் வாங்கிவர வேண்டுமானாலும் முடியும். இவன் நம் பயலையும் நம்பள் யஜமானரையும் ஒன்றாய் வைதான். ஆகையால் வைதவாயைக்கிழித்து விடு என்றான்.

மற்றொருவன்— ஏ! நில்லு. அவனை ஒன்றும் செய்யாதேபாவம் என்றான்.

இவ்வாறு ஒருவனுக்கொருவன் சொல்வதைக் கேட்டு நின்ற சுந்தரம் அடே! அப்பனுக்குப் பிறக்காதபசங்களா இங்கு வந்திருப்பது உன்னிலும் பதின்மடங்கு குடிகாரந்தான். எங்கப்பனைத் தெரியுமாடா? இந்த ஊர் முதலாளி உங்கள் தலையைப்போக்கக் காத்திருக்குது. பசங்களா! ஒர்மையா யிருங்களடா. டே! மீசை முளைத்தபசங்களானால் என்னண்டையில் வாருங்களடா? என்றதும் அந்தஆட்களில் ஒருவன் ஓடிவந்து உற்று நோக்கி மற்றவர்களிடம் முணுமுணு வென்று சொன்னது கேட்ட ஒருவன் சீ! நம்ம சுந்திரமா! அவன் அம்மணி வீட்டிற்குப் போயிருக்கிறான். இன்னேரம் வரமாட்டான் என்று சொல்லிக் கொண்டே வந்து சுந்தரத்தினுடைய கழுத்தில் ஒருகுத்துக் குத்தினான். அந்தோ! சுந்தரம் என்ன செய்யக் கூடும். புத்திஸ்திரமா யிருந்தாலன்றோ அதைப் பொறுப்பான். குத்துப் பட்டதும் தரையில் விழுந்து எழுந்தான். உடனே கனைத்துக் கொண்டு அடே பசங்களா! நான் சோமசுந்தரமுதலியார் வாளிடம் கள்ளுண்ணும் கல்வி கற்றவனாயிருந்தால் அவரது வீரமும் சௌர்யமும் எனக்கிராமற் போகாது. ஒரு நொடியில் உங்களை வரையும் யமனுலகு அனுப்புகிறேன் பாருங்களென்று ஆர்பாடம் செய்து கொண்டு அவனைக் கையால் குத்தத் துணிந்தான். இதுகண்ட அவன் அடே சுந்தரம் அடித்து விடாதே! உன்னப்பன் சோமசுந்தரம் நாந்தானென்றது கேட்ட சுந்தரம் கலகலவென, நகைத்து அப்பனா வந்திருக்கிறாய்? நல்லது. அது தானே இவ்வளவு அடம் பேசினாய்? நான் உன்னை அடித்து விட ஆரம்பித்து விட்டேனே! இந்தக்கை

யை என்ன செய்கிறது என்றுகீழே அடித்து ஆர்பாடம் செய்தான். இது கேட்ட அவ்வனைவரும் ஆம்நீ ரொம்பத் தைரிய முடையவன் ருன். நாங்களல்லாமல் வேறுயாராவதிருந்தால் முந்தியேபருந்துக்கு விருந்து செய்திருப்பாயே? நான் அது தெரிந்துதாண்டா முந்தியேசங்கதிசொன்னது என்றுன். மற்றவர்கள் அப்பா! சுந்திரமா நீயா இவ்வளவு பேசினது. அதுதானே கேட்கிறேன். இன்னொருவன் இந்த இரவு இங்கு வருவானு? நம்முடைய அரசிடமென்று தெரியாதா? நீ அல்லாமல்வேறு யாராவதிருந்தால்இதற்குள் இறந்திருப்பானே என்றது கேட்ட சுந்தரம் ஆம் அப்படித்தான் நம்மிடம் யார்வந்திருப்பார்கள் என்று பேசிக்கொண்டு வரும் சமயத்தில் அவர்களை எல்லாம் கொஞ்சம வெறிவிட்டு விட்டது. இதனுல் மனதிற்குக் கொஞ்சம் பயமுடையவர்களான அந்த ஆட்கள் ஓரிடமிருந்து ஆலோசனை செய்து முடிவில் சிலர் அங்கிருந்த பனைமரத்திலேறிகள் குடித்துவிட்டுத் தள்ளாடித்தள்ளாடி ஒருவன்போகும் வழி ஒருவனுக்குத் தெரியாமல் நடந்து வருவதில் சிலர் தாம் குடித்த அளவில்லா மதுவினுல் கக்கிக்கொண்டும் சண்டையிட்டுக் கொண்டும் போவது எவ்வாறிருந்ததென்ருல் "நாய்கள் எச்சிலை நக்கும்போது பொறுமையின்றிக் கூச்சலிடுவது போலவேயாம்."

இவ்வாறு செல்லும் வழியில் அடர்ந்து படர்ந்து ஆகாயமளாவினின்ற ஓர் ஆலவிருக்ஷத்தில் மோதி வழிதெரியாமல் அவிடம் விழுந்து கிடக்க ஈசன் இடையாக்கி விட்டான்.

அப்பொழுது அவ்வடர்ந்து படர்ந்துள்ள ஆல விருக்ஷத்தை ஆலயமாக்கி வெகுநாளாய் வசித்து வரும் புருஷனும் பெண்சாதியுமாகிய பக்ஷிகளிரண்டில் பெண் பக்ஷி யானது தங்கள் வழக்கம் போல் கூச்சலிட்டு ஆண்பக்ஷியை யழைத்து இதென்ன விந்தையாகவிருக்கிறது. நாம் இதில் வசித்து வரும் அநேகம் நாட்களில் இப்பொழுது சில நாட்களாய் இவ்வர்த்த ராத்திரி வேளையில் ஐந்தாறு ஆடவர்கள் இதனடியில் வருவதும் திடீரென விழுந்து விடுவதும் வழக்கமாயிருக்கிறதே? நானும் நாள்தோறும் கண்டு வருகிறேன். இப்போதும் அப்படியே நடக்கக் கண்டேன். இதென்ன விந்தை! இதென்ன ஆச்சரியம்! இதென்ன மாயை! ஐயனே இவர்கள் திருடர்களோ? அன்றி நம் முயிர்க்கு உலை வைத்திருக்கும் வனவேடர்

களோ?யார் நாயகா! ஒன்றுந் தெரியவில்லையே! இதை நாம் கவனியாதிருத்தல் தகுதியல்லவே? ஏதாகினும் நாம் ஒதிங்கிப்பிழைப்பது நலம். இவ்விஷயத்தில் நாம் ஆலஸ்யமாயிருப்பது தகுதியல்லவே? என்று பலவாறு பிரலாபிக்கும் பெண்பக்ஷியைப் பார்த்து ஆண்பக்ஷி சொல்லத் தொடங்கிற்று.

ஓ பெண் மணி! நீ என்ன இறக்கப் பயந்தனை போலிருக்கிறது. "ஆறிலும் சாவு நூறிலுப்சாவு" என்பதுநிச்சயம். "நெருநெலுள னொருவனின்றில்லை யென்னும் பெருமை யுடைய திவ்வுலகு" என்றபடி நேற்றிருந்தார் இன்றைக்கிருப்பது நிஜமல்லவே. இவ்வாறிருக்க நீ இறக்கப் பயந்தால் உன்னை யமன் விட்டு விடப் போகிறனு?

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந்தாமுவந்துறும்"

ஊழ்வினை பாறி நடக்கப் போகிறதா? அன்று எழுதினவன் இன்று அழித்தெழுதப் போகிறனு? இவர்கள் வனவேடர்களாகத் தானிருந்தார்கள் நீ என்ன செய்யக்கூடும்? அல்லது அவர்கள் தான் உன்னை என்ன செய்யக்கூடும்? நீ பிரலாபித்துக் காரியமென்ன என்று சொன்ன ஆண்பக்ஷியை நோக்கிப் பெண்பக்ஷி கூறத்தொடங்கிற்று.

நாயகா! எல்லாம் விதிதானென்பது உண்மை யாயினும்
"குடி என்னும் குன்றாவிளக்காமடி
என்னுமாசூரமாய்ந்து கெடும்"

என்றவாறே நாமிருக்குமிடம் நடக்கும் இவ்விந்தையை நாமறியாமலிருந்தால் அது நமக்கே ஒருக்கால் கேடு விளைவிக்கக்கூடும். என்றது கேட்ட அவ்வாண் பக்ஷி கூறுகிறது.

ஓ பெண்மணியே! எல்லாம் சரிதான். இவ்விருக்ஷத்தடியே வந்த இவர்களா ரென்பதை அறிய நீ ரொம்ப ஆவல் கொள்வதால் சற்றுக் கேள். இவ் வனத்தருகாமையிலுள்ள நாஞ்சி நாட்டில் ஐப்பு காத்ரி என்னும் நகரை நீ அறிவாயன்றே? இவர்கள் அவ்வூரிலுள்ள பெரிய தனவந்தர்கள். ஆனல் இவர்கள் தமது செல்வம் நல்வழியில் வந்ததில்லை யாகையால்

"பொம்மெனப் பணைத்து விம்மி போர்மதன் மயங்கிவீழும்
கொம்மை சேர் முலேபினுளே கூறு வேனென்று கேளாய்
செம்மை யிலறம் செய்யாதார் திரவியம் சிதற வேண்டி
நம்மையும் கள்ளும் சூதும் நான் முகன் படைத்தவாறே"

என்னும் சிந்தாமணிச் செய்யுளின் விளம்பலுக்கொப்ப அந்தப் பொருளை நாள் தோறும் தவக்க மின்றி சாராய ஷாப்பில் அழித்து அவிடமிருந்து வரும் வழி தெரியாமல் மயங்கி நமது விருக்ஷத்தடியில்மடங்கி மறுநாள்காலே தாங்கள் இருப்பிடம் சேர்வது இவர்களுக்கு வழக்கம். அது பற்றியே இன்றும் இவிடம் வந்து அயர்ந்து விட்டார்கள். வேறு ஒன்று மில்லை. நீ பயப்படாதே என்றது கேட்ட பெண்பக்ஷி யானது அப்படியா! நம்மைத்தான் பகுத்தறிவில்லாப்பிராணியாய் பிரம்மன் படைத்து விட்டானென்றும், மானிடருக்குக் கடவுள் வேண்டும் அறிவை ஊட்டு கிறுனென்றும் எண்ணி நாமும் நம்போன்ற பற்பல பிராணிகளும் அம்மானிட ஜடலத்தைக் கொள்ள எவ்வாறு அரும் பிரயாசைப் பட்டு வருகின்றேம்? ஆனும் இம்மாந்தர்களைக் கடவுள் ஆறறிவுடைய வராய் படைத்திருந்தும் அவர்கள் செய்யும் தீவினைகளைக் கண்ணுறும் போது இவர்களைப் போல் பகுத்தறிவுடைய மூடாத்மாக்கள் கிட்டாதென்பது விளங்கவில்லையா? நாயகா! மானிடருக்கு வேண்டும் அறிவைப் படைத்து அவ்வறிவுக்குத் தூண்டு கோலாய் அனேகம் புராண இதிகாசங்களை விரித்துக் காட்டியும் இங்ஙனம் மாந்தர்கள் தவறி நடப்பது எவ்வளவு விந்தை என்றதுகேட்ட ஆண்பக்ஷி, பெண்ணே! அதிலாதலேபிட்டுக் கொண்டனே? நன்றுயிருக்குது. இவ்வுலகிலுள்ள எந்தநூலும் இவ்விதம் மதுவுண்ண ஒப்புக்கொண்டதாய்க்காணப்படவில்லை. நிற்க, பகுத்தறிவுள்ள தாமே இங்ஙனம் தமக்கு "உள்ளங்கை நெல்லிக்கனி போல்" விளங்கும்இதிஹாசங்களை வழுவி நடப்பார்களேயாயின் நம்மைப்போன்ற அறிவில்லாப் பிராணிகள்எவ்வாறு நடக்கக் கூடும். நீசொல்வது சரிதான். ஆனலும் இந்த மனிதர்களைப்போலுள்ள ஆத்மாக்கள் செய்யும் அக்கிரமங்கள் மற்ற எந்த ஜன்ம மெடுத்த ஆத்மாவும் செய்யக் காணவில்லை. இனியும் இதனுண்மை அறியவேண்டின் இவ்வாறுள்ள மனிதர் தன்னைத்தானே உற்றுணர்தல் வேண்டும், இம்மனிதர்களுக்கு யாரேனும் ஹிதம் பகருவாரெனின் அவை,

"வானரம் மழைதனில் நனையத்துக்கணுன்
ருனொருநெறி சொலத்தாண்டிப் பிய்த்திடுஞ்
ஞானமுங் கல்வியுந் நவின்றநூர்களு
மீனருக் குரைத்திடி லிடற தாகுமே"

என்னும்செய்யுளுக்குச்சமமாகும்.ஆதலால்இவரைப்பற்றிநாம் பேசவுங்கூடாது. ஆயினும் கடவுள் சிருஷ்டியான எந்த ஆத்மாவும் தான் செய்யவேண்டிய செய்கையைச்செய்தால்தான் நலமாயிருக்குமேயன்றி தற்போதுள்ள தனமிகுதியால் அடாதசெய்கைகளைச்செய்தால் படாதபாடும் பட்டுக் கெடாத கேடும் கெடுவா னென்பதாக மாந்தர்க்கு மனுகூறி இருப்பினும் அது யாவர்க்கும் பொதுவேயாகும். இதெல்லாம் வீணுய்க்கூறுவதில்பயனென்ன? குடிகாரர்கள் திரும்பப் போகிறார்களா? குடியனைக் குடிக்கார னென்றால் கோபம்வந்து விடும். இனியும் நாம் பேசும் சேதி இந்தக்குடிகாரர்கள் கேட்டுக் கொண்டிருந்தால் நாம் இவிடம் குடியிருக்க முடியாது. ஆகையால் இப்போதொன்றும் பேசாதே என்றது கேட்டஅப் பெண்பக்ஷி நாயகா! இனி ஓர் விந்தை கேள்விப் பட்டதுண்டா? இவ்வூரில் சோமசுந்திரமென்று ஒருகுடிகாரத் தனவான் இருப்பதாயும், அவனுக்கு இதுவரை தாரம் மூன்றுயிற்றென்றும் மூன்றுதாரங் களுக்கும் சந்தான மில்லாதது பற்றி நான்காவதாய் அவ்வூரில் தானே தங்கம்மாளென் றொரு கல்வியுடைய பெண் பாலொருவளை விவாஹம் செய்யப்போவதாயும், அது அவளுக்குச் சம்மதி இல்லாதிருக்க அவளைத்தாய் தந்தையர் கண்டிக்கிறார்களென்றும் கியாதிபார்த்தீர்களா? குடியனுணலென்ன! இப்பொழுது அவர்களுக்குத்தான் காலமாயிருக்கிறது. என்ன செய்யலாம் ஈசனில்லை போலிருக்குது என்றது. ஆண்பக்ஷி பெண்ணே மெள்ளப்பேசு. அந்த சோமசுந்திரமும் அவனுடன் கூடிக்குடிப்பவரும்தான் மரத்தடி யிலிருப்பவர்கள் இவர்கள் பொல்லாத போக்கிரி. இப்போது அதைப் பேசாதே? எல்லாம் பிற்பாடு பேசிக் கொள்ளலாமென்ற சிறிது நேரத்திற் கெல்லாம் கீழ்த் திசையில் ஆதித்தன் உதயமாயினன். பறவை களிரண்டும் பசியை ஆற்றிக் கொள்ளப் பறந்தோடிப் போயிற்று.

6-வது அத்தியாயம்

ஓர் தினம் மாலை சுமார் ஐந்து மணிக்கு மாளிகையில் ஓர் மங்கை உலாவி நின்றதைக் கண்ட ஒருவன் அவள் பேரில் காதல் கொண்டு அன்றிரவு முழுவதும் தூக்கமின்றி ஏக்கத்துடன் மறுநாள் மாலைப்பொழுது எப்பொழுது வருமென்ற நோக்கத்துடன் இருந்தான். அவ்விதமே மறுநாள் சூரியன் மேற்குத் திசையை அடைந்ததும் அம்மாளிகைக் கருகாமை வந்து அவிடம் அம்மையின் தர்சனம் கண்டு களிக்கலானன். இவ்விதமே சில நாட்களும் கழிந்தன. ஆனாலும் அவன் தன் மன வெண்ணத்தைக் கழித்துக்கொள்ளும் வழி தெரியாமல் வருந்தி வருகையில் ஒருநாளிரவு மன்மதனும் கரும்பு வில்லில் சுரும்பு நாணேற்றி அரும்புகளைச் சரமாரியாகப் பொழியலானன். அப்பொழுது அந்த ஏழை மனிதன் என்ன செய்யக் கூடும். பசி தாகங்களை அடக்கிக்கொள்ள வழியுண்டு. இம்மன்மதாக்கினியைத் தணித்துக்கொள்ள, அவன் சாம தான பேத தண்டமென்னும் சதுர்வித உபாயங்களைப் பிரயோகித்தும், மதனது பாணத்தை வெல்ல வழியில்லாமல் இடையிடையே பெருமூச்செறிந்தும், முகம் வேறுபாடடைந்தும் படுக்கையில் உறங்காமல் மூர்ச்சையாய் பூமியில் விழுந்து எழுந்து ஏ! ரதி மணாளா! நன்று; பரமசிவன் நெற்றிக் கண்ணால் உன்னை எறித்த பொழுதே நீ இறந்தாய்; இனி உலகம் சுகமடையுமென்றிருந்தேன். இப்பொழுது பாவி! நீ எங்கிருந்து எனக்கென்று வந்துவிட்டாய்? ஏனின் என்னை இவ்வாறு வருத்துவது உனக்குத் தகுதியா? ஆயினும் உன்னை ஒரு கை பார்க்கிறேன் என்று சொல்லித் தென்றல் காற்றைத் தேடிவந்தான். அவனுக்கு அத்தென்றல் காற்று அக்கினி போலும், சந்திரகிரணம் காளகூட விஷத்தைப் போலும், சந்தனம் அக்கினி திராவகம் போலும் இருந்தது. அவனால் என்ன செய்யக் கூடும். ஆனாலும் வஞ்சக நெஞ்சமுடைய மதனன் சற்றும் தயவு பண்ணாமல் இரவும் பகலும் இதுவே வேலையாகயிருக்கிறான். அந்தோ! பரிதாபம். அந்த ஏழை மனிதனும் இதுவே ஏக்கமாய் தூக்கமின்றிப் பித்தன் போலும் புலம்பித் திரிந்து அவ்விரவு எங்கோ விரைவில் நடக்கலானன்.

இவ்வாறு நடந்து சென்று சிறிது நேரத்திற்குள் ஒரு பெரியமாளிகை உள்ள வீட்டை அடைந்தான், அங்கு ஒரே விளக்குமட்டும் மின்னிக்கொண்டும், ஜன்னல் ஒன்று திறக்கப்பட்டும், மற்ற வாயில்கள்யாவும் மூடப்பட்டும் இருந்தன. அவன் தற்போதுள்ள ஏக்கத்தால்: இரவென்றும் பகலென்றும் தெரியாமல், மூடியிருந்த வாயிலை ஆத்திரத்துடன் தட்டினான். அச்சத்தங்கேட்டு மெல்லியகுரலுடன் ஒருத்தி யாரென வினவ அவன் ஆனந்த சாகரத்திலாழ்ந்தவனாகி அம்மா தங்கம்! உன் எதிர்வீட்டு அருணாசலம் யான்வந்திருக்கின்றேன். கருணைசெய்து கதவுதிறக்கவேண்டும் என்றான். அதுகேட்ட அப்பெண்மணி அண்ணா! ஏது இப்போது இவ்வளவு தூரம் வந்தது. காரியமென்ன?

அருணாசலம்—தங்கம் ஒன்றுமில்லை. உன் அண்ணாபானுமார்த்தாண்டனிடம் சில விஷயம் சொல்லவேண்டிருக்கிறது.

தங்கம்மாள்—அப்படியா! அண்ணா அவர்கள் ஊரிலில்லையே? என்ன செய்கிறது. தங்களுக்கு விருதாநடையாயிற்றே?

அருணாசலம்—ஆனாலென்ன? தங்கம்! நீ கதவுதிறப்பாய்.

தங்கம்மாள்—அண்ணா! நான் கதவு எவ்வாறு திறக்கலாம். உமக்குத் தெரியாத நியாயமா? உலகம் பொல்லாதன்றோ?.

அருணாசலம்—தங்கம்! நீ என்ன பைத்தியக்காரியாக விருக்கின்றாய்? உனக்குமட்டும் கதவு திறக்கமனமிருந்தால் உலகம் என்ன செய்யக்கூடும். அன்றி யார் தான் என்ன செய்து விடுவார்கள்?

இதுகேட்ட தங்கம்மாள் பதில் கூறாதுநின்றதைக்கண்ட அருணாசலம் ஆனந்தக்கடலாடினவனாகி இனி தங்கம்மாள் நமது மனதிற்கிசையாதிராளென்றெண்ணி ஆத்திரத்துடன் தங்கம்! இனியும் எதற்காகப் பொழுது போக்க வேணடும். ஹா! இந்நேரம் நாமிருவரும் கொஞ்சிக்குலாவியிருப்பது, இந்திரன் இந்திராணிசமேதனாயிருப்பது எவ்விதஅந்தஸ்துள்ளதோ அதுபோல்நாமும் மேன்மை அடைவோமென்பதில் சிறிதும் தடையுண்டா? ஏ சுந்தரி! நாமிருவரும் இந்த யௌவனத்தை ஏன் விருதாவாக்க வேண்டும். பகவதி! நீ உனது யௌவனத்தை விருதாவாய் போக்குவது எனக்கு எவ்வளவும் மனமில்லை. தங்கம்! நீ இவ்விஷயத்தில் கொஞ்சமும் உபேக்ஷைசெய்யாதே? இன்று போகப்போகிற இந்த யௌவனம்

நாளை நீ வரவென்றால் வருபா? நீ கல்வியுடையவளாயிருந்தும் இந்த அரும் யௌவன பிராயத்தை வீணாக்கலாமா? இனியும் ஏன் தாமதம் செய்கின்றாய்? ஏ! பிரியதமே! உனது சேர்க்கையானது

"பாலோடு தேன்கலந்தற்றே பணிமொழிவாயிலூறியநீர்,,

என்ற படியாதலால் உனதிதழாமிருதம் பகருவாய் அம்மணி!

இவ்விதம் அடாதசொற்கள் தம் காதிற்பட்டமாத்திரத்தில் கோபமென்பதைச் சற்றும் கேட்டுமறியாத தங்கம்மாளுக்குப் பெரிதான அனல் மூண்டதாயினும் அதைத்தனது அறிவினாலகற்றித் தைரியமாய் நின்று இவனென்ன மூர்க்கனாயிருக்கிறான். இவ்வாறுள்ள மூர்க்கருடன் பேச்சுக்கொடுக்கக் கூடாது. இப்போது ஒன்றும் பேசாதிருந்து விடுவோமென்றால் தங்கம் தங்கமென்று இரவெல்லாம் தூக்கமின்றிக் கூக்குரலிடுவான். காமுகனுக்குக் கண்மூக்குத் தெரியாதென்பார் ஆன்றோர். அவ்வாறே இவனும் வெறிபிடித்தவனாயிருக்கிறான், என்ன செய்கிறது. ஹோமத்திற்கு வைத்திருக்கும் நெய் என்று இந்த நாய்க்குப் புலப்படவில்லை. நிற்க, இவன் கூக்குரலிடுவதைக் கேட்டு அயலகத்தார் நித்திரைதெளிந்தெழுந்து அவர்கள் இது சங்கதி அறியவும், அதனால் நேற்றிரவு தங்கம்மாளுக்கும் அருணாசலத்திற்கும் ஏதோ பேட்டி நடந்ததென்று அவர்கள் சொல்லவும் கூடும். இப்போது ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லி அனுப்பி விடுவோமெனின் மேன்மேலும் இங்கு இவன் வருவதற்கும் அதனால் இவ்விதத் தொந்தரவுகள் அடிக்கடி உண்டாவதற்கும் காரணமாகிறது. ஆதலால் இவன் இவ்விதத் தொந்தரவுகள் செய்யாதிருக்கும் பொருட்டு இவனைக் கடுகடுத்துப் பேசி அனுப்பிவிடுவது நன்கு என்று தெளிந்து அசேட்டுற்கா! யாருமின்றி தனியே நானிருக்கும் வேளையில் இங்கு நீ வந்து உனது புத்திஹீனத்தால் அடாத சொற்களை எல்லாம் சொன்னாய்? இந்த வேளை என் அண்ணா இருப்பாராகில் உன் தலையைக் கிழித்திருப்பார். என்ன செய்கிறது; உனது நல்லகாலம் அவரில்லாதபோனது. நீ பேசினது போதும்; க்ஷணமே தாமதமின்றி நடந்துவிடு. இங்கிருப்பவள் உன் உடப்பிறந்தவளைப் போலல்லவா? தன்னைப்போல் பிறரையும் மதிக்கவேண்டாம். இனியும் உன்னைப்போல் ஒருவனுக்குப்பிறந்து மற்றொருவனை அப்பா! என்றழைக்கும் வழக்கமெங்கள் குடும்பத்தாருக்கில்லை. உன்னைப்

போலுள்ள போக்கிரிப் பசங்களும் இங்கில்லை. இனிமேல் இவ்வித மான மொழிகள் என் முன்பேசினால் உன் வாயை என் தாதிகளைக் கொண்டு கிழிக்கச் செய்வேன். இது ஞாபகத்திலிருக்கட்டும், மூர்க் கப்பயலே இங்கு நில்லாதே; ஓடிப்போ என்றாள்,

இது கேட்ட அருணாசலம் தங்கம்மாளை நோக்கி ஏ! லதாங்கி!

காதளிவீரர் களத்திடைவயினும்
மதனலீலையில் மங்கையர் வயினும்
மதலைவாய் மொழிக்குழவியர் வயினும்
இதமுறச்செவிக் கின்பம் விளைக்குமே

என்பது போல உனது அமிருதவசனம் கேட்ட யான்தன்னிய னாகிறேன். ஏ! தன்வங்கி! மன்மதபாணத்தால் அடிபட்டுக் காமத் தீயால் வெந்துநிற்கும் என்னை இந்த ஸமயம் உன்றன் இதழில் உண் டாகும் அமிருததத்தைத் தந்து காப்பாற்றுவாய்; ஏ பெண்மணி! தாமதமின்றிக் கதவு திறப்பாயாக.

இந்த அருணாசலத்திற்கு என்ன பதிலளித்தால் இவன் தொலைவான் என்று கொஞ்சநேரம் ஆலோசனைசெய்து அடே மிலேச்சப்பயலே! நீ பிறர் மாதரை இச்சியாதே. இவ்விதம் அனேகர் பிறர்தாரத்தில் ஆசைகொண்டு கெட்டுப்போனதாய் நீ கேள்விப்பட் டதில்லையா? நீ மடையனா? உனக்கு மூளையில்லையா? வெட்கமில் லையா? ஈசன் உன்னையும் ஒருமனிதனென்று பூமியில் படைத் தானே! போடா மூர்க்கப் பயலே. சண்டித்தனம் பண்ணாதே. அதற்கு நான் ஆளல்ல. வேறிடம் பார்த்துச் செல் என்றாள்.

என் இருகண்ணான நேத்திரம் நீயாகவிருக்கும் போது உன்னை மறக்கவும், நீ வைதால் கோபமுண்டாகவும் போகிறதா? பின்னர் நீ எதற்காகத் தாமதம் செய்யவேண்டும். என்னைப் பரீக்ஷியாதே. வேண்டாம், எவ்வாறாயினும் யான் விடேன் என் பது உறுதி. என்ன சொல்கிறாய் என்ற அருணாசலத்துக்குப் பதிலுத்தரவாகத் தங்கம்மாள் கடுகடுத்துரைக்கத் தொடங்கி னாள்.

அடே மானிடப்பிசாசே! நீ மனிதப்பிறவியாயிருந்தாலன்றோ உனக்கு வெட்கம் என்பது உண்டாகும். அடே! "எட்டாதபழத் திற்குக் கொட்டாவி விட்டால் கிட்டுமா"? இம்மதத்தைப்போக்க

உனக்கு ஆளில்லாமல் போயிற்று? இவ்வாறு என்னிடம் வீண்வழக்கிடுவதைப் பார்க்கிலும் உன்வீட்டில் தங்கைதமக்கைகள் இல்லையா? அடே! நீ அக்காளென்றும் தங்கை என்றும் பார்ப்பாயா? உனக்கு உடன் பிறப்பேதடா பித்தா? அப்புறம் செல் என்று சொல்லி அங்கிருந்து சரேலெனநடந்து படுக்கையறை சென்று படுத்துவிட்டாள். அப்படியும் அவளுக்கு விசனம் பெரிதாகத் தானிருந்தது.

இவ்விதம் தங்கம்மாள் சென்ற சிறிது நேரத்திற்குப் பின் ஓர் தாதி வந்து அவிடமுள்ள ஜன்னலை மூடிவிட்டுத் தானும் சென்றுவிட்டாள். இது கண்டு துக்கமுற்றவனாகித் தன் வீடுபோய் இரவெல்லாம் இதுவே ஏக்கமாகவிருந்த அருணாசலம் மறுநாள் காலை சூரியன் உதயமானதும் முதல் நாளிரவு தங்கம்மாள் வீட்டில் ஜன்னல் சாத்திச்சென்ற தாதியின் வீட்டை நாடிச்சென்றான்.

அங்கு இவன் வரவு கண்ட தாதி ஏது ஒருநாளுமில்லாமல் இவர் இன்று நம்வீடுதேடிவந்த காரணம் என்னமோ தெரியவில்லை. ஆனாலும் இவர் ஒரு பெரிய வீட்டுப் பிள்ளையாதலால் வந்தனைசெய்யாதிருத்தல் தகுதியன்றெனக் கொண்டு ஐயா! ஏது அடியாளை நாடி இவ்வளவு தூரம் வந்தது? என்றாள்.

அருணாசலம்—ஏ சுதர்சனை! உன்னை நாடிவந்தவிஷயம் ஒன்றுமில்லையானாலும் உனது கருணை உண்டானால் மட்டும் நான் பிழைத்திருக்கலாம்.

சுதர்சனை.—அப்படியா! அடியாளால் தங்களுக்குக் கெடுதி நேருட்டிருக்கிறதா? இதென்ன விந்தை!

அருணாசலம்.—இல்லை சுதர்சனை, உன்னால் தான் என் உயிர் தரிக்கவேண்டிருக்கிறது.

சுதர்சனை.—அப்படியானால் தங்களுக்கு இவ்வுதவி செய்ய யான் பாக்கியம் பெற்றேனே? அதுவே சிலாக்கியம். ஆனாலும் அதை இன்னதென்று சொல்கிறதானே?

அருணாசலம்.—சொல்கிறதில் தடையில்லை; நீ அதற்கு ஏதேனும் சாக்குப்போக்குச் சொல்லிவிடுவாயோ என்றஞ்சுகிறேன்.

சுதர்சனை.—அப்படியல்ல; என்னாலாகுமானால் முடிக்கத் தடை இல்லை. சும்மா சொல்லுங்கள்.

அருணாசலம்.—இது விஷயம் உன்னாலன்றி வேறு யாராலும் நடவாதென்பதுறுதி. ஆனால் உன் மனம் மட்டும் நம்விஷயத்திலிருக்கவேண்டும்.

சுதர்கனே.—அப்படியானல் நான் முடிக்கத் தயாராகவிருக்கிறேன்.

அருணாசலம்.—ஆனால் சொல்கிறேன் நீ இக்காரியம் நிறைவேற்றி வைப்பாயெனில் நானுனக்குத் தகுந்த வெகுமதிசெய்வேன். இந்த நன்றியை ஒருநாளும் மறவேன். இந்தக் காரியம் உன்னால் சீக்கிரம் முடிக்கக் கூடும்.

சுதர்கனே.—அப்படியானல் சொல்லுங்கள். என்னால் முடியுமானல் பார்க்கிறேன்.

அருணாசலம்.—சுதர்கனே! நீ செய்யவேண்டியது தங்கம்மாளை என் கைவசமாக்க வேண்டியதுதான். உனக்கு 1000 ரூபாய் வெகுமதி அளிப்பதுடன் வேண்டிய ஊழியமும் செய்யக் காத்திருக்கிறேன். இது விஷயமாக உனக்கு நான் அதிகம் சொல்லவேண்டியதில்லை. நீயே இதற்கு வேண்டும் உபாயங்கள் செய்துகொள்ள வேண்டும். இனியும் நீ என்ன செய்யக் கட்டளை யிடுகின்றனையோ? அப்படி நான் செய்யக் காத்திருக்கிறேன்.

சுதர்கனே.—ஐயா! தாம் சொல்லுக்கு மறுத்துச் சொல்லல் தகுதியன்று. ஆயினும் எனது கஷ்ட தசையையும் கூறுதிருப்பது குற்றமன்றோ?

அருணாசலம்.—அப்படியா நினைக்கின்றனை. ஆயிரமல்ல, பதினாயிரமானாலும் தருகிறேன்.

சுதர்கனே.—நான் அதைச் சொல்லவில்லை. பணமென்ன பெரிதா? இல்லை. யெனின் தாம் காதல்கொண்ட தங்கம்மாளோ மிகவும் புத்திசாலி. கல்வியிலோ B. A. பாஸ்பண்ணினவள். ஆதி முதல் செல்வகேசவ முதலியாரை நாடி யிருப்பவள். இவளிசைந்து தங்களுக்குப் பெண்டாவதாவது. நான் இதை அவளிடம் சொல்லி வெளிவந்துவிடுகிறதாவது. தாம் அவளிடம் கூடி சுகித்திருப்பதாவது. எது இது நடப்பதாகக் காணவில்லையே? என்ன செய்கிறது. அவளோ கற்புடையவள். தனது கற்புக்குக் கெடுதியைத்

தேடிக்கொள்வாளா? இதரப்பெண்களைப்போல் பணவாசைபிடித்த வளில்லையே? பின்னர் அவளை வசமாக்க எங்ஙனம் சாத்தியமாகும்?

அருணாசலம்.—நீ இப்படிச் சொன்னால் நான் ஒப்பமாட்டேன் எவ்விதமானாலும் காரியத்தை முடிக்கவேண்டியது உன்னைப் பொறுத்தது. என்னிடம் சமாதானம் சொன்னால் ஏற்காது. நான் செய்யவேண்டியதென்ன? சொல்.

சுதர்சனை.—ஆம் ஐயா! அப்படியானால் செல்வகேசவ முதலியார் இறக்காமல் அவள் வேறொரு புருஷநுக்கும் இசையாளென்பது உறுதி. ஆகையால் தாம் அது விஷயத்திற்கு ஏதேனும் ஒருவழி செய்வதாயிருந்தால் எப்படியும் தங்கம்மாளை நான் சேர்த்துவைக்கிறேன். இது விஷயம் என்னால் முடியும்.

அருணாசலம்.—இது ஒரு பெரிதா? அவனை இல்லாமற் செய்ய என்னால் முடியும். அவனை உயிர் போக்கிவிடும்பக்ஷத்தில் நீ தங்கம்மாளை உறுதியாய் என்வசமாக்க முடியுமா?

சுதர்சனை.—அப்படியானால் கட்டாயமாய் முடியும். இது விஷயத்தில் கொஞ்சம் சிரமமெடுங்கள். இது முடிந்தானதும் எனக்கறிவிக்கவேண்டும். பின்னர் பார்த்துக்கொள்ளலாம்.

அருணாசலம்—ஆனால் சரி. சுதர்சனை! நீமட்டும் மெதுவாயிராதே.

சுதர்சனை.—இது விஷயம்; எனக்குச் சொல்லவேண்டியதில்லை. நான் ஜாக்கிரதையாகவே இருப்பேன்.

அருணாசலம்.—ஆகட்டும் நீ உறுதியாயிரு. நான் சிலநாட்களுக்குள் இச்சங்கதி முடித்து வருகிறேன் என்று சொல்லிச் சில துஷ்டர்களை அழைத்துக் கொண்டு இராமபுரத்திற் கருகாமையிலுள்ள வனத்திற் போய்ச் செல்வகேசவமுதலியார் இரவு எப்போது வருவாரென்று காத்துக் கொண்டிருக்கிற இவன் யாரெனின் இரண்டாமத்தியாயத்தில் ஏகாம்பர முதலியார் புதல்வி கமலாம்பாள் என்ற ஒரு பெண் மங்கைப் பருவமடைந்திருப்பதாய்க் கூறினோமன்றோ?: அப்பெண்மணியின் மூத்த தமையனும், சோமசுந்தரம் என்பவனது மூன்றாவது மனைவியுமாகிய பங்கஜாக்ஷியின் இளைய சகோதரனுமாம்.

இவன் கல்வியிலும், சம்பத்திலும் அற்பமும் தாழ்ந்தவனல்ல. இனியும் ஆங்கிலத்தில் F. A. பாஸ் பண்ணி தற்போது B. A. பரீக்ஷைக்கு வாசித்து வருகிறான். ஆயினும் அவன் தற்போது தன்னைப் பிடித்திருக்கும் நவயௌவன இசையாலும், "சம்சர்கஜா தோஷ குணம்பவந்தி" என்றபடி தற்போதுள்ள சகவாச தோஷத்தாலும், இந்த துஷ்டச்செய்கையில் தலையிடலாயிற்று.

7-வது அத்தியாயம்.

இரவு உத்தேசம் ஒரு மணி யிருக்கலாம். வழியிலயர்ந்து நித்திரைபோகும் பானுமார்த்தாண்ட முதலியார் தமது நண்பர் செல்வகேசவ முதலியாருக்கு ஏதோ கெடுதல் சம்பவித்து விட்டதென்று கினுக்காணவும் திடீரென விழித்தெழுந்து சரேலென காட்டிற்குள் நுழைந்தான். எந்த விடத்தில் செல்வகேசவனுக்குக் கெடுதி நேரிட்டதாய் கனா கண்டானோ அந்த விடம் மிகவும் பயத்துக்கிடமாயிருந்தது. அங்கு வெளிச்சமே கிடையாது. மார்த்தாண்டன் அவ்வடவியில் நுழைந்தான். வழியொன்றும் தென்படவில்லை செடிகளும் கொடிகளும் முட்களும் நெருங்கி நிபிடமா யிருக்கும் அவ்வடவியில் ஒரு வழியேனும் கண்டுபிடிக்க அவனால் முடியவில்லை. அதிலும் கனத்த இருளாலும் அந்தக் காடு மூடப்பட்டிருந்தது. அவன் அந்தச் செடிகளையும் முட்புதர்களையும் கடந்து தம்மிருகைகளாலும் கொடிகளை அப்புறம் தள்ளி அக்காட்டினூடே நெடுந்தூரம் சென்றான். இவ்விதம் முட்களாற் பிளப்புண்ட மாசற்ற அவனது சரீரத்தினின்று இரத்தம் ஆறாய் பெருகிற்று. வனத்திற்குள் நெடுந்தூரம் போய்விட்டான்.

இரவு வெகுநேரமாயிற்று. சசி சிறிது தலைகாட்டலானான். அன்று பூரண சந்திரிகை யல்லாமை பற்றி நிலாநிரம்பப் பிரகாசிக்கவில்லை. அப்போது அதிவிஸ்தீர்ணமான அவ்வடவியுள் இருளின் சாயையோடு கூடின அந்த மங்கலான வெளிச்சத்தில் அக்

கரை இக்கரை யொன்றும் புலப்படவில்லை. அவன் எங்கும் திரும்பிப் பார்த்தான். என்ன இருப்பது யாரிருப்பது ஒன்றும் தெரியவில்லை. அது ஜனசூன்யமாகி பயத்துக் குறைவிடமாகத் தானிருந்தது. இதன பக்கத்தில் இராமபுரத்திலிருந்து சுந்தராபுரிக்கும் சுந்தரபுரத்திலிருந்து ஜம்புகாத்திரிப் பட்டினத்துக்கும் செல்லும் ரஸ்தா ஒன்ணுய் சந்திக்குமிட மிதுவாயிருப்பினும், இது ஓர் பெரிய அரண்யமாகத்தானிருந்தது. ஆனால் இதனடுத்ததோர் சிறிய குன்று மா, பலா, முதலிய தருக்களால் நிபிடமா யிருக்கின்றது. இந்தக் குன்றில் அவன் ஏறி நின்று எதையோ செவிகொடுத்துக் கேட்கலாயினன். அது இன்னதென்று எமக்குத் தெரியவில்லை. அந்த ஆதியந்தமற்ற அரண்யத்தில் மரங்களின் மற்மர வோசையின்றி மற்றென்றும் கேட்கப்படவில்லை. அவ்விடத்து என்ன சப்தமுண்டாயிற்றே தெரியாது. அவன் சரேலென அவ்வழியே நடந்து சென்றன். அவ்வடர்ந்த வனத்தினுள் நுழைந்து பாற்கையில் வனமத்தியே இருள் மயமான விருட்ச வரிசையின் கீழே வரிசை வரிசையாய் சில பேர்கள் ஆயுதபாணிகளாய் வருவதைக் கண்டான். அவர்கள் குறுகிய வடிவினர் கருகிய மேனியர். கையிலிருக்கும் ஆயுதங்கள் சந்திர காந்தியால் பளபளவென்று மின்னுகின்றது. அவர்கள் தேகம் முழுதும் சோரைபுரண்டு காணப்படுகிறது. இவ்விதம் வருகிற இவர்களைப் பானுமார்த்தாண்டன் கண்டதும் வெகு கோபம் மூண்டு துப்பாக்கியாற் சுட்டான். ஆனால் அவரில் சிலருக்குக் காயமுண்டெனினும் அவ்வளவாய் படவில்லை. இனியும் பானுமார்த்தாண்டன் தாமென்ன செய்யக்கூடும். ஏகனன்றே? இருதிறத்தாருள்ளும் அடிதடியுண்டாயிற்று. பின் அவர்கள் பானுமார்த்தாண்டனை மெள்ளப்பிடித்துக் கட்டி அங்குள்ள ஓர் காளி கோயில் செல்லவும் அந்தக் கூட்டத்தாரில் ஒருவன் ஏ! இவனை இப்போதே காளிக்குப் பலிகொடுக்கிறேன் பாருங்களென்று வாளையுருவி வெட்டக் கிட்ட நெருங்கினன். மற்றொருவன் ஓடிவந்து ஏ! நில்லு ஆத்திரப்படாதே. இவன்மேல் நமக்கு ஆத்திரமில்லை. நாம் நாடி வந்த காரியம் முடிந்தாயிற்று. ஐயோ! பாவம்! இவனென்ன செய்வான். ஆனாலும் அவள் முகத்துக்காயினும் இவனைச் சும்மா விட வேண்டிய தாயிருக்கிறதல்லவா? இவனை இப்போதே கொன்று விடுவோமெனின் நாளையோர் காலத்தில் நமக்கிடுக்கண் நேரிடும்.

ஆதலின் இவனைக் கொல்ல வேண்டா மென்றான். இதைக் கேட்ட மற்றொருவன் சரிதான் கொல்லவேண்டாம். இனியும் இவனை இப்போது விட்டு விட்டால் ஒரு வாறு பிழைகள் நேரிடக்கூடும்; ஆதலால் இவனை இந்த இருட்டறையில் போடுங்கள். நம்முடைய காரியம் முடிந்தவுடன் திறந்து விட்டுவிடுவோம் என்று சொல்லி அவ்வாலயத்திலுள்ள ஓர் இருட்டறையில் பானுமார்த்தாண்டனைத் தள்ளிக் கதவைப் பூட்டிவிட்டு மிகுந்த களிப்புடன் இரவே தமதூர் வந்து சேர்ந்தார்கள். இவர்கள் யாரென்றால் முன் அத்தியாயத்தில் விரித்துள்ள அருணாசலமென்பவனும் அவனது தோழர்களான சில துஷ்டர்களும் தாம்.

இங்கு இருட்டறையி லடைக்கப் பட்ட பானுமார்த்தாண்டன் யாதொரு பீதியு மின்றி யிருப்பினும் அங்கிருக்கும் ஏக்கத்தால் தூக்கமின்றி யிருந்தான். அன்னிசியில் அப்போது பைசாசக் கூட்டங்களின் உறத்த கற்ஜனை கேட்கப் பட்டது. இதனால் சிறிது பயத்தை அவனடைந்தானாயினும் தைர்பத்தை அகலவிட வில்லை. இச்சமயம் அவ்வாலய அதிகாரியான காளிதேவி தம் சுய ரூபத்துடன் அவ்விருட்டறை வாயிலைத் திறந்து கொண்டு வருவதைக் கண்டான். சிறிது அச்சத்தால் சற்றுமனங் கலங்கினான். அக்காளிதேவியும் அங்குள்ள அந்த மனிதனைக் கண்டு பயந்து நாம் இவிடம் குடிகொண்ட நாள் துடங்கி இந்நாள் வரையிலும் இவ்வடவியிலுள்ள சகல பைசாசங்கட்கும் நாமொரு தலைவியாய் நின்ற ரசியற்றினேம். நமது சொல் மீறும் பைசாசமிங்கில்லை. நிற்க, இன்று யாது விசேஷம் ஒன்று மறியேன். நம்மினத் துள்ள ஆரோ திருடகாத்திர னொருவன் இவிடம் யாதும் பயமில்லாமல் மகா உக்கிரமாகிய கோபத்தில் மூழ்கியிருக்கிறார். ஆம், இவர் நம்மிலும் பெரியவராயிருக்கலாம். அன்றி இவ்வறையில் நிற்பபமாய் யாரும் பிறவேசிக்க மாட்டார் களென்பது திண்ணம். ஆதலின் இவரை இந்த க்ஷணமே நாம் சமாதானம் பண்ணுவிடின் இவரது கோபத்துக்காளாய் இவரால் நமக்கிகழ்ச்சி நேரிடக்கூடும் என்று பலவாறு சிந்தித்து மார்த்தாண்டனை அம்மனிதனை நோக்கி ஆதரவுடன் பணிந்து இங்கு இவ்வளவு தூரம் நாடிவந்த தாம் யார். தாம் மறைந்திருப்பது நம்மினப் பெண்கள் சஞ்சரிக்கு மிடமாயிற்றே? இதில் தங்களைப் போன்ற பெரியவாள் தடதமாய் நிற்பது தகு

தியோ? தாங்களே என்னைப் பரீட்சிக்கத் துணிந்துவிட்டால் அடியேங்கள் கதி எவ்வாறுகும். ஈசனே இன்னுள் வரையில் தங்களருளால் இவ்வடவியிலுள்ள பைசாச கணங்கள் எமக் கடுமையாகவும் நான் அவைகட்கு ஓர் அரசியாகவும் நடந்து வந்தேன். ஆனல் அந்தப் பெரும் பாரம தாங்க முடியாத காலத்தில் தாமும் இவிடம் நாடி வந்தீர்கள். இது எனது பாக்கியம். ஓ ஐயனே! இந்த பாரத்தை தங்கட்கு ஒப்புவைத் திருக்கிறேன். தாம் தானே அரசராயிருந்து நடந்து வருவதில் எமக்குச் சம்மதமே; இதுவரையிலும் தம் கருணையால் இந்த வேலை ஒரு விதமாய் ஈடேறிற்று. இனி இது தங்களைப் பொறுத்ததே. தங்கள் கட்டளையை சிரமேற் கொண்டு நடக்க யான் ஒருதடையும் பண்ணவில்லை. இது முக்காலும் உண்மை. இனியும் தாம் நமதில்லம் அமர்ந்திருந்தது அடியாள் இதுவரை கிஞ்சித்து மறிந்தவளல்லேன். தமது இவ்வெழுந் தருளால் எமது கிறகமும் இராச்சியமும் பரிவாரகணங்களான பேய்க் கூட்டங்களும் விசேஷமாய் அடியாளும் புனிதரானேம். நிற்க, இவண் விஜயம் செய்த தமது நாட்டமியாதெனக் கூறினல் இந்நேரமே முடிக்கத் தடையில்லை என்று பலவாறு கூறினள். அக்காளிதேவியை நோக்கி அம்மா காளி! நீ உன்னுலாவதுஎனக்குச் செய்கிறேனென்று ஒப்பந்தம் செய்ததால் நான் இவணுற்ற செய்தி விரிப்பதிற் தடையில்லை யென்றுன். இதற்குக் காளிகா தேவி ஐயா மகாப்பிரபுவே இந்த உடலும் உயிரும் ஒன்றுய் பொருந்திருக்கு மளவும் யான் தங்களுக்கு ஊழியம் செய்து தமது ஆக்கினையை சிரமேற்கொண்டு நடப்பேனென்பது உண்மையே. இது கடவுளறியச் சத்தியம் என்ற காளிக்குத் தமது வரலாற்றை ஆதியோடந்தமாய் கூறுகிறுன். பெருகியோடும் கண்ணுநீருடன் தரையில் விழுந்து காளிக்குச் சாஷ்டாங்க தெண்டனிட்டு அம்மா தேவி! எனக்கு அடியில்வரும் வரங்கள் நீ அருள வேண்டுமெனக் கேட்ட, அக்காளி யம்மை மிகுந்த களிப்புடன் அங்ஙனமா? பாலகா! உனக்கு யாது வரம் வேண்டும்; கோரு. என்றதும் பானுமார்த்தாண்டன் அடியில்வரும் வரமருளக் கோரினன்.

1. தையல் தங்கம்மாளுக்கு வேண்டி, நண்பர் செல்வ கேசவ முதலியாருக்குயிரீய்த லொன்று.

2. இதற்கிடையூறு பண்ணு மெந்தன் சிற்றன்னை இப்போதுள்ள சிறந்த செல்வத்திலிருந்து வறுமை யடைந்து வருந்தலும், அதனை நாங்கள் கண்டு சந்தோஷிக்கவும் செய்யவேண்டுவ திரண்டு.

இவ்விதவரங்கள் உனது அஞ்சுபூதமும் ஒன்றாய் பொருந்தி நானடையுமாறு எனக்கருளம்மணீ என்று வேண்டினமைந்தனை நோக்கி அப்பரமசுவரூபி பகரத் துடங்கினாள்.

பாலகா !

"அறிவினு ளெலாந்தலை யென்றீய
செறுவாக்கு செய்யவிடல்
அறிவுடையோர்க் கழகுதம்மைவருத்து வோரிடத்தும்
துன்பங்களை நீ நினையாதிருப்பது மேலானது"

என வள்ளுவர் கூறியுளதை நீ ஏன் உணர்ந்தனையில்லை.

இனியும்,

"மறந்தும்பிறன் கேடுசூழிற்க சூழின
றஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு"

என்றபடி ஒருவன் யாதும் முற்கருமமின்றி பிறருக்குத் தீவினையை நினைந்தானாயினும் அவனை எமதர்மன் தண்டிப்பானென்பது உண்மையன்றோ? இது இவ்வாறிருக்க, தீங்கு செய்தாற்கு பதில் தீங்கு செய்யநினைப்பது பொருந்துமா? உனது புத்தி இவ்வாறு போயிற்றென்ன வேண்டாம். "செய்தவினை செய்தாற்கு" அவர்களைக் கடவுள் தண்டிப்பான். ஆதலின் நீ கிஞ்சித்தும் அவ்வெண்ணம் வைத்துக்கொள்ள வேண்டாம். உனது முதற்கோரிய வரம் இப்போதே தந்தேன். இனியும் வேண்டியதை வேண்டிக் கொள் எனவும்,

பானுமார்த்தாண்டன் அம்மணி! கூறியதுண்மையே? ஆயினும், இந்தப் படுபாவிகளடையும் நரகக்குழி என்னவோ?

காளி:—பாலகா! நீ கிலேசமடையாதே. "தன் வினை தன்னைச் சுடும்" என்றபடி அவர்களது வினையால் அவற்கட்குக் கெடுதிவிளையுமென்பது திண்ணம். நிற்க, நீ உனது சினேகிதனைக் குறித்தும் தங்கையைக் குறித்தும் கிஞ்சித்தும் அஞ்ச வேண்டாம். இனி உன்னூரில் சில இல்லாத விபரீதங்கள் நடக்கப் போகிறது. அதுவரை நீ மறைந்திருத்தல் வேண்டும். இல்லை எனின் உன்னுயிருக்குக் கெடுதி சம்பவிக்கக் கூடும். இந்தப் பொல்லாத காலமளவும் உன்

கண்பனை நீ காணமாட்டாய். என்று உன் நன்பன் உனது கண்ணுக்குத் தென்படுகிறானோ அன்றே உன்வினை யெல்லாம் பறந்துவிடும். ஆதல் பற்றி நீ சிலகாலம் காஷாயம்பூண்டு தேசசஞ்சாரம் செய்து வரவேண்டும். நீ எப்பொழுதெல்லாம் அவசியமாய் என்னைச் சிந்திக்கின்றனையோ அப்போது அந்த விடம் கடலாயிருந்தாலும் என்னைப் பிரத்தியக்ஷத்திற்காண்பாய். ஆகலின் அவ்வப்போது இருக்கும் நோக்கம் போல் செய்து கொள்ளுகிறது என்று கூறி அந்தர்த்தானமாய் மறைந்து போய்விட்டாள். இது கண்ட பானுமார்த்தாண்டன் ஆனந்தசாகரத்திலாழ்ந்தவனாகி முன் தம்மைச் சத்துருக்கள் எவ்விடத்தில் பிடித்துகட்டினார்களோ அவ்விடத்தை நாடிச்சீக்கிரம் ஓடிவந்து பார்க்கையில் அவண் மண்ணெல்லாம் இரத்தமயமாயிருக்கிறதே தவிர மற்றொன்றும் காணாமையால் மகாவிசனமுடையவனாய் மெல்லமெல்ல நடந்து சுந்தரபுரி கிட்டினதும் கிழக்கே சூரியனெழுந்தான்.

நேற்றிரவுண்டான அடிதடியால் களைத்த பானுமார்த்தாண்டன், கேசவனை இச்செய்தியறிந்து அவனது பெற்றோர் தம்வீடு எடுத்துச் சென்றிருக்கலா மென்றெண்ணி அவனது வீடுசென்றான். அங்கும் கேசவனைக் காணாமைபற்றி அவனது பெற்றோருக்கு ஓர் சமாதானமாய் தாமும் கேசவனும் இன்று பம்பாய்க்குப் பிரயாணமாகப் போவதாயும் சீக்கிரம் வந்துவிடுவோ மென்றும் சொல்லி அங்கிருந்து நடந்து அடவி எல்லையில் வந்ததும் அவன் தற்போதுள்ளபெரிதான விசனத்தால் கிஞ்சித்து யோசிக்கலாயினான். கேசவனிறந்து விட்டானோ என்னமோ ஒன்றும் தெரியவில்லையே, என்னசெய்கிறது. கொஞ்ச நாளைக்கெல்லாம் மாறுருக்கொண்டு திரிதல் வேண்டு மெனக்காளியுமருளியுளாள். நிற்க, நாமிப்போது நம்பள் வீடு செல்வோமாயின் தங்கத்தின் கேதத்தை மாற்ற யாரால் முடியும்? என்றைக்காயினும் காளியின் வாக்குப்படி இல்லாத விபரீதங்கள் விளைவது உண்மையே; ஆதலின் கேசவனைக் காணுமளவும் நமதுகதி இதென்றெண்ணி தமதுமணிமுடி ஆடையாதிகளைக் களைந்து காஷயம்பூண்டு சன்னியாசிபோல் யாத்திரை சென்றான் பானுமார்த்தாண்டன். அந்தோ! பரிதாபம்! இச்சன்னியாசம் மாறுங்காலமெப்பொழுதோ ?

8-வது அத்தியாயம்.

ஏந்த வனத்தில் பானுமார்த்தாண்டன் கட்டுப்பட்டானோ அதுவே "பஞ்சவன் காடு" என்பது. இதிலே அந்த நடுராத்திரியில் ஜம்புகக் கூட்டங்கள் ஏதும் உபேக்ஷையில்லாமல் இராக விஸ்தாரம் செய்து கொண்டிருந்த அங்கிசியில் அவைக்குத்தாளம் போல் நித்திரை பங்கத்தால் அங்கு மிங்கும் பறந்து செல்லுகிற பக்ஷிகளின் சிறகடிகளும் கேள்க்கப் படுகிறது. பக்ஷி பேய் பிசாசுகளினுடைய வாஸபூமியென்று ஜனங்களால் விசுவாசித்து வந்த அந்த ஆரண்யத்தில் பசு பக்ஷி மிருகாதிகள் இவ்விதம் தூக்கமில்லாமல் அங்கும் இங்கும் நாடி ஓடிச் சென்று துயருருதற்குக் காரணம் யாதென ஆராய்வோம்.

இந்த அடவியின் நடுவிலுண்டா யிருக்கும் வழியில் ஒரு சமயம் மேலேகாணப் படுகிற சந்திரனது பிரதிபிம்பமோ என சமுசயிக்கத் தக்கதான ஓர் சாயைகாணுகிறது. மெதுவென்பது கிஞ்சித்துங் கிட்டாத அந்த நிலத்தில் தன்னுடைய உறுப்புகளிலிருந்து பிரவகித்துக்கொண்டிருக்கும் கடுநிலத்தில் அரையில் வஸ்திரமில்லாது நக்கினனாகி திவ்யவிக்கிரகனாகிய ஓர் புருஷன் மரண வேதனையினால் கைகால்களை நிலத்திலடித்து ஐயோ! நாராயணா! அம்மா! என்று பலவாறு மிகத்தைன்யமாய் இடை இடையே அமிழ்ந்த சப்தத்தில் ஆற்பரித்தும், சுவாசம்முட்டி சிலவேளை எழுந்திருந்து பின்னர் பூமியிற் விழுந்தும், இவ்விதமான கஷ்டதிசையிலிருக்கிறான்.

அந்த யுவாவுக்கு தேகத்தில் அங்கங்கே அனேகம் வெட்டுகளுண்டு. அதுகளிலிருந்து இரக்தம் எப்பொழுதும் பொங்கித் ததும்புகின்றன. அரையில் கட்டியிருக்கும் வஸ்திரம் இரக்தத்தில் நனைந்து காலுடன் பதிந்து கிடக்கிறது. மேல்வேஷ்டி ஒருபக்கத்தில் கொஞ்சம் தூலையில் கிடப்பது காணலாம். வலது அஸ்தத்தினருகில் பிடிவிட்டுக் கிடக்கிற ஓர் படைக்கத்தி இரக்தம் குடித்திருப்பதற்கு பல அறிகுறிகளும் காணப் படுகிறது. வெட்டுகள் கொண்டு தண்டான ஒரு பரிசை சிறிது தூலையில் காணுகிறது. அடித் தண்டாயிருக்கும் மரங்களில் வெட்டுகள் கொண்டு சிதறிக்

கிடக்கும் கம்புகளும் தும்புகளும் இடை இடையே பரந்தும் கிடக்கின்றன. அந்தப்பரிசையின் மேலுண்டா யிருக்கும் வெள்ளிக் குமிள்களில் சந்திரன் தமது சீதள கிரணங்களைப் பரப்புவதால் அவைமிகச் சுந்தரக்கனியா யிருக்கின்றன. இதற் கருகாமையிலுண்டாயிருக்கும் சிலசெடிகள் பாதப்பிரயோகம் கொண்டு ஒடிந்தும் நிலத்தோடுபதிந்தும் காணுகிறது.

தென்றிசை நோக்கி நிற்கும் அந்தயுவாவிற்கு உத்தேசம் இருபத்தைந்து வயதிருக்கலாம். முடிவளர்த்து முதுதவரையில் நீட்டிக் கட்டப்பட்டிருக்கிறது. விசாலமான நெற்றியும், மை அணியப் பட்டுள்ளதோ வென்று சம்சயிக்கத்தக்கதான கறுத்த புருவங்களும், தந்தத்திற்செய்த நாசியைப்பழிக்கத் தக்கதான மூக்கும், யானையின் மஸ்தகத்தை யொத்தமார்பும், ஒடுக்கமான அரையும், நீண்டுருண்டு கனத்துள்ள இருபாகுக்களும், மனோரம்மியமான நிறமும் கண்ட எந்தயுவதிகளும் தாம இவனது பிரிவை ஆற்றுவாள்? இனியும், அன்னவனை முதல் நோக்கத்திற் றாமே ஆள்யோக்கிய னென்றுள்ளது யாரும் கூறுதிருக்கும் முன்னர் அறியத்தக்கதாகும். நிற்க,

கொஞ்ச நேரங்களுக்கு முன் பொங்கிக் கொண்டிருந்த இரக்தம் தற்போது நின்று விட்டது. கைகால்களும் இடைவிட்டு மிக க்ஷீணத்திலாயிற்று. சுவாசம் அடங்கிப் போயிற்று. திடீரெனக் கண்கள் திறந்தது. மரணவஸ்தையி லிருப்பினும் அக்கண்களின் கருவிழிகளி லிருந்துண்டாகும் தேஜஸ்ஸை எவ்வாறு விரிப்பது. என்ன! புருஷத்துவமும், கெம்பீரமும், அந்த முகத்திலிப்போது களியாடுகின்றன. நவமாய் விகசித்த புஷ்பம்போல் சுந்தரிகளினது சிந்தையை விரிக்கக் கூடியது. இவ்வாலிபப் பருவத்தில் இவ்விதக் கஷ்டம் சம்பவித்த ஹேது பிரம்மனது பொறாமையேயல்லாமல் வேறென்ன வென்று சொல்லுகிறது. கண்கள் விழித்தாகாசத்தைக் கடாக்ஷிக்கின்றன. ஏதோ தமது அபிப்பிராயத்தை வெளியிற் கூறத்துடங்கினதில்? "ப்" என்னும் பகுதி எழுத்து மட்டும் கஷ்டத்துடன் உதடுகளிலிருந்து வெளியில் தெரிகிறது. அதிகோரமான விசனத்துக் கறிகுறியாய் இரு கண்களிலும் அருவிபோல் ஜலம் கட்டப் பட்டிருக்கிறது. முகபாவம்

பகர்ந்து விட்டன. இவ்விதமுள்ள சிறிது நேரத்துக்குள்ளேயே கண்கள் மூடிவிட்டது. சுணக்கம் நின்று விட்டன. சுருங்கச் சொல்லின் மதனுக் கொப்பான அந்தயுவா, நமனுலகுக்கு வழி நோக்கி நிற்கின்றான்.

அன்னை சுற்றத்தாருடையவோ பத்னியினுடையவோ சிநேகமுள்ள உபசாரங்களொன்று மில்லாமல் தேஜோ ரூபனாகிய இந்த யுவாவிற்கு இவ்விதமரணம் சம்பவித்த காரணம் யாதென்றாராய்வது பிரயோஜனமாகும். ஆனால் இதனை லௌகீகமாய் ஆராய்வதன்றி ஆத்மீகமான பூர்வோத்திர சம்பந்தங்களை எனினும் அன்றி மற்றொருவித அறிவை யெனினும் இக்கதாப் பிரியருக்கு நாம் கொடுப்பதாய் சிரமிக்கவில்லை. ஆதலின் திடீரென ஒரு ஆபத்து சத்துருக்களால் உண்டாகிற தென்றால் அவை மண் பொன் பெண் என மூன்று ஹேதுக் களால் லௌகீகத்தி லுண்டாகக் கூடுமென் றான்றோர் அருளியுள்ளார். இவையில் மண்ணாசையால் இவ்விதம் நடந்தேறியிருக்குமா வென்பதை ஆராய்வோம். மண்ணாசையால் சண்டை நேரிடுகிறதும், அவையில் இவ்விதம் துன்பம் நேரிடுதலும் அரசர்குலத்தினருக்கே தகும். அவ்விதமே இரு திறத்தரான அரசருள் சண்டை யுண்டாகும் பக்ஷத்தில், இருவகுப்பாருள்ளும் அனேகரிறக்கக்கூடும். ஆனால் அவ்விதம் கூறுதற்கு யாதொன்று மில்லாது இந்த யுவா தாமொருவனாகவே கிடக்கிறானாகையால் இவ்வாபத்து மண்ணாசை கொண்டுண்டாயின தல்லவென்பது எளிதில் புலப்பட்டு விட்டது. இனி பொன்னாசையோவெனின் காதில் மின்னுகின்ற இரு கடுக்கன்களையும் கையிலிருக்கும் நவரத்ன கசிதமாகிய மோதிரத்தையும் பொன்னாசை பிடித்த கள்வர் ஒரு விதத்தி லெனினும் உபேக்ஷிப்பா னென்பது எவ்வாறு சான்றாகும்? ஆதலின் வேறொருவித தெளிவுகிட்டுகிற வரையில் இது பெண்ணாசையால் முடிந்ததாயன்றோ இவ்வாலிபரின் மரணத்தை நினைந்து கேதிக்க வேண்டியதாயிருக்கிறது. எவ்விதமெனினும் இவை வஞ்சகத்தால் நடந்தேறிற் றென்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. நிற்க,

சுவாச உச்சுவாசம் நின்று யாதொரு சலிப்பின்றி அந்த யுவாகிடக்கலாகவே, அவ்வடவியினோர் பாகத்திருந்து சிலசப்

தங்கள் கேள்க்கலாயிற்று. சரல் நிலங் களிலும் பாறைகளிலும் பூட்ஸுடன் நடந்தாலுண்டாகும் சப்தமே அப்போதுண்டாயிற்று. இத்துடன் பலமான மனிதர் சப்தமும்கேள்க்கப் பட்டது. காலரவம் அடுத்து வந்து விட்டது. செடிகளி னிடைகளில் சில வற்ண விகஸிதங்கள் சந்திர ஸ்பர்சத்தால் காணப்படுகின்றன. விசித்திர வஸ்திர தாரிகளும் ஆயுதபாணிகளுமான நான்கு ஆடவர்கள் செடிகளைக் கைகொண்டு அகட்டியும் சிலசமயம் ஆயுதத்தால் வெட்டியும் வழியேற் படுத்திக் கொண்டு இச்சரீரம் கிடக்கு மிடம் வந்து சேர்ந்தார்கள். இவரில் சுவர்ண வஸ்திரதாரியான வாலிபரொருவர் யானைபோன்ற பலத்த சரீரத்தை யுடையவராய் கையில் வெள்ளிப்பிடி பிடித்துள்ள ஓர் மலாகாப் பிரம் புடன் நிற்கிறார். இனியும் கையில் ஊன்று கோலுடன் நிற்கும் விருத்தாப்பியரொருவரும், இரண்டு பயங்கரமான கிங்கரர்களும், ஆகிய இன்னல் வரும் இந்தப் படுகளம் வந்து சிறிது பயத்தையுடையவராகி அற்ப நேரயங்கு மிங்கும் திரும்பித் திரும்பிப் பார்த்து கொஞ்ச நேரத்துக்கெல்லாம் சுவர்ணவஸ்திர தாரியான அந்த வாலிபர் மாணுவஸ்தையி லிருந்த அந்தச் சரீரத்தினருகில் சென்று அதனை சொற்ப நேரம் நோக்கி அந்த விருத்தாப்பியர் கர்ணத்தில் ஏதோ முணுமுணென்று மந்திரிக்கின்றார். அதென்னமோ எமக்குத் தெரியாது. இதற்கு அந்த விருத்தாப்பியர் தலை குலுக்கினரேயன்றி பதில் ஒன்றும் சொல்ல வில்லை. பின் கொஞ்சம் சென்றதும் அந்தக்கிழவர் இறக்கவனே இறப்பவனே ஆகிய அச்சரீரியினடுத்துச் சென்று கையி லுண்டாயிருந்த தடியை பலமாய் பூமியில் ஊன்றி மூக்கிற் கைகொடுத்து நகைத்து வெளுத்துள்ள கண்களைச் சுளுக்கியும் மிகப்பிரயாசையுடன் குனிந்து அச்சரீரத்தில் ஆயுதத்தால் பிளப்புண்ட விடங்களைக் கண்ணுற்று நெஞ்சினிடப் பக்கத்து அற்பநேரம் கைவைத்து நோக்கியும் எழுந்து முற் கூறிய வாலிபருடன் ஏதோ சொல்லவும் அன்னவர் அடுத்து நின்ற கிங்கரருக்கு ஆஞ்ஞாபித்து விட்டார். அக்கிங்கரர் தம்மிடம் உண்டாயிருந்த நெடிய சூலங்களையும் அரையிற் கட்டியிருந்த வஸ்திரங்களையும் கொண்டு ஒரு கட்டிலும், இலைகளாலொரு மெத்தையும் கூடிய சீக்கிரம் தயாரித்தார்கள். அந்த விசித்திர வஸ்திரதாரியாகிய மகாபுருஷன் :தமது தலைக்கலங்காரமாய் அணியப் பட்டிருந்த

தலைக்கட்டவிழ்த்து இலையில் செய்யப்பட்டுள்ள மெத்தையில் விரித்ததும் அக்கிங்கரர் அந்தச் சரீரத்தைத் தூக்கி அதன் மேல் கிடத்தித் தோளில் எடுத்துக் கொண்டு சமீபமெலன நடைகொண்டார்கள். வாலிபரும் கிழவரும் பின்னே நடந்து சென்றார்கள். இவர் எமகிங்கரர்களோ, அன்றி தஸ்கரர்களோ, வஞ்சிக்கப்பட்ட யுவாவின் சத்துருக்களோ, யாரோ யாரறிவார்கள். நிற்க, இங்ஙனம் தூக்கிச் சென்ற இவர் யாரென்பதும் அவ்விதம் மரணாவஸ்தையிலிருக்கிற யுவா யாரென்பதும் அடுத்த அத்தியாயங்களில் விளங்கும்.

9-வது அத்தியாயம்.

எட்டாம் அத்தியாயத்தில் வியவகரித்த செய்திகள் நடப்பதற்கு ஏறக்குறைய நான்குமணி நேரத்துக்கு முன் சுந்தரபுரியென்னுமந்த நகரில் வருவார் போவார் யாரும் காணப்படவில்லை. ஆனால் வீதியடுத்துள்ள ஓர் வீட்டில் மின்மினிப் பூச்சிபோல் ஒரு விளக்கு மட்டும் மின்னிக் கொண்டிருக்கிறது. அங்கு ஆதித்தன் மறைந்தவுடனே காணப்படுகிற சந்திரனோ வென்று சம்சயிக்கத்தக்கதான திவ்யதேஜோ ரூபனாகிய ஓர் புருஷன் நாற்காலியிலுட்கார்ந்து ஏதோ எழுதிக்கொண்டிருக்கிறான். அவன் திருடகாத்திரமுள்ள சுந்தர புருஷனாய் விளங்கினும் அப்போது ஏதோ கிலேசத்திலிருப்பதால் அவனது முகமானது வாட்டமுற்று இடை இடையே எழுதுவதை நிறுத்தியும் எழுதிக் கொண்டிருக்கிறான். இவ்விதமிருக்கும் சமயத்தில் அவ்வறையில் மற்றொருவன் நிச்சங்கையாய் பிரவேசித்தான். இவனது வரவுகண்ட அந்த மனிதன் ஆம் கோபாலனா வா. உட்காரு என்றதும் அப்போது வந்த அந்தப்புருஷன் ஏது கேசவா! இன்று உந்தன் முகம் வேறுபட்டிருப்பதற்குக் காரணம் என்ன? என்று சொல்லிக் கொண்டே அவனும் ஓர் ஆசனத்தில் உட்கார்ந்தான்.

இதுகேட்ட அம்மனிதன் அப்படிக்கொன்று மில்லையே கோபாலா. நமக்கென்ன கவலையிருக்கிறது என்றான். அதுகேட்ட கோபாலன் ஏ கேசவா பேசினது போதும் நிறுத்து. நீ நேற்று உல்லாசமாயிருந்ததும் இன்று இருக்கும் விபரீதாதியும் பார்த்தால் தெரியாதா?

கேசவன்:—அப்படிக் கொன்றுமில்லை கோபாலா. நீ கூறுவது உண்மைதான். எனக்கு என்னவோ மனதிற்குக் கொஞ்சம் வருத்தமாகத்தானிருக்கிறது.

கோபாலன்:—ஆம். கேசவா நீ ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. நீ மனவருத்தமா யிருப்பதை நானறிவேன். ஆயினும் உனக்கு வயது இருபத்தைந்து கழிந்து விட்டதல்லவா? காலா காலங்களில் கலியாணம் செய்யாதிருந்தால் கவலை இருக்கிறது தானே. இது உனக்கு மட்டும் உள்ளதல்லவே.

கேசவன்:—என்னடா கோபாலா. நீ உன்னைப்போல் பிறனையும் நினைத்து கொள்ளுகிறாய்.

கோபாலன்:—ஆம் சரிதான் கேசவா. நான் உன்னைப் போல் காயிதம் எழுதி அனுப்பித்துக் கொண்டுதானே இருக்கிறேன். நீ சொல்லிக் கொள்ள மாட்டையா?

கேசவன்:—நான் யாருக்குக் கடிதம் எழுதினேன்.

கோபாலன்:—அதிருக்கட்டும். நீ இப்போதெழுதிக் கொண்டிருந்த காயிதமெங்கே பார்போம். கேசவன் ஏன் கடிதம் பார்க்க வேண்டும்? கோபாலன் இல்லை அது எந்தப் பெண்ணுக்கெழுதினாய் என்பதை அறியத்தான் என்று சொல்லிக்கொண்டே கடிதத்தை மெல்லக் கையிலெடுத்துக் கொண்டான். இதைக் கோபாலன் படியாதிருக்கும்படி கேசவன் வேண்டிய தந்திரம் செய்தும் தவறி விட்டது. கோபாலன் கடிதம் கண்ணுற்றதும் கனத்த சிரிப்புடன் கேசவனைப் பரிகசித்தான். பின்னர் அக்கேசவன் தம் நன்பனான கோபாலனுக்கு ஆதியோடந்தமுள்ள உண்மை யாவற்றையும் கூறி கடிதத்தைத் தங்கம்மாளுக்குக் கொடுத்துப் பதில் கடிதம் வாங்கிவர வேண்டினான். கோபாலன் அதற்கிசைந்து அவ்வாறே யாகட்டுமென்று சொல்லி ஜப்புசாத்ரியில் தங்கம்பாளின் வீடு நோக்கித் துரிதமாய் நடந்தான்.

இது கழிந்ததும் அவ்வளவாயிலிருந்த வாலிபன் யாரையோ எதிர் நோக்கிய வண்ணமாய் எழுந்து வெளியிற் வருவதும் உள் செல்வதும் பின்னும் வெளியே போகிறதுமாயிருந்தான். அப்போது மணியும் பன்னிரெண்டாயிற்று. அவனை ஒருவரேனும் அப்போது ஏனென்று கேட்கவில்லை. அவ்வழியில் ஒருபிசாசேனும் சஞ்சரிப்பதைக் காணவில்லை. அப்பொழுது ஆகாசமானது அந்தகாரத்தால் சூழப்பட்டு ஒருவர் முகம் ஒருவருக்குத் தெரியா திருந்தது. மணி பன்னிரெண்டரை யானதும் முற் கூறிய வாலிபன் அங்கிருந்து சென்று அங்கே தூக்கத்திலிருந்த ஓர் அம்மாளை மெல்லக் கையாற் தட்டி அம்மா எழுந்திரு என்றான். இதுகண்ட அம்மங்கை எழுந்து பிரமையுடன் ஏதப்பா! நீ இதுவரை உறங்கவில்லை போலிருக்குதே, எதற்காக நீ விழித்துக் கொண்டிருக்கிறாய் என்றாள்.

கேசவன்:—அம்மா! உறங்கத்தக்க சமயமாகவில்லையே.

அம்மாள்:—இப்போ மணியென்ன விருக்கும்?

கேசவன்:—என்னமோ பத்தடிக்கலாகிறது போலிருக்கிறது.

அம்மாள்:—அப்படியா குழந்தாய் எனக்குத் தூக்கம்வருகிறது. என்னை எழுப்பிய காரணம் என்ன? நானென்ன செய்ய வேணும் சொல்லேன்?

கேசவன்:—அம்மா! நீ ஒன்றும் செய்யவேண்டாம். எனது சிநேகன் பானுமாற்தாண்ட முதலியார் ஏதோ சில செய்திகள் என்னிடம் சொல்ல வேண்டியிருப்பதாயும், உடன் புறப்பட்டு வரவேண்டுமென்றும் தமது வண்டியை அனுப்பியிருக்கிறார், அது விபரம் உன்னிடம் சொல்லுவதற்காகத்தான் உன்னை எழுப்பியது. நான் போய் வருகிறேன்.

அம்மாள்:—ஏ கேசவா! நன்று. இந்தராத்திரியா நீ ஜப்புகாத்திரி போகப் போகின்றாய்?

கேசவன்:—ஏன் அதற்கென்னம்மா? சைக்கிளிருக்கிறது. நாற்பது நாழிகை வழிதானே உண்டு. இரண்டு மூன்று மணிநேரத்தில் போகலாமே. இதிலென்ன பயமிருக்கிறது.

அம்மாள்:—ஆனாலும் அவ்வளவு என்ன அவசியமா, காலையில் போனால் போதாதா?

கேசவன்:—இல்லை அம்மா. என்ன சங்கதியோ? விஷயம் அறிந்தாலும் கொஞ்சம் முன்னர் அல்லது பின்னர் போய்க்கொள் ளலாம் விரோதமில்லை.

அம்மாள்:—அப்படியா? ஆனால் என்ன அவசியமாயிருக்க லாம். தங்கம்மாளுடைய விவாகம் சமீபித்திருக்கும் போலிருக் குதே?

கேசவன்:—ஆம் அம்மா. பெரியவீட்டுப்பிள்ளையல்லவா? சீக் கிரம் முடிவதற்குத் தடையென்ன? ஆனாலும் அவளென்ன கல்வி யில்லாதவளா? அவளுக்கு ஏன் மாப்பிள்ளை கிட்டாது?

அம்மாள்:—சரிதான். அதற்காகத் தானிருக்கும்.

கேசவன்:—அம்மா நானும் அதற்காகவே இருக்குமென்று எண்ணுகிறேன். எல்லாம் போய் வந்தால் தெரியும்.

அம்மாள்:—சரிதான் பெரியவாள் பிள்ளை நமக்குக் கிடைப்ப தருமை தான். அது யாருக்குக் கிட்டும்?

கேசவன்:—அம்மா அது கிடைக்கவில்லையானால் வேண் டாம். அதை யிட்டொன்றும் சொல்லாதே. "தனக் கெளியது சம்பந்தம்" என்றபடி நம்மைவிட எளியதை யன்றோ நாம் நோக்க வேண்டும். அன்றி விருதாவில் பெரிய விடத்துக் காரியங்களை எண்ணி எதற்காக மனத்தைப் புண்ணாக்க வேண்டும். வேண்டாம் அவசியமில்லை. அந்தப் பேச்சை நிறுத்து. எல்லாம் நான் போய் வருகிறேன் வந்தபிற்பாடு பார்த்துக் கொள்ளுகிறது. நீ இது விபரம் அப்பாவுக்குக் கூறு. நான் அதிகம் தாமதிப்பதாயிருந்தால் ஆள னுப்புவேன். அல்லது காயிதம் வரும் என்று சொல்லி அங்கி ருந் தெழுந்து அறையிலிருந்த வாளாயுதம் ஒன்றைக் கையி லெடுத்துக் கொண்டு மாசற்ற கேசவன் விரைவில் வீடுகடந்து நடை கொண்டான்.

வழியில் யாரும் வருவாரில்லையாயினும் மிகவிறைவில் பள் ளம் மேடென்று நினையாமற் செல்லும் கேசவன் இராமபுர மடுத்துள்ள அடவியிற் றாண்டினதும் திடீரென்று பயங்கரமான ஓர் சப்தம் கேக்கத் தடங்கிற்று. இது கேட்ட வீரனாகிய கேச வன் தமது வாளாயுதத்தைக் கையிலெடுத்துக் கணிசமாகப் பிடித்தான். ஆனால் அப்போது உண்டாயின சப்தம் அங்கு விறை

வில் நடந்து வரும் ஏழெட்டு ஆடவரின் காலரவமாயிருந்தன. இது கண்டதும் கேசவன் கொஞ்சம் கவலை யுண்டான். இவ்விதமே அவன் நடந்து செல்லும் சிறிது நேரத்துக்குள்ளேயே அவ்வாட வர்கள் கேசவனைக் கிட்டினதும் கையிலிருந்த கட்கத்தைக் கபட மாய் கவர்ந்தனர். இதுவே காரணமாக இரு திறத்தாருள்ளும் சண்டையுண்டாயிற்று. ஆனால் அச்சண்டையை விரிக்க எம்மா லியலாது. சுருங்கக் கூறின் நமது கேசவன், அந்த ஆடவர் களால் வெட்டுண்டு இறந்தவன்போல் பூமில் சாய்ந்தான். இது கண்ட அந்த ஆடவர்கள் "ஹா! ஹா! இறந்தான் இனி வேலை யில்லை" என்று சொல்லிக் கொண்டே நடந்து விட்டார்கள்.

அந்தோ! பரிதாபம் என்ன செய்கிறது. தையல் மோகத் தால் இரவு தனிமையில் வந்து தன்னுயிரை மாய்த்துக் கொண்ட இந்தப் புருஷரின் கதைதான் முன் எட்டாம் அத்தியாத்துக் கூறி யுள்ளது. இவரை தூக்கிச் சென்ற அந்த நான்கு பேர்களும் ஆரென்பதை பற்றி நான்காம் அத்தியாயம் விளக்கும்; எனினும்.

"வகுத்தான் வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்தலரிது"

என வள்ளுவர் கூறியது வலுத்தன்றோ போயிற்று. நாமென்ன செய்யலாம், செல்வக்கேசவ முதலியாருக்கு இது பெரும் ஏக்கந் தான். அந்தோ! பரிதாபம்! எல்லாம் வல்ல ஈசனே மாசற்ற கேச வனைக் காற்பாராக.

10-வது அத்தியாயம்

காலை உத்தேசம் ஒன்பதுமணி யிருக்கலாம். நான்காம அத்தியாயத்தில் விவரிக்கப் பட்டுள்ள பெண்ணரசி தம் வீட்டு வேலையைச் செய்து கொண்டிருக்கையில் ஓர் மனிதன் உள் வந்த தும் அவளை நோக்கி என்ன காப்பி ஆயிற்று? என்றான். இது கேட்டும் பதில் கூறாது மிணு மிணுத்துக் கொண்டிருந்த அம்

மாது சிரோன்மணியை ஏது சுகவேணி! இன்று நின் முகம் வாட்ட முறுவானேன். பெண்ணே காரணம் யாது? கூறு என்றது கேட்ட அம்மங்கை பகரத்துடங்கினாள்.

ஐயா தாம் தமது மனப்பூர்வமாய் எமக்குக் கெடுதியை விளைவித்தவரும் அல்லர், விளைப்பவரும் அல்லர். ஆயினும் சில காரியங்களில் கவனமில்லா திருத்தலே எனக்குப் பெருங் கெடுதியாக விருக்கிற தென்று சொல்லிக் கண்ணீர் விட்டழுதாள். அதைக் கண்ட காதலன் தமது வேஷ்டியாலக் கண்ணீரைத் துடைத்து பெண்ணே! நீ ஏன் துக்கிக்கின்றனை; உனக்கு எவ்விஷயத்தில் குறை. அக்குறையைக் கூறினால் இக்ஷணமே அதனை யகற்றுகிறேனென்றான். இவ்வசனம் கேட்ட அத்தலைவி ஆம். குழந்தை யென்பது யாவற்கும் பொது தானே! நான் பெற்றால் மட்டுந்தானா பிள்ளையாகும்? நான் பெற்ற குழந்தையாக விருக்கு மெனின் இவ்வாறு என் வார்த்தை தப்பிநடக்குமா?: அப்படி நடப்பதைக் கண்டால் நான் தான் சும்மா விட்டு விடுவேனா? என்ன செய்யலாம். நாம் சொன்னால் அப்படியா வென்று கேட்கிறதில்லை. ஆண்பிள்ளைகளும் இதைக் கவனிக்கிறதுண்டா? இதை சொன்னாலும் பொல்லாப்புத்தான். அதெல்லாம் சொல்லிக் காரிய மென்ன. ஏன் வீணாகப் புலம்ப வேண்டும். "பிறந்தெடத்தை நோக்கும் பேதை மட நெஞ்சம் கறந்தெடத்தை நோக்கும் கண்" என்றபடி அவரவர் ஆட்களை அவரவரறிவார்கள்.

சுகவேணி! என்னெல்லாம் சொல்லி விட்டாய். ஏன்? உன்னைத் தங்கம்மாளாவது குழந்தை பானுமார்த்தாண்டனாவது ஏதேனும் சொல்லிவிட்டார்களா! என்ன சமாசாரம் ஒன்றும் தெரியவில்லையே? அப்படிக்கேதேனு முண்டானால் சொல்லிவிடு. இப்போதே கண்டியாவிட்டால் நாளாவட்டத்தில் அதிகரித்துப் போய்விடும்.

அவள் சரிதான். வையரமட்டும் என்ன விருக்கிறது. சொன்னது மட்டும் கேழ்க்கிறதில்லை. நீங்களும் அப்படித்தான். வயது முதிர்ந்த குழந்தையை வீட்டில் வைத்துவிட்டு சும்மாத் திரிகிறீர்கள். அதிலொரு லாப நஷ்ட முண்டானால் அந்த குறை நமக்கல்லவா? அதுதான் என்னை உறுத்திக் கொண்டிருக்கிறது. ஆனாலும் தங்கம்மாளைக் காலா காலத்தில் ஒரு கணவனுடன் கூட்டி

வைக்க வேண்டாமா? அவளுக்கு வரவர வாயும் அதிகரித்து விட்டது. யாருங் நிகரில்லாமல் தான் பேசுகிறாள். இனியும் கல்விக் கர்வம் அளவுகடந்து போய்: விட்டது. தாங்களதை எல்லாம் கவனிக்கின்றீர்களா? எல்லாத்திற்கும் நான் ஒரு பெண்பிள்ளை என்ன செய்வேன். எந்த எந்த வேலை களென்று பார்ப்பேன். எத்தனையோ ஜோலிகளை யெல்லாம் சுமந்து பார்த்தாலும் பெண்ணுக்கும் மாப்பிள்ளைபார்க்க முடியுமா? அப்படியும் ஓர் திவ்யமான மாப்பிள்ளை பார்த்துத் தான் வைத்திருக்கிறேன். அந்த மாப்பிள்ளை குழந்தைக்குப் பிடித்தமில்லையாம். இனி எங்கிருந்து எந்தப் பயல் வரப்போகிறானோ தெரியவில்லை. இதனாலன்றோ பண்டைகாலத்தவர் பெண்பிள்ளைகளைப் படிப்பியாதிருந்தனர். அவர்கள் பைததியக் காறரன்று. "குதிரையின் குணமறிந்தல்லவா ஈசன் கொம்பு கொடுக்கவில்லை" அதுபோல் பெண்கள் படிப்பதும் கூடாதது தான்; ஆனாலும் குறை கூறிக்கொள்ளுகிற அந்தப் பெண்கள் தானவது நல்ல புருஷனைத் தேடிக் கொள்ளுகிறார்களா? அதுவுமில்லை. எங்குள்ள ஏழையோ அவன் தான் தமக்கிஷ்டமாம். இப்படிக் கூறும் பெண்களை யாராவது கேட்டதுண்டா? இவ்விதம் இவள் சொல்லிக் கொள்ளுதற்குக் காரணம் பெற்றோர் பேரிலுள்ள பிசகென்று கூறாமல் வேறென்ன வென்று கூறுவது. இதெல்லாம் தங்கள் கொடுக்கு மிடமன்றோ? ஆனாலும் சொல்பவரும் நம்மைத் தானே சொல்லுகிறார்கள். இவளொருத்தியால் நாம் ஆறுகுளங்களுக்கு நீராடப் போக நீதியுண்டா? எங்கு சென்றாலும் தங்கம்மாள் செல்வக் கேசவனென்றொரு சிறுவனை விவாகம் செய்ய விரும்பினளாம். அதற்கு அவளம்மாள் இசைய வில்லையாம். ஐயோ இருந்து இருந்து தங்கம்மாள் இவ்வாறாயிற்றா ளென்ன. அதிகம் படித்து விட்டதால் மூளைக்கு வேலையில்லை போலிருக்கிறதே? இதென்ன புத்தி. சீ என்று சிறிக்கிறார்களே. அவ்வசனங்களைக் கேட்டு நான் தலைநிமிர்ந்து திரியயோக்கியமுண்டா? ஆகா இதெல்லாம் சொல்லி ஆகப் போகிறதென்ன. நீங்களாவது கவனித்துச் சீக்கிரம் மணம் முடிக்க முயர்ச்சிக்கிறீர்களா? அதில்லை. நான் வீணிற் கூக்குரலிட்டு ஆவதென்ன. பெண்ணை இப்படி வீட்டில் வைத்திருப்பது அவமான மென்பதைக் கவனித்திருந்தால் தாங்கள் இவ்வாறு கவனியாதிருக்கக் கூடுமா?

அந்த மனிதன்:—பெண்ணே! நீ கூறுவது சரிதான். உண்மையில் பெண்களைப் படிப்பிப்பது கெடுதியைத் தான் செய்கிறது. அதுபோல் தங்கம்மாளும் துணிந்திருக்கிறாள் போலிருக்குது. அதற்கென்ன அவள் நினைத்தென்ன ஆகப்போகிறது. ஆனாலும் நீ ஒரு மாப்பிள்ளை பார்திருப்பதாய்க் கூறினாயே அதுயார்?

சுகவேணி:—அந்த மாப்பிள்ளை நம்பள் குழந்தைக்கிசைந்து தனத்தில் மிகுந்து வல்லமையில் சிறந்து விளங்கும் ஸோமசுந்தரம் இருக்கிறாரே அவர் தான்.

அவர்:—ஆம் சுகவேணி; அவர் நல்ல மாப்பிள்ளை தான். ஏராளம் சொத்திருக்கிறது. இம்மாதிரி பெரிய சம்பந்தம் நமக்குக் கிடையாது தான். ஆனால் அவருக்கு மூன்றுதார மிருக்கிறது. நான்காவதாய் இவளைக் கலியாணம் செய்து கொள்ளுமென்றால் செய்யப்போகிறாரா? அதற்கென்ன செய்கிறது. இதற்கு உபாயமென்ன; எவ்விதம் அவர் சம்மதிப்பார்?

சுகவேணி:—அதிருக்கட்டும். தங்கள் குழந்தை இசைந்த பின்னரன்றோ அவரை இசயச் செய்ய வேண்டும். "அவளைக் காணுமுன் குழந்தைக் கழுததுபோல்" பெண்ணுக்கே சம்மதியில்லை. புருஷன் சம்மதியாவிட்டால் என்ன செய்கிறதென்று கவலை கொள்ளுகிறீர்களே? முதல் தங்கம்மாளுக்குச் சம்மதியை வருத்துங்கள். மற்றக்காரியம் பின்னர் பார்த்துக் கொள்ளலாம்.

அவர்:—என்ன சுகவேணி! நமது குழந்தை நம் சொற்றவறி நடந்து விடுமா? அப்படியானால் அவளை நாம் சும்மா விட்டு விடுவமா? அவளால் என்ன செய்யக் கூடும்? நம்மை மீறி நடந்து விடுவாளா? அதையிட்டுக் கவலை கொள்ள வேண்டியதில்லை. ஸோமசுந்தரம் காரியந்தான் எப்படியென்று எனக்குத் தெரியவில்லை.

சுகவேணி:—அப்படியானால் தாமொரு காரியம் செய்யுங்கள். நான் ஸோமசுந்தரம் அவாளோடு முந்தியேதானே இதற்கு ஏற்பாடுகள் செய்திருந்தேன். ஆதலின் அவரிடம் சென்று சுகவேணி உங்களிடம் சொல்லியிருந்த காரியத்துக்கெப்படி என்று கேட்டுவாருங்கள். அவர் என்ன சொல்லுகிறார் என்று அறிவோம்.

அவர்:—சுகவேணி! அங்ஙன மெனின் மிக நல்லதாயிற்று. இப்பொழுதே போய் அறிந்து வருகிறேன். நீ காப்பிகொண்டுவா வென்றதும், அப்பெண்மணியாள் கொணர்ந்த காப்பியைக் குடித்துவிட்டு வெகு ஆடம்பரத்துடன் அங்கிருந்து புறப்பட்டு விரைவில் நடைகொண்ட இவராரெனின் பெண்புத்தி கேழ்க்கும் பேதையாகிய தங்கம்மாளின் தந்தையான ஸோமஸுந்தர முதலியார். இவர் ஓர் ஜில்லாக் கோர்ட்டு வைக்கீலாயிருந்தும் பெண்மாயையிற் சிக்குண்டு முன் பின் கவனியாமல் பெண்புத்தியே பெரும்புத்தி யெனக் கொண்டிருப்பவராயிருக்கிறார். என்ன செய்கிறது. தற்போது உலகம் முழுதும் ஆடவர் செய்கையே இதெனின் இவரை மட்டும் பிரசங்கிப்பதில் யாதுளது. "பெண்ணென்றாற் பேயுமிரங்கு மென்றன்றோ"? பழமொழி. நிற்க, தற்போது மணி யும் பத்தாயிற்று. இனி ஐந்தாம் அத்தியாயத்தில் விரித்த குடியர் எவ்வாறாயினரென்பது கவனிக்கத் தக்கது.

இரவில் ஆலாவிருக்ஷத்தடிவந்து அயர்ந்துறங்கின இவர்களை தட்டி எழுப்புதற்குள்ள கரங்கள் போன்ற கிரணத்தை யுடைய சூரியன் ஆகமனமானதும் தம் கிரணங்களென்னும் கரங்களின் ஓயா அறையால் விழி விழிக்கச் செய்த அவ்வாண்மக்களனை வரும் எழுந்து அவ்வடவிக்குச் சற்றே யடுத்துள்ள ஜம்புகாத் திரி நகர் சேர்ந்ததும் ஒருவர் போகும் வழியொருவர் பாரா மல் ஒவ்வொருவரும் தனித் தனியே பிரிந்து போயினர்.

இப்படி இவர்கள் போய்க் கொண்டிருக்கையில் இருவர் ஒன்றாய்ச் சேர்ந்து கொஞ்சதூரம் போனதும், அங்கு ரஸ்தாவிற்கு சமீபத்திலுள்ள ஓர் பங்களாவில் நுழைந்து ஓர் அறையில் போய் புகுந்தார்கள்.

அவ்வறையில் புகுந்த அவ்விருவரிலொருவர் பக்கத்திலிரு ந்த ஓர் நாற்காலியிலுட்கார்ந்து மற்றவரை நோக்கி, ஏன் நிற் கிறாய்; இரு என்று சொல்லி, அன்னவனைப் பிடித்து இருத்தி, "ஏ! நீ போன சமாசாரம் எவ்வாறாயிற்று, ஒன்றும் சொல்ல வில் லையே" என்றான்.

அந்தமனிதன் எங்குமில்லா ஆனந்தமுடையவனாய் "அண் ணாத்தே! ஆமாம் எல்லாம் சரிதான். கவனமாயிருக்க வேண்டியது

தான். கலியாணம் சீக்கிரம் நடத்த வேண்டியது தானே. உங்கள் திருவாக்குக் கெதிர் வாக்குப் புறப்படுமா? மேலும் போயிருந்ததுயாரு தெரியாதா அண்ணா? ஆண்பிள்ளைச் சிங்கத்தின் குட்டியல்லவோ போனேன். பயல் போன காரியக்துக்குக்கூட அத்தாக்ஷி வருமா? என்ன ஆலோசிக்கிறீர்கள். ஜல்தி! காரியம் முடிந்து போகும்; பயப்படாதீர்கள்" என்று சொன்னது கேட்ட அந்த மனிதன் "அடே சுந்தரம்! உன்னைத் தெரியாதா? அப்படியானால் நன்றாய் சொல்லு. கேட்கிறேன்" என்று வெகு ரசமாய் பேசிக்கொண்டிருக் கையில் சுந்தரம் கதவைச் சாத்து. யாராவது வருவார்கள் என்றான். அவன் எழுந்து கதவை மூடிவிட்டு அண்ணாத்தே! என்ன சொன்னீங்கோ. உங்கள் பேரு சொன்னால் யார்தான் பெண் கொடுக்க மாட்டார்கள். என் உங்களுக் கென்ன குறைவு. சக்கிரவர்த்திக்குக் கூட விசார முண்டு. உங்களுக்கு என்ன விசாரமிருக்கிறது. தவிர உங்களுக்கென்ன சொத்தில்லையா? அதிலோ பாக்கியவான். உங்களப்பா ஜட்ஜாயிருக்கிற காலத்தில் தேடிப் போட்டுப் போன சொத்தை அனுபவிக்கத்தானே ஆளில்லாமலிருக்கிறது என்று சொன்னது கேட்ட அவர் புளகாங்கிதத்துடன் அடே! சுந்தரம் என்ன வானாலும் விஷ்ணுவினுடைய சக்கிராயுதம் பெரிதல்லவா? நாம் கொடுத்த ஆயிரம் ரூபாய் பெரியதுதானே. சுகவேணிக்கு சந்துஷ்டிதானா? ஆம் அவள் கெட்டிக்காரி; நல்லவள் தான்.

சுந்தரம்:—ஆம் அண்ணாத்தே! அவள் உங்களுக்காக எவ்வளவெல்லாமோ வருத்தப் படுகிறாள். அவளால் தான் இந்தப் பாக்கியம் தங்களுக்குக் கிட்டப் போகிறது. இல்லா விட்டால் முடியவே முடியாது. அவளுக்கு இன்னம் பதினாயிரம் ரூபாய் கொடுத்தாலும் தகும்.

அவர்:—அப்படியா சுந்தரம். போகச் சொல்லும். ஆயிரம் மல்ல பதினாயிரமல்ல. என்னவானா லென்ன? நமக்குப் பெரிய காரியமா? எவ்வளவு வேணுமோ கொடுக் கிறேன். இகாரியம் மட்டும் ஈடேறு மா? என்னமோ அது சமுசயமாகத் தானிருக்கிறது.

சுந்தரம்:—என்ன அண்ணாத்தே! இனியும் சந்தேகம் வேண்டுமா? இப்போதே தங்கம்மாள் தங்கள் மனைவி யென்று வைத்துக் கொள்ளுங்களேன்.

அவர்:—அப்படியா சுந்தரம். அவ்வளவு உறவில் வந்து விட்டதா? ஆஹா; நமக்கு யோகம் திரும்பி யிருக்குது போலிருக்கிறதே.

சுந்தரம்:— அதற்கும் சமுசயமா?

அவர்:—ஏ சுந்தரம்! சுகவேணி ஏதாவது சொன்னளா?

சுந்தரம்:—இல்லை அண்ணத்தே. அவள் நாளையதினம் வருவாளாம். அப்போது எல்லாம் பேசிக் கொள்ளலாம். தங்கம்மாளை யிட்டு கொஞ்சமும் எண்ண வேண்டிய தில்லையாம். எப்படியாவது நிச்சயித்ததினத்தில் முகூர்த்தம் நடத்தி விடலாமாம். இதுவிஷயத்துக்கு தங்கம்மாளின் அப்பாவை அனுப்புவதாயும் அவரிடம் பிரியம் காண்பியாமல் ஒருவிதம் சம்மதம் செய்துவிட வேண்டுமென்றும் சொல்லி யிருக்கிருள்.

அவர்:—அப்படியா! தங்கம்மாளை நீ கண்டாயா? அழகா யிருக்கிருளா?

சுந்தரம்:—ஆஹா! யாரை அப்பழுக்குச் சொல்லுகிறீர்கள். தங்கம்மாளையா? நாக்கு அழுகிப் போகும். அப்பப்பா! அவளுடைய அழகை நானெப்படிச் சொல்லுவேன். அவளழகு தானென்ன. அந்தஸ்துத்தானெவ்வளவு. அவளுடைய குலந்தானென்ன. குணந்தானென்ன. கல்வியின் சுகந்தானென்ன. அந்தோ! இவள் கிடைப்பதே நமது பாக்கியம். அதுவே யோக்கியம். இவள் கிட்டினது நம்பள் நற்காலந்தான். அண்ணத்தே! என்னத்தைத் தான் சொல்லட்டும். இதைவிட வேறு ஒன்றும் எனக்குச் சொல்ல விளங்கவில்லை.

அவர்:—இருக்கட்டும். அடே! சுந்தரம் தங்கம்மாள் நம்மீது எப்படி யிருக்கிருள். அவளேதாவது என்னைக் கேட்டாளா?

சுந்தரம்:—ஆம். அண்ணத்தே அவளுக்கு மனமில்லை யென்பதெல்லாம் வம்பு. அவள் வெளியிற் சொல்ல வெட்கப்படுகிருள். உங்களைப்பற்றி வயதெவ்வளவு என்றும் மற்றும் எல்லா விஷயங்களைப் பற்றியும் கேட்டாள்.

அவர்:—அப்படியா. நீ என்ன சொன்னப்?

சுந்தரம்:—உங்களுடைய சங்கதி எல்லாம் சொன்னேன்.

அவர்:—எத்தனை வயதென்று சொன்னாய்?

சுந்தரம்:—ஆம். ஐம்பத்தாறு வயதென்று சொன்னேன். ஏன் அதில் குறையுமா?

அவர்:—இல்லை. அவள் அதற்கொன்றும் சொல்லவில்லையா?

சுந்தரம்:—சொன்னாள். ஆம் சரிதான். இந்தக் கலியுகத்தில் பதினாறுவயது முதல் முப்பதுவயது வரையில் ஒரு வாலிபப் பருவமுண்டு. அது முதல் அனேகம் பேர்கள் அஞ்சுவயதளவு மிருப்பது கடினமாயிருக்கிறது. அதில் தவறின சிலர் அந்த முப்பத்தைந்து வயது முதல் பதினாறு வயதளவும் வாலிபரா யிருக்கிறார். அப்போதும் அவ்வாலிபப் பருவம் முதிர்ந்து ஐம்பத்தைந்து முதல் அறுபத்தைந்து வரைக்கும் கலியாணம் செய்து கொள்ளுகிறதும் குழந்தையைப் பெறுகிறதும் வழக்கம் தானே? இதிலென்ன விசேஷமிருக்கிறது. இப்போது வயது ஐம்பத்தாறு தானே யாகிறது. பாதகமில்லை. செய்து கொள்ள லாமென்று சொன்னாள்.

அவர்:—அப்படியா? அவளுக்கும் சந்தோஷம் தானே?

சுந்தரம்:—என்ன அண்ணாத்தே. சந்தோஷப் படாவிட்டால் எங்கே போய்விடுவாள்.

"வளைந்து வளைந்து போனாலும்
வாசலில் தானே வந்து சேரும்"

"அழுதழுதும் பிள்ளை அவள்தானே பெறவேணும்"

அதுபோல் தங்கம்மாள் சந்தோஷப் படாமற் போனால் நிற்குமா? அதையிட்டுக் கவலைப் படவேண்டாம். சற்று பொறுங்கள். எல்லாம் நேராய்வரும். வயிறு பசிக்கிறது. நாம் காப்பி குடிக்கப் போவோம். மணியும் பத்தாயிற்று. வாருங்கள் என்ற சுந்தரத்தை நோக்கி ஆமாம் எனக்கும் பசி அதிகமாகத் தானிருக்கிறது. ஆதலால் நீ போய் காப்பி குடித்துவிட்டு எனக்கும் காப்பி கொண்டுவா என்றார். அதுகேட்ட சுந்தரம் அங்கிருந்து துரிதமாய் வெளியிற் சென்றான். அவன் சென்ற சிறிது நேரத்துக்குள் வேறொரு மனிதன் அவ்வறையில் கொஞ்சம் அச்சத்துடன் வந்ததைக் கண்ட அந்த மனிதன் தற்போது வந்த அந்த மகாபுருஷனை

இனியவசனம் கூறி இருப்பிடத்தமர்த்தினுன். இவர்கள் யாரெனின். சுகவேணி நமது தங்கம்மாளுக்கு நிச்சயித்துள்ள ஸோமசுந்தரமென்னும் வீரபுருஷனும், அவரின் ஆத்மத் துணைவராகிய சுந்தரம் என்பவருமாம்? அங்கு அப்போது பிறவேசித்தவரை பற்றி பின் அத்தியாயங்களில் விளங்கும்.

11-வது அத்தியாயம்

தற்போது பகல் மணி பத்தடித்து 30 நிமிஷ மாயிற்று. அறைக்குள் வந்த அந்த மனிதன் நிச்சப்தமாயிருப்பதைக் கண்ட சோமசுந்தரம், ஐயா! ஏது இன்று விசேஷம். அப்பா இறந்து பிற்பாடு ஒரு நாளுமில்லாமல் நானிருக்குமிடம் தேடிவந்தது மிகவும் ஆச்சர்யம் தான். எல்லாரும் க்ஷேமமா? தாங்கள் வந்த காரியமென்ன?

அந்தமனிதன்:—ஐயா! விசேஷம் ஒன்று மில்லை. தங்களிடம் கொஞ்சம் சமாசாரம் பேசவேண்டியது இருக்கிறது. அதற்குச் சாவகாசம் எப்போ?

சோமசுந்தரம்:—அப்படியா? ஆனல் சொல்லுகிறது தானே. இதற்குச் சமயமும் வேளையும் பார்க்கவேண்டுமா? என்றுன். அது கேட்ட அந்த மனிதன் அடியிற் வருமாறு கூறத் தொடங்கினுன்.

ஐயா! தங்களைப் போன்ற பிரபுக்களிருக்கு மின்னுட்டில் கல்விக்கு விலை யில்லாமல் போகுமென்று சொல்லுதல் பிசகு. ஆனுலும் கல்வியுடையோரைக் கனவான்கள் அங்கிகரிப்பதும் உசிதமே. நிற்க, எனது புதல்வி தங்கம்மாள் கல்வியிற் சிறந்தவளாயிருந்தும் புஷ்பவதியாய் இதுவரையில் வருஷம் ஒன்று தான் ஆகப்போகிறது. ஆனுலும் அங்கங்கே சிலர் கலியாணம் செய்யக் கேட்கிருர்கள். அவை எமக்கும் என் புதல்விக்கும் எமது காதலிக்கும் ஒவ்வாமலிருக்கிறது. இவ்விதமே பெண்ணின் யௌவனம் ஒரு வருஷமாய் வீண்போயிற்று. என்ன செய்ய

லாம். செய்யும் வகை இதெனவறியாது யானும் வருந்துகிறேன். இனியும் உங்களத்தை சுகவேணி தங்கள் பேரில் மெத்த ஆசையுடையவளாகி தங்கம்மாளைத் தாங்களே கலியாணம் செய்யத் தருமென்று ஒரே பிடிவாதமாய்க் கூறுகிருள். ஆனல் அதுவிஷயம் எனக்கு ரொம்ப திருப்தியாகத் தானிருக்கிறது. இது விபரம் தங்களுக்கறிவித்து உங்களிஷ்டம் யாதென்பதை அறியலாமென்றெண்ணி இவிடம் வந்தேன்.

சோமசுந்தரம்:—ஆம் ஐயா! தாம் கூறியது உண்மையே. தங்கள் புதல்வியை விவாகம் செய்துகொள்ளத் தடையொன்றுமில்லை. எனக்கும் ஏராளமான தனமுண்டு. அதெற்கெல்லாம் ஆக்ஷேபனை கிடையாது. எனின் எமக்கும் மூன்று பாரியை இருக்கிருர்கள். அதன் பின்னும் நான்காவது தாரமாய் வாழ்கைப்பட தங்கம்மாளுக்குச் சம்மதி இராதே என்றெண்ணுகிறேன்.

அவர்:—நன்ருயிருக்குது. அவளேன் சம்மதியாமற் போகிருள். இதிலென்ன யிருக்கிறது. தங்களுக் கென்ன அவ்வளவு வயதாகி விட்டதா? மூன்று கலியாணம் மட்டுமா செய்யலாம்? முப்பத்திரெண்டு கலியாணம் வேண்டுமானுலும் செய்துகொள்ளலாமே. உக்களுக்கென்ன சொத்தில்லாமற் போயிற்ரு?

ஸோமசுந்தரம்:—அப்படியாஞலாகட்டும், நாளைய தினம் நிச்சிதாம்பூலம் செய்து விடுகிறது.

அவர்:—ஆம் ஐயா; அப்படித் தான் ரொம்ப உத்தமமாயிற்று. நான் இப்போதே உங்களத்தையிடம் சங்கதி சொல்லி நாளை நிச்சிதாம்பூலத்துக்கு வேண்டிய ஏர்ப்பாடுகள் செய்கிறேன். தாங்கள் மெதுவாயிருக்க வேண்டாம் என்று சொல்லி அங்கிருந்து அவர் சென்ற சிறிது நேரத்துக் கெல்லாம் காப்பிகொண்டு வந்த சுந்தரத்தினிடம் நடந்த சமாசாரத்தைக் கூறி இருவரும் காப்பி குடித்துவிட்டு நிச்சிதாம்பூலத்துக்கு வேண்டிய ஏர்ப்பாடுகள் பண்ணத் துடங்கினர்கள். நிற்க,

இந்தச் சமாசாரமறிந்த அவனது மூன்ருவது மனைவியான பங்கஜாக்ஷி யென்பவள் ஏது நம்பள் சிநேகம் மறக்குங் காலம் சமீபித்து விட்டது. தங்கம்மாளோ பணம், குணம், கல்வி, அழகு, அந்தஸ்து முதலியவைகளிலுயர்ந்தவள். ஆனல் அவளால் நமக்

கிடையூறு உண்டாகத்தானிந்த வேலையாகிறது போலிருக்குது. இனியும் நாமிப்படி இருந்தால் காரியம் மிஞ்சிப் போகும். இக்ஷ ணமே சென்று எப்படியும் தங்கம்மாளைக் கலைத்து விடுதல் நல மென்றெண்ணி சற்றே கவலையுள்ள முகபாவத்தை மிகக்களிப் பையுடையவள் போல் நடித்துக் கொண்டு நாயகனைத் தேடி வந்தாள். இங்கே நாளை காரியங்களுக்கு வேண்டியதை திட் டம் பண்ணிக் கொண்டு நின்ற ஸோமசுந்தரம் மனைவியைக் கண் டதும் ஏது பங்கஜாக்ஷி ரொம்ப உல்லாசமாயிருக்கிறாய்? என்ன விசேஷம் என்று கேட்டான்.

பங்கஜாக்ஷி:—ஆம் நமக்குத் தங்கை யொருவள் வரப் போகின்றாளன்றோ. அதனால் தான் இவ்வளவு களிப்பு.

ஸோம:—என்ன பங்கஜம். அது உனக்கும் திருப்திதானா?

பங்:—அதென்ன அப்படிக் கேட்கிறீர்கள். இந்த விஷயத் துக்கு முதல் முதல் நான் காத்துக் கொண்டன்றோ விருக்கி றேன். தங்கம்மாளென்ன மோசமானவளா? அவள் கிடைப் பதே நம்பள் பாக்கியந் தான். பெண்ணில் பெரும் படிப்பையுடை யவள். நற்குணம் வாய்ந்தவள். அந்தஸ்துடையவள். அவளுக் கென்ன குறைவிருக்கிறது?

ஸோம:—சரிதான். அது உனக்கும் தெரிகிறதா? என்ன வானாலும் நீ புத்திசாலியல்லவா? உனக்குத் தெரியாமற்போகுமா?

பங்:—ஏன் தெரியாது. ஊர் ஒரே பெயர் கொண்டது தானே. பெரிய பட்டின மானதால் அவளுடைய வீடு நான்கு நாழி கைக்குக் கிழக்கும் நம்மள் வீடு நான்கு மையிலுக்கு மேற்குமாக விருக்கிறது. இப்படி இருந்தால் தெரியாதென்று? மேலும் எங் கம்மை வீட்டுக்குத் தங்கம்மாள் எதிர்வீட்டுக் காறியாயிற்றே. எமக்கா தெரியாமலிருக்கப் போகுது. நல்லது.

ஸோம:—ஆமாம் நீங்களிருவரும் அசல்வீட்டுக் காறிகளா யிற்றே? சந்தோஷமாகத் தானிருக்கும். உங்கள் இருவருக்கும் ஸ்னேகந் தானே?

பங்:—ஆம். நாங்களிருவரும் அவ்வளவு விரோதமும் இஷ்ட முமில்லை. கண்டால் பேசிக் கொள்ளுவோம். விளையாடிக் கொள் ளுவோம். சிறித்துக் கொள்ளுவோம். முன்னர் முதலே என்னை

அக்காவென்று கூப்பிடுவாள். நானும் தங்கை யென்று முறை சொல்லி அழைப்பேன்.

சோம:—அப்படியா? ஆனால் நீங்களிருவரும் நல்ல பரிசயக் காரிகளாயிற்றே. அங்ஙனமெனின் உங்களிருவருக்கும் இணங்கும் போலிருக்குதே.

பங்:—என் இணங்காமல் போகிறது. தங்கம்மாள் அப்படி யுள்ளவளல்ல. நல்ல பக்ஷசாலி. கோபமென்பது கிடையாது. நான் அவளைப் போய்ப்பார்க்கலாமென்றெண்ணினேன். போய் வந்து விடட்டுமா? அவளிடம் ஏதாவது சமாசாரம் சொல்ல வேண்டியதுண்டா?

சோம:—அப்படியா? ஆனால் போய்வா அவளிடம் என்ன சொல்ல வேண்டியிருக்குது. ஒன்றுமில்லை. ஆனால் இந்தக்கல்யாண விஷயத்தில் அவள் திருப்தி எப்படி யிருக்குதென்று மட்டும் மனதைச் சோதித்துவா பார்ப்போம். இதுகேட்ட அப்பங்கஜாக்ஷி ஆகட்டும் எல்லாம் நான் போய் வருகிறேனென்று சொல்லி அங்கிருந்து மெல்ல நடை கொண்டாள்.

இங்கே தங்கம்மாளின் தந்தையான சோமநாதமுதலியா ரென்பவர், சுகவேணியோடு தாம் சோமசுந்தரம் வீடுபோனதும் அவர் விவாகம் செய்வதாய் ஒப்புக்கொண்டு நாளைய தினம் நிச்சித தாம்பூலம் செய்யலா மென்று தீர்மானஞ் செய்து வந்ததையும் சொல்லி சந்தோஷித்துக் கொண்டிருக்கும் காலமாயிருந்தது. அவ் விடத்தில் பங்கஜாக்ஷியும் மெல்லிய கமனத்துடன் வந்தாள். இவ ளைக் கண்ட சோமநாதமுதலியார் அம்மா வா; இப்போதுதானா வருகிறாய். வீட்டில் எல்லோரும் க்ஷேமமா? உங்கள் வீட்டுக்காரர் என்ன பண்ணுகிறார் என்றது கேட்ட அப்பங்கஜாக்ஷி பங்கஜம் போல் மலர்ந்த முகமுடையவளாய் ஆம் அய்யா! இப்போதுதான் வருகிறேன். அங்கெல்லாரும் க்ஷேமந்தான். நாளை நிச்சிததாம்பூல மல்லவா? அதற்கு வேண்டும் காரியங்களை அவாள் பண்ணிக் கொண்டிருக்கிறாள். நான் நமது தங்கை தங்கம்மாளைப் பார்த்து வெகுநாளாயிற்றே. என்ன செய்கிறாளென்று பார்த்துப் போகலா மென்று வந்தேன். தங்கையை எங்கே காணோம் என்றதும், அவர் அப்படியா? வேண்டியதுதான். அவள் பங்களா மாளிகை மேலிருக்கிறாள் போலிருக்குது. போய்ப் பார்த்துவா என்றது

கேட்டு தங்கம்மாளின் பங்களாவை நாடிப் பங்கஜாக்ஷி வருகையில் மணிபு[illegible]ன்னி ரெண்டாயிற்று.

அன்னம்போலசைந்து காலிலுள்ள பீலிகள் சலசலவென்று சப்திக்க நடந்து வரும் பங்கஜாக்ஷியைக் கண்ட தங்கம்மாள் சூரியனைக் கண்ட அரவிந்தம் போல் மகிழ்ந்து அக்கா வாருங்கள்; ஏது கலியாணங் கழிந்து இன்னாள் வரைக் காண வில்லையே. இன்றுதான் நம்மீது கருணை யுண்டானது போலிருக்கிறது. உட்காருங்கள். வீட்டில் எல்லோரும் சௌக்கியமா?

பங்:—ஆம் தங்காய் இதுவரையில் சொஸ்தந் தான். இனி எப்படியோ? ஈசனறிவார். என்ன செய்யட்டும். தங்கம் ஜோலிதான் வரக்கூட வில்லை. உன்னைப் பார்க்கவேணுமென்று எனக்கு வெகு நாளாய் ஆசைதான்.

தங்:—ஆமாம். வீட்டில் உங்கப்பா எல்லாரும் சௌக்கியமா?

பங்:—ஈசனருளால் இன்றுவரையிற் சௌக்கியந்தான்.

தங்:—அண்ணா அருணாசலத்தை எங்கே காணோம்? அவர் என்ன பண்ணுகிறார்? அவருக்குக் கலியாண மெப்போது?

பங்: எங்கோ ஸ்கூல்திறக்க இனியும் கொஞ்ச நாளிருக்கிறதல்லவா? அதுவரையில் இப்படிச் சுற்றிக் கொண்டு வருவான். ஆனால் இப்போதொன்றும் அவனுக்குக் கலியணத்துக் கிடைக்கை காணும் போலிருக்கிறது.

தங்:—கமலம் சௌக்கியமா யிருக்கிறாளா? அவளுக்குக் கலியாண மென்ன ஒன்றும் காணோமே?

பங்:—ஆம் சௌக்கியந்தான். எல்லாம் வரட்டுமென்று வைத்திருக்கிறது.

தங்கம்:—அப்படியா? அருணாசலத்துக் கேனும் கலியாணத்தை கழிக்க லாகாதா?

பங்:—அதற்கிப்போ வழி எங்கேயிருக்கிறது. கமலத்துக்குக் கலியாணம் கழிந்த பிறகு தான் நடக்கும் போலிருக்கிறது.

தங்:—இல்லை அக்கா. அவருக்கு நாளடவில் தேகம் மெலிந்து வருகிற தன்றோ?

பங்:—அப்படியா? நான் அவனைக் கண்டு வெகு நாளாயிற்று.

தங்:—என்ன அக்காள் இப்படிச் சொல்லுகிறீர்கள். இப்போது வீட்டுக்குப் போகாமலா வந்தீர்கள்?

பங்:—ஆம் தங்கம். நான் வீட்டிக்குப் போக வில்லை. நான் நேரில் இங்குதான் வருகிறேன்.

தங்:—அப்படியா? சரியாயிருக்கலாம். அங்கு விசேஷம் ஏதாயினு முண்டா?

பங்:—என்ன விசேஷமிருக்கிறது. எல்லாம் அறிந்திருந்தும் அறியாதவள் போல பேசுகிறாய். என்ன தங்கமே?

தங்:—அக்காள் அங்கே என்ன விசேஷம் உண்மையில் நானென்று மறியேன்.

பங்:—உங்கத்தானுக்கு நான்காவது கலியாணம் தெரியாதா?

தங்:—அப்படியா. பெண்ணெங்கிருந்து? கலியாணமெப்போது? நன்றாயிருக்குது. நான்காவதாய் 56 வயதுக்குப் பிறகு பெண் கொடுத்து விட்டது யாரக்கா?

பங்:—இவளா லோகத்தை விற்பவள் போலிருக்குதே.

தங்:—என்ன அக்கா இப்படிச் சொல்லுகிறீர்கள்.

பங்:—நீ இந்த விஷயம் ஒன்றும் அறியாயென்று ஆணையிடு.

தங்:—கடவுள் முன்பாக அக்கா இதுவிஷயம் நானறியேன்.

பங்:—(பிரமையுடையவளாய்) அப்படியா? இதென்ன வாயிருக்கிறது. பெண் நீ தானாமே. உனக்குத் தெரியாதென்று ஆணையிடுகின்றனையே. இதென்ன பிரட்டுத்தனமாயிருக்கிறது.

தங்:—அப்படியா. எனக்கு இதுவரை உண்மையில் தெரியாது அக்கா. அதற்கென்ன. இராவணன் சீதையைக் தூக்கிப் போனது போல் இருக்கலாம்.

பங்:—அதென்ன தங்கம். நீ இப்படிச் சொல்லுகிறாய்.

தங்:—இல்லை அக்கா. நாம் திருநாள் தீர்த்தம் முதலியதற்குப் பெண்பாலரும் ஆண்பாலரும் அனைவரும் செல்லுகிறோமென்று வைத்துக் கொள்ளு. ஆனால் அந்தப்பெருங் கூட்டத்துள் அனேகர் அதாவது பெண்கள் தாமாகட்டும் புருஷர்கள் தாமாகட்டும் சிலரைநோக்கி அந்தப் பெண்ணை கொள்ளலாம் இந்தப் புருஷன் நன்றாயிருக்கிறார் என்று சொல்லிக் கொள்ளுகிறார்களல்லவா? ஆனால் அவர்கள் அப்படிச் சொல்லி நொட்டையிட்டுக் கொண்டு திரிபவர்களாயிருக்கிறார்களே தவிர, அப்படியுள்ள இந்தப் பெண்ணார்? அந்தப் புருஷன் எவன்? இவளைக் கூறுவது தகுதியா? அவனை யோகித்தால் நடக்குமா என்றாராய் கிறார்களா?

இல்லை. சும்மா வாய்கூசிற்றென்று புலம்பிக் கொண்டு திரிபவர்களாகித் தானே இருக்கிறார்கள். இவர் இவ்விதம் சொல்லித் திரிவதாலே அந்தப் புருஷனுக்கோ அன்றி இந்த ஸ்திரீக்கோ ஏதாவது பயனுண்டாகப் போகுதா? அதில்லை. ஆசையின் குணம் அலறித் திரிவதுதான். இவ்வாறு சொல்லித் திரிதலுக்கு வாயு சிலவா பார்க்க வேண்டும்?

பங்:—அப்படிக் கொன்றுமில்லை தங்கம். இருக்கிறதான். உன்னிடமும் நான் பொய் சொல்லப் போகிறேனா? நாளை நிச்சித தாம்பூலம் செய்யப் போகிறார்களே.

தங்:—சரிதான் அக்கா. நம்மிடமல்லாமல் வேறு யாரிடமும் உண்மை பகருகிறதில்லையா?

பங்:—இல்லை. அதல்ல நான் சொன்னது. நான் பொய் சொல்ல மாட்டேன் என்றுதான்.

தங்:—அப்படியா? அதற்கென்ன. மஞ்சன் வாங்கினால் பெண் வேறே யாராவதுயிருக்கலாம்.

பங்:—என்ன சொல்லுகிறாய் தங்கம்? உனக்கு மனமில்லையா?

தங்:—இல்லை அக்கா. அது விஷயத்துக்கு ஒரு பிரச்னம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

பங்:—நன்றாயிருக்கிறது தங்கம்மாள். ப்ரச்னமா கேட்க வேண்டும். இது மனமில்லாததற்கு அடையாளந் தானே.

தங்:—அது நான் சொல்லியா நீ அறிய வேண்டியிருக்கிறது. இந்நேரம்வரையில் என்ன தான் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்?

பங்:—உண்மையில் உன்னெண்ணம் அப்படியா யிருக்கிறது?

தங்:—ஆமாம். உனக்கு கோபம் வந்தாலும் சரி; உண்மையாக நான் அவருக்கு என் கழுத்தைக் கொடுக்கமாட்டேன். அப்படி நேரிட்டாலிறப்பது திண்ணம்!

பங்:—அதேனப்படி. மாப்பிள்ளை போராதென்றா? சொத்தில்லை என்றா? வயது அதிகமாய்விட்டதென்றா?

தங்:—அவருக்கேது இருந்தது. எது இல்லாமற் போயிற்று. எனக்கென்ன அதையிட்டு. ஏன்பேச வேண்டும்.

பங்:—இல்லை ஆனாலும் நீ இவ்வாறு சொன்ன காரணம் யாது?

தங்:—இல்லை அக்கா எனக்கு பிடித்தமில்லை. என்ன செய்கிறது?

பங்:—தங்கம். இல்லை நீ என்னவோ மனதில் வைத்துத் தான் பேசுகிறாய். சும்மாசொல் ஒன்றுமில்லை.

தங்:—இந்தக்காரியத்தில் மனதில் வைத்துப் பேசும்படி என்ன இருக்கிறது. எல்லாம் உனக்கு தெரியாமலா இருக்கும் நீ என்னை விற்கப்பார்க்கிறாய். நான் அதற்கிடந் தருவேனா?

பங்:—எனக்கென்ன தெரியுமென்றாய்?

தங்:—இல்லை நீ இவருடனிருந்து வாழ்ந்து அடைந்த பயனைது சொல்லு. துன்பமல்லாது சுகமேதேனு முண்டா?

பங்:—அதென்ன அப்படிச் சொல்லுகிறாய். மாப்பிள்ளையுடன் கூடியிருப்பவர் சுகமில்லாமலா இருப்பார்கள்.

தங்:—அதுசரியே. மாப்பிள்ளையுடன் கூடியிருந்துவாழ்பவர் சுகத்தோடு கூடியே இருந்தாலும் இவருடனிருந்து வருகின்றனேயே என்னசுகத்தை அடைந்து வருகிறாய்?

பங்:—இது கேள்வியாகுமா? இதை நான் சொல்லலாமா?

தங்:—ஏன் சொல்லப் படாது. சரிதான் துன்பமிருந்தால் சொல்லுவார்களா? சொல்லமாட்டார்கள் தான்.

பங்:—இதைச் சொன்னால் நீ அறிவதெங்ஙனம். அப்படி அறிய அவாவிருந்தால் அவருடனிருந்து அறிதல் வேண்டும்.

தங்:—அக்கா உன் தயவிருக்கட்டும். எனக்கு இதெல்லாம் அறிந்தாக வேண்டியதில்லை. நீ சொன்னதுக்கு தான் கேட்டேன்.

பங்:—தங்கம் அதிருக்கட்டும், கேட்டாலென்ன. நீயும் அறிய வேண்டியது தானே. இனிமேலாகிலும் இங்ஙனமிராது சந்தோஷமாயிரு. உனக்குக் கிடைத்த மாப்பிள்ளையைப் போல் பணக்காரர் யார்க்குக் கிடைப்பார் எல்லாரும் சொல்லுகிறார்கள்; நானும் சொல்லிக் கொள்கிறேனென்று சொல்லிக் கொண்டால் போதுமா? ஆம் அதுவும் சரிதான். இந்த விஷயத்தில் யார்தாம் திருப்தி என்று சொல்லுவார்கள். அகம் சந்தோஷித்தால் வெளியிற் காண்பிப்பது வியசன மாகத்தானே இருக்கும். இது உனக்கு மட்டுமுள்ளதா? பெண்பாலராயுள்ள யாவருடைய செய்கையும் இதுதான்.

தங்:—ஆம் அக்கா. நீ என்ன நினைத்து கொண்டாலும் சரி, நான் சொன்னதையே திரும்பி திரும்பிப் பேசுவதற்குப் படிக்க

வில்லை. ஆனாலும் உனக்கு என்பேரில் சிநேகமுண்டானால் ஸோம சுந்தர முதலியாருடைய சங்கதியைச் சொல்லாதே. அப்படி யானால் நானிருக்கிறேன். இல்லை எனின் எழுந்து எங்காகிலும் கொஞ்சநேரம் போயிருந்து வருகிறேனென்று சொல்லிக் கண்ணீர் விடும் அக்கன்னிகையைப் பார்த்திரங்கினவளான அப்பங்கஜாக்ஷி அடியில் வருமாறு பகரத் தொடங்கினாள்.

அடிதங்கம் நீ தான் பெண்ணாப் பிறந்தவள். நாங்களெ ல்லாம் கழுதைகள் தான் "முருக்கு வளர்ந்து தூணுக்கு தவுமா" என்றாப் போல் நாங்களெல்லாம் தடிபோல் வளர்ந்து காரிய மென்ன. உன்னை மெச்சினேன். ஆனாலும் உன் னெண்ணம் எவ்வா றிருக்குமென்பதை அறியத் தானிந்த வேலை. இனி உண்மை சொல் லத்தடையென்ன? ஆனாலும் ஹே தங்கம்! என்னைத் தான் குடி காரனுக்குக் கட்டிக் கொடுத்துக் கெடுத்து விட்டார்கள். உன்னை யும் அப்படியா செய்ய வேண்டும். நான் தான் நாசமடைந் தேன். நீயும் இவனுக்கு கட்டுண்டு கெடுதலடைய வேண்டுமா? என்ற விசாரம் எனக்குப் பெரிதாகத் தானிருந்தது. என்னால் உன் னையும் உன்னப்பா இவ்விதம் கெடுத்து விடத்தலைப் பட்டிருக் கிறாரே. அதுவே பெரிய காரியம். நான்தான் இவ்வாறாகி விட் டேன்; நீயாவது தப்பித்துக் கொள்ளலாகாதா? நீ கற்றவளாயிரு ந்தும் இதுவிஷயம் கவனியாதிருப்பது தவறல்லவா? ஆனால் இனி யும் உறங்கிவிடாதே. கடவுள் சாட்சியாக உன்மீதிருந்த பேரன் பால் இதை உனக்குக் கூற வந்தேன். நீ வேறென்னவோ வென்று நினைத்துக் கொள்ளாதே என்றது கேட்ட தங்கம்மாள், ஆம் அக் காள். நீ இது கூறினது எனக்குப் பேருபகாரமாயிற்று. அந்த மட்டில் முழுதும் உபகாரம் செய்து என்னை இதினின்றும் தப்பு வித்து விடுதல் நன்மையாகும். அதனால் நீ ஆயிரம் அசுவமேதம் செய்த பலனைப் பார்க்கினும் கூடுதல்பயனை மறுமையிலுமடைவாய் என்பதும் உண்மையே. இனியும் நீ என்ன சொல்லுகிறாயோ அதைத் தவக்கமில்லாமற் கேட்டு அதன்படி நடக்கிறேனென்றாள். இதைக் கேட்ட பங்கஜாக்ஷி தங்கம், ஆனால் ஒருவழி செய்ய வேண்டும். வரும் கார்த்திகைமீ. 20உ கலியாணமென்று நிச்சயித் திருக்கிறார்கள் போலிருக்குது. ஆதலின் அதற்குள் அதாவது கலியாணதினத்தில் முகூர்த்த சமயத்துக்கு முன்னர் நீ இங்

கிருந்து வேறு எந்த ஊருக்காயினும் பிரயாணமாகிவிட வேண்டியது தான். அல்லாமலொரு வழியும் காணவில்லை. ஆனால் நீ தனிமையிற் எவ்வாறு செல்லுவாய். அது ஒரு காரியமிருக்குதல்லவா? என்ன செய்கிறது. ஆயினும் உனக்கெந்தப் புருஷனுட னிருக்க நோக்கம் சொல்லு. அந்தப் புருஷனாலாயினும் இவ்விதம் முடியுமா வென்பதை அறிவோம். என்று வினவிய பங்கஜாட்சிக்கு கபடங் களைந்த மனத்தினளாகிய தங்கம்மாள் பகரலாயினாள்.

ஆம் உன்னிடம் உண்மை சொல்லுவதிலென்ன தடை. இனி நான் புருஷனுடனிருந்து வாழவேண்டுமானால் சுந்தரபுரி செல்வகேசவ முதலியாருடனிருந்து தான் வாழ்வேன். இல்லையெனில் இறப்பேன். இது உண்மை. என்னுடைய செய்தி எல்லாம் உனக்குத் தெரிந்ததுதான். நீ என்ன சொல்லுகின்றனையோ அதைச் செய்கிறேன். இப்போது தாயும் நீ தந்தையும் நீ. நீ என்னை அந்தப் பாவி கையிற்காட்டிக் கொடுத்து என்னைக் கொன்றாலும் சரி. அல்லது செல்வகேசவ முதலியார் வசம் ஒப்புவித்து என்னை ரக்ஷித்தாலும் சரி. பொன்னுந் துரும்பும் உந்தன் தலைமேல். இனி நான் செய்யவேண்டியதென்ன? சொல்லு செய்கிறேன் என்றது கேட்ட அப்பங்கஜாட்சி என்னும் பெண்மணி தங்கம்மாளை நோக்கி, அம்ம! பத்தரை மாற்றுத் தங்கமே! உனது கல்விக்கும் உன்னழகுக்கும் உந்தன் குணத்துக்கும் அந்த செல்வ கேசவ முதலியாரே இசைந்த நண்பர். ஆனால் உனது கணிசமாயுள்ள தோற்றம் அவரிடம் நாடினதே உசிதம். நீ. அவரை இலேசென்று மதித்து மறந்து விடாதே. தங்கம் நீ என்ன நினைக்கிறாய். சோமசுந்தரமென்ன சக்கரமுடையவரென்று? அது அழியும் பொருளென்பதை நீயறியாயா? இனியும் சக்கரமென்ற பதத்துக்கே பொருளென்னவாகிறது. சக்கர மென்றால் உருளுகிற தென்று பொருள் விளங்குகிறதல்லவா? அங்ஙனமெனின் சக்கரம் ஒரு இடத்திலிருப்பதல்லவே. ஏனெனின் அதன் ஜோலியே உருளகிற தென்றாய் விட்டதே? அப்படியானால் அது ஓரிடத்திலும் ஸ்திரமாய் நில்லாதே. இனியும் அவ்விதமுள்ள சக்கரமிருக்கும் சிலரை செல்வவான்களென்று சொல்லிக்கொள்ள என்ன நியாய மிருக்கிறது? இனியும் ஔவை கூறியவாறு "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" நோயில்லாமலிருந்து வாழ்பவ

ணைத்தானே என்றும் குறையாக் குபேரனது பொக்கிஷமென்று ஔவை கூறியுள்ளாள். இனியும்.

"கேட்டில் விழுச்செல்வங் கல்வி
யொருவற்கு மாடல்ல மற்றயவை."

என்றபடி எப்பொழுதும் எந்தப் பிரளய காலத்தும்யாதொரு அழிவுமில்லாமல் நிலை நின்று நாளடவில் விளைந்து நாளுக்கு நாள் அதிகரித்து வருகிற செல்வமொன்றிருப்பதாயும் அச் செல்வத்தைத் தான் கல்வி யென்று கூறப்பட்டு வருவதாயும் நாயனுர் கூறியுள்ளாரன்ருே? இவ்விதமுள்ள இரண்டு செல்வங் களையும் நிரம்பப் பெற்றுள்ளவரன்ருே அந்தச் செல்வகேசவ முதலியாரென்பவர். தங்கம்! எல்லாம் வரட்டும் பார்த்துக் கொள் ளுவோம். ஈசனருள்வா னென்றதும், முடிவில் கூறிய ஈசனருள் வான் என்ற சொல்லை மட்டும் காதிற் கேட்ட சுகவேணி அங்கு வந்ததும் பங்கஜாட்சியை நோக்கி என்ன பகங்ஜாட்சி! எல்லாம் ஈசனருள்வான். பார்த்துக் கொண்டாயல்லவா? இப்போ நேர மென்ன வாயிற்று. மணியும் இரண்டிக் கலாகிறது. இனியும்காலை யில் பல்லுக் கூட விளக்க வில்லை. இங்கென்ன வேலைபோ? என்ன பரீக்ஷைக்குப் பிள்ளை படிக்கிறதோ? இந்தப் பரீக்ஷை ஜயிக்காதத் தாமதம் கலக்ட்டர் வேலைக் காளில்லையாம். என்ன செய்யச் சொல்லு கிருயடி அம்மா? பெண்பிள்ளைக்கு இவ்வளவு அடமும் ஆணவ வுமாகுமா? இது எப்போதும் நடக்குமா? நம்மு டைய வீட்டில் தான் இது செல்லும். நீயெல்லாம் இப்படித் தாஞ அடிக்கடி அடம் பிடித்துக் கொண்டிருந்தாய்? என்னடி பங்கஜாக்ஷி! ஸோமசுந்தர மென்ன சொத்தில்லாதவரா? அப் படியுள்ள பாபருக்கா நீ வாழ்கைப் பட்டு களிமண்ணை உருட்டி யிட்டாப் போல் காதில் நகை நட்டுக்களை அணிந்திருக்கிருய்? இவளென்ன பயித்தியக் காறச் சிறுமியாயிருக்கிருள். கண்டு கொண்டாயா? இவளுக் கென்ன அறியவேண்டியதிருக்கிறது. காலாகாலத்தில் ஒர் கணவருடனிருந்து வாழவேண்டுமே தவிர அது சொத்தை இது சொள்ளை என்று வன்சொல்ல வேணும். இதையிட்டு குதற்கம் செய்யு மட்டும் என்ன அறிந்தவள் இவள். பிள்ளைகளைகொல்லு கிறதற்கா பெறுகிறதும் வளக்கிறதும். இவ் வளவு அறியாத இவள் எவ்வளவு படித்துத் தானென்ன செய்ய.

இப்படியுள்ள இவளது கல்வி என்ன பிரயோஜனத்தைப் பயக்கும். அடி பங்கஜாக்ஷி! நீ எல்லாம் இப்படித் தானு உன் தந்தை தாயாரிடம் அடம் பேசுகிறது? இதென்ன பெண்? வீணத்தனமாயிருக்கிறது. இப்படியுள்ள ஒரு பெண்ணை ஈசன் எனக்கென்று நிர்மித்துவிட்டான். என் குலை வாங்கவா இவள் பிறந்தாள்? ஆனுலிவளைப் போலொரு பெண்ணை நான்கண்டும் கிடையாது கேட்டும் கிடையாது என்றிவ்வாறு பிரசங்கித்து வரும் சுகவேணிக்குத் தங்கம்மாள் பதில் கூறத் துடங்கினள்.

அம்மா இப்படிக் கெல்லாம் வீணில் என் தாழ்வைச் சொல்லுகிறுய். சங்கதி யென்ன? உன்னையாகிலும் என்னப்பாவையாகிலும் எனக்கொரு புருஷனைத் தேடுங்களென்று எப்போதாகிலும் நான் கூறினதுண்டா? இல்லையே. அப்படியிருக்க நீங்களன்றோ இப்போது அவஸ்தைப் படுகிறீர்கள். அவ்வளவுக்கு மட்டும் என்ன வந்து விட்டது. எனக்கு வயற்றிலாறுமாதமாகிவிட்டதா? என்ன செய்கிறது நிர்வாக மில்லையே. குலத்துக் கிழுக்காயிற்றே என்று வருந்த வேண்டும். அப்படிக் கொன்று மில்லையம்மா. நீ பயப்படாதே. அதற்கொன்றும் இந்த உடலில் உயிரிருக்கும் வரையில் இடைவராது.

சுகவேணி:—கேட்டுக்கோ அம்மா பங்கஜாக்ஷி. அவள் சொன்னுல் தான் கலியாணம் வேண்டுமாம். இது வீட்டுப் பெண்களுக்கழகுதானு? இனியும் அவள் சொன்னதெல்லாம் நீயும் கேட்டுக்கோ. இவ்விதம் சொல்லுகிற பிள்ளைகளை நீயாவது எங்காகிலும் கண்டதுண்டா?

தங்கம்மாள்:—ஆமாம் அக்கா. பெற்றோர்கள் தேடும் புருஷர் பெண்ணுக்கு பிடித்தமில்லாமற் போயிற்று. ஆனுல் பெற்றோர்கள் என்ன செய்ய வேண்டும்; நீதான் சொல்லு அக்கா.

சுகவேணி:—ஹூ! பங்கஜாக்ஷி! இவளுக்குப் பிடிப்பதா எங்களுக்குக் காரியம். நல்லது. அடி தங்கம்! உனக்கென்னடி சுயாதிகாரமுண்டு. நீ பேசுவதெல்லாம் பேசிக்கோ. எல்லாம் பார்ப்போம் என்று வெகு காம்பீர்யமாய்ப் பேசுவதைக் கேட்ட ஸோமனுதமுதலியார் தங்கம்மாளை நோக்கி, என்ன குழந்தாய் நீ படித்தேனென்று பேசுகிறுப் போலிருக்குதே? நன்றுயிருக்குது. நீ இவ்வளவு பேசுவாய் என்று கனவிலும் நினைக்கவில்லையே.

எல்லாச் சங்கதியும் இப்போதல்லவா வெளிக் கிளம்புகிறது. என்முன் நிற்காதே போ என்று சொல்லி சுகவேணியை நோக்கி நீ போ அவளிடம் பேசவேண்டியதில்லை. எல்லாம் நானிருக்கிறேன். முறையே நடத்திக் கொள்வேன் என்று அனுப்பினார். இதைக்கேட்ட தங்கம்மாள் கண்களிற் அருவிபோல் ஜலம் பெருக தந்தையை நோக்கி, அப்பா! ஏது சங்கதி யொன்றும் விசாரியாமலிவ்வாறு கோபிக்கலாமா? என்னவோ அம்மாள் தாம் நம்மிடம் பக்ஷமில்லாதவள் போல் பேசுகிறுளென்றிருந்தேன். இப்போது அப்பாவும் கூடச்சேர்ந்தாயிற்று போலிருக்குது. இதுவும் எனது கஷ்டதிசைதானென்றழுவதைக் கண்ட ஸோமனாதமுதலியார் ஹேஹ தங்கம்! நீ ரொம்ப மரியாதைக்காறிதானென்று உன்னம்மை சொல்லித்தெரிகிறது. இனியும் உன்னைப் பெற்ற நாளன்று முதலே உன்னை நானறிவேன். ஆனாலும் உனக்கிப்போது பேச்சுக் கூடித்தான் போயிற்று. அந்த யோக்கியதையை எல்லாம் என் வெளிப்படுத்து கின்றாய். அவசியமில்லை போதும் என்றது கேட்ட தங்கம்மாள் ஏது அப்பா நம்மீது இவ்வளவு கோபத்துக்கு நான் செய்து விட்டது.

ஸோமனா:—போதும். உன்னால் எனக்கு மிகக் கியாதிதான். எல்லாம் சுகவேணி சொல்லத் தெரிந்து கொண்டேன். நீ ஒன்றும் விஸ்தரிக்க வேண்டுவதில்லை என்று சொல்லி அவரும் சுகவேணியும் அங்கிருந்து போனதும் ஒன்றும் பேசாமல் மௌன முற்றிருந்த தங்கம்மாளை நோக்கி, பங்கஜாக்ஷி ஆம் தங்கம் நீ ஏன் கேதிக்கிறாய். சொல்பவரெல்லாரும் சொல்லட்டும். நடப்பது மட்டும் நம்மனம் போல் முறையாய் நடத்திக் கொள்ளலாம். அப்படித்தான். நான் வந்து ரொம்ப நேரமாயிற்று. வீட்டுக்குப் போய் நாளை மற்றநாள் வருகிறேன். அப்போது ஆலோசித்துக் கொள்ளுகிறது என்று சொல்லி விடைபெற்று அங்கிருந்திறங்கி ஸோமனாத முதலியாரைக் கண்டதும் ஐயா வருகிறேன் என்றது கேட்ட அவர் அப்படித் தான் நாளைக் காரியம் முறையாய் நடக்கட்டும். நாங்கள் உத்தேசம் ஒன்பது மணிக்கு வருவதாய்ச சொல்லு என்றது கேட்ட பங்கஜாக்ஷி அங்கனமே யாகட்டு மென்று அங்கிருந்து மெல்ல நடை கொண்டாள்.

12-வது அத்தியாயம்.

மணி மூன்றாயிற்று. பங்கஜாட்சி அங்கிருந்து போன தும் தங்கம்மாள் ஏதோ எழுதிக் கொண்டிருந்தாள். அப் போது பாக்கிய மென்னும் பெயருடைய முன் மூன்றாம் அத் தியாயத்தில் கூறியுள்ள விருத்தை அவ்வரைக்குள் வந்தாள். அவளைக்கண்டதும் தங்கம்மாள் எழுந்து அவள் கையை பிடித் திருத்தித் தாமும் உட்கார்ந்தாள்.

அப்போது:—பாக்கியம் குழந்தாய் தங்கம் என்ன செய்கிறாய் இங்கு யாரெல்லாமோ பேசிக் கேட்டேனே. அவர் மனம்போல் பேசித் தீர்ந்து விட்டதா? இனிக்குறையில்லையா? அவர்கள் இனி சொஸ்த மடைவார்களா? அவர்கள் கண் இனி விராவுறங்குமா? பேசிக் கொள்ளட்டும். நீ என் வருத்தப் படுகிறாய். அப்படிக்கொன் றும். வந்து விடவில்லையே.

தங்கம்:—எனக்கென்ன வருத்த மிருக்கிறது. உனக்குத் தெரியாம லொன்றிருக் கிறதா பாட்டி?

பாக்:—குழந்தாய் அது ஒருபாக மிருக்கிறது. அதுக்குவிமோ சனகால மும் உண்டு. அந்தக் காலம் கிட்டும் வரையில் யார் எதைச் சொன்னாலும் புத்திபோல் கேட்டுக் கொண்டிரு. உன்னப்பனும் அந்தப் பாகம் தான் போலிருக்குது. சரிதான். நம்மள் பக்கத் துக்கு ஈசனொருவனிருக்கிறான். உன்னப்பன் இவ்வளவு நேரம் என்னெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தான்.

தங்:—அப்பா சொல்லுகிறதென்ன தெரியாதா பாட்டி? அவர்கள் பணம் பணம் என்றுதான் சாகிறார்கள். இனியும் பேசி னால் நம்மைக் கொல்லவும் செய்வார்கள் போலிருக்குது.

பாக்:—அப்படியா? குழந்தாய். இங்கு பெரிய தர்க்க முண் டாயிற்றா? நீ எதற்காக அந்தப் பொண்ணத் தடியனோடு வாதி டணம். அது வேண்டாமே.

தங்:—பாட்டி நானொன்றும் வாது செய்ய வில்லை. அம்மா விருக்கிறாளல்லவா வீட்டரசி; அவளுடைய சொற்கேட்டுச்

தான் அப்பா நடப்பது போலிருக்குது. அவள் சொன்னதைத் தானே அப்பாவும் சொல்லுகிறார். அவள் தான் பெண்பிள்ளை பேதமைத் தனமாய் சொல்லுகிறாளென்றாலும் அதைவிடப் பேதமையாய் நியாயான்யாயம் பாராமல் அப்பாவும் கண்டிக்கிறார். ஆனால் ஸோமசுந்தரம் மனைவி பங்கஜாட்சி ரொம்ப நல்லவள். அவள் செய்கிற உபகாரம் கூட இவர்களாலில்லாமற் போகிறதே. இப்படியுள்ள இவர்களை அப்பனென்றும் அம்மையென்றும் சொல்ல வெட்கமாயிருக்கவில்லையா? இனியும் இவர்களை தாய் தந்தைகளென்று நினைக்கிறாய்? இல்லை பாட்டி இவர்கள் என்னைக் கொல்லப் பிறந்தவர்கள் தான். இனியும் "பெற்றம்மை செத்தால் பெற்றப்பன் சிற்றப்பன்" என்பது சும்மாவா சொல்லி யிருக்கிறது பாட்டி. அவர்கள் எது வேணுமோ செய்து கொள்ளட்டும். நமக்கு இனி அவர்களை எதிர்பார்க்கு மட்டும் தாவா இல்லை. ஆதலின்இவர்கள் சங்கதியை நாமேன் கவனிக்க வேண்டும். மேல் நடக்க வேண்டுவன என்ன? அதை மட்டும் பாற்போம்.

பாக்:—குழந்தாய்! பங்கஜம் செய்த உபகாரமென்ன?

தங்:—ஒன்று மில்லை பாட்டி. ஸோமசுந்தரத்தின் செய்கையை எல்லாம் சொல்லி வம்பிலே கெட்டுப் போகாதே என்று உபதேசிக் கிறது உபகார மல்லவா?

பாக்:—அப்படியா? பங்கஜாட்சி இங்கே வந்திருந்தாளா?

தங்:—ஆமாம். இப்போது தான் அவள் வீட்டுக்குப்போனாள்.

பாக்:—அப்படியா. அவள் நல்ல புத்திசாலியானதால்தான் உன்னண்டை இதைச் சொன்னாள். நீ இதை வெளியிடாதே.

தங்:—(சிரித்துக் கொண்டே) என்னபாட்டி அவ்வளவு தெரியாதவளா நான்?

பாக்:—இல்லை. பேச்சுப் பராக்கில் சொல்லி விடாதே என்று தான். அதிருக்கட்டும் நேற்று வந்த கடித்ததுக்கு பதிலெழுதினையா? என்ன எழுதினாய்?

தங்:—ஆம். பதில் எழுதி யிருக்கிறேன். படிக் கட்டுமா?

பாக்:—ஆம். வெளியிற் யாராவது கேட்டுக் கொண்டு நிற்கிறார்களா பார்த்துக்கோ.

தங்:—உடனே எழுந்து வெளியிலெல்லாம் பார்த்து ஒருவருமில்லை என்று சொல்லிக்கொண்டு கதவடைத்துவிட்டு பாட்டி இனிவாசிக்கிறேன் கேள்க்கிறயா?

பாக்: அப்படித் தான். இனி. படி.

தங்கம்மாளின் பதில் கடிதம்.

பிரியமுள்ள ஐயா;

"கடல்சூழ்ந்தவல குண்டகனி வாயனிரத்தொழிலுங் கமழ்ந்ததெய்வ
மடல்சூழ்ந்த மலர்க்குஈசின்முசற் றெமிலுமவரோடுமெடிக்குஞ்ஞான்றவ்
வடல்சூழ்ந்த வரன்வழியே மீட்டுப்வாப் பணித்தருளி யெமக்கெல்லாம்
மிடல்சூழ்ந்த வினள் தனிப்பாய் சுந்தரபுரிச் செல்வகேசவனீயே"

இனியும் தங்களது அன்பார்ந்த கடிதம் காணவே எனதந்தகாரம் இரவி முன் பனிபோலகன்றது. நான் கதிரவனைக் கண்டகமலம் போல் களிப்பை அடைந்தேன். எனின் என்னையும் ஒருபொருட்படுத்தி தாமித்திருவெழுத்தனுப்பியதே என் மீது தங்கட்கு இருக்கும் அளவிறந்த அன்பையும் அதனல் நானடையப் போகும் பாக்கியத்தையும் இதென விளக்குகிறது. இம்மாதிரி பாக்கியம் எம்போலிய பெண்கட்குக்கிட்டாதென்றும் இதுவே பெரும் சிலாக்கியமென்றும் நான் சங்கையின்றியே கூறுவேன். நிற்க, எம்மேலியம் தமக்கு கிஞ்சித்து சங்கையிருப்பதையும் அக்கடிதம் வெளிப்படுத்திற்று எனின் அவ்வித சந்தேகம் என்னுடலில் உயிர் பொருந்தியிருக்குமளவும் தங்கட்குண்டாகவேண்டுவதில்லை என்பதை உறுதியாய்க் கொள்ளுங்கள். இந்த விஷயத்தை யிட்டு கவலை கொள்ளுதல் வேண்டாம். இனியும்,

எனது தற்போதுள்ள நிலைமை மகாகஷ்ட ஸ்திதியிலிருக்கிறது. எனது தந்தை ஸோமசுந்தரம் மீது அபரிமிதமான பிரீதியை யுடையவராகி நாளைய தினம் நிச்சிததாம்பூலத்திற்கும் அடுத்த கார்த்திகை மீ 20உ கலியாணத் துக்கும் இன்று நிச்சயித்தாயிற்று. இக்கடூரச் சொற்கள் கேள்க்கிற எனது கர்ணங்கள் விர்ணமாகின்றது. ஆயினும் நானென்ன செய்யக் கூடும். மகாகாதகர் கையிற் சிக்குண்டு கரையேறும் வழி இதெனவறியாது தத்தளிக்கும் எம்மை இது வேளை தப்பு விப்பதே தங்கள் கடமை. இனியும் எனது உடல் பொருள் ஆவி மூன்றையும் இப்

போதே இக்கடித மூலியம் தமக்குத் தத்தம் செய்திருப்பதால் இதற்கு வேண்டும் உபாயங்களை முறையே கருதிக் கொள்ள வேண்டும். ஆலசிய மாயிருத் தலாகாது. காலம் குறுகி விட்டன. உடன் கடிதத்துக்கு பதில் வேண்டும். அண்ணு இன்று காலையில் தானே அங்கு திரும்பி விட்டார். விசேஷம் ஒன்றுமில்லை.

ஜம்புகாத்திரி
1—3—86

இங்ஙனம்
தங்களன்புள்ள
K. தங்கம்மாள்.

இவ்வாறு கடிதம் முடிந்ததும் இரவுமணி ஏழுஆயிற்று. அப்போது முதல் நாளிரவு கடிதம் கொணர்ந்த கோபாலசுவாமி என்பவன் அங்கு வந்தது கண்ட விருத்தை அங்கு யாரய்யா கோபாலசுவாமியா? நீயும் வந்து விட்டாயா? நல்லவேளை. ஆமாம். தெய்வ மல்லவா சேர்த்து வைக்கிறது. இடையிலிருக்கிற உன்னுலும் என்னுலும் என்னவாகப் போகிறது. நாம் இவ்வாறு செய்து கொண்டு முடிவிற் கிட்டக்கூட வரக்கூடாது. ஆனுலும் இவரிருவரும் ஆச்சந்திரார்க்கம் சந்ததிப் பிரவேசமாயிருந்து வாழட்டும்.

கோபாலசுவாமி:—ஆமாம் பாட்டி சொல்வது உண்மை தான். அவனன்றி யோரணுவும் மசையாவென பெரியோர் வாக்கியத்துக்கிணங்க இதெல்லாம் இறைவன் செயலன்றோ? நம்மாலென்ன ஆகப் போகிறது.

பாட்டி:—ஆமாம் சரிதான் தங்கம் சந்தோஷமாய் கடிதத்தை மடக்கினையா? கொண்டுவா வென்று அக்கடிதத்தை வாங்கி கோபாலஸ்வாமியிடம் ஒப்புவித்து சீக்கிரம் பதில்வேண்டுமென்பதாய் கூறு. என்றதும் அங்ஙனமேயாகட்டு மென்று அக்கடிதத்தை வாங்கின கோபால ஸ்வாமி மெல்ல நடந்து விட்டான். இங்கே தங்கம்மாளும் விருத்தையும் போஜனவறை சென்று உண்டு அன்று எட்டு மணிக்கே நித்திரையிலாழ்ந்து விட்டார்கள்.

இதுநிற்க,

மூன்றும் நாள் காலை ஆறு மணியிருக்கலாம். மூன்ருவது அத்தியாயத்தில் தங்கம்மாளைத் தன் வசமாக்க வெண்ணி க்ஷத்திரப்பிரயோகமும் சதியாலோசனையும் செய்து செல்வகேசவ

முதலியாரைச் சதிவுட் படுத்தியும் பானுமார்த்தாண்டனை மறியல்செய்து பங்கப் படுத்தியும் வந்த அருணாசலமென்னும் நீசன் முன் கூறியுள்ள தாதிவீட்டேகி ஆதியோடந்தம் நடந்ததைக் கூறி தங்கம்மாளைக் கொண்டு வரும்வழி இனியாதென வினவ அன்னவனை நோக்கிய சுதர்கணை என்னும் தாதி பகரத் தொடங்கினாள்.

ஓ! ஐயா; தாம் இவ்வாறு வருந்துதல் அவசியமில்லையே. இது கையிலிருந்த வெண்ணையைக் கொடுத்து தாம் நெய்க்குத் திண்டாடினகதை போலிருக்குதே? இதுவிஷயத்தில் இனியென்ன யிருக்கிறது. எல்லாம் தங்கள் மனம் தானே வேண்டும். இதற்கு இனியும் என்னிடம் சிபார்சு செய்யவேண்டுமா?

அரு:—என்ன சுதர்கணை என்னல்லாம் சொல்லுகிறாய். என்னை சாக்குப் போக்குச் சொல்லி சீக்கிரம் அனுப்பி விடுவாய் போலிருக்குதே? அல்லது. என்னைச் சோதித்துப் பார்க்கிறாயா? நீ என்ன பரீட்சித்தாய். நான் கொண்ட ஆவல் நடவாமல் நின்றுவிடப் போகிறதா? அப்படி ஒன்றும் நினைக்க வேண்டாம்.

சுதர்:—அதென்ன இப்படிச் சொல்லுகிறீர்கள். தங்களைச் சோதிக்கு மட்டும் எனக்கென்ன இருக்கிறது? ஒன்று மில்லையே. ஆனாலும் இது சீக்கிரம் முடிவதற்கோர் வழியிருக்குது. அவ்வழி செய்யமுடியுமா?

அரு:—என்ன சுதர்கணை. மாந்தர் எண்ணினால நடவாததொன்றுண்டா? ஆகாசகங்கையையும், அருந் தவத்தால் பகிரதன் பாதாளங் கொண்டு சேற்பிக்கவில்லையா? அதனிலும் பெரிய பிரயத்தின மொன்றுளதா? இல்லையே. ஆனால் சொல்லு எப்படியும் நடப்பிக் கிறேன்.

சுதர்:—இல்லையையா? அப்படிக் கொன்றும் பகீரதப் பிரயத்தினம் பண்ண வேண்டியதில்லை. சுளுவில் நடக்கக் கூடியதுதான்.

அரு:—அப்படியா. சுளுவில் நடக்கக் கூடியதா விது. ஆனால தெப்படி?

சுதர்:—இல்லை. தம்முடைய தமக்கையார் மனம் வைத்தால் சுளுவில் முடியும். அன்றி பிரம்மன் நினைத்தாலும் முடியாது.

அரு:—அதென்ன சுதர்கணை. இப்படிச் சொல்லுகிறாய். என்னக்காள் சொல்வதைத் தான் இவள் கேழ்க்கிறதா.

சுதர்:—ஆம். உங்களக்காளால் தான் இதுகட்டாயம் முடியும். அவளுக்கும் தங்கம்மாளுக்கும் தானே அதிக ஸ்னேகம். நேற்றுக் கூட அவள் வந்து விட்டுத் தானே போனாள். அவள் நினைத்தால் இது நடவாமற் போகுமா?

அரு:—அப்படியா. அவருக்குள் ரொம்ப இஷ்டமா? இது எனக்குத் தெரியாதே. அப்படியானால் பிரயாசை யில்லாமற் நடக்குமே.

சுதர்:—ஆமாம். அதுதானே சொல்லு கிறேன். அப்படிச் செய்யுங்கள். அவள் நினைத்தால் நடக்கத் தடையில்லை. நானும் ஜாக்கிரதையாக விருக்கிறேன் என்றதும், அங்ஙனமே யாகட்டு மென்று அங்கிருந்து அருணாசலம் நேரே பங்கஜாட்சி வீடுசென்றான். அங்கே இவனது வரவு கண்ட பங்கஜாட்சி அளவிடமுடியாத ஆனந்தமுடையவளாய் அய்யாவா உட்காரு என்று சொல்லி வீட்டி லுள்ள ஒவ்வொரு வருடைய க்ஷேமங்களை வினவினாள்.

அரு:—ஆம் அக்கா வீட்டில் எல்லாரும் க்ஷேமந்தான்.

பங்:—தம்பி நீ யேனிப்படிக் கிருக்கிறாய்? தேகம் மெலிவானேன். நீ சாப்பிட்டு அனேகம் நாளிருக்குமா? வா சாப்பிடு எண்டா?

அரு:—அக்கா. நம்மள் வீட்டில் சாப்பாட்டுக் கெல்லாம் என்னகுறை யிருக்கிறது. என்னவோ கிரக தோஷமாம். தேகம்வரவர மெலிந்து தான் வருகிறது. என்ன செய்யலாம்.

பங்:—ஏ தம்பி! ஆனால் உனக்கு தேக சௌக்கியம் குறையுமா? அப்படியானால் வைத்தியனண்டை மருந்து சாப்பிட லாகாதா?

அரு:—தேக அசவுக்கியம் ஒன்றுமில்லை யக்கா. என்னவோ மனதிற்கு மட்டும் சுகம்கிடையாது என்றது கேட்ட பங்கஜாட்சி இவன் விவாகத்தை யிட்டுச் சற்றே வருத்த மடைகிறான் போலிருக்குது என்ற எண்ணமுடையவளாகி தம்பி! நீ எதற்காக இவ்வளவு வருத்தமடைய வேண்டும். வருகிற கிருத்திகை மாதத்தில் தானே உனக்கு விவாகம் செய்யவேண்டு மென்று அப்பா ஆலோசித் திருக்கிறார்களே என்றது கேட்ட அருணாசலம் ஆம் அக்கா அப்படியா அப்பா எண்ணிக் கொண்டிருக்கிறார்?

பெண் எவ்விடத்திலிருந்து. எனக்குக் கலியாணமும் வேண்டாம். காடேற்றும் வேண்டாம்?

பங்:—நீ ஏண்டா அப்படிச் சொல்லுகிறாய்? நம்மள் அம்மான் பெண் விசாலாட்சி அழகிற் குறைந்தவளா? அந்தஸ்தில் தாழ்ந்தவளா? அன்றி செல்வத்தில் குன்றினவளா?

அரு:—ஆம் அக்கா. விசாலட்சி கல்வி அழகு முதலியனவைகளில் சிறந்தவள்தாம். ஆனாலும் நற்குணம் தான் கிடையாது.

பங்:—அதுசரி. ஆனாலும் சொத்துடையவளன்றோ?

அரு:—ஆம் அக்கா. அவள் எனக்கு வேண்டுவதில்லை. அதுவிஷயத்தைப் பற்றி நீ கூறாதே.

பங்:—ஆனால் உனக்கெந்தப் பெண் பிடித்தம்.

அரு:—ஆம் நான் சொல்லுகிற பெண் உன் கைவசந் தானே இருக்கிறது. உன்னால் வெகு சுலபத்தில் முடிக்கக் கூடுமே.

பங்:—அப்படியா அருணாசலம்? அப்படியுள்ள பெண் யார்?

அரு:—எல்லாம் உனக்குத் தெரியாததா? ஆனாலும் நான் கலியாணம் செய்து காதலி சுகத்தை அடைவதாயிருந்தால் இந்தக் காதலியோடுதான் சுகிப்பேன். இல்லையெனின் உயிர் துறப்பேன். ஆதலின் இதுவிஷயத்தை நீதடுத்துக் கூறினெவ்வாறு.

பங்:—ஆனாலவள் இன்னாளென்று வெளிப்படக் கூறேன்.

அரு:—அக்கா நீ வேறாரோவென்று எண்ணி விடாதே. உனது சிநேகிதியான தங்கம்மாளிருக்கிறாளல்லவா? அவளைத் தான் நான் காதல் கொண்டிருப்பது. ஆனால் நீ இதுவிஷயம் முடித்தாலாயிற்று. இல்லையெனின் நான் வேறுவழியறிவேன். என் பேரில் பாதகமில்லை. நான் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தேன். இனி உனதிஷ்டம். நான் உயிருடன் வாழுவதைக் காணவேணுமென்றிருந்தால் இது விஷயத்தில் நீ சிரத்தை எடுப்பாய். இல்லையெனின் ஏதோ தானேவென்றிருந்துவிடு. உன்னிஷ்டம் என்பாக்கியம்.

பங்:—அடே! அருணாசலம். நீ என்னடா இவ்வளவு புத்தியில்லாதவனாகிவிட்டாய்? அடே! கிட்டாப் பொருளையிச்சித்து அடையும் பயன் யாது? தங்கம்மாளாவது அவள் உனக்குப் பெண்டாகி விடுகிறதாவது. இலேசில் ஈடேறும் விஷயந்தான். நன்கு கூறினை. அடே! எந்த முறையில் நீ இவள் விஷயத்தில் ஆசைகொண்

டாயடா? அருணாசலம் நீயென்ன தங்கம்மாளை விட கல்வியிற்றே ர்ந்தவனா? அல்லது சம்பத்தில் மிகுந்தவனா? அன்றி அழகில் மிகு ந்தவனா? அந்தஸ்திலுயர்ந்தவனா? எந்த விதத்திலேனும் நீ அவளை விட உயர்ந்தவனென்பதைக் கூறு. வெட்கமில்லாமற் வெளியி லும் சொல்லி விட்டையே. இதுபோல் வேறு ஆரிடமும் சொல் லாதே. அப்படிச்சொன்னால் உனக்குப் பயித்தியம்பிடித்திருக்கிற தென்று எல்லாரும் உன்னைப்பரிகசிப்பார்கள். அடே! நீ என்ன பித்தனா? தங்கம்மாளின் பெரியதனத்துக்கு உனது சின்னத் தனம் எவ்வாறு பொருந்தும். இனியும் "எடுக்கும் பாரந்தானெடுக்கலாம் இல்லை எனின் குறுக்குத் தவழ்ந்து போம்" உன்னைச் சொல்ல என்னயிருக்குது. உன்னைமூலையொழித்துப் பெற்று விட்டார்களே அவர்களைச் சொல்லுகிறதற்கு இப்படியொரு சகோதரனான நீ எனக்கு எங்கிருந்து வந்தாய்? ஆனாலும் நீ இவள் விஷயத்தில் கா தல் கொள்ளாதே. அவளோ கல்வியில் மிகுந்தவள். கற்பழிப் பவ ளல்ல. முன்னர் முதலே சுந்தரபுரிச் செல்வகேசவ முதலியாரை வரித்துள்ளாள். இதுவே அன்னவளின் பெற்றோருக்குச் சம்மதி யில்லாமல் உங்களத்தான் தாலிகட்ட நிச்சயித்து இன்று நிச்சித தாம்பூலம் செய்யப் போகிறார்கள். ஆனால் இந்தக் காரியமும் தங் கம்மாளுக்கு எட்டுணையும் சம்மதியில்லாது எங்காகிலும் ஓடி விடப் பார்க்கிறாள். ஆதலின் அவ்விதம் கற்பில் அருந்ததிக்குச் சமானமான தங்கம்மாளைக் காதல் கொள்வதே பெரும் பாவமாகும். இனியும் அவளண்டையில் நான் இது விஷயமாய் சிபார்சுகள் செய் வது எள்ளளவும் பொருந்துமெனத் தோற்றமாகவில்லை. ஆதலின் உனக்கு அவள் மீதுள்ள காதலை "கிட்டாதாயின் வெட்டெனமற" வென்னும் கிழவி சொல்லைக் கிர்கித்துச் சீக்கிரம் அகற்றிவிடு.

அரு:—ஆமாம். அவள் செல்வகேசவ முதலியாருக்கின்றி வே றொருவருக்கு வாழ்க்கைப்படாத கற்புடையவளென்பதுறுதியா?

பங்:—ஆம். உண்மையில் அங்ஙனந்தான்!

அரு:—அப்படியா? அவருக்கிது சம்மதி இல்லாமற்ப் போயிற் றாயின், இவள் பண்ணுகிறதென்ன?

பங்:—அதெப்படிச் சம்மதியாமற் போவார். அவரும் இவ ளும் ஒரே கிளாசில் படித்து முன்னமே தானே இவ்விதம் விவா ஹம் செய்ய ஒப்புக் கொண்டாயிற்றே.

அரு:—அதுசரி. அவர் இல்லையானல் என்ன செய்யலாம்.

பங்:—இல்லாமல் எங்கு போவார்? அபலூர் சென்றிருந்தாலும் கொஞ்ச நாள்க்களில் வராதிருப்பாரா? வந்து ஆனல் போதும். இப்போதென்ன நெருக்கமா?

அரு:—அதில்லை யக்கா. அவர் இறந்து போய்விட்டால் இவள் என்ன செய்வாள்.

பங்:—அடே! சும்மாவிரு. இறந்து போனல் என்ன செய்வாள்? அவ்வளவு தான் நிற்வாகமென்று வெண்ணிக் கொள்வாள்.

அரு:—அப்படி யானலும் வேருெரு புருஷனைச்சேராளா?

பங்:—என்ன. நீ இந்தக் கேள்வி கேள்க்கலாகுமா? சும்மா விரு. ஏன் இறக்கச் சொல்லுகிருய்? அப்படி நேர்ந்து விட்டாலும் கற்புடைய பெண்கள் வேருெரு புருஷரைக் கவனிப்பார்களா?

அரு:—அக்கா. உண்மையிலவரிறந்து நாள் ரெண்டாகிறது.

பங்:—அப்படியா? அருணசலம். உனக்கிது சொன்னதுயார். ஏண்டா! இந்தப் புளுகெல்லாம் புளுகுகிருய். முந்தின நாள் காலமேதானே தங்கம்மாள் வீடு வந்து போனர். நீ இறந்து நாள் ரெண்டாயிற்றென்றுயே. இந்தப் பொய் என் சொல்ல வேண்டும். இப்போது பொய் பேசவும் படித்து விட்டாய் போலிருக்குதே.

அரு:—ஆம், அக்கா! நீ கூறினது உண்மை தான். முந்தின தினம் இவிடம் வந்து போனதும் யதார்த்தமே. ஆனல் முந்தின நாளிரவு உத்தேசம் ஒன்றரைமணி சுமாரில் உயிர் துறந்தார்.

பங்:—எங்கு இறந்தார். அவ்வளவுக்கென்ன வியாதி.

அரு:—வியாதியொன்று மில்லையக்கா. அவருக்கு வியாதியே இந்தத் தங்கம்மாள்தான். இவளாற்தான் இராமபுரம் காட்டில் வந்து இறந்து போனர்.

பங்:—ஆராவது அடித்துக் கொன்று விட்டார்களா?

அரு:—அல்லாமலென்ன. இவ்வளவு சீக்கிரம் இறப்பதற்கு?

பங்:—அப்படியானல் இது செய்தது யாராயிருக்கலாம்?

அரு:—அதுயாரோஎனக்குத் தெரியவராது. நான் அவர் இறந்து கிடப்பதைக் கண்டேன்.

பங்:—அப்படியாசெய்தி? இதைத் தங்கம்மாளறியவில்லை போலிருக்குது. அறிந்தால் உடனே தானும் உயிர் திறந்து விடுவாள். நீ இதை வேறு யாரிடமும் கூறினையா? இல்லையே.

அரு:—இல்லை பக்கா நான் ஒருவரிடமும் சொல்லவில்லை.

பங்:—இதனை வெளியிடாதே.

அரு:—அதுசரி இனியாகிலும் தங்கம்மாளைக் கூட்டிவைக்க முடியுமா வென்று கேட்க, பங்கஜாட்சி ஏதோ ஆலோசனையின் பேரில் அப்படியானால் பார்க்கிறது. நான் நாளை தங்கம்மாளின் வீடுபோவேன். போய்வந்த பிறகு சொல்கிறேன். நீஅது வரையில் இங்கிருந்தாலும் சரி. அல்லது வீடுபோய் வந்தாலும்சரி. மஞ்சள் வாங்க சமயமாகி விட்டது. நான் போகிறேன். நீவருகிறாயா வென்றதும் அவ்வாறே யாகுக வென்று இருவரும் மஞ்சள் வாங்குகிறவீடு சென்றார்கள். அங்கே அப்போது தான் தங்கம்மாளுக்கும் ஸோமசுந்தரம் முதலியாரவர்கட்கும் நிச்சிததாம்பூல அடியந்திரம் வெகு சிறப்பாய் நடந்தது. நிற்க, விவாகநாள் சமீபிக்கச்சமீபிக்க தங்கம்மாள் குன்றத் துடங்கினாள். பங்கஜாட்சியும் அடிக்கடி தங்கம்மாளைக் கண்டு புத்திமதி போதித்துக் கொண்டு தான் வருகிறாள்.

13-வது அத்தியாயம்

தங்கம்மாளுக்கு விவாஹம் செய்யக்குறிப் பிட்டுள்ள தினம் வருவதற்கு இன்னும் நான்கு தினங்கள் தானிருக்கிறது. ஆனால் தங்கம்மாள் மிக அபாயஸ்திதியினளாய் விவாகதினம் வரையிற்றாம் உயிரை உடலுடன் பொருந்தச்செய்வாளோ? என்ற சந்தேகம் எளிதில் தோற்றுமாறு தேகம் மிகக்குன்றியும் சௌந்தர்யம் குறைந்தும் மகாவிரூப மாயிருக்கிறாள். இனியும் அடிக்கடி பங்கஜாட்சி புத்தி புகட்டியும் பொருந்தவில்லை. சுருங்கச் சொன்னால் அவள் ஊணுறக்கமற்ற சன்னியாசி போல் வசிக்கிறாள். நிற்க,

காலையில் மணி பத்திருக்கலாம். தங்கம்மாள் தனியே இவ்வித கோலத்துடனறையிலிருக்கிறாள். அப்போது அவளது தந்தை சோமனாதமுதலியாரென்பவர் ஏதோ கையிற் கொஞ்சம் நகைநட்டுகளுடன் அவ்வறையிற் பிறவேசித்தது கண்ட தங்கம்மாள் எழுந்து நின்றாள். அவர் என்ன குழந்தே! ரொம்ப

மெலிந்திருக்கிறாய். காரணம் யாது? இந்தா! இந்தநகைகளை அணிந்துக்கோ அம்மா? பெண்பிள்ளைகளைப் பெறுகிறதில் என்னசங்கடங்களிருக்கிறது. எவ்வளவு காசுதான் சிலவாகிறது. சரிதான் பெண் பிறந்தால் இந்தப் பாடுதான் படவேணும். உன்னண்ணனைப் பானுமார்த்தாண்டனால் இம்மாதிரி ஏதாகிலும் துன்பம் நேரிடுகிறதா? அவன் சிந்தனையே எனக்குக் கிடையாது. அவனை நான் கண்டுமாதம் இரண்டுக்கு மேலாகிறது. எங்கு போயிருக்கிறானோ? சென்றவிடம் கைலாயமென்று நினைத்திருக்கிறான் போலிருக்குது. கழுதைப் பயல் வருவான். எங்குபோகப் போகிறான். அஞ்சுரெண்டு தெரியாதவனா? இல்லையே என்று இவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கும் தருவாயில் பங்கஜாட்சியும் அங்குபிரவேசித்தாள். இது கண்ட அவர் அம்மா வா வா சௌக்கியமா என்றார்.

பங்:—ஆம் ஐயா சௌக்கியம்தான்.

அவர்:—கலியாண வேலை யெல்லாம் முறையே நடக்கிறதா?

பங்:—அதுக்கென்ன குறையிருக்குது. சர்க்கார்க்காரியம் ஜாக்கிரதையாகத் தானே நடக்கிறது.

இதுகேட்ட தங்கம்மாள் பதிலொன்றும் பேசாது நிற்பதைக் கண்டு ஸோமனாதமுதலியார் ஏனம்மா இப்படி நிற்கிறாய். இந்த நகையை அணிந்துக்கோ என்றதும்.

தங்கம்மாள்:—அப்பா! அது என்ன. நகையா? எனக்குத் தேவையில்லையே. நானப்படி நகைப்பயித்தியம் பிடித்த வளல்லவே. இனியும் நகைகளணிந் திருந்தால் மிகவும் பந்தோபஸ்தான விடத்திலும் பயமே துக்கமென்பது எத்தகையோருக்கும் நீக்கமே. இரவும் பகலும் இவைகளைக் காப்பதிலேயே கவலை. நாம் ஓரிடம் மறந்து வைத்து விடின் மற்றவரிடம் மனஸ்தாபமில்லாதிருப்பதில்லை. கைவிட்டுத் தவறிவிடின் கவலையொழிவதில்லை. இதனால் நல்லோரிடத்தும் பொல்லாப்பு. நிற்க,பணத்தை ஆரபணமாகச் செய்வதில் திரவியநஷ்டமும் வட்டிநஷ்டமும் உண்டாகின்றனவே. அவசியகாலத்தில் விற்கப்புகின் செய்ததுகை சரியாய் கிட்டாது. எனின் பகுதி விலைக்குக் கேட்பதும் மிகக்கஷ்டமே. இந்நகைகளாற் அனேகரிடத்து அனேக விதமாய் அவநம்பிக்கை யேற்படுமே யன்றி நம்பிக்கை யேற்படுகிற தில்லை. இனியும் நகைகள் தரித்துக்கொள்ளும் பெண்களோடு ஊர்வழி போகின் ஒருவிதத்

திலன்றுபலவிதத்திலும் பலவிடத்திலும் திருடர்பயமேமனதைப் பாதிக்க ஹேது வாகின்றன. இதையறிந்து வீட்டில் வைத்துப் போவோம் எனின் அங்கும் திருடர்பயமில்லையென்று நம்புவதற் கொருவழியுமில்லையே. இன்னும் அனேகமாய் தட்டார் தட்டிப் பறிக்கும் மோசமும், நகை செய்தலால் பொன்னுக்குத் தேய்வும், பலதடவைபழித்து அவையை மாறிமாறிச்செய்தலின் அப்பொன் பித்தளை மாற்றுக்கு வருதலும் வேறுபல கஷ்டங் களிருப்பதும் நம் பிரத்திக்ஷானுபவமன்றோ? இவையனைத்தும் கிரிமேற் தீபம் போல் நன்கு பிரகாசிக்கையில் விளக்கைப் பிடித்து கிணற்றில் விழுவார்போல் கெடுவானேன்? இந்நகைகள் செய்பக்கம்மாளர் வீடுதிரிந்து திரிந்து சிலர் கால்கள் காய்ப்பேறிவிடு கின்றன. அவ்வேலைக்காரர்களோ காணிப் பொன்னில்முந்திரிப் பொன்னுகி லும் மோசம்செய்யா திருப்பதில்லை. அவர்களறியாது அவர்கள் கைகளை களவுசெய்து விடுமே. அத்தகைய கைப்பழக்கமுடைய மகானுபாவர்களன்றோ அவர்கள்? நாம்அரும்பாடு பட்டுத்தேடிய திரவியம் இப்படி கடைக்காரனுற் கொஞ்சம், அக்கினி தேவனுற் கொஞ்சம் அபகரிக்கப் படுகின்றனவே. மிஞ்சிய கொஞ்சப்பொன் னும் நம்முடைய தன்றே. அதற்கும் கள்வர் சமயம் பார்த்துக் கொண்டன்றோ விருக்கின்றுர்கள்.

இன்னும் இப்பாழும் நகைகளை அயலார் அடுத்தடுத்து இரவல் கேட்கும்போது இவைகளில்லாதிருத்தலே மேன்மை யென்று நகைப் பயித்தியரான எம்போலிய நங்கையற்குத் தோன் ருமற் போகாது. இந்நகைப் பைத்தியத்தால் நாம் ஒரு விஷயத்தி லன்று பலரிடத்தும் பலவிஷயத்திலும் மோசம் போகின்றோம். இது நிற்க இரத்தின வர்த்தகர் நம் வளநாட்டில் சிற்சில விடத் தில் செய்யும் மோசமும் இவ்வளவென்று சொல்ல நம்மாலீ யலுமா? அவர்களிற்சிலர் கைகளைத்துணிகளில் மறைத்துக்கொண்டு ஒருவருக்கொருவர் அத்துணி மறைவில் கையிலெழுதிப் பேசிக் கொள்வதே பகிரங்க மோசமெனத் தெரியவில்லையா? அவர்கள் வாயைத்திறந்து பேசினும் அப்பாஷை நாம்பேசும் பாஷையாயிராது. பரிபாஷையாகவேயிருக்கும். இவைபோன்றவையெல்லாம் பெரும் மோசத்தைக் குறிக்கவில்லையா? இது இவ்வுலக சுகானுபவத்தி ற்கு அவ்வளவாய் இன்றியமையாத தென்று தோற்றப்படவில்

லை பே. அப்பா இந்தக்கம்மலில் அழுத்தி யிருக்குமிது என்னகல். நகைகளிற் பதிக்கு மிக்கற்களில்லாவிடின் உலகத்தில் விபரீத சம்பவங் களொன்றும் நேரிட்டு விடுகிற தில்லையே. உடலெங்கும் இரத்ன பரணங்களில்லா விட்டால் உடம்பு வளராதா? காதில்கல்லி ழைத்த கம்மலில்லா விடின் காது கேட்காதா? இந்நகை களிற்பதி ந்துள்ள கௌரவந்தங்கிய இக்கற்களைப் பார்க்கினும் வீடுகட்ட உபயோகித்து வருகின்ற செங்கல், கருங்கல், வெண்கல் முதலிய வைகள் இவ்வுலகிற்கே அதிக உபயோக முள்ளன வென்று காலஞ் சென்ற கனம் வேதநாயகம் பிள்ளை அவர்கள் சொன்னதை யாரு க்கும் மறுக்க முடியாதே. அவர் சொன்னபடி பெண்களறியா மையாற்றும் பொன்னாகிய மண்ணிற்கும் நவரத்தினங் களாகிய கற்களுக்கும் பெரும்பெருமையுண்டாயின. பெண்களுக்கு ஞானோ தயமாயின் பெருமை புள்ளமண் ணும் கல்லும் மதிப்பற்றுப் போவ துடன் இத்தொழிலும் வியாபாரமும் அடியுடன் படுத்துக் கொள் ளுமென்பதிலைய்ப முள்ளதோ? நிற்க,

திருடர்களோ பெண்களின் கைக்காப்பைக் கழற்றமுடியா தெனின் கைகளையே வெட்டிவிடுகிறது முண்டு. காதுளிலும் மூக்கு களிலுமுள்ள நகையை வாங்கமுடியா தெனின் தலையையே வெட் டித் தனியாய்க் கொண்டு போய் பின்பு ஒவ்வொன்றாய் எடுத்துக் கொள்ளுகிறார்கள்.

இனியும் ரெண்டு வருஷங்களுக்கு முன்னே திருநெல்வேலி ஜில்லா நாங்குநேரித்தாலுக்காவில் நாங்கு நேரியிலிருந்து திருக் கரன் குடிக்குப் பிரயாணமாகும் சிறிய ரஸ்தா வொன்றுள்ளது. இஃது நாங்குநேரிக்குச் சற்றே வடகிழக்கிலுள்ள நாங்குநேரி பெரியகுள மென்று கூறுநின்ற வாவிக்கரை யருகிலிருந்து நேரே தெற்காய் மூன்று மைலளவும் சென்று பின்னர் நேரே மேற்காய் மஞ்சக்குறிச்சி மறவர் குடியிருப் பென்னும் நடு அடவியுட் பொரு ந்திய மறஜாதியார் வசிக்கும் அப்பட்டிக் காடுகடந்து நேரேதிருக் கரன்குடி செல்லா நிற்கின்றன. நிற்க,

நாங்குநேரி வாசியாம் குடித்தனத்தார் பெண்ணொருவள் ஓர் தினம் காலை 10 மணி சுமாருக்கு தட்மணாள்னோடு பிணக் குற்று தாய்வீடான திருக்கரன்குடி செல்ல வருமளவில் மஞ்சக் குறிச்சி மறவர் குடியிருப் பென்னும் அப்பட்டியினருகாமையில்

வந்ததும் அவளுக்குச் சற்றே ஐயமுண்டாயிற்று. என் ஐயமுண்டாகாது. சகோதரர்களே! நானும் இந்த ரஸ்தாவழியோர்தினம் பிரயாணமாக இடையாயிற்று. இந்தமஞ்சக் குறிச்சி மறவர் குடியிருப் பென்னு மிடம் சுற்றும் 10. மைலில் ஒரு பெரிய அடவியுள் யிருக்கின்றது. ஒருவன் 10 மைலில் தூரம் ஓடினும் எளுதில் காணத்தக்கது காடே. 10. மைலிலுக்கப்பாலோ இங்கும்மலை. அங்கும் மௌண்டு. எங்கும் மலை யாகவே நிற்கிறது. அப்பப்பா. நான் அவ்வழி பிரயாணமான அன்றே இனிஇவ்வழி செல்வதில்லை யென்று எம்மனதை உண்மை செய்து விட்டேன். ஆனல் அவ்வாலிபப் பெண் ஏன் பயத்தை யடையக் கூடாது? நிற்க இவ்வாறு அந்தப் பெண்மணி அவ்விரஸ்தாவழி அதிவிரைவிற்பிரயாணஞ் செய்யுங்கால் அங்குஒரு வரேனும் குறுக்குமருக்கு செல்வாரில்லை. மணியும் பன்னிரெண்டாயிற்று. பசியும் மேலிட்டுவருத்துகிறது. தாகத்துக்குக் கூட ஒரு துளி ஜலம் கிட்டாத அந்தப்பிரதேசத்தில் இவள்தம் தாகசாந்தி எவ்வாறு பண்ணிக் கொள்ளக்கூடும். ஆனாலும் வெகுவிரைவாய் நடக்கிறாள். இதுகாறும் அவ்வளவு தூரம் நடந்து வழக்கமில்லாத அவளுக்கு கால்நோய் கொஞ்சம், பசியின்தாப மொருபக்கம், தாகவிடாயொருபக்கம், இவ்வாறு இடருற்றுச் செல்லும் அவள் நடு உச்சியிற் சூரியன் பொருந்தும் வேளை நடுஅடவி ரஸ்தா அருகில் மறவர்குலத் தினளாம் மஞ்சக்குறிச்சிப் பொண்ணொருவள் புல்லறுத்து நிற்பதைக் கண்டு ஆகா இங்கொரு பெண்ணைக் கண்டதும் தெய்வானு கூலந்தாமென்றெண்ணி அன்னவளண்டை சென்று, தாகவிடாய் தணித்துக் கொள்ளும் மார்கம் யாதெனவேண்ட அவளிசைத்தபடி சற்றே இருவரும் ஆலாவிக்ஷத் தடியிலிருந்து சிலநேரம் சமாசாராதிகள் பேசிக் கொண்டிருக்குந் தருவாயிற் தருணம்நோக்கியிருந்த அம் மறவர்குலத்து மங்கைத் தன்கை யிலுண்டாயிருந்த புற்செருக்கியால் அக்குலஸ்திரீயின் கழுத்தில் ஒரேவெட்டாய் வெட்டித்துண்டித்து இருதுண்டு களையும் தம்புற்கூடையில் மறைத்து வருங்கால் பெண்டிழந்த பெத்தனாகிய அந்நாங்குநேரிவாசி தனிமையிற்சென்ற அம்மங்கையைத் தேடிவருங்கால் ரஸ்தாவருகிற் செல்லும் இவளைவினவ அவள் அவ்வித மொருபெண் இந்நேரம் திருக்கரன்குடிசென்றிருப் பாளென்று கூற ஐயமுற்ற இவன் தம்கூடை

யில் இரத்தம் புரண்டு காணப்படுங் காரணம் யாதென வினவ அவள் அங்கொரு ஆடு இரைதேட வந்ததென வென்றும் அதனைத் தாமறுத்துக் கூடையில் மறைத்திருப் பதாயும் மொழிய ஆனால் அதனை நோக்குகிறே னென்று தலையிலிருக்கும் கூடையைத் தட்டி நோக்கினதும் தம்மருமைப் பெண் தென்றிசை சேர்ந்த மிருதி ஜடலமாயிருப்பதைக் கண்டேக்கமுற்றவனுப் கவண்மெண்டாருக் குத் தெரிவித்தபின் அக்கொலைபாதகி தண்டனை அடைந்ததாகவும் பல பத்திரிகை பகர்ந்துள்ளதைத் தாங்கள் கண்ணுற்றிருக்கக் கூடுமெனின் யானிதை நேரில் கண்டதுண்டு. ஆதலின் இன்று கூடியும் இப்பொல்லா மறவர் குடியிருப்பு வழியாருக்கும் செல்லப் பயமே. ஒருவனாக வந்தாலுயிர்க் கபாயமே. நிற்க,

இப்பெண் இவ்வித பரிதாபமாய் வெட்டுண்டதற்கு காதி லும் கழுத்திலும் மூக்கிலு ம் அணிந்திருந்த நகைகளே காரண மாயிருந்ததன்றி வேறில்லை. நகை யென்னுங் காரணத்தால் பெண்களே தங்களைப் போன்ற பெண்களைச் சற்றும் இரக்கமின்றி கொலை செய்வதாயிருந்தால் திருடராகிய ஆடவர்கள் நகைக்காகப் பண்ணு மக்கிரமத்தைக் கூற யான் சக்தியுள்ளவளல்லேன் மரத்திலிருக்குங் காய்கனிகளை கொம்புங் கொத்துடன் கொய்வது போன்று ஸ்திரீகளிருகாதிலு மணிந்திருக்குங் நகைகளை அறுத் துக்கொண்டோடுந் திருடர்களெத்தனை பேர்? மனைவியின் காதை நகையுடனறுப்பதைக் கண்ட தைர்யசாலிப் புருஷனொருவன் உடனே அத்திருடனைச் சூரியால் குத்திமடியச் செய்தானாம். அத்திருடன் அடுத்தநாளளவும் அதேவிடத்தில் அறுத்த காதை நகையோடு கைபிற் பிடித்தவண்ணமாய் மாண்டு கிடந்ததைப் பலரும் பார்த்து அதிசயித்தனராம். இவ்விதம் நகைப்பத்தியப் பெண்களை திருடர் செய்யும் ஹிம்சைக்கு ஆயிரந் திருஷ்டாந் தங்களேன்? இவ்விஷயம் சகஜமாய் அனைவருமறிந்ததே. பரி சுத்தமான ஆலயங்களிற் கூட ஸதா திருடர் வாஸமும் கத்திரிக் கோல் பிரயோகங்களும் இருக்கும் போது வெளியில் திருடர் பயத்தையும் அவர்கள் செய்யும் விசித்திர வேலைகளையும் சொல்ல வேண்டுவதில்லையே? எவர் என்ன புத்தி சொல்லி அடித்துக் கொள்ளினும் இப்பயித்தியம் பெண்கட்கும் பிறருக்கும் எளிதில் நீங்கி விடுமென எமக்குத் புலப்படவில்லை. இனிபும் நாம

ரூபமும் விருப்பும் வெறுப்பும் ஒன்றுமில்லாத கடவுளுக்கே நாமரூபத்தினையும் ஆடையாபரண வலங்கிருதத் தோற்றத்தினை யும் உண்டு பண்ணி அழகு பார்த்தானங் திக்குஞ் ஞான வான்கள் தாமும் தம் பெண்களும் அலங்கிருதப் பிரியாய் இல் லாமலிருப்பது மிகக் கஷ்டமே. ஆனாலவரவர்கட்கு ஞானமுண் டாவதற் கேற்றபடி இவ்வாசை ஒருவாறு தணிந்து நாம்முற்படு வோ மென்பதற் கையமில்லை. எனின் நான் கூறுமிதைக் கேட்ட சில சகோதரிகள் என்மீது சீற்றங்கொள்ளினுங் கொள்ளலாம். ஒருவர் கோபத்திற்குப் பயந்து என் சகோதரிகட்கு நன்மை பய கும் விஷயத்தை சொல்லா திருந்துவிட்டால் நியாயமாய் தோற்று மையின் இஃதனைத்துங் கூறினும் இந்நகைபயித்திய விசாரமே ஒருகாலத்தில் எம் போலியருக்கு மகாவெறுப்பைத்தரு மென் பதை நானறிவேன். இனியும் விவாககாலங்களிற் மாத்திரமே ஸ்திரீபுருஷர்கள் ஆபரணங்களையும் நல்ல வஸ்திரங்களையும் அணிந்து கொள்ளலாமே யன்றி மற்றப்படி உற்சவ காலத்தும் தேவாலயங் கட்கு ப்போகும் போதும் ரெயில் வண்டிப் பிரயாணத் தும் யாதொரு விதநகைகளும் அணியவே கூடாதென்பது எமது தோற்றம். இனியும் குழந்தைகட்கு கலியாணத்தில் கூட யா தொன்றும் போடக்கூடாது.

அப்பா இந்நகையால் விளையும் கேடுகள் இனியும் பலவுண்டு. ஆதலின் அவையனைத்தும் விரிவஞ்சி விடுத்தேன். எனின் இந் நகைகள் எமக்குத் தேவையில்லை. அம்மைக்குத் தேவையானால் அணிபச் செய்யலாமென்றாள்.

அவர்:—பங்கஜம்! இனி எனக்கென்ன குறை? குழந்தைக்கு பூர்வக்கியான முண்டாயிற்று. அந்த மட்டிலும் நல்லவள்தான்.

பங்:—ஆம் ஐயா என்னவாயினும் அவள் படித்தவளல் லவா? அக்கல்வியின் பயன் கிஞ்சித்தேனு மில்லாது போகுமா? படித்தவளுக்கு லட்சணம் இதுதான்.

அவர்:—அதென்ன பங்கஜம் அப்படிச் சொன்னாய். எத் தனையோ படித்த பெண்களிருந்தாலும் அவர்கட்கு இவ்விதம் நகையில் வெறுப்புண்டாயினதைக் காணோமே? ஆனால் இவள் கூறுவது வேதாந்தமாயன்றோ முடிகிறது?

பங்:—அப்படியல்ல ஐயா? அவள் கூறுவது சரிதான். ஸ்திரீகள் கலியாண காலத்தும் வீட்டிலிருக்கும் போதுந்தான்

நகையை யெல்லாம் அணியவேணும். எக்காலத்திலும் அணிதல் பொருந்தாது என்று தானேசொன்னாள்.

ஸோமனு:—ஆம். அதுவும் நியாயந் தான் அப்படியானல் ஹே தங்கம்! இந்த நகையை அணிந்துக்கோ. இனியும் அட்டியலும், மூக்கு வத்தியும், வைரப்புல்லாக்கும், நாளை கொண்டு வருவான். உனக்கிப்போது நகை செய்யவேண்டி ரூபாய் 2000 ஒரு வட்டிக்கி வாங்கியாயிற்று என்றார்.

தங்:—அப்பா! இப்போது எதற்காக வட்டிக்கி வாங்கவேண்டும். நான் தங்களிடம் இதையிட்டு உபத்திரவம்செய்தேனு?

ஸோமனு:—அதில்லை தங்கம். இவ்வளவு நாளும் வரட்டுமென்றிருந்தேன். இனிஅப்படிக்கிருக்க வழியில்லையே.

தங்:—ஏன் இனி அப்படியிருக்க வழியில்லை என்கிறீர்கள்.?

ஸோமனு:—ஆமாம். இதுவரை நம்மள் வீட்டில் ஒருவிதமாய் நடந்தது. விவாஹமானல் அப்படிக் கிருக்க மாப்பிள்ளை விட்டார் சம்மதிபார்களா?

தங்:—ஆம் அப்பா. அது கலியாணமாகும் போதன்றோ கவனித்தல் வேண்டும். இப்போதே அதையிட்டுக் கவனிப்பானேன் இந்நகைகளால் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 20க்கு மேல் வட்டியில் நஷ்டமாகிறதே?

ஸோமனு:—ஆம் தங்கம் நீ சொல்வது போல் ரூபாய் 20. நஷ்டந்தான், ஆனலும் அதைப் பார்த்தால் கலியாண காலத்தில் திண்டாட்டந்தானே.

தங்:—ஆனல் அப்பா அது கலியாணமாகும் போதுதானே திண்டாட்டமாகும்.

ஸோமனு:—தங்கம். நீ என்ன சொல்லுகிறாய்? கலியாணத்துக் கினியும் என்ன. சாய்ச்ச நாளாவிருக்கிறது. இன்றுகளித்து இன்னும் மூன்றுநாள்க்கள் தானே இருக்கிறது.

தங்:—அப்படியா அப்பா. எனக்குக் கலியாணமும் மற்றுமிப்போது தேவை இல்லையே.

ஸோமனு:—குழந்தாய்! நீ ஏனம்மா அடிக்கடி இப்படிச் சொல்லுகிறாய்? இது நல்லதன்று. இனிமேல் இப்படி சொல்லாதே.

தங்:—ஆம் அப்பா. ஒருவருக்குக் கல்யாணத்திலாசை யிருக்கும். சிலருக்கிராது. இதெல்லாம் காரணமாகுமா? எனக்கு இப்போது கலியாணமும் மற்றும் வேண்டாம். கொஞ்சம் கழித்து பார்த்துக் கொள்ளுகிறது. அப்பா விடம் நான் கலியாணம் கழிக்க வேணுமென்று எப்போதாயினும் அவசியப் பட்டதுண்டா? தாமிவ்வளவு அவதிப்படுவானேன்.

ஸோமனு:—(குஞ்சிரிப்போடு) அப்படியாநினைத்துக் கொண் டாய் தங்கம்? நன்றாயிருக்கிறது. பெண்களை வெகுகாலம் கலியா ணம் செய்யாமல் வைத்திருக்கலாமா? அது பெரும் கெடுதியல் லவா? இனியும் இவ்வாறிருப்பது நம்கோத்திரத்திற் கடுத்ததா? எல்லாவிஷயமும் உனக்குத் தெரிந்தாப்போல் பேசிக்கொள்ளாதே. இப்படிப் பேசினால் உன்மீதுள்ள பக்ஷம் எமக்குக் கொஞ்சங் கொஞ்சமாய் விட்டுப்போகும்

தங்:—இதென்ன விந்தை? அப்பா கூறுவது அவ்வளவாய்ப் பொருந்து மென்று தோற்றவில்லையே.

ஸோமனு:—குழந்தாய்! நீ ஏன் விவாஹம் வேண்டாமென் றேன்னஞ் செய்கிறாய்?

தங்:—ஆம் அப்பா நானென்ன செய்யட்டும்? அது விஷயம் எனக்குக் கொஞ்சமும் பிரியமில்லை. அதனால் தான்.

ஸோமனு:—இல்லை தங்கம். வேறொரு காரணமுமல்ல. உன் னைப் பள்ளிக்கனுப்பி பயிற்றினது தான் பிசகு. உன்னைப் படிப்பி யாமலிருந்தால் நீ இவ்விதம் கூறுவையா? என்று கோபக் குறியுடன் வசனித்ததைக்கண்ட தங்கம்மாள் தாமும் கடுகடுத்து அப்பா தாமெதற்கிப்போது வியசனப்படல் வேண்டும். எனக் குக் கலியாணம் வேண்டாமென்றால் தமக்குச் சம்மதமில்லை போலி ருக்கிறது. என்றெனினும் ஒருநாளிறப்பது திண்ணம், அது எப் போவென்றிருக்கிறது. அதனால் கலியாணம் நெருங்குவது நல்லது தான். நாமெடுத்த பயனை சீக்கிற மனுபவித்து துலைக்கக் கூடு மன்றோ? ஆனால் அப்பா சொல்லுகிற படி சீக்கிரம் கலியாணம் நேரிடும் பக்ஷத்தில், நமக்கும் இன்று முதல் மூன்று நாளவுந் தானே இவிடமிருப்பென்று தோன்றுகிறதென்று பலவாறாய் மனதிலொன்றெண்ணி வெளியிலொன்று மொழிந்ததைக் கேட்ட ஸோமனுத முதலியார் மகளை நோக்கி ஆம் சரிதான் உனக்

கின்னும் மூன்றுநாள் வரையில்தானே நம்மள் வீட்டிலிருக்க அவகாசமுள்ளது என்று சொல்லி தங்கம் நகையை எடுத்துக் காதிலணி யென்றது கேட்ட அவள் அந்நகை யனைத்தையும் ஒன்றுப்கட்டி ஆம் அப்பா சரிதான் இன்று அணிந்து கொள்ள வேண்டாம். நாளை மற்றதினம் அணிந்து கொள்ளுகிற தென்றது கேட்ட அவர் எப்படி வேண்டுமோ அப்படிச் செய்து கொள்ளு. குழந்தாய் உன்னிஷ்டம் நடக்கட்டும். நடந்தநாள் குறைவில்லை என்று சொல்லி பங்கஜத்தை நோக்கி ஆம் அக்கா ளுந் தங்கையு மிருந்து கொள்ளுங்கள். எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கிறது என்று சொல்லி அங்கிருந்து கிளம்பினதும் தங்கம்மாள் அந்நகைக்கட்டை பந்தோபஸ்தாய் அலுமாறியிலிட்டுப் பூட்டித்தாமும் பங்கஜாட்சியும் தனிமையிலிருந்து பேசிக்கொண்ட சமாசாரத்தின் முடிவாய் நஞ்சுண்டிறப்பதாய்க் கூறின தங்கம்மாளின் பரிதாபங்கண்டு ஐய்யுற்ற அப்பங்கஜாட்சி எவ்வாறும் நாளைச் செல்வகேசவ முதலியாரைக் கண்டு சமாசார மறிந்து வருகிறேன் நீ அதுவரைக் கேதியாதே என்று சொல்லி அங்கிருந்து பங்கஜ மெழுந்ததும் மணி மூன்றாயிற்று.

14-வது அத்தியாயம்

இவ்வாறுகூறி அங்கிருந்து சென்ற பங்கஜாட்சி நேரே தம் வீடுசென்றதும் மாலை மணி ஐந்தாயிற்று. இங்கே அவளது வரவை எதிர் நோக்கி யிருந்த அருணாசலம் என்பவன் அவளைக் கண்டதும் ஆனந்த சாகரத்தில் ஆழ்ந்தவனாகி அக்கா நான் வந்து எந்நேரமாயிற்று. இந்நேரம்வரை நீ எங்கு சென்றிருந்தாய்? தங்கம்மாளின் செய்தியாதேனும் விசாரித்தையா? என்று கேட்டான்.

பங்கஜாட்சி:—நீ இங்கு வந்து வெகு நேரமாயிற்றோ?

அரு:—ஆம். நான் எப்பவோ வந்திருக்கிறேன். வெகுநேரமாயிற்றே! அக்கா தங்கம்மாள் காரியம் எப்படி? உனது ஆலோசனை என்ன? விவாகத்துக்கும் நாள் சமீபித்துவிட்டதே இனியுந் தூங்கிவிட்டால் காரியம் மிஞ்சிவிடுமே!

பங்:—அருணாசலம், செல்வகேசவ முதலியாரிறந்தாரென்பதுண்மையா? சங்கதி உனக்கெப்படித் தெரியவந்தது?

அரு:—என்ன! அக்கா! உன்னிடமும் பொய்யா. உண்மையில் நான் கண்டேன். அவரிறந்து ஒரு மாதத்துக்கு மேலாகிறதே. இனியும் தங்கம்மாளின் அண்ணா கூடியும் இங்கில்லை. அவனை இதற்குள் காளி தின்றிருப்பாள்.

பங்:—என்ன! அருணாசலம் பானுமார்த்தாண்டனை காளி புசிக்கும்படி அவனென்ன செய்தான்?

அரு:— அவனை ஓர் காளி கோயிலில் அடைத்து விட்டுத் தானே வந்தார்கள்.

பங்:—அப்படி அடைத்து வந்தது யார்?

அரு:—எல்லாம் நம்மாள் தான். அதையறிவானேன்.

பங்:—அப்படியானால்! நம்மாள் யார் அப்படிச் செய்யக் கூடும். உங்களத் தம்பிரா யிருக்கலாமா?

அரு:—ஆம், அவரைச் சேர்ந்தவர்கள் தாம்:

பங்:—படுபாவிகள்! அப்படியும் செய்து விட்டார்களோ? இந்தப்பாவிகள் என்ன கதியிலிருக்கப் போகிறார்களோ? அவர்கள் பேச்சைப் பேசாதே. இன்று வாய்க்கரிசி கிட்டாது. நீசர்கள் செய்வதெல்லாம். நீசத்தனந்தானே.

அரு:—அவர்கள் எப்படி வேணும் செய்கிறார்கள். நாமறிய வேண்டுவதென்ன அக்கா. நாம் நமது காரியத்தில் கண்ணொழிவாயிருக்கலாமா?

பங்:—அருணாசலம் நீ சொல்வது சரிதான். ஆனால் செல்வகேசவமுதலியார் இறந்த விபரம் இது வரையில் தங்கம்மாளறிய வில்லை. அறிந்திருந்தால் அப்போதே இறந்திருப்பாள். இனியும் உங்களத்தானுக்கு வாழ்க்கைப் படவும் பிறதொருவருக்குக் கழுத்துக் கொடுக்கவும் எம்மட்டும். அவள் சம்மதி யுள்ளவளாகக் காணவில்லை. ஆதலின் அவள் எப்படியும் இறப்பவள் போல் தான் தோற்றுகிறது. எனின் நான் நாளை எவ்விதமும் செல்வகேசவ முதலியாரைக் கூட்டி வருவதாய் சொல்லி வந்தேன். எவ்விதம் இறந்து போனவரைக் கூட்டிப் போகமுடியும்?

அரு:—அப்படியா? அங்ஙன மாயின் மிகநன்றாயிற்றே.

பங்:—என்னடா நன்றாயிற்றே?

அரு:—ஒரு உபாயமிருக்குது அக்கா. அப்படிச்செய்யலாம்.

பங்:—அதென்ன உபாயம் சொல் கேழ்க்கிறேன்.

அரு:—வேறொன்று மில்லை. நீ நாளை இரவு போய் செல்வ கேசவனைக் கண்டு சமாசாரதிகள் பேசினதாயும். அவன் வந்திருப்பதாயும் சொல்லி வெளியில் கூட்டி வந்து விட்டால் நான் இரவு தானே இங்கிருந்து கூட்டிப் போய் விடுகிறேன். பின்னர் விடிந்தால் விடிந்தபடி பார்க்கிறது.

பங்:—இது கேட்டு சொற்ப நேர ஆலோசனையால் ஆம் சரிதான். அவளெப்படியுமிறப்பவளே. ஆனால் நீ ஒரு காரியம் பண்ணு. தங்கம் குதிரைச் சவாரியில் பிரியமுள்ளவள். ஆதலின் நாளை இரவு இரண்டு குதிரையோடு இங்குவா? நான் மெள்ளக் கூட்டி உன்னிடம் ஒப்பி விக்கிறேன். இரவளவும் ஒன்றும் பேசாது நீ கூட்டிப் போய்விடு.

அரு:—ஆம் அது நல்ல யுக்திதான். நான் அப்படிச் செய்கிறேன். நம்மள் குதிரை இரண்டையும் நாளை இரவு அவிழ்த்து வந்து விடுகிறேன் என்று சொல்லி அங்கிருந்து சென்றான். பங்கஜாட்சியும் போஜன மருந்தி களைப்புத் தெளிந்து மறு நாளிரவு எப்போது வரு மென்ற நாட்டமாகவே இருக்கையிற் மறு நாள் சூரியன் மேற்குக்கடலுள் புகுந்து நாழிகை பத்து பன்னிரெண்டாயிற்று. அச்சமயம் அருணாசலமும் தாம் கூறியவாறு சீக்கிர கதியிற் செல்லும் புரவிகளிரண்டுடன் அவ்விடம் வந்தான்.

இரவு மணி பத்துக்கு மேலாயிற்று. எவ்வாறாயினும் உங்நண்பன் செல்வகேசவமுதலியாரைக் கண்டு வர்த்தமானம் அறிந்து வருகிறேனென்ற பங்கஜாட்சியின் வரவை எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறாள் நமது தங்கம். அதுகாலத்து "தரித்திரனுக்குத்தனப்பு தைபல் கிட்டினாப்போல்" பங்கஜாட்சி அங்கு வந்ததைக் கண்டானந்தமுற்றவளாய் அக்கா நமது காரியம் க்ஷேமமடையும் போலிருக்கிறதே? நல்லவேளை நினைத்த சமயம் நீயும் வந்துவிட்டாய்? என்ன போனசெய்தி? எவ்வாறாயிற்று. பழமா? காயா?

பங்:—நீ அவ்வளவு யோகமில்லாதவளா? பழந்தான்.

தங்:—அப்படியா என்னவாயிற்று?

பங்:—தங்கம், நான் உனக்கு வேண்டி நேற்றே அங்கு போயிருந்து இன்று இப்போது தான் வருகிறேன். நான் போயிருந்ததும் இங்கு வந்ததும் ஆரும் அறியார்கள். ஆனால் செல்வகேசவ முதலியாரையும் அங்கு உன்னண்ணு பானுமாத்தாண்ட முதலியாரையும் கண்டு யாவற்றுச் செய்தியையும் தெரியப் பண்ணினேன். அதற்கு அவர்கள் சொன்னதாவது தங்கம் கூறுவது சரிதானென்றும் அதையறிந்து அவ்விருவரும் சுந்தரபுரிவந்தால் எப்படியும் என் கணவராலிறப்பது திண்ணம் யென்றும் சொன்ஞர்கள். முடிவிற் செல்வகேசவமுதலியாரைக் கூட்டிவந்திருக்கிறேன். அவருடன் இப்போது தானே கூட்டி அனுப்பும்படி உன்னண்ணு எம்மிடம் பிரத்தியேகமாய் சொல்லி யனுப்பியிருக்கிரூர். இனியும் இதையிட்டு தங்கம்மாள் சந்தேகிக்காமல்உடன் புறப்பட்டு வரட்டு மென்றும் எவ்விதமாஞலும் செல்வக்கேசவ முதலியார் கூட வருதற்கு கிஞ்சித்தும் அஞ்ச வேண்டா மென்றும் இன்னும் பலவாறு கூறினூர். அதெல்லாம் மிருக்கட்டும். நீ முன்னர் முதலே செல்வகேசவ முதலியாருக்கு மனேவியாயிருக்கும் பக்ஷத்தில் சந்தேகம் ஜனிக்க ஏது வில்லே. இனியும் தங்கம் "வரசுல்கம் என்னும் இந்த விஷயத்தைக் குறித்து அனேகம் வயோவிருத்தர்களும், ஞான விருத்தர்களும் ஏற்கனவே பேசியிருப்பதை நீ கேட்டிருந்தாலும் நானும் அதைகொஞ்சம் சொல்லுகிறேன் கேள். போகவேண்டுமாஞலும் கொஞ்சம் நேரமாக வேண்டாமா?

தங்:—ஆம். அக்கா அவாள் எங்கு நிற்கிறூர்கள்.

பங்:—தங்கம். அவர் நதிக்கரை மாமரத்தடியிலிருக்கிறூர். கொஞ்ச நேரம் சென்று நிலாவடைந்த பிற்பாடு கூட்டிவந்தால் போது மென்று சொன்ஞர்.

தங்:—அப்படியா? ஆனல் "வரசுல்கம்" என்னும் விஷயத்தைச் சொல்லு. அது வரைக் கொஞ்ச நேரம் போகாதா?

பங்:—ஆம் தங்கம் அப்படித்தான் சொல்லுகிறேன் கவனமாய் கிரகித்துக்கோ.

வாசல்க மென்றால் விவாஹ மென்பது பொதுக் கருத்து. "விவாஹம்" என்னும் கிரியை நம்மவள் நடக்கும் மற்ற விதமான காரியங்களைப் போலவே ஒரு சம்ஸ்காரமாக நமது பெரியோர்க ளால் நியமிக்கப் பட்டிருக்கிறது. மேனாட்டில் காணுவது போல ஆசாரமொருபுறமும் மதமொருபுறமுமாகப் பிரிந்து நடப்பதாகிய சம்பிரதாயம் நமது முன்னோர்களுக்குத் தெரியவே தெரியாது. மேனாட்டிலிப்போது கலியாணம் செய்து கொள்ளுபவருக்கிஷ்ட மிருந்தால் வேறு சடங்குகளொன்றுந் தேவையில்லாமல் இல்லறம் நடத்தலாம். இதனாலந்தத் தம்பதிகளுக்கொரு குறைவுமில்லை. நம்மூரிலுள்ளவருக்கோ இது தெரியவே தெரியாது. நமக்குள் இப் படி யொருவழக்கம் இப்போதில்லாமற் போனதை இக்காலத்திய நாகரீகமுற்றிய சிலர் குறைவாகக் கூறலாம். நமது பூர்விகருக்கு இவ்வளவு மட்டில் நாகரீகமில்லாமற் போனதால் சம்ஸ்காரத்து டன் நின்று விட்டார்களென்று அவர் அபிப்பிராயப் படினும் பட லாம் அவை எப்படி யாயினுஞ் சரியே. பழய நீதிகள் ஏற்படுத்தி யிருக்கும் ஆசாரகாண்டத்தைக் கவனமாய்ப் படிப்பவருக்கு அதன் லட்சிய மின்னதென்று சுலபமாய் விளங்கும். அதாவது மனுஷ்யனுக்கு இந்தப் பிறப்பில் நடக்க வேண்டிய சகல காரியங் களும் இம்மையை மட்டுமே உத்தேசித்து நடப்பவை யல்ல வென் றும், மறுபிறப்பு அல்லது வேறு பிறப்புகளில் நமக்கு நற்பயன் உண் டாக வேண்டியதையே லட்சியம் கொண்டன வென்றும் அறியவ ரும். ஆத்துமா நித்தியன். அவனுக்குக் கர்மபந்தமுண்டு. அதை யனுசரித்துப் பல ஜன்மங்களேற்படுகின்றன. ஆகவே நடந்ததும் நடக்கப் போவதுமாகிய சம்சாரபாந்தவ்யங்களை ஆபேக்ஷித்து. இந் தத் தசையில் நடப்பது அணுமாத்திரங்கூடக்காணாது. இனியும்,

"தொல்லை நம்பிறவியெண்ணிற் றொடுகடன் மணலுமாற்றா
வெல்லைபவவற்றுளெல்லா மேதிலம் பிறந்து நீங்கிச்
செல்லுமக்கதிகடன்னுட் சேரலாஞ் சேர்ந்துநின்ற
வில்லினுனின்று நானேச் சுற்றமே யிறங்கல் வேண்டா"

(ஜீவகசிந்தாமணி)

என்ற படி இல்வாழ்கை கேவலஞ் சுருக்கமானதால் அதையே மோகமாகப் பாவியாமற் இவ்விரண்டு நாள் வாழ்க்

கையை நீர்மேற்குமிழியெனக் கொண்டு இனி வரும் ஜன்மங்களில் நமக்கு நற்பதவி கிட்டும் வண்ணம் ஆசாரவிவகாரங்களை ஏற்படுத்தினார்கள். ஆதலின் நமது ஸனாதன தருமங்களெல்லாம் இந்தக் கோட்பாடுகளை யனுசரித்து ஏற்பட்டவை. இந்த ரகசியமறியாதவருக்கு இவையெல்லாம் யாரோ சில அரைப்பயித்தியங்கள் நியமித்த முட்டாள் சம்பிரதாயங்களென்றுதான் காணும். அன்றி மூக்குறயன் கதையாகத் தாமுண்டு உடுத்துச் சுகப்படவில்லையென்ற நியாயத்தினால் பிறரும் அவ்வாறே பட்டினி கிடந்தும் லௌகிக சுகங்குறைந்தும் கிடக்கட்டுமென்று செய்த ஏற்பாடுகளாகவுங் காணலாம் என்றாலும் நாம் தீரவிசாரித்தால் நம்முடைய நித்திய நைமத்திகக் கிரியைகளெல்லாமொன்று விடாமல் நமக்கு ஏற்பட்ட சம்ஸ்காரங்களே தவிர வேறன்று. ஒவ்வொரு சம்ஸ்காரமும் கிரமப்படி நிறைவேறினால் அவ்வளவிற்குத் தேகியாகிய ஆத்துமா சுத்தனாகி அறிவு முதிர்ந்து சாசுவதசுகத்தை யடையவேண்டிச் செய்யும் யாத்திரையில் ஒரு கடிகளவு சாதித்தவனாகிறான். ஆகவே விவாகமென்பது முக்கிய சம்ஸ்காரங்களி லொன்றாம்.

விவாகமென்பதற்கு மற்றொரு லட்சியம் விசேஷமாம். மேற் சொல்லிய படி நமது ரிஷிகளுக்கு மரணமென்பது மேனாட்டு விவேகிகள் சிலருக்குக் கண்டது போல ஸர்வகர்மத்தியாக மகாக் காணவில்லை. (அதாவது கிருஸ்தவர் முதலிய சிலருக்கு இந்த மானிடப்பிறவி பொருவனுக்கு நேரிடு முன்கதியென்ன? இது நீங்கிய பின்கதி யென்ன? என்ற விசாரணை விசேஷமாயில்லை யென்னலாம். ஏனெனில் அவர்கட்கு நித்திய மோட்சம் நித்திய நரகமாகிய இரண்டும் முக்கியக் கொள்கையாம்.) மரணமடைவதென்றால் இவ்வுலகத்தை யொழித்து மற்றொருலகிற்குப் போவதாக எண்ணமே தவிர வேறன்று. அவ்வுலகத்தில் போய் தான் செய்த புண்ணிய பாவங்களுக்குத் தக்க பலனை யனுபவித்து, தன் கணக்கைச் சரியாயொப்பு வித்துத் தீரவேண்டுமென்பது அவர்கள் துணிபு. ஆதலால் அவனுடைய சந்ததியார் அவனுக்குக் கடனாளிகளாகிறார்கள். இந்தக் கடனை யவர்கள் சிராத்தம் முதலிய பித்ருகர்மங்கள் மூலமாக அவனுக்கு வாபீஸ் செய்ய வேண்டும். தவிர விவாகம் செய்து கொண்டு கிரகஸ்த மார்க்கமாய்ச் சந்ததி இடையறாமலிருப்பதும் கருமங்கள் அந்த வம்சத்தில் இடையறாமல் நடப்

பதும் இவர்கட்கேற்பட்ட மற்றொரு தருமம். ஆதலின் "கலியாண மென்பது" ஓர் பிதுர்க்கடன். அதற்கு முக்கிய லட்சியம் "தரும் ப்ரஜாவிருத்தி" ஆதலால் மகாபாரதத்தில் ஜாத்காருவின் கதையில் பிதுர்க்கள் சிரமப்படுவதாகவும், அவர்கள் வேண்டு கோளுக்கி சைந்து ஜரத்காரு மஹரிஷி விவாகம் செய்து கொண்டதாகவும் நிரூபித்துள்ளன. பிதுர்க்களெல்லோரும் மரக்கிளையிற்றங்கி தலை கீழாகத்தொங்கிக் கொண்டிருப்பதாகவும், அந்த மரம் ஓர் பெரிய பள்ளத்தினருகேயுள்ள தென்றும், அதன் வேர்களைக் காலனென்னும் எலி கடித்து வருவதாகவும் கற்பனை. இனியும் மேனாட்டு முனிவராகிய ஸ்பென்ஸருடைய கோட்பாட்டை யனுசரிப்பவர் இது எங்குங் காணுமிலட்சணமென்றும் ஒவ்வொரு ஜீவவர்க்கத்தும் சந்ததி இடையறாது வரவேண்டு மென்றும் ஆக்கிரகம் சுவபாவமாக நிலைத்திருப்ப தென்றும் சொல்லுவார். இனியும் விவாக மென்பதை ஓர் கருமமென்றுஞ் சொல்லுவார். ஆதலின் அக்கருமமும் வரவர "பழயனகழிதலும் புதியன புகுதலும் வழுவலகாலவகையினானே" என்னும் சூத்திரப்படி நாளடவில் நின்று வரத் தலைகாட்டிற்று. நிற்க, இதனுண்மை இன்னதென்பதை இப்போதுனக்கு விளக்கினேன். தங்கம்! நீ இதை நன்கு கேட்டிருப்பா யென்றெண்ணுகிறேன்.

தங்கம்:— ஆம். அக்கா! நான் நன்குணர்ந்தேன். ஆனாலும் கன்னிகை எட்டாவது வயதில் சாஸ்திரப் பிரகாரம் விவாகத்துக்குத் தகுதியை அடைகிறாள். ஆயினும் தற்போது கன்னிகைகள் இரண்டாவது வயதுமுதல் பூப்பது பரியந்தம் விவாகம் செய்யப்படுகிறாள். அதிலும் பிராமணக்கன்னிகைகள் விவாகமாகாமல் ரஜஸ்வலைபாய் விட்டால் அவள் சாஸ்திரப் பிரகாரம் ஜாதிப் பிரஷ்டத்துவத்தை அடைகிறாள். நிற்க, விவாகமான கன்னிகை ரஜஸ்வலையாகும் பர்யந்தம் தாய்வீட்டில் தாமிருக்க வேண்டு மென்பது கட்டுப்பாடன்று. இனி கன்னிகைக்குப் புருஷனைச் சம்பாதிக்கும் பாத்தியம் முதலில் தந்தை, சகோதரர், தந்தையினுடைய சகோதரர்; அல்லது தாயினுடைய சகோத்ரர்; தாய்; இவ்வாறு வரிசைக்கிரமமாக விருக்கின்றது. நிற்க,

கன்னிகைக்கு எட்டு வயது முதல் பின் மூன்று வயதளவும் முற்கூறியவர்கள் புருஷனைச் சம்பாதியாதிருப்பாராயின் அந்தக்

கன்னிகை தானே ஒரு புருஷரை நியமித்துக் கொள்ளுதல்
பொருந்துமென "வைத்கியனாததீக்ஷிதீயம் பிரகஸ்பதிவாக்கியங்
கூறுகின்றன." அவ்விதமெனின் எமக்கிதுவரையில் வயது பதினா
றாகியும் எமது பெற்றோர் இவ்விஷயத்துக் கண்ணொழிவாயிருந்த
லால் அது காரியம் சம்பந்தமான அதிகாரம் நமக்குச் சித்தமா
யிற்று. இனியும் விவாகம் எட்டுவகை. பிரம்மம்; தெய்வம்; ஆரி
ஷம்; பிராஜாபத்தியம்; இந்நான்கும் பிராமணருக் கெடுத்தவைகள்.
இவைகளுக்கு லாப உத்தேசியம் கிட்டாது. காந்தர்வம்; இராக்ஷ
ஸம்; இவ்விரண்டும் க்ஷத்திரியருக் குரித்தானவைகள். இவற்றுள்
காந்தர்வம் பரஸ்பர இச்சையாலுண்டாவது. இராக்ஷஸம் ஜெயத்
தாலுண்டாவது வைசியரும் சூத்திரரும் நன்கு அனுஷ்டிக்கத்தக்
கது ஆசுரம். அது திரவ்ய மூலியமாய் கன்னிகையைப் பெற்றோர்
சம்மதப்பிரகாரம் கலியாணம் செய்ய வேண்டியதாக விருக்கிறது.
கன்னிகையை மோசத்தில் விவாகம் செய்யப்படுவது தான் பைசாச
மென்னப்படும். அது எவ்வருணத்தாருக்கும் நிஷேதிக்கப்பட்டுள்
ளதே. நிற்க, அந்தந்த வருணத்தாருக்கு உரித்தான விவாக மிருந்
தாலும், அவ்வுரித்தான விவாகத்தைத்தான் செய்ய வேண்டு
மென்ற நியம மில்லை ஒரு பிராமணன் ஆசுர விவாகம் செய்து
கொள்ளலா மென்றும், ஒரு சூத்திரன் பைசாசந் தவிர்த்து மற்ற
விவாகங்களிலேதேனும் செய்து கொள்ளலா மென்றும் மனு
மூன்றாவதத்தியாயத்தில் கூறியுள்ளார். இதற்கேற்ப யாமும் இந்
தக் கேசவமுதலியாரும் சிலநாள்களுக்கு முன்னர்முதலே காந்
தர்வ விவாகம் செய்து கொண்ட முறையில் அன்னோர் எமக்கு
அப்போது முதலே கணவனாயுள்ளார். நிற்க, "கற்பெனப்படுவது
சொற்றிறம்பாமை" என்னும் கிழவி மொழியைக் கிளறுங்கால்,
அவரது கட்டளையிடினும் அதைச் சிரமேற் கொண்டு நடக்க
யான் உடன் பட்டவளாகிறேன். ஆதலின் அன்னவர் கட்ட
ளையை ஒரு நாளும் யான் மீறி நடப்பவளல்லேன், என்றது
கேட்ட பங்கஜாட்சி ஆம் தங்காய் நீ கூறுவது சரிதான். "பெண்
ணிற் பெருந்தக் கையாவுள கற்பென்னுந் திண்மையுண்டாகப்
பெறின்" என்றபடி எவ்விதமெனினும் பெண்களுக்குச் சிறந்த பூஷ
ணம் கற்பென்னும் அளவிடா ரத்நமேயாம். ஆதலின், நீ நேரந்
தாமதியாதே. நிலாவடைந்து விட்டது அவர் ஆற்றங்கரையில்

தனிமையிலிருந்து நம் வரவை எதிர் நோக்கிய வண்ணமாகவே யிருப்பார். இனியும் கொஞ்சம் நேரம் புலர்ந்து விட்டால் ஜனசஞ் சாரமுந்துடங்கிவிடும். ஆதலால் எடுக்கவேண்டுவன உண்டெனின் எடுத்துக் கொண்டு சீக்கிரம் இவ்விடம் விட்டுப் பெயரு.

தங்:—ஆம் அக்கா! அவரென்ன கொண்டு வந்திருக்கிறார் நடந்துதான் போகவேண்டுமா?

பங்:—அதென்ன தங்கம்! அப்படிக் கேட்டாய்? புருஷன் நடந்தால் நீ பேன் நடக்கக் கூடாது?

தங்:—அதில்லை. சும்மா நடக்கலாம். ஆனால் சாமானும் சும ந்துகொண்டு நடக்க இயலுமா? இயலாது ஆதலின். ஏதேனும் எடுத்தால் சுமக்க வேண்டி நேரிடலாகாதே என்றுதான்.

பங்:—சரிதான். வண்டி ஒன்றும் கொண்டு வரவில்லை. இரண்டு குதிரைகளைக் கொண்டு வந்திருக்கிறார். ஏனென்றால், உனக்குக் குதிரைச் சவாரியில் மெத்த சாதுரிய முண்டெனவும், அது தான் உனக்கும் பிரீதி என்றும். மேலும் இரவில் வெகு சீக் கிர கதியில் சென்று விடலா மென்றும் சொன்னார்.

தங்:—அப்படியா அக்கா? ஆனால் உண்மையே. எனக்குக் குதிரை சாவரியில் சாதுர்ய முண்டு. மேலும் அது தான் எனக்கு மிகப்பிரியமும். ஆதலின் கொஞ்சம் நகைகளை மட்டும் எடுத்துக் கொள்ளுகிறேனென்று சொல்லி முந்தின தினம் ஸோமனுதமு தலியாரால் கொணர்ந்து கட்டி அலுமாரியில் வைக்கப்பட்டுள்ள கட்டை மட்டும் கையிலெடுத்துக் கொண்டு அதிவிரைவில் இரு வரும் அங்கிருந்து வெளிக் கிளம்பி நடக்கும் போதே பங்க ஜாட்சி எ தங்கம்! நீ இனியும் ஒரு காரியஞ் செய்ய வேண்டும். என்ன அவசியகாரியமா யிருந்தாலும் வழியில் விடியுமளவும் நீங் களிருவரும் பேசிக் கொள்ளலாகாது. அதாவா உங்களுக்கே கதேனும் பேசவேண்டி நேர்ந்தால் விடிந்த விடத்தில் தான் பேசிக் கொள்ள வேண்டு மென்பதை மட்டும் ஞியாபகமாக வைத்துக் கொள். இல்லாவிடின் உங்கள் பிரயாணத்துக்கு எவ்விதமும் இடை யூறு நேரும். இது நானறிந்ததைச் சொன்னேன். கூடிய வரையில் ஒதுங்கி நடப்பது நன்று என்றது கேட்ட தங்கம் ஆமக்கா. அது வும் புத்தி தான். நான் அவ்வாறே செய்கிறேன். சீக்கிரம் நட

அவர் காத்து நின்று கொண்டிருப்பாரென்று அவ்விருவரும் அதி விரைவில் நடந்து ஆற்றங்கரை வந்ததும் முதலில் அருணசலம் குதிரையிலேறினன். மற்றொரு புரவியில் தங்கம்மாள் ஏறின தும் அக்கா போய் வருகிறேன். இந்த நன்றியை என்றும் மற வோம். இரவு அவ்வளவு சொல்ல வெண்டா மென்றது கேட்ட பங்கஜாட்சி ஆம் அய்யா? முதலியாரே அப்படித்தான். தங்கம் அவ்வாறேயாகுக. இரவு தாமஸிக்க வேண்டாம். புருஷனும் பெண் ணும் பேடும் பூவும் போலிருந்து ஆசந்திரார்க்கம் சந்ததிப் பிர வேசமே இருந்து வாருங்கள். நேரம் தவக்காதீர்களென்ற பங்க ஜாட்சி தெற்கு நோக்கி நடக்கக் கண்ட அவ்விருவரும், அதிவே கத்திற் செல்லும் வாசியிரண்டினையும் சடுதியில் வடக்கு நோக்கி விரைவிற் செல்லத் தூண்டினர்.

15-வது அத்தியாயம்.

சௌகம் என்னும் நகரி பொம்பாயிலிருந்து புனவிற் குப் போகும் பெரியரோட்டினுடைய அருகில் ரமணீயமான ஒரு பிராந்தியத் திலிருக்கிறது. சிசிரமான இரவு அந்த குக்கிராமத்தின ருகே அசுவரூடாய் ஆத்திரத்துடன் செல்லும் புருஷனும் பெண் ணுமாகிய இருவர் கொங்கணப் பிரஸ்தத்தி லிருந்து ஏறக்குறைய மூன்றுஆயிரம்அடி உயர்ந்துள்ளதும் நிபிடமான அரண்யங்களால் ஆவிருதமான "மதேரன்; பிரபுல்" இந்தக் குன்றுகளி னடிவாரத் திலிருந்து, உற்பவித்தோடும் "தௌரீ" நதிக்கருகாமையில் உத் தேசம் பன்னிரெண்டுமையில் தென்கிழக்காய் உண்டாயிருக்கும் ரஸ்தா கொங்கணத்திற்கும் தக்ஷிணகண்டத்திற்கும் நடுவில்பச் சிம மலையின் கொடுமுடிகளை அதிரோஹணம் செய்கிறது எனின், கொங்கணப் பிரஸ்தம் இந்துமாகாசமுத்திரத் தினுடையவும் இந்த மலையினுடையவும் நடுவில் முப்பது நாற்பது மையில் விஸ்தீர்ண மான ஒரு மைதானமாயிருக்கிற இது முற்கூறிய மலையை அதி ரோகணம் செய்தலின் தக்ஷிண இராச்சியத்தினுடைய அதி உன்

னதப் பிராந்தியத்தை அடைகிறது. இது இந்து இராச்சியத்தின் வடக்கு நோக்கி தாழ்மை அடைந்திருப்பதால் கிருஷ்ணை முதலிய நதிகளினுடைய உற்பத்தி மேற்குக் கரையிலிருந்து முப்பது நாழிகைக்குள்ளாயினும் அவை கிழக்கு ஒழுங்காய் ஏறக்குறைய ஆயிரம் மைபில் ஓடிப்பங்காள சமுத்திரத்தைச் சேருகிறது. சமற்கண்டு முதல் ஸிலோன்வரையிலும், கிழக்குகடலி லிருந்து மேற்குக்கடல் வரையிலும் தமது ஆதிபத்யத்தை ஸ்தாபிக்க ஆசையோடுகூடி இந்துவிராச்சியத்தில் முன் பலவிடங்களையும் ஆண்டுவந்த முகன் இராஜாக்களது பிரசித்தியான வீடுகளுக்கும் புனமுதலியவிடங்களுக்கும் போகும் இந்த ரஸ்தாவழியாய் முற்கூறிய இருவாது அதிவேகமான அசுவம் செல்லும் போது இரவு உத்தேசம் நான்கு மணி யிருக்கலாம்.

முற்கூறிய இருவரும் அதிவேகமாய் அசுவத்தைச் செலுத்தி அவ்வடவி நடுவே யுள்ள "தௌரீ" நதியடுத்ததும் திடீரெனச் சிலதிருடரால் தடுக்கப்பட்டு இறக்குந் தருவாயிலிதம் பாறி குதிரை முதலியயாவையும் விட்டு ஆடையொழிப அணிபணிகளெல்லாம் கொடுத்து, தாம் பாதசாரியாய் படர்ந்த காட்டில் அடங்கேற இடையான அப்போது தான் அம்மாது, ஏதோ வகை மோசம் போயினளென்பதற்கறிகுறியாய் பெரிதான வியசனத்துள்ளாழ்ந் தாளெனினும், அவள் கல்வியுடையவளாதல் பற்றியும், அப்போது இரவு அகாலமாயிருந்தமையாலும், நடு அடவியுள் யாருந் துணையில்லாதது பற்றியும், இன்னுமனேகம் அசௌகர்யாதிகளாலும், அவள் அதனைத் திடீரென வெளியிடாது அன்னவனோடு கூடே சென்றாள். இவ்வாறு சென்ற சிறிது நாழிகைக்குள்ளேயே "சௌகமென்னும்" அப்பெரு நகரியை அடைந்ததும், ஆதித்தனும் அந்தரிட்சம் போல் அங்கு உதயமானதைக் கண்ட அவ்வாடவன், ஓகோ! இதுவரையும் நம்மை இன்னா ரென்றிவளறியா திருந்தாள். இப்போ ஆதித்தன் வெளியானதும், நமது காரியமும் வெளிப்படத்துடங்கிற்று. என்ன செய்யலாம். இவளெவ்வாது மனஸ்தாபத்தை அடைகிறாளோ; தெரியவில்லையே ? ஏ ஜகதீசா ! இத்தருணம் என்னை ஈடேற்று. ஆண்டவனே ! எல்லாம் நீயே கதி என்று புலம்பி எக்கமுட னிருப்பதைக் கண்டமாது, ஆகா! இந்தப்பாவி செய்த மோசம் பெரிது. ஆனால் இவனை விட்டுப் போக இவனிடம்

எவ்விதமாயினும் இத வசனம் பகறி, இவனை ஏமாற்றி எங்காயி னுஞ் சென்று விடுதல் நலம். இல்லை எனின் இவன் நம்மை பலாத் காரம் பண்ணவும், நாம் தடுக்கவும், அதைப்பிறரறியவும், பெரு மிழுக்கு நம்மைச்சாரவும், ஒருவேளை அரசாங்கத்தார் முன்னிலை செல்லவும், வாய்மொழி பகறவு மிடையாகும். ஆதலினிப்போ திவனை இத வசனத்தாற்றேற்றித் தருணம் நோக்கித் தவறிவிடு வது நலமென்றெண்ணி அன்னவனை நோக்கி, நேயா! தாம்முகக்க மலம் வாடுவானேன். திருடரடித்துப்போன பொருள்நீங்கி இன்னு மென்காதில் சிறிய வைரக் கம்மலொன்று,மின்னுகின்றன வன்றோ? அதனை விற்று நாமின்னுஞ் சிலகாலமிங்கு ஜீவிப்போம். பின்னர் முறைப்படி நடக்கு மென்னக்கேட்ட அவன் ஆனந்த பரவச னுகி, காதலி! நின் கருணை யொன்றுண்டெனின் நாமெவ்விதமும் உஜ்ஜீவிப்பதிற் றடையில்லை. உனதிஷ்ட மென்பாக்கியம். ஆதித் தனுமுயர்ந்து விட்டான். நமக்குப் பசியும் மேலிடுகிறது. என்ன செய்யலாம், உனது கம்மலில் ஒன்றுமட்டுங்கொடு. சீக்கிரம் விற்றுப் பண்டபலாதிகள் வாங்கிக் கொண்டு வருகிறேனென்னக் கேட்ட அவள் அவ்வாறே யாகுகவென்றிசைந்து கம்மலைக் கழற்றிக் கொடுக்க அதைவாங்கின அவன் ஹே! கண்மணி! நீ நான் வருமளவு மிதனை விட்டகலாதே. நானிதோ சீக்கிரம் வந்துவிடு கிறேனென்று கடைத்தெரு நோக்கி நடைகொண்டான்.

மகாகாதகனுகிய அச்சிறுவனை விட்டகலும் வேளை யெப்போ தென எண்ணிக் கொண்டிருந்த அந்தமாது அவன் கம்மல் விற்று இதோ வந்துவிடுகிறேனென்று சொல்லிச் சென்றதும் தாம் வடக்கு நோக்கிப் பிரயாணமான சிறிது நேரத்துக் குள்ளேயே மணியும் பன்னிரெண்டாயிற்று. பசியும் தாகமும் மேலிட்டு வருத் துகிறது. அதைக் கூட அவள் பொறுத்துக் கொண்டாளாயி னும் கதிரவன் வெப்பத்தால் கசிந்துருகினள். இனியும் நடக்கவும் முடியவில்லை. என்ன செய்வாள்? அவள் சரீரத்தில் வேர்வை ஆருய் ஓடுகிறது. இதையெல்லாம் பொறுத்துக் கொண்டாலும் அந்தத் திருட்டுப்பயல் இனியும் ஒருவேளை இங்கு வந்து விடு வானே வென்னுமச்சத்தால் சரேலென்று வழி நடைந்து அந்தி நேரத்துக்குள்ளெல்லாம் சாலைப்புதூ ரென்னும் பெயரைப் படை த்த பட்டினம் வந்தாள். அங்கு தம்மை இன்னுளென்று யாரும்

அறிந்துகொள்ளாதிருக்கவெண்ணி, அப்பெண்ணுருவை இயன்ற வளவு மாற்றித்தமதுபெயரை யாரேனுங்கேட்டால்புருஷோத்தம னென்று கூறுவதாய்த் திட்டஞ் செய்து சாலைப்புதூர் குளத்தருகே வந்ததும், அடங்காப் பசியால் களைத்து, அக்குளக்கரையிற் சற்றிருந்து இளைப்பாறிக் களைதெளிபலாமென்றிருந்த சொற்ப நேரத்துக்குள்ளேயே அங்கு அயர்ந்துறங்கி விட்டார் நம்புருஷோத்தமன். அப்பொழுது பகல் ஏறக்குறைய மணி 5½ இருக்கலாம். அந்தச் சாலைப்புதூர்ப் பட்டினம் வாவிக்கரையில் அயர்ந்துறங்கும் புருஷோத்தமனை அப்போது கண்டயார்தான் வியக்கார்? இனியும் கடவுள் இவனையோர் புருஷனாகப் படைத்து இவனது சௌந்தர்யத்திற் கேற்ற புருஷோத்தமனென்ற பெயரையு மீன்றானன்றோ? அதுவே சிலாகிக்கத்தக்கது. ஆனால் இவனைக் கண்ட எந்தமங்கையர்தாம் மையலென்னுஞ் சங்கையை அகற்றியிருப்பார்? நிற்க, கடவுள் இந்தமனிதனுக்கு இந்தவாலிபத்தில் என்ன குறையை வைத்து விட்டானோ? ஆயினும் அந்தக் கடவுளுக்கிதடுக்காது.

அவ்வந்தி நேரம் மாடு சாயும் வேளை சாலைப் புதூர் பட்டினம் கிராமமுன்ஸீப்பு கனம் இரத்னஸ்வாமி முதலியார் குமாரத்தி பானுமதியென்னும்பெயரைக்கொண்டு கல்வியில் பலவித்வான்களை வென்று நற்குணநற்செய்கை சௌந்தர்ய சௌசீல்யாதி குணங்கள் நிரம்பப் பெற்று வயது முதிர்ந்தும் மனதிற்கிசைந்த மணாளனுங் கிட்டாமையின் இது காறும் விவாகமாகாது கண்ணிற்கிசைந்த காதலனைக் காண ஆவலுடையவளா யிருக்குமவள் தாம் பதிவாய் ஸ்நானத்துக்கு வரும் போல் கையில் ஸ்வர்ணக்குடமுடன் அன்ன நடையாய் அவ்வாவிக்கரைக்கருகே வந்ததும் அங்கு அரச மரத்தடியிலயர்ந்துறங்கும் புருஷோத்தமனைக் கண்டு மைய்யல் கொண்டுய்யும் வழி யொன்றில்லாமல் யோஜித்துக் கொண்டில்லஞ் சென்று தந்தையோடிவ்விந்தையை விண்டு எந்த விதமும் அந்த மனிதரை எந்தனுக் குகந்த நாயகராக்குவது தந்தையே! உந்தன் வேலை யென வேண்டக்கேட்ட ரத்நஸ்வாமிமுதலியார் கண்மணி! கிஞ்சித்து மஞ்சாதே. உந்தனவாவை இந்த வேளை யெந்த விதமும் தந்தையாகிய நான்நிறைவேற்றுகிறேன். நீ சஞ்சலமடையாதே யென்று குழந்தையைத் தேற்றித் தாம் விந்தை

யாய்ச்சந்த முள்ள புருஷோத்த மனைக்காணக் குளக்கரைபோதும் அயர்ந்துறங்கும் அவரைக் கண்டு, ஆகா! இந்தப் புருஷரின் அழகு தாமென்ன? அந்தஸ்துத்தாமென்ன? இவரைப் புருஷராகிய நாமே இச்சிக்கிறோமே? மங்கைப்பருவ மடைந்துள்ள மாதர்கள் எவ்வாறு காதல் கொள்ளாதிருப்பார்கள்? ஹா! இவ்வித அந்தஸ்தைப் பெற்ற புண்ணியவான்கள் இவ்வுலகிலுமிருக்கின்றார்களா? இல்லை! இல்லை! அந்தோ! பரிதாபம்! இது காறும் விவாகம் வேண்டா மென்றிருந்த நம் புதல்வி மனத்தை கலக்க வெண்ணி மதனே இவ்வுருக் கொண்டேகினான் போலிருக்குது. என்ன வாயினும் ஆத்திரப்படலாகாது. இனியும் நித்திரைக்குப் பங்கம் செய்தல் பெரும் தவறு. ஆதலின் இவர் நித்திரை தெளியும் வரையில் இங்கிருப்போ மென்றிருந்த கொஞ்ச நேரத்துக்குள்ளேயே புருஷோத்தமரும் களை தெளிந்தெழுந்தார்.

இதுகண்டு களிப்படைந்த இரத்நஸ்வாமி முதலியார் அப்புருஷோத்தமனண்டை சென்று, ஓ ஐயா! தாம் ரொம்பக்களைத்தவர் போலிருக்கிறது. நம் வீடு விஜயம் செய்து போஜனமருந்திக் களைப்புத் தெளிய வேண்டுகிறேனெனக் கேட்ட புருஷோத்தமன் தம்மை அப்போது விழுங்கும் பெரிதான பசியின் சாந்தியை எண்ணி அவ்வாறே யாகுக வென்றெழுந்து கிராம முன்ஸீப்பு வீடு சென்று உண்டி யருந்தி களைப்புத் தெளிந்துல்லாசமாயிருக்குந்தருவாயில் அக்கிராம முன்ஸீப்பு வினவினதற்கேற்பப் புருஷோத்தமன் தாம் பிராசீன ஜம்புகாத்ரி நகர் வாஸியென்றும், கல்வியில் B. A. பாஸு பண்ணி யிருப்பதாயும், தப்போதுள்ள தம்மொரு வெண்ணம் முடியுமளவும் விவாகம் வேண்டா மென்று தாய் தந்தை சுற்றத் தாரை விட்டு இவ்வாறு ஊர்க்கோலம் கொண்டு வந்ததாகவும் மற்றும் உண்டான ஒவ்வொரு சமாசாராதிகளைப் பேசிக்கிராம முன்ஸீப்பான அந்த முதலியாரை நோக்கி ஐயா! தாமிச்சமயம் என்னுயிரைக் காத்து அன்ன மளித்த உமக்கு யான் என்ன கைமாறளிப்பேன். ஆயினும் இன்ன தெனக் கட்டளையிட்டால் எவ்வாறாயினும் முடிக்கிறே னென்னக் கேட்ட கிராம முன்ஸீப்பு பேரானந்த முடையவராகி ஐயா! மகாப்பிரபோ! தாம் அழகில் மதனையும் கல்வியில் கலைமகளையும் வென்று வஸிப்பவர். ஆயினும் மண்ணுள்ப் பிறந்த மாந்தற்கு மண், பெண், பொன்,

இம்மூன்றிலாசை யிருக்குமென ஆன்றோர் அருளியுள்ளார்; ஆனால் எமக்கோ ஈசன் அவை வேண்டுவன நல்கியுளான். இனியும், புருடராய்ப் பிறந்த எவருக்கும் அதாவது "கடந்துளோரும் மறப்பரோமக் கண் மீதுக்காதல்" என்னுமறிஞரிசைக்கிணங்க மக்களாசை விடுதலரிது. அதனினும் "தன் மகனைச்சான்றோனெனக்கேட்டதாய்" என்றபடி தமக்குக் கிட்டும் புதல்வப் புதல்வியர் ஔவையாரிசைந்தபடி "அரிதரிது மானிடனாய்ப் பிறப்பதரிது; மானிடனாய்ப் பிறந்தகாலையில் கூன், குருடு, செவிடு, பேடு, நீங்கிப் பிறத்தலரிது. கூன், குருடு, செவிடு, பேடு, நீங்கிப் பிறந்தகாலையில் ஞானமுங் கல்வியுங் நவில்தலரிது. ஞானமுங் கல்வியுங் நவின்றகாலையிற்றானமுந் தருமமுந்தாம் செய்தலரிதுத் தானமுந்தருமமுந்தாஞ்செய்தகாலையிவ்வானவர் நாடு வழிதறந்திடுமே" என்றவாறு நற்குணநற்செய்கையை உடைய மக்கடுயிர் கிட்டுதலரிது, எனினும் இவ்விதமுள்ள பெண் மகவொன்று எமக்குக் கிட்டியிருப்பினும், அம்மகவுக்குச் சரியான வரன் கிட்டாதிருந்தது பெருமியக்கமாகத்தானிருக்கிறது. என்ன செய்யலாம் "ஆக்கியிடுவாருக்காண்மக்களில்லை தேடியிடுவாருக்குப் பெண்டாட்டியில்லை" என்னும் பெண்டுகள் விண்டுத்திரியும் பண்டைப் பழமொழிக்கிணங்க இதுவரையினும் என் புத்திரி ஒரு புருஷரையு மொவ்வாமலிருந்து இப்போது ஒருவரைப் பிடித்தமென்றும் அவரே தமக்கு நாயகரென்றும் பிடிவாதம் கூறுகிறாள் எனின், அப்புருஷசிங்கம் இதற்கொவ்வுமென்று எமக்குப் புலப்படக் காணேம். இனியும் இவ்விஷயம் தமது சித்தமொன்றுண்டேல் எவ்வாறும் முடியத் தடையில்லையென்றெண்ணுகிறேன். இவ்விஷயத்தில் தம் சித்தம் எனதுபாக்கியமாகவிருக்கிறது. தங்களிச்சைப்படுவதெவ்வாறோ ஈசனறிவாரென்றது கேட்ட புருஷோத்தம முதலியார் ஐயா! அவ்வாறு தம் புதல்விக்கிசைந்த காதலன் யார்? கூறினால் யான்கூடுமட்டும் பார்கிறேனெனக் கிராம முன்ஸீப்பு சந்துஷ்டியுடையவராய் ஐயா; நம் புதல்வி உம்மீது காதலுடையவளாகத்தானிருக்கிறாள். இதுவிஷயத்தில், தமதெண்ணமெவ்வாறோவென்ன; அப்புருஷோத்தமன் அப்படியானன்றாயிற்று. ஆனால் ஐயா! நானெப்போது தங்களன்னமறுசுவையுடனுண்டேனோ அப்போதே உங்களுக்கு விலை போலாயினேன். அப்மட்டிலும் தம்மெண்

ணத்தை ஈடேற்று திருப்பது தவறு. எனின் முன்னர் தாமே எமக்கோரெண்ணமிருப்பதாகியும் அதீடேறும் வரை சுகதுக்காதிகளுக்கோருவதில்லை யென்றும் இனியும் சிற்றின்பத்தைச்சிறிதளவும்சுகிக்கிறதே இல்லை என்றும், திட்டம்செய்துள்ளதை யான் கூறினதுண்டு. இப்போது தங்களெண்ணப்படி இசைவதாயிருப்பின் எமது பிரதிஜ்ஞைக்கு விரோதம் நேரிடுவதுந்தவிர அவ்வெண்ணம் இனி எவ்விதத்தும் இடேற வழியில்லாது மாகிறது. ஆதலின் கழிந்தநாட் களெல்லாம் கழிந்ததன்றோ? இனியும் சொற்பகாலம் பொறுக்கலாகாவா? எனக்கேட்ட கிராமமுன்ஸீப்பு அப்படியானல் ஐயா! இனியும் தம்மெண்ணமீடேறும் நாளளவும் தாம்விஷயப் பற்றுதலில் ஆசைவையாதிருந்தால் சபதபங்கம் நேரிடாதிருக்குமல்லாவா? எவ்விதமாயினும் சபதத்துக்கும், காரியத்தாட்சிக்குந் தானே இடையூறு வராதிருக்க வேண்டும். அல்லது கலியாணமே செய்கிறதில்லை என்று சபதம்செய்து விடவில்லையே? அங்ஙனமெனின் கலியாணஞ்செய்து கொள்ளுவதில் மட்டும் யாதொரிடையூறும் நேர்ந்து விடாதே "எல்லாம் மனவழி யொன்றுண்டாயின் எவ்விதமும் இடைவழியு முண்டாகி விடும்" என்றது கேட்ட புருஷோத்தமன் ஆம் சரிதான். அவ்விதம் செய்வதிற் தடையில்லை.எனின் எனக்குஇவ்விஷயப்பற்றுதல் விஷயமாய் யாராலாயினும் நிஷ்கருஷை ஏற்படும் பக்ஷத்தில் அப்போது மட்டும் யாரும் என்னைக் காண மாட்டீர்கள். இது சங்கதி உறுதியாகவிருக்கும் பக்ஷத்தில் தம்புதல்வியை யான் மணஞ்செய்ய இப்போதே சித்தமாயுள்ளேன் என்றதும் உடன் தாமே சோதிடரையழைத்து, அந்தக்கிருத்திகை மாதத்திலேயே நல்ல சுபமுகூர்த்தமாகிய 20வ யன்றுதினமே கிராமமுன்ஸீப்பு இரத்நஸ்வாமி முதலியார் புதல்வி பானுமதியம்மாளுக்கும் ஜம்புகாத்ரி நகர் ஸோமனதை முதலியார் குமாரர் புருஷோத்தம முதலியார் B. A. அவர்களுக்கும் பந்தலலங்கரித்து வாழை கமுகுகள் நாட்டி மகரதோரணங்கள் கட்டி வெகுசந்தோஷ சம்பிரமத்துடன் கலியாணமகோற்சவம் நடந்தேறிற்று. நிற்க,

வயற்றிற் கிரையில்லாது தேம்பிக் குளக்கரையில் கிடந்த புருஷோத்தமனுக்கு வந்த பவிஷத்துப் பெரிது தான். ஆம் வாழ்வும் தாழ்வும் ஒருவர் பங்கல்லவென வள்ளுவர்.

"கூத்தாட்டவைக்குழாத்தற்றேபெருஞ்செல்வம்
போக்குமது விளிந்தற்று"

என்று கூறியது எவ்வளவும் பொருந்தும். இனியும் இப் புருஷோத்தமனாகிய தங்கம்மாள் நேற்றிரவு செல்வகேசவமுதலியாரென்றெண்ணி அருணாசலத்துடன் பிரயாணப்பட்டு வழியில் அநேகம் அவஸ்தைகளுக்குட்பட்டு கைப்பொருளைக் கள்வரிடமொப்புவித்து மிகுதியான கம்மலொன்றை அருணாசலமிடங் கொடுத்து விலைசெய்து வரச்செய்துவிட்டுத் தாமங்கிருந்து மாறுவேடம்பூண்டு ஓடி இந்தச் சாலைப்புதூரென்னு மூரையடுத்து கிராமுன்ஸீப்பு புதவிக்கு மணாளனுபமர்ந்து அங்குவசித்தாலும் அவளுக்கு இரவும் பகலும் செல்வகேசவமுதலியாரைக் காணும்வழி யாதென்பதே கவலை. இனியும் யௌவனப் பருவத்தை யடைந்த ஒருஸ்திரீபுருஷவேஷம் தரித்ததாய் இக்கதை கூறுகின்றனவே. ஆனால் அது எவ்வாறு பொருந்தும்? ஒரு பெண் புருஷவேஷமிட்டுக்கொண்டாள் எனின் அது யாருக்கும் தெரியாதா? இதென்ன? கதைக்குக்கண்ணும் மூக்குமில்லை யென்பது சரியாயிற்றே. சொல்பவர் சொன்னாலும் கேட்பவருக்கு மதியில்லையா? என்றுள்ள சங்கை நம் நண்பர் சிலருக்குண்டாயிருப்பினு மிருக்கலாம். ஆனால், அது எமக்கும் விந்தையாக விருப்பினும் ஒருகாலத்தில் இம்மங்கைக்கரசியின் சகோதரரான பானுமார்த்தாண்ட முதலியாருக்கு வரமளித்த காளிதேவியினருளாயிருக்கலாமென்றும் இனியும் இந்தத்தங்கம்மாள் இதுகாறும் ஜம்புகாத்ரிநகரிலிருந்தால் காதகனாகிய ஸோமசுந்தரமென்பவனால் இவளது கற்புக்குக் கெடுதி நேரிடுமென்பதையறிந்த காளிகாதேவி அவளை வஞ்சகமோசத்திலருணாசலத் துடனனுப்பி வழியில் ஒவ்வொரு விபரீதங்களை விளைத்து இரவு கழிந்ததும் அருணாசலத்தை அங்கொரு காரியத்திலனுப்பிவிட்டு இனியும் இம்மங்கை இவ்வுரு விடனிருப்பாளேயாயின், ஒரு வாறு இந்த அருணாசலத்தாலே யாயினும் வேறு புருஷர்களாலாயினும் இவளது கற்புக்குப் பங்கம் நேரிடுமெனக்கொண்டு இவளைக்கண்ட யாவரும் புருஷனென வெண்ணிக் கொள்ளுமாறு செய்திருந்தாலென்னமறியசாத்தியப்படுமென்றெண்ணுகிறேன். ஆதலின் இனி கம்மல் விற்றுவரச் சென்ற அருணாசலமெவ்வாறு யினனென்பதையாறுய்வோம்.

கம்மல் விற்றுவரச் சென்ற அருணாசல மென்பவன், கிரயவிக்
கிரயங்களில் அவ்வளவான பரிசய மில்லாதவனாதலின் அந்தக் கம்
மலைப் பொன்வணிகர் கேட்ட குறைந்த விலைக்குக் கொடுக்க இசை
ந்தது கண்ட அவ்வணிகர் தாமே ஒருவருக் கொருவர் தாம் வாங்க
வேண்டு மென்னு மவாவினால் பொறாமை கொண்டு முடிவில் இவ
னைத் திருடனெனப் பிடித்து மாஜிஸ்ட்ரேட்டு முன்னிலை செல்ல, மா
ஜிஸ்ட்ரேட்டு அருணாசலத்தை வாக்கு மூலம் வினவியதற்கு அவன்
உண்மையாய் தாம் ஜம்புசாத்ரி நகர்வாஸி யென்றும் நேற்றிரவு
தாமும் தமது நாயகி தங்கமாளும் இந்நகர் பிரயாணித்து வரும்
போது. தௌரிநதி யடுத்ததும் திருடர் கைப்பொருளத்தனையும்
அடித்துப் போய்விட்டாரென்றும், மிகுதி நாயகி கர்ணத்தில் நகை
யாய் மின்னிக் கொண்டிருந்த இவ்வொன்றையும் விலை செய்திப்
போதுள்ள எங்களடங்காப்பசிக்கு இரையிடலா மென்றெண்ணி
வந்ததாகவும் இத்துடன் சேர்ந்த இணைக்கம் மலொன்று என் நா
யகிவைத்திருக்கிறாளென்றும் அவள் இவ்வூருக்குச் சற்றே வடக்கி
லுள்ள அம்பலத்திலிருக்கிறாளென்றும் வாய் மொழிபகரக் கேட்ட
மாஜிஸ்டிரேட் அக்கம்மலை கையிலெடுத்துக் கண்களி லொத்தி
ஆம் இவர் ஓர்பெரிய வீட்டுக் குழந்தையாயிருக்கலாம். ஏதோ
காலகதியால் இதனை விற்று ஜீவனஞ் செய்ய நேர்ந்தது. அவ்
வாறு விற்குந்தருவாயில் இப்பொன்வணிகரால்ப் பிடியுண்டு
தயங்குகிறார் போலிருக்குது. இன்னும் இதனிணைக் கம்மல்
நாயகி கையிலுண் டெனவும் அவள் இவ்வூரம்பலத்திலிருக்கிறா
ளென்றும் சொல்லுகிறாரல்லவா? எல்லாம் அந்த அம்மாளை
வருத்தி வாய் மொழி கேட்டும், இதனிணைக்கம்மலைக் கண்டும்
அறியத்தக்கது. ஆனால் நடுநிலைமைக் காரனாயகிய நாம்

"சமன் செய்து சீர்தூக்குங் கோல் போல மைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க்கணி"

என்னும் வள்ளுவனிசைப்படி ஓரம்பேசுதல் நலமன்று.
ஆதலின் தீரவிசாரிப்போ மென்றெண்ணி அன்னவரை நோக்கி,
ஐயா! உமது நாயகியை வருத்தி வாய்மொழி கேட்டுமக்
குத் தீர்ப்புச் செய்யவேண்டி யிருப்பமையின் உமது நாய
கிக்கு ஆளனுப்புகிறேன். அதுவரை தாமிருக்கவேண்டியதாகத்
தானிருக்கிறதென்று சொல்லி இரண்டு போலீசாரைக் கூப்

பிட்டு நீங்கள் போய் அம்பலத்திலமர்ந்திருக்குந் தங்கம்மா ளென்னும் மங்கையைக்கண்டு உங்கள் நாயகன் கம்மல் விற்கச் சென்ற அருணாசலம் களவுக்குற்றங் சாட்டப்பட்டுள்ளவராகி இவ்வூர் சப்மாஜிஸ்ட்ரேட்டு, பொன்னுப் பாண்டிய தேவர் வீட்டில் அமர்ந்துள்ளாரென்றும், உமது வாய்மொழியாற்றான் அவர் மீள வேண்டுமென்றும் சொல்லிஅந்த அம்மாளைச் சீக்கிரம் கூட்டிவந்து விடுங்களென்றனுப்பிவிட்டு அருணாசலத்துடன் வார்த்தையாடிக் கொண்டிருந்த கொஞ்ச நேரத்துக்குள்ளெல்லாம் ஐயா! வாலீபரே! இந்நேரம் உமது மங்கையை யழைத்து வந்திருக்கக் கூடுமா வென்றதும், அதுவிவரம் தெரியாதா? ஒருவேளை அவளிதற்கு முன் எங்காகிலும் ஓடிப் போயிருந்தாலு மிருப்பாள்.

மாஜி:—அப்படியா! ஏன் அவளோடி யிருப்பாளென்கிறீர்?

அவன்:—இல்லை. ஐயா! அவள் ஒரு பெரிய குடும்பத்துள்ள பெண். கல்வியில் B. A. பாஸ் பண்ணினவள். செல்வ கேசவ முதலியாரென்றொரு B. A. B. L. பாஸ் பண்ணினவரை விவாகம் செய்ய விரும்பி யிருந்தாள். நான் அவள் பேரிலிருந்த அவாவால் மோசத்தில் கடத்தி நேற்றிரவு இங்கு கொணர்ந்து விட்டேன். ஆனாலும் காலத்தைப் பாருங்கள்.

"நல்லவை யெல்லா சுந்தீப வாந்தீயவு
நல்லவாஞ் செவஞ்செயற்கு"

என்றபடி வந்த விடத்திலும் நமக்கு ச்சனி பிடித்திருக்கி
றது என்றுல்லாசமாய் தமது கட்டிக்காரத்தனத்தை விளம்பிக்
கொண்டிருந்த கொஞ்ச நேரத்துக்குள்ளெல்லாம் தங்கம்மாளைத்
தேடிச் சென்ற சிப்பாய்கள் வீசின கைய்யும் வெறுங் கைய்யுடன்
வந்தாற் போல் ஐயா! அந்த மங்கையை எங்குந் தேடியுங்
காணோம். சிலரிடம் விசாரித்ததில் கொஞ்ச நேரத்துக்கு முந்தி
அயல் நகர் வாஸியாமோர் பெண் ரஸ்தா வழி போய்க் கொண்
டிருந்த தாய் மட்டும் சொல்லுகிறார்கள். அவளாரோ? இந்
தத் திருட்டுப்படுவா சொல்லுகிற திருட்டுச் சமாசாரத்தைக்
கேட்டு நாங்களெங் கெல்லாந் தேடித் தேடிப் பார்த்தும் பல
மில்லாமலாயிற்று. ஆண்டவனே எங்கள் பேரில் பாதக
மில்லை என்று சொன்னது கேட்ட மாஜிஸ்ட்ரேட்டு அரு

ணாசலத்தை நோக்கி, நீவிர் நல்ல உண்மையுள்ள மனிதர். ஆதலின் இந்தக் கேஸில் உம்மைச் சும்மா விடுவோ மென்றால் ஒரு பெரிய குடும்பத்திலுள்ள பெண்ணை மோசமாய்க் கடத்தி வந்தது பெருந்தவறு. அதை நானறிந்தும் உம்மை விடுதல் கூடாது. ஆதலின் இக்குற்றம் சாட்டி உம்மை மூன்று வருஷம் மறியலுக்கு நிச்சயித்துளே னென்று தீர்ப்புப் பகர, இறுமாப்புடனேமாந்திருந்த அருணாசலத்தை உடன் தானே போலீசார் மறியல் செய்யவும், மாஜிஸ்ட்ரேட்டு இது விவரம் ஜம்புகாத்ரி நகர் கலக்டர் அவர்கட்கு சவிஸ்தாரமாய் அறிக்கையும் செய்து விட்டார். அந்தோ! பரிதாபம்! பெண்ணுடனிருந்து வாழ வேண்டு மென்று ஆசையுடனே மோசஞ் செய்து இரவவ்வளவும் இதமாய்க் கொணர்ந்த அருணாசலத்தின் கதி எவ்வாறாயிற்று. நேயர்காள்! இங்ஙனமாயிருக்கு மிறைவனருள். ஆனாலும் நன்மை செய்வாற்கு நன்மையும் தீமை செய்வாற்குத் தீமையும் செய்வதிலேயே இறைவன் கருத்தாயிருப்பானென்பதுறுதி.

16-வது அத்தியாயம்.

அருணாசலமென் பவனால் வெட்டுண்டு வனமத்தியிற் கிடந்த திவ்யவிக்ரகத்தைப் போர்வீரர் போன்ற இரண்டு கிங்கரர் எடுத்து முன்னே செல்ல வ்ருத்தரும் வாலிபருமான இரண்டாண் மக்கள் பின்னே சென்றதாய் முன் எட்டாமத்தியாயம் விளக்கிற்றன்றோ? அவ்வாறு சென்ற அந்நால்வரில் பின்சென்ற விருத்தாப்பியர் நாஞ்சிப்பட்டினம் கலக்கடர் கனம் ஹண்டுத்துரையவர்களும், சுவர்ண விகசித வஸ்திரதாரியும் அரோக திருடகாத்திரனுமான அந்தபுவா இவரின் கனிஷ்டபுதல்வனும் இங்கிலாந்தில். M. A. B. L. பாஸ்பண்ணி முன் அயல் நாடுகளிலும் தற்போது அந்த நாஞ்சி டிஸ்ட்ரிக்டில் ஜட்ஜ் வேலையாயமர்ந்திருப்பவரும் முறையேபாஸ்றரெனப் பெயர் வளங்கப்பட்டு வருபவருந்தான். இந்த இருவரும் அவ்விரு உத்தியோகஸ்தாதுடலாயத்து சிப்பாய்களுமாயிருந்தார்கள். இந்நால்வரும் அடுத்துள்ள ஜம்புகாத்ரி நகருக்குச் சிறிதவசியமாய்ப் போய் காடமாய் வரும் வழியிலிருந்தது முற்

கூறிய புருஷாது மரணாவஸ்தைபான துக்கம். இது கண்ட கனம் பாஸ்றர்துரை தம்தந்தையுடனப்போது வினவியது தமது சிஷ்பரும் எமது கிளாஸ் மெற்றுமாகிய செல்வகேசவ முதலியார் யாதோ சத்துருக்களால் இக்கதி அடைந்துளாரெனவும், ஒருஸமயம் அவர் இறந்திருக்கலாமென்றும் சொன்னதுதான், எட்டாமத்தியாயத்தில் எமக்கு விளங்காமற் போயிற்று. அவர்கள் தூக்கிச்சென்ற மனிதருக்கு முறையே சிகிற்சித்து வந்தசிறிது நாட்களுக்குள்ளேயே தேகசௌக்கிய மடைந்ததும், அவர் மறுபடியுங் கொஞ்ச நாள் அங்கேயே வஸித்து வந்தார். இவ்வாறு அவர் அங்கு வஸித்து வருமொருநாள், தாம் ஊர்விட்டுவந்து வெகு நாளாயினதால் தம்மைக் காணுது தாய் தந்தையர்கள் கவலையடைவார்கள். ஆதலின், நான் போய் சில நாட்கழித்து வருகிறேனென்று வேண்டக் கேட்ட அந்தத் துரைகள் ஆனல் அவ்வாறேயாகுக. இனியும் சில நாளில் வந்தால் அப்போது ஓர் மாஜிஸ்டிரேட்டு வேலைக்கு ஆர்டர் கிட்டுமென்றுஞ் சொல்லியங்கிருந்தனுப்ப, தாம் முறையே வீடு வந்ததும் தாய் தந்தையருக்குத் தண்டம் சமற்பித்தான். இவனைக் கண்டதும் அவர்கள் கன்றைக் கண்ட கோவைப் போல் சந்தோஷத்தி லாழ்ந்து குழந்தையை நோக்கி, அடே! நீ என்ன? இன்னும் விளையாட்டுப் புத்திமாறவில்லை போலிருக்குதே. நீ சொல்லிப் போனதென்ன? தூரதேசமான பாம்பைக்குப் போய் விட்டாயே? அதவாய்ப் போனலும் இத்தனை நாளும் என் தாமஸித்துக் கொண்டனை? உன்னை இன்னும் கொஞ்சநாள் காணவில்லையானல் எங்கள் மனம் எவ்வாறு பரிதாபத்தை யடையும். அந்தோ! "பெற்ற மனப்பித்து பிள்ளைமனங்கல்லு" என்பது சரிதான். ஏ கேசவா! இன்னும் இது விபரம் பானுமார்த்தாண்டன் மட்டும் சொல்லாதிருந்தானெனின், நாங்களெங்கெல்லாம் தேடித்திரிய நேரிடும். இனியாகிலும் இவ்விதம் சொல்லாமற் போய்விடாதே. நீங்கள் போன காரிய மெவ்வாறாயிற்று? உன் நண்பன் பானுமார்த்தாண்டனும் வந்துவிட்டானு? ஆம் அவன் தங்கை தங்கம்மாளுக்கு நாளை யுதயத்தில் தானே தாலிகட்டலாயிற்றே. அவன் வராதிருப்பானு?

என்றது கேட்ட அந்தயுவா குறுநகையுடன் ஓகோ! இவிடம் செய்தி இப்படியா யிருக்கிறது. நம்மை பாம்பைக்குப் போயி

ருப்பதாகியும் தாமும் கூடிச் செல்வதாகியும் பானுமார்த்தாண்ட முதலியார் சொன்ன தாயிற்று. அப்பா அவர்கள் சொல்லுகிற மட்டிலும் முதலியாரிப்போது ஊரிலில்லை என்றும் அதற்கு ஹேது நமது துர்கதியை அவர் அறிந்திருக்கக் கூடுமென்றும் வெளிப்படுகிறது. ஆனல் நம்முடைய இத்துச் சங்கையை கண்டிருப்பதாயிருந்தால் அவரிதுவரையிலு முயிருடனிருப்பாரென்பதும் எம்மட்டுச் சான்ருகும். நிற்க, எப்படியானலும் பெரிதான ஓர் குழப்பம் நடந்திருக்க வேண்டும். அதனுண்மையை இப்போது கேட்டறிபலா மென்ருல் நாம் பட்ட அவஸ்தை ஆருமறியா திருப்பது வெளியாகி விடும். இனியும் ஜம்புகாத்ரிப் பட்டினம் செல்லும் பக்ஷத்தில் இதனுண்மை ஸவிஸ்தாரமாய் வெளிப்படும். இரவாகட்டும் எல்லாம் பார்த்துக் கொள்ளுகிறது என்றெண்ணிக் கொண்டு தங்தையை நோக்கி, ஆம்! அப்பா கழிந்த மாதம் பானுமார்த்தாண்டமுதலியாரிங்கு வந்திருந்த பொழுது சமாசார மொன்றும் சொல்ல வில்லையா?

அவர்:—அப்படியா? அவன் இங்கு வந்திருந்துமா நம்மள் வீட்டுக்கு வராமற் போனன்? ஆம். எல்லாம் அவ்வளவு தானே. காரியம் முடிகிறவரையில்தானே வருகிறதும் போகிறது மாயிருக்கும். அவனுக்கிங் கென்ன காரியமிருக்கிறது. இங்குயாரிருக்கிருர்கள்? நீ இருந்தால் தான் அடிக்கடி ஓடி ஓடி வருவான்.

கேசவன்:—அப்படியா. அப்பா! அப்போது அவர் இங்குவர வில்லையா? ஆமாம் வந்திருக்கக் கூடாதது தான். ஏனெனின் அவர் வந்த காரியம் அப்படிப் பட்டது. இனியும் அவாள் வீட்டுக்குக் கூடியும் போயிருக்க மாட்டாரே? நம்மள் வீட்டுக்கு எப்படி வரக்கூடும்?

அவர்:—அப்படியா. நான் அவனைக் கண்டு வெகுநாளாயிற்று. நீ இங்கிருந்து போன மறுநாள் அதிகாலையிற் கண்டது.

கேச:—ஆம் அப்பா அவர் இன்னும் வரவில்லை. பம்பாயில் தாமிருக்கிருர். கொஞ்ச நாளையில் வருவார். அவர் வீட்டுச் செய்தி எதாவதறிய வருமா?

அவர்:—நான் அங்கு போய் ரொம்ப நாளாயிற்று. அவன் தங்கை தங்கம்மாளுக்கு நாளைக்கலியாண மென்று காயிதம் வந்திருக்கிறது. வேறொன்றும் நானறிய மாட்டேன்.

கேச:—அப்படியா மாப்பிள்ளையாரோ?

அவர்:—மாப்பிள்ளை உள்ளூர்தானும். ஜட்ஜியினுடைய மகனும். அவர் பெயர் ஸோமசுந்தரமாம். பெரிய பணக்காறராம்.

கேச:—அப்படியா! அந்தப் பெரிய குடிகாறனு? இது தங்கம்மாளுக்குச் சம்மதியாயிருக்குமா?

அவர்:—என் சம்பத மிராது. அவள் மாப்பிள்ளை கோடீசுவரனுமே? என்னவனுலும் அவளும் பணக்காறனுக்குப் பெண்ணுனுள்.

கேச:—ஆனுல் அப்பா! தாம் கலியாணத்துக்குப் போக வேண்டாமா?

அவர்:—அதே பெரிய விடத்துக் கலியாணத்துக்கு நம்மைப் போலுள்ள ஏழைகள் போனுல் யார் கவனிக்கப் போகிறுர்கள். ஜீவனிருந்தால் அவளுடைய மறுவீடன்றைக்குப் போய் வரலாமென்றெண்ணுகிறேன்.

கேச:—அப்படியானுலும் போகவேண்டியது தாம். அதற்கு மனமில்லை யாக்கும்; அதிலும் காரிய மில்லை என்று சமாசாரம் பேசிக் கொண்டிருக்கும் போது முன்னெரு விடத்து பிரஸ்தாபிக்கப் பட்ட கோபாலசுவாமி முதலியாரென்பவர் அங்குஆகமனமானதும் ஏகேசவா! நீ எப்பொழுது வந்தாய்? என்றது கேட்டு ஆம் அப்பா கோபாலசுவாமி! வா. நானிப்பத்தான் வந்தேன். உங்கள் வீட்டிலெல்லொரும் க்ஷேமமா? என்றுசொல்லிக் கொண்டே அவ்விருவரும் பங்களா வேகினர்

கேச:— ஏ!கோபாலா? நீ பதில்க் கடிதம் வாங்கப்போனதெவ்வாறுயிற்று?

கோபால:—என்ன கேசவா! யார் பேரில் குற்றஞ் சுமற்றுகிறுய் நீ ஈணவும் நக்கவும் தெரியாதவன். உன்னைப் போலன்றோ என்னையும் எண்ணிக் கொண்டாய். வெட்கம் கெட்டவனே. வெளியே பேசாதே. கேட்டவர்கள் சிறிக்கப் போகிறுர்கள் இதுவரை என்னை யனுப்பி விட்டு நீ யாருக்கு க்ஷவுரம் செய்யப் போயிருந்தாய்? "காற்றுள்ள போது தூற்றிக் கொள் கதவுள்ள போது அடைத்துக் கொள்" என்ற படி ஒருவள் ஆசைப்பட்ட

அப்போதே புருஷனானவன் தன்னாசையை நிறைவேற்றிக் கொள்ள வேண்டாமா? எல்லாம் கழிந்த பிற்பாடு நினைந்து நினைந்து ஏக்கமிடுவதா ஆண்மை? போடா ஆண்மை இல்லாத வனே. நீயும் ஒரு ஆண் பிள்ளையென்று வெட்கமில்லாமல் நாக்கும் நீட்டுகிறாயே? இம்மாதிரி யுள்ள பெண் யாருக்குக் கிட்டும். உனக்கு வலுவில்வந்தாலும் வேண்டா மென்றிருந்தே? என்ன செய்யலாம். என் போலிபவனாகயிருப்பானாகில் இதை விட்டு விடுவானா? இனி அதை யிட்டு ஆரோபிக்கும் மட்டுமென்ன விருக்கிறது. கை விட்டுத் தவறின பொருளாயிற்றே என்று சொல்லித் தங்கம்மாளின் பதில் கடிதத்தை கையிற் கொடுக்க வாங்கி வாசித்த செல்வ கேசவன் மகிழ்ந்து, ஏ கோபாலசுவாமி தவறி விட்ட தென்றா நினைக்கிறாய்? ஒரு நாளுந்தவறாது.

கோபால:—இல்லை நாளைக் காலையிற்றானே கலியாணமாகப் போகிறதே? எவ்விதம் தவறாதிருக்கும். "நீ உரைப்பது ஞானம் அறுப்பது தாலி" ஆனாலும் நீ எவ்விதப் பிரயாசையைத்தா மெடுத்தாய்? இவ்வித சாந்த சௌசீல்ய ஸத்குணங்களமைந்த பெண் கிட்டா தென்பதுறுதி.

கேச:—ஆம் சரிதான். கோபாலா! நீ என்னுடைய செய்தி யொன்று மறிந்திருக்க மாட்டாயே?

கோபா:—போதும். ஓய் உம்முடைய செய்தி எமக்குத் தெரிந்தது தானே.

கேச:—இல்லையப்பா, உண்மையில் ஒருவருக்குந் தெரியாது. உனக்குச் சொல்லுகிறேன். வெளியிடாதே என்று தம்முடைய எல்லாச் சங்கதிகளையும் ஆதியோடந்தம் கூறி முடிந்ததும் கோபாலஸ்வாமி அடங்காத் துக்கத்திலாழ்ந்து என்னவானாலு மீசனருளில்லாமற் போகாதென்று தெளிந்து சந்தோஷத்துடன் நீ அப்படி யானால் இப்பொழுதே ஜம்புகாத்ரிப் பட்டினம் போகப் பிரயாணமாக வேண்டும். உன்னை யன்றி பிறிதொருவனைத் தங்கம்மாள் வரிப்பாளென்பது பொருந்தாது. அதாவாய் பிறிதொருவனுக்கு வாழ்க்கைப் பட நேர்ந்தாலப்போதே வானுலகேறி விடுவாள். இது விஷயத்தில் நீ கவலை யடையாமல் சீக்கிரம் புறப்படு. நானுங் கூட வருகிறேனென்று சொல்ல, இருவரு மெழுந்து

சமீரமிலன விரைவில் நடை கொண்டு அவ்விரவே ஜம்புகாத்ரி நகரை யடைந்தார்கள்.

அப்போதிரவு உத்தேசம் மணி பன்னிரண்டிருக்கும். அந்நகரிலுள்ள எந்த வீட்டை நோக்கினும் கதவுகள் மூடப்பட்டு ஜனசூன்யமாய் பயத்துக்குறை விட மாகத்தானிருக்கிறது. தெருவில் வருவார் போவார் யாருங் காணப்பட வில்லை. வெளிச்ச மென்பது எங்கோ பிரயாண மாயிற்று. ஆகாசமானது மேகவோட்டத்தால் கனத்த அந்தகாரத்தைப் பந்தபம் போட்டுப் பரப்பி வருகின்றன. இவ்வித கோலத்துடன் கூடிய அவ்விராத்திரி நிசிநேரத்தில் அப்புருட வீரிருவரும் தங்கம்மாள் வீட்டைக் கிட்டினதும் அங்கு ஆள் வசிப்பதற்கு கிஞ்சிற்றேனும் அறிகுறிகளில்லாமையின் எல்லோரும் கலியாண வீடு சென்றிருக்கலா மென்றெண்ணி அங்கிருந்து நான்கு மையில் அகலேயுள்ள ஸோமசுந்தரம் வீட்டைச் சமீபித்ததும் அவிடம் தீபக்கோடிகளால் ரமணீயமாகவும் சில மனிதரது குரலோசையும் நடந்து செல்லும் மனிதரது காலரவமான ஜடஜட வென்னும் த்வனியும் கேள்க்கப்படுகிறது. ஆனால் அவ்விருவருக்கும் அங்கு அவ்வளவான பரிசயமில்லாதது பற்றி இச்சமயம் அங்கு செல்ல வேண்டா மென்றும், விடிந்து பார்த்துக்கொள்ளுகிற தென்றும் எண்ணி இருவரும் அடுத்தாப்போலிருக்கும் சாவடியிற் சென்று சயனிக்கலாயினார்.

இங்கே முகூர்த்ததினம் நிகழும் கொல்லம் ௲௮௱௬ வது வருஷம் தக்ஷிணாயனமான கிருத்திகை மாஸம் திகதி இருபத்திரெண்டன்று காலை ஆறுமணி ஆவதற்கு இனியும் ஏறக்குறைய இரண்டு நாழிகை யிருக்கிறது. அப்போது அந்த ஜம்புகாத்ரி நகரில் பப்ளிக் ரஸ்தாவானது வண்டிகளது அதிதுரிதமான ஓட்டத்தாலும் மாந்தரது சோல்லாச நடையாலும் பொடிபறக்கா நிற்கின்றன. அப்போது ஸ்திரீ புருஷர்கள் தம்முள் பந்தயமிட்டு விதவிதங்களில் நடிக்கும் டம்பத்தை நானெவ்வாறு வரைவேன். ஆனாலும் அந்த ஸ்திரீபுருஷரான விருஜாதியாரும், விவிதங்களான வெண்பட்டாடையுடுத்து வெகு உல்லாசமாகத்தா னிருக்கிறார்கள். இனியும் "எலியின் மரணம் பூனைக்குக் கொண்டாட்டமென்பது போல்" வண்டிகளை விரைவாய்ச் செலுத்துவதிலும் அவ்வண்டிப்பாகர் தமக்குள் பந்தயமிட்டு காளைகளை விரைவிற்றுரத்தி

படிப்பதும் அவையிற்சில முன் செல்வதும் பின்னிட்ட சிலதை கம்பால் நொறிக்கியடித்துக் கொண்டு ஓடுவதுமாயிருக்கிற இந்த மகத்தான கோஷத்தை ஆயிரநாவுபடைத்த ஆதிசேஷனாலு மறைய வெண்ணுதெனின் எம்மாலெம்மட்டும் சாத்தியமாகும். நிற்க, இவ்விதம் வண்டிகளெல்லாம் வருவதினிடையில் ஜட்கா வண்டிகளுடையவும் ஸைக்கிள் வண்டிகளினுடைய தொந்தரை எம்மட்டுள்ளதென, எடுத்துக்கூறப்புகின் அது அளவு கடந்து போயின. ஆதலின் விடுத்தேன். இனியும் இவ்விதம் ஒன்றின் மேலொன்று முட்டியும், ஒன்றின்முன் வேறொன்று சாடியும் அதி குழப்பத்துடன் ஆத்திரப் பட்டு வந்த வண்டிகளெல்லாம் ஓடி வந்த சிறிது தூலையிலேயே அழிக்கப்பட்டதும், அந்த ஆஸ்தான மகாஜனங்களெல்லோரும் ஒருவர் பின்னொருவராய் செம்மறிக் கூட்டம்போல் அவ்வீதியடுத்துள்ள மாளிகை வீட்டைச் சேர்ந்தார்கள். அங்கே அந்த வீட்டுடையவரான புருஷரொருவர் அங்கு வந்த ஆடவருக்கெல்லாம் அவரவரந்தஸ்துக் கேற்ப உபசரித் தொட்கார வைக்கிறதும், தாம்பூலாதிகளருந்தப் பண்ணுகிறதுமாயிருக்க, ஆங்கோரு பக்கம் பெண்களை பெண் உபசரிக்கின்றனர். இவ்விதங் கழிந்த கொஞ்ச நேரத்துக்குள்ளெல்லாம் ஒரு புருஷர் அங்கு வந்ததும் ஐயா! பிரபுக்களே பெண் கூட்டிப் போகு மிலக்னம் இன்னும் கொஞ்ச நேரமிருப்பதால் எல்லோரும் உண்டியருந்தலா மென்றதும், அவ்வாடவரனைவரிற்சிலர் போஜனசாலை புகுந்து உண்டியருந்த வாரம்பித்தனர். இது ஒரு பக்கம் நடக்க, அங்கே யொருபுறம் பெண் பிள்ளைகள் ஆத்திரத்துன் பெண்ணை எங்கே காணவில்லை? என்றதும், ஒரு ஸ்திரீ அம்மா! அவள் பங்களாவிலிருப்பாள். நீங்கள் வந்த விபரம் அவளுக்குத் தெரியாது? அறிந்தாலழுவாள். ஆனதால் நீங்களாரும் அங்கே போக வேண்டாமென்றது கேட்டு எனழுகிறாள். மாப்பிள்ளை யுடனிருந்து வாழ்தற்கும் மடியா? என்றார் சிலர். ஆமாம் சிறுகுழந்தை யல்லவா? இப்போதுஅப்படித் தானிருக்கும். பின் தன் வீடென்றால் கசப்பாக விருக்கும். எண்டி அவளைத்தான் சொல்வானேன். நமெல்லாம் சிறுவயதில படியிருக்க வில்லையா? பின் கணவன் சுகங்கிட்டின போது நாம் எப்படியிருந்தோம் எல்லாம் நம்மைப் போல் தானே என்றார்

சிலபெண்கள். அடி இப்படி நிற்கிறீர்கள். நேரமாகிறதல்லவா. பெண்ணெங்கே. அவளினியும் முழுகியிருக்க மாட்டாள். தலைகோரிமுடிய வேண்டும். அதற்கெவ்வளவோ நேரஞ்செல்லும். அவளைக் கூட்டிவாருங்களென்பார் சில மாதுலைமார். இதென்ன? பெண் மூலையில் போய் ஒளித்து அழுதுகொண்டிருந்தால் எல்லாம் ஆய் போகுமென்று எண்ணம் என்றார் சிலமாதர். அடி நீங்களென்ன நினைக்கிறீர்கள். பொறுங்கள் பெண் நமது கைவசம் வந்தாகட்டும். அப்புறம் அழுதால் கொடுக்கிறதுயார்? விழுந்தாற் கொடுப்பது யார்? என்பார் சிலகன்னியர். என்னடி அவளைக் கூட்டி வாருங்களடி. முழுக்காட்டட்டும் என்பார் சிலஅரிவையர். இவ்விதம் ஒவ்வொரு தோகையரால் விண்டமொழி கேட்டு நின்ற வெண்டார் குழலியார் சிலர் பெண்ணைக் கூட்டிவருவோமென்று கொட்டில் சென்று மாளிகை தட்டு முதலிய.வெல்லாஞ் சுற்றிச் சுற்றித் தேடியுங் கூவியும் கண்மணி போளொளிர் பொன்மணி வம்புனையு மக்கண்மணிபாளாங் காந்தாமணிக் காரிகையாளைக்காணக் கிட்டாமையின், என்ன பெண்ணெங்கே? பெண்ணைக் காணோம்? என்று ஆத்திரத் துடனலறிய மங்கயர்த் துவனி அறக்கூன்ச்சாலையமர்ந்துள்ள ஆடவர் கர்ணத்திலெட்ட அவருந் திகிலடைந்து இதென்ன விந்தையாயிருக்குது. வந்து இந்நேரத்துக்குள் பந்து போலப் பெண் பறந்து விடுவாளா? இதென்ன ஏமாற்று? இதென்ன மோசம்? ஆனாலும் இது ஆச்சர்யந்தா னென்று ஆங்கெங்கு மோடிச்சாடிப் பார்த்தும், அந்தப் பெண் அகப்படாமையின்வெம்பி ஆனாலும் பெண்வீட்டாரிந்தச் சதிவு செய்து விட்டார்களென்று சொல்லிக் கொண்டே நின்ற நிலையில்தானேக் கண்டவரைக் கையாலுங் கம்பாலு மொத்தத் துடங்கினர். இவ்வாறாகவே ஆங்கு பெரிதான அடிதடி கொஞ்ச நேரத்துக்குள்ளுண்டாகி விட்டன. இதில் அப்பெண் வீட்டாரில் அனேகர் நையப் புடைக்கப் பட்டாரெனினும், பெண்ணின் தாய்தந்தையற்கு பொறுக்க முடியாத புடைப்புக் கொண்டது என்னும் விருத்தாந்தத்தை விளங்க வரைய எம்மா லியலாது. ஆனால் இந்தச் செய்தி எங்கும் பரந்து போலீசாரால் அவ்வித மடி தடிக்கு ஆபத்தமான சில நபர்கள் அரஸ்டு செய்யப் பட்டதும் அடிதடி அமர்ந்து விட்டது. நிற்க, இவ்வாறு அகாரணமாய் உண்டான

அவ்வடிதடியை அம்பலத்திலமர்ந்துள்ள செல்வகேசவ முதலி யாரும் கோபாலசுவாமி முதலியாரும் கண்ட உடனெழுந்து சரேலென நடந்து அருணோதயத்துக்கு முந்தியே அவ்வூர் கடந்து அரண்யத்தைத் தாண்டி தம்மூரை நோக்கி விரைவில் நடக்கலாயினர்.

இங்கே கலியாண வீட்டாரும் கலியாணம் காணவந்தோரும் ஒவ்வொரு இடங்களில் கூட்டங் கூடி ஆனாலும் இவ்விதம் அந்தப் பெண்ணைக் கடத்திச் சென்று விட்ட தறுதலை யாராயிருக்கலா மென்று யோசிக்குமளவில் ஒவ்வொருவர் ஒவ்வொரு விதங்கூறி முடிவில் சோதிடரை யழைத்து, சொற் ப்ரச்னம் கேட்டார்கள். ஆனாலும். "எளியவன் பெண்சாதிஎல்லோருக்கும் மதினி" யாவது போன்றும். "உளருக்கெளியவனூர் பிள்ளையார் கோவிலாண்டி" என்றூர் போலும். அந்தச் சோதிடன் ஐயா; உங்களுக்கு யார் பேரி லதிகச் சமுசய மிருக்கிறதோ அவர் பெயர் சொல்லித் தேங்கா யைச் சக்கறத்தில் சுற்றிவைய்யுங்களப்போது துலங்குமென்க. அவ்வாறே அவரும் செல்வகேசவ முதலியாரென்று சொல்லி நாளிகேரத்தைச் சுற்றி நடுத்தட்டில் மொத்தென்று வைத் ததும், சோதிடர் "கர்கடம்; சிங்கம்; கன்னி; துலாம்; அகக் கடகம் ஓலை; பிறக் கடகம் நாரு; வாவளயம் மட்டை; தறித்துப் போட்ட கட்டை; பெண்ணைக் கொண்டு போனவன் குட்டை" என்றபடி பாடிக்கொண்டு, ஐயா! துலங்கிவிட்டது பார்த்தீர்களா? மூன் சொன்ன விலக்னமுதய மானதால் உங்களது தெரிவைய ரைத்தீண்டினவன் குட்டையான ஆள். அதாவது குறுகிய வடிவி னன் என்றதும் கேட்டிருந்த சில புருஷ சிகாமணிகள் ஒருவருக் கொருவர் ஏ! கேட்டுக் கொண்டனையா? ஆமய்யா சோதிடரே! சரிதான். நீர் சொல்வது நிசந்தாம். அவன் கொஞ்சம் ஆள்குள்ளந் தான். அப்புறம்; பின்னும் சோதிடர். "இனியும் சிங்கம், கந்நி, துலாம், கும்பம், கொண்டு போகும் போது கூடியொருவனுண்டு" கும்பம், மீனம், மேஷம், அவனுங்களுக்கு மேற்குப் பக்கம் வஸிப் பவன். விருச்சிகம், தனுசு, மகரம், அவனை மாருட்டமாய்க் கொண்டு போயிற்றுன். இன்னும் பலவிதமாய் அந்தச் சோதிடர் தமது வாக்கு வல்லமையை பிரகடித்துக் கொண்டிருப்பதைக் கேட்ட மந் தமாந்தரிற் சிலர், ஆமாம், உண்மைதான். சோதிடர் கூறுமிவ்வறி

குறிகளெல்லாம் அந்தத் திருட்டுப் படுவா செல்வ கேசவனிடத்தி லுண்டு என்று கூறினதைக் கேட்ட சோதிடர் மீண்டும் ஐயா! எதற்காக சம்சயப்படுகிறீர்கள். அவ்வளவு சந்தேகம் வேண் டாமே. இங்கே இரண்டா மிடத்தை பிரகஸ்பதி அஷ்டமத்தி லிருந்து குட்டிப்பார்வையாகப் பார்த்திருக்கு மட்டிலும் இந்தப் பெண்ணைக் கடத்திச் சென்றவன் வித்தையில் மகாவல்லமையை உடைய B. A. B. L பரீட்சை பாஸ் பண்ணி யிருப்பான் என்றது கேட்ட சில ஸ்திரீகள் ஆமப்பா. சோதிடரே உண்மை தான். அவன் பெரிய படித்தக்காறன் தான். அதற்குத் தடையில்லை என்றார்கள். சில ஆண் மக்கள் பார்த்தீர்களா? சோதிடரிடத்தும் சொல்லியாவைத்திருந்தோம்? இல்லையே. அவர் உண்மையைச் சொல்லி விட்டாரே. அந்தத் திருட்டுப் படுவாப் பயல் தானிந்த வேலை செய்வான். வேறேயாரிந்த வேலை செய்வார்கள். நானப் பவே சொன்னேனே. நீங்களென்னெல்லாம் நினைத்து விட் டீர்கள். நான் சொன்னது தான் உண்மை யில்லையாயினும் சோதிடர் கூறினதும் பொய்யாகி விடுமா? ஆனாலும் சோதிடம் நல்ல நூல் தான் என்றது கேட்ட பிறிதொரு மந்த மதியை யுடைய மனிதன் என்னடா "சாஸ்திரம் பொய்யானால் கிரகணத் தைப் பார்; மந்திரம் பொய்யானால் பாம்பைப் பார்" என்று முன் னோர்கள் ஏன் கூறியிருக்கிறார்கள்? இதையறிந்தல்லவா அவர்கள் சொன்னது? என்றதும் அந்த ஜனங்களுக்கு சோதிடர் பேரிலி ருந்த அடங்காச் சந்தோஷத்தினால் தக்ஷிணையும் தாம்பூலமும் கொடுத்து ஐயா! இரவு ஓர் முகூர்த்தம் வைத்துத்தாரும். இந்த வேளை எப்படியும் சுந்தரபுரி போய் அந்தப் பயலைக்கட்டி பெண் ணையும் கையோடே கொண்டு வந்து விடுகிறோமென்க, சோதி டரும் இரவு இருபத்தி ஒரு நாழிகைக்கு மேல் ஒரு நாளும் குறித்தார். இது கண்ட சில தறுதலைபர் ஆற்பரித்து ஆத்திரத்து டன் ஓடி அந்தி நேரத்துக்கு முன் சுந்தரபுரி சென்றதும் அப் போது அங்கு செல்வகேசவனில்லாதிருந்தமை பற்றி அவரது தந்தை தாயாரை விந்தையாய் வாயில் வந்த படி பேசி ரொடியில் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு சென்றதைப் பின் அறிந்த அந்தக் கேசவன் சடுதியிலோடி அரஸ்டு செய்யப்பட்டிருந்த அவ்விருவரை மீட்டினதும் தம்மீது சுமத்தப்பட்ட சிரைகடத்

தக் குற்றத்திற்காக தாம் கொஞ்சநாள் சிறைக் கூடத்திலிருக்க வேண்டியதாயிற்று. ஆனலும் அவர் ஓர் B. A. B. L. பட்டம் பெற்றவராதலின் போலீசாரால் செய்யப் பட்ட சில சுதந்தர வசதிகளாலங்கு வஸித்து வந்த மூன்றுவது தினம் காலையிற்றுனே அக்குற்றத்திநவிர்த விடுதலையடைந்தும், சுந்தர புரி டவுன் ஸப் மாஜிஸ்ட்ரேட்டு வேலைக்கும் ஆர்டர் கிட்டப்பெற்றார். இவ்வாறு குற்றம் சுமந்த செல்வகேசவ முதலியார் விடுதலைபான தற்குக் காரணம் சௌகக் கிராமம் டவுன் மாஜிஸ்ட்ரேட்டின் கடிதத்தா லெனக் கொள்க.

17-வது அத்தியாயம்.

இன்னும் கொஞ்ச நாட்களில் இல்லாத சில விபரீதங்கள் விளையுமென்றும், அது வரை நீ வேற்றுருக் கொண்டு தேச சஞ்சாரம் செய்தல் வேண்டு மெனவும், உனது செல்வ கேசவன் யாதொரு இக்கட்டிலு மகப்படானென்றும், கொஞ்சஞ் சென்ற பின்பு நீ அவனைக் காணக்கிட்டுவா யெனவும் கூறிய காளிதேவியின் வாக்குக்கேற்ப, நாளது வரை யொரு நாற்பது, நாற்பத்தைந்து தினங்களாக வேற்றுருப் பூண்டு பானுமார்த்தாண்டன் பற்பலவிடம் திரிந்து தேடியும் தம் நண்பனது இலக்ஷிய மொன்று மெட்டாமையால் இறந்திருக் கலாமோ வென்னுஞ் சந்தேகத் தாற் மனங்நொந்து அப்போ! தெய்வமே! ஆபத்பாந்தவா! அனுதரக்ஷகா! ஆதிமூலமே! என்ற யானையை இரட்சித்த சோதிப் பரம் பொருளே! ஹே! தசரதன் மதலாய்! ஓ ஐயா! விசுவாமித்திரனருளை ஆதிமுதற் கொண்டவனே! தனுர்வித்தையில் தாழ்வில்லாத தாஷ்டீகனே! மாரீசன் சுபாகு முதலிய மதிமன்னர் மெச்சும் பராக்கிரமனே! ஹே! தெய்வீகம் பொருந்தியவனே! நற்குணந்தங்கிய நந்த கோபாலா! ஹே! துஷ்டநிக்கிரகசிஷ்டபரிபாலன சீலனே! ஐயா! நீ ரிஷிகளின் பூர்ண ஆசீர்வாதத்தைப் பெற்றுய். காதூஷணர்களைத் தாமொருவனுகவே. மாளவைத்தாய். யாகத்தை காத்து அமரர்கட்கு அவிசை யளித்தாய். சாந்தம்

பொறுமை தங்கிய என்னப்பனே! காகாசூரன் சமுத்திரேந்திரனி வர்களைக் கோபத்தால் வதைத்து நீ பின்னரும் அவருக்கனுக்கிர கிக்கவில்லையா? கல்லாயிருந்த அகலியையைப் பெண்ணுருவாய்ப் பண்ணவிலையா? மராமரங்களைத் துளைத்து ஈரேழுபதினான்கு லங்கையுந் நடுங்கச் செய்ப வில்லையா? ராவணனையும் க்ஷமித்து ஈடேற்ற நோக்கின நின் திவ்பந்தங்கிய கருணை பமைந்த குணமெங் குற்றது? எளியேனாகிய எம்மீது நின்கருணைமாரி சற்று தூற லாகாவா? ஏ! பரசுராமனை ஜயித்து மகாவிஷ்ணு தனுசைப் பெற்றவனே! நீ சிவதனுசைக் கண்டித்துக் கிபாதிபடைந்தாய். இராவணனைச் சிறையில்வைத்த வாலியைக் கொன்றாய். இன்னு மெத்தனையோ எளியோரை ஈடேற்றின நீ ஏழைபாகிய எம்மீதி ரங்காயா? ஹே! பத்மேக்ஷணா! இவ்வித கோலங்கள் காணவோ எம்மையோர் மானிடனாயுலகத்திலுண்டு பண்ணினாய். அந்தோ! இதென்ன விந்தை? என்னருமை நண்பரிறந்து விட்டாரா? என் னையோ? ஒன்று மறிகிலேன். அப்பனே! இன்றளவுங் காணதிருந் தால யான் நின் பாதமலரடி பொருந்துவது பொய்யன்று என் றிவ்வாறு பிரலாபித்து மெல்ல மெல்ல நடந்து செல்லுஞ் சிறிது நேரத்துக்குள்ளேயே சூரியனும் மேற்கு வாரிதியை படைந்தான். பானுமார்த்தாடனும் பப்பப் பப்ப நடந்து அந்தப் பபங்கர மான அடவி யுட்டடற்ந்து படர்ந்திருந்த புல்த்த கடியொன்றை யெட்டினது மடங்காக் களைப்பாலயர்ந்து அவன் சிறிது துயில லாயினான்.

அன்றிரவு உத்தேசம் ஒருமணிச் சுமாரிருக்கலாம். முற் கூறிய காளிதேவி ப்ரசன்னமாகி அவ்விடத்து அயர்ந்துறங்கு மந்த மனிதரைத் தட்டி யெழுப்பி, பாலகா! நீ சற்றும் கிலேச மடையாதே. உனக்கேனும் உந்நண்பன் செல்வகேசவனுக் கேனும் உன் தங்கை தங்கம்மாளுக் கேனும் மலைபோல் வரும் வினை யனைத்தையும் பனி போலகற்றுவதில் யான் கண்ணோட்ட முள்ளவளாகி யிருக்கிறேன். இனியும் உன் தங்கையை ஆள் மாராட்டத்திற் இரண்டு நாட்களுக்கு முன் ஆண்யத்தெல்லை வழி கூட்டிச் சென்ற அருணாசலமென்னு முங்களினச் சிறுவனை உனக்காக யானுமெனது பரிவாரங்களும் வேற்றுருவாய்த் திரு டர் வேடமிட்டு, சௌகமென்னுங் நகருக்கருகாமையிலுள்ள

தெளரீ நதிக்கு அருகில் சென்று அவர்கள் கைவசமுள்ள நகை நட்டு லொட்டு லொடுக்கு முதலிய யாவையும் பறித்து நினக்கு வேண்டிக் கொல்லாது விட்டோம். இனியும், ஒரு காரியத்தால் அவனை அந்தப்பட்டினத்திலேயே மூன்றுவருஷம் காவற்கூடத்திலடைக்கவும் செய்து விட்டோம். நிற்க, உன் தங்கையை அங்கிருந்து மெள்ள அடுத்துள்ள சாலைப்புதூர் கூட்டிப்போய் பெரும்கிரகஸ்தனாகிய இரத்நசுவாமி முதலியா ரென்பவன் வீட்டில் புருஷரூபத்துடன் அன்னவனது திவ்ய குணந்தங்கிய கன்னியை மணப்பித்துன்னைக்காணக் காதலுடைய வளாய்ப் பணித்துளேன். ஆதலின் நீ இச்சன்னியாசி வேஷத்தோடேயே அந்த இரத்நசுவாமி முதலியார் வீடு செல்வாய். அப்போது அன்னவனால் உனக்கு உபசாராதிகள் பல வழங்கப் பட்டு நினது வேண்டுகோளிற் கிணங்கி அவனது திவ்ய புதல்வியும் ஜாமாதாவான நின் தங்கையும் உனக்குப் பணிவிடை செய்யுமத்தருணம் புருடவேடதாரியான நின் தங்கையோர் காரணத்தால் இரத்நசுவாமி குழந்தைக்கு பெண்கள் பக்தியை விளக்கக்கூடிய நூலொன்று கூறுவாள். பின்னர் நீயும் அவளும் தனிமையிலிருப்பீர். அப்போது உன்னை அவள் சங்கட நிவர்த்திக்கு வேண்ட எல்லாம் வெளிப்படையாய்க் கூறுவாய். பின்னர் செல்வகேசவனைக் கிட்டி அன்னவருக்கு நின் தங்கை தங்கம்மாளையும் இரத்நஸ்வாமி புதல்வியும் திவ்யகுணந் தங்கிய மங்கைபருள் பொங்க மலத்தாளைத் தங்கமல முகத்துக் கொண்ட மையால்ப் பங்கஜாட்சி யென்னும் பெயர் படைக்கப் பெற்று பண்டிதசிரோன்மணியாய் விளங்கும் ஸ்திரீ மௌலீ ரத்நத்தாளை நீயும் வரித்து மணந்து இருவரும் உல்லாசமாய் இன்னும் சிலநாட்களிடுக்கண்ணின்றிவ்வுலகில் வாழ்ந்துபாத்து முக்தியைச் சேருவீர்.

உன் நண்பன் செல்வகேசவன் என்று வனமத்தியிற் படுகாய மடைந்தானோ அன்று முதல் இன்றைக்கு நான்கு ஐந்து தினங்கட்கு முன்னர் வரையிலும் ஓர் பெரியதுரை மகனாதீனதையில் வஸித்துப் பின்னர் வீடுவந்ததும், உன்னைத் தேடி ஜம்புகாத்ரி வந்து அங்குண்டான சில வசதி யீனத்தாலும் அவனைச் சுற்றி யிருந்த கால தோஷத்தாலும் சிறைகடத்துக் குற்றம் சுமந்து மூன்று நாள் சிறையிலிருந்து பின்னர் விடுதலை யடைந்து ஓர் சப்

மாஜிஸ்ட்ரேட்டு அதிகாரம் பெற்று அங்கு சுகமாய் வஸித்தாலும் உன்னை யிட்டு க்லேசத்துடனிருக்கிறான். ஆதலின் நீ இனியும் என்னை பொருவிசை காண்பா யென்றிசைத்து காளிமறைந்தனள். பானுமார்த் தாண்டனெழுந்து சரேலென நடந்து ஆதித்தனுதிக்கும் முன்னர் ஜம்புகாத்ரிப் பட்டினத்தைக் கிட்டி அங்கும் தம்மை இன்னாரென்று யாரும் அறியாதபடி அங்குள்ள உளவறிந்து காளி கூறுபதுண்மை யெனக் கொண்டு சௌகப் பட்டினத்தை யடுத்துள்ள சாலைப் புதூர்க் கிராமத்திலிருக்கும் தங்கை தங்கம்மாளின் கோல மெவ்வாறாயிற்று; காண்போ மென்று அதிதுக்கத்துடன் பிரயாணமாகி அன்று தானே நடந்து அந்திநேரம் செவ்வான சமயத்தில் சாலைப்புதூர்ப் பட்டினம், சேர்ந்ததும் காளிகூறிய ரத்நசுவாமி முதலியார் யாரென விசாரித்து அன்னவரது வீட்டைகினர் பாலசன்னி யாசியாம் பானுமார்த் தாண்டன்.

பரம பக்தனாகிய அந்த இரத்நஸ்வாமி முதலியார் நிச்சங்கையாய்த் தம் வீட்டி லப்போது ஆகமனம் செய்த அந்த பாலச் சன்னியாசியைக் கண்டதும்.

"இருந்தோம்பியில் வாழ்வதெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்றபடி அவரது மனம் மகிழ்வெய்த வந்தனை வழிபாடுகள் நடத்தி அற்கிய பாத்திய ஆசமன்னிய உபசாராதிகள் யாதொன்றும் வழுவுறா வண்ணம் செய்து அந்த ரிஷீசுவரரை நோக்கி மஹாப்ரபுவாகியதாம் இங்கு எப்போது விஜயஞ்செய்தீர்களோ அப்போதே யானும் புத்ர மித்திரர்களும் புனிதாராயினோம். இப்பாக்கிய மெனக்குக் கிட்டு மாறு யான் முன்னாள் செய்த தவப்பயன் யாதுளதோ? ஓ ஐயனே! யான் எப்போதும் உமது பெயர் கூறிக்கொண்டிருக்க அனுக்கிரகம் செய்ய வேண்டும். வள்ளலே என்னக்கேட்ட அந்தச் சந்நியாசி ஓ பக்த புருஷா.

"செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பா
நல்லவிருந்து வானத் தவற்கு"

என்றவாறு அதிதி சத் காரப்பிரயமுடைய நீவிர் இகத்திலும் பரத்திலும் சிரேயசுடன் க்ஷேமமாய் வாழுவீர். இனியும்,

எமக்கு வயது சொற்பமானாலும் நான்சஞ்சரியாத விடம் சுருங் கும். எங்கும் பார்த்தேன். உம்மைப்போல் திவ்யகுணம் நிறம்பி யுள்ள புருஷசிரேஷ்டன் ஒருவரையும் கண்டிலேன். ஆனல் அந்த மட்டிலும் நீவிர் ஒன்றிலும் குறைவடையீர். உமது வேண்டு கோ ளிற் கிணங்கி இங்கு சிலநாள் வசிப்பதிற் றடையில்லே. அங்ஙன மே னின் நம்பணிவிடைக் கோர் பெண்ணும் புருடனும் தேவையா கும். என்றதுகேட்ட இரத்நஸ்வாமி முதலியார் ஒ பிரபு! அப்படியா னல் எமக்கு ஓர் பெண்மகவும் அம்மகவின் கணவனொருவரு மிருக் கிறார்கள். அவ்விருவரையும் தங்களேவலுக்குப் பணிக்கிறேனென் னக் கேட்டு ஆனல் குற்றமில்லே யென்க, மிகுந்த களிப்புடைய அந்த முதலியார் தமது பெண்ணேயும், அப்பெண்ணின் புருடனே யும், அருகே வருத்திச் சன்னியாசிக்குத் தொண்டு புரியும்படி திட்டம் பண்ண, அவ்விருவரும் அதை தேவவாக்கென்று கருதி அந்த மகரிஷிக்குத் தொண்டு செய்து வருமொரு நாளிரவு இரத் நசுவாமி முதலியாரது புதிய ஜாமாதா ஏதோ மனோவிசாரத்தாற் பீடிக்கப் பட்டவனாகி போஜனம் பண்ணச் செல்லா திருந்ததைக் கண்ட அவரது மனேவி போஜனத்திற்கு வருந்திக் கூப்பிட்டும் போகாமற் பெண்ணே! நீ போஜனமருந்திச் சீக்கிர வாவென விடைப்பணித்ததைக் கேட்ட அம்மங்கை இந்துக்களாகிய நம்மவ ருள் புருஷருக்கு முன்பு பெண்கள் போஜனம் செய்து கொள்ள விதி யில்லேயே என்றது கேட்ட அந்த யுவாகூறத்துடங்கினர்.

ஹே! பிரயதமே! புருஷனே விட மனேவி தாழ்ந்தவள் மனே வியைவிடப் புருஷன் உயர்ந்தவன் என்னுங் கொள்கை பொது வாக நம்மவருள் ஏற்பட்டிருப்பினும் எனக்குமட்டும் அதுசரி யென்று புலப்படவில்லே. ஏனெனின் ஸ்திரீபுருஷர்கள் ஒத்த அன் பும், ஒத்த குணமும், ஒத்த எண்ணமும் உடையவர்களாய் இல்லற தருமத்தைச் செலுத்த வேண்டு மென்பது வேதத்தின் துணிபு. அவ்வாறில்லறத்திலிருந் தொழுகுவதற்கு ஒருவரை யொருவர் ஏற்றக் குறைவாய் எண்ணுமல் சரிசமனுய்ப் பாவித்து இருவரும் ஒத்த அன்பு கொண்டு ஒழுகுவது தான் நியாயமும் இன்றியமை யாததாகியு மிருக்கிற தென்பதை நீ அறியவில்லேயா? இது நிற்க, ஒரு பெண் தன்னேவிட புருஷன் உயர்ந்தவ னென்றுவது, அன்றி ஒருபுருடன் தம்மைவிட ஸ்திரீ தாழ்ந்தவளென்றுவது கருதினல்

ஒக்க அன்பும் விசுவாசமும் அவருள் யாங்ஙனமேற்படும்? ஹே! சுசீல! இவருள் ஒத்த அன்பு ஒருபோதும் உண்டாகா தென்பது உனக்குத் தோற்றப்பட வில்லையா? ஆணுப் பிறந்திருக்குமொரு காரணத்தாலேயே தன்னைவிட உயர்ந்தவனுய் ஒருஸ்திரீ நினைப்பா ளெனின் அந்த எண்ணத்தால்தானே அந்தப் பெண் அந்தப் புருஷனிடம் உண்மைக் காதலால் நேசியாமல் அவனைத்தாம் உயர்ந்தவனுக எண்ணிக்கொண்டமை பற்றியும், அவனது இயல்பு காரணத்தாலும் பொருள் ஹேதுவாலும் அவனை நேசிப்பதாக விளங்கவில்லையா? ஒருவனுடைய உயர்வையும்; இயல்பையும்; பொருளையுங் காரணமாகக் கொண்டு ஒருஸ்திரீ யொரு புருஷனைக் காதலிப்பாளே யெனின். அந்தக் காலத்தில் அந்த நிலைபற்றபொருட் கண்மூலம். அதாவது அந்தப் பொருளிலேயே காதலுடையவளாவாளேயன்றி அவனைப் பற்றிய காதலாய் ஏற்படா தென்பதுறுதி. ஆதலின் அன்னவளது காதலும் அன்பும் கட்டுப் படுத்தி ஏற்படுகின்றதாக ஆகுமே யன்றி உண்மையிலேற்பட்ட காதலே யல்ல. நிற்க, புருஷனைப்பற்றி ஏற்படுகிற உண்மைக் காதலுக்கும் பொருட்களைப் பற்றி நிகழும் பொய்மைக்காதலுக்கும் உள்ள வியத்தியாசம் இரவும் பகலும் போலாகும். இவ்விதம் பெண்களை பொய்மைக் காதலுக் குட்படுத்தி அவரை நாசமாக்குவதை விடக் கேவலம் வேறென்ன யிருக்கிறது.

இனி ஒருஸ்திரீ தன்னுடைய புருஷனை எல்லாவிதத்திலுந் தமக்குச் சமதியானவனென்று கொள்வாளேல் அவனை முற்கூறிய காரணங்களாலன்றி அவன் பொருட்டே காதலிக்குங் கட்டாயம் ஏற்பட்டு விடுகிறது. ஒருபெண் தம் கணவனை உண்மைக் காதலாய் நேசிக்கும் பாக்கியம் கிட்டுகிறதே. அந்தப் பெண்ணடைவது திவ்யசுவர்கம். அப்படியுள்ள பெண்கள் உலகத் தாரைத் திருப்தி செய்தற்கும் உற்றூர் உரவினரின் நன்கு மதிப்பைப் பெறுதற்கும் வெளிப்பகட்டாய் நடந்து கொள்வதற்கும் சிறிதுஞ் சம்மதியாள். அவளுக்குக் கணவனது உண்மைக் காதலே பெறிதன்றி மற்றொன்றும் பெரிதல்ல.

ஒரு புருஷன் தம்மனைவியைத் தமக்குத் தாழ்மையுடையவளாய்க் கருதினுல் அவளிடத்தில் அவனுக்கு உண்மையன்பு ஏற்படுமா? ஏனெனின் அவளைவிட தாம் உயர்ந்தவனென்றும், அவள்

தமக்குத் தொண்டு புரிவது அத்தியாவசிகந்தாமென்றும் எண்ணி எவ்வளவோ கொடுமையாய் நடத்த இடையாகிறதல்லவா ? இனியும் "அன்பு அன்புள்ள விடத்தையே நாடும், அம்பு அம்புள்ள விடத்தேயே தேடும்" என்றபடி அன்புள்ள விடமே வாழுமே தவிர அன்பற்ற விடம் கேவலம் விவாஹ மென்னும் பந்தத்துவத்துக்கு உள்பட்டு விட்டோமே. ஆதலின் எப்படியாவது உலகவாழ்கையை கழித்துத் துலைக்கவேண்டுமே என்று நினைத்து வேண்டா வெறுப்பாய்ச் சண்டைசச்சரவுடனும் துன்ப துக்கங்களுடனும் மனோவமைதியும் சந்துஷ்டியு மில்லாமல் இவ்வில்லற மென்னுந் நல்லறத்தை ஒழுங்காய் நடத்த வகையற்று பூமிக்குப் பாரமுஞ் சோறுக்குச் சிலவுமாய் இருந்து நடைப்பிணங்களைப்போல் அலைந்து திரிவது சிறந்ததா? அன்றி தம்மைப் போலவே ஒரு ஸ்திரீயை நினைக்கும் புருஷனுக்கும் புருஷனைச் சிந்திக்கும் ஒருஸ்திரீக்கும் பரஸ்பரம் உண்மையாய் ஏற்படும் அன்புரிமையை ஒன்று படுத்துவதற்கு சாதகமாய் ஏற்பட்டிருக்கும் விவாக மென்றுஞ் சிறந்த முறையைப் பந்த மென்றெண்ணமல் அதைத் தெய்வீகசம்பந்தமான ஓர் உபசார சக்தி என்று கருதித் தம்பதிகள் அன்புடனதையேற்று இருவரும் ஒன்றுபட்டு ஒத்த அன்பும் குணமும் உடையவர்களாகி இல்லறதருமத்தை ஒழுங்காகவும் முறையாகவும் மனமுவந்து நடத்தி இம்மண்ணுலகில் அனுபவிக்கக் கூடிய சிறந்த சுகங்களை யனுபவித்து விண்ணுலகில் புகழையுங் கீர்த்தியையும் நிலை நாட்டு வதோடு வறுமைக்குரிய விதையையும் இல்லறத்திருந்தவாறே நீக்குதல் சிறந்ததா ?

ஹே மடந்தாய்! உண்மையன்புடையகாதலனோடு உண்மையன்புடன் கலந்து உறவாடும் பெரும் பாகியத்தை விட நின் போன்ற கற்புடைய பெண்களுக்கு சிறந்தபாக்கியம் வேறென்னயிருக்கிறது? இதை விட இன்பம் பயக்கும் பாக்கியம் வேறில்லை. ஸ்ரீ மாணிக்கவாசகப்பெருமானுடைய திருவாசகத்தை கவனிக்கும்போது தமக்குண்டாகு மின்பமுண்மைக்காதலனுடைய கல்வியைக்கருதுகின்ற கற்புடையாளின் இன்பத்தைப் போலிருக்கிற தென்னும் பொருட்படுத்தி ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள்.

"சேமமிகுந் திருவாத வூர்த்தே வென்றுலகு
புகழ் மாமணியே நீயுரைத்த வாசகத்தை எண்ணு தோறுங்

காமமிகுங் காதலன்றன் கலவிதனைக்கருதுகின்ற
ஏமமுறுங்கற் புடையாளிபினு பெய் துவதே"

என்றுஅருளிச் செய்திருப்பதேபோதுபான அந்தாட் சியல்லவா? ஒத்த அன்போடு தலைவனுந்தலைவியும் இல்லற தருமத்தை நடத்தி வந்தால் அவர்களுக்கும் தெய்வத்துக்கும வ்யத்தியாசமில்லை யென்பது.

"வையகத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்'

என்னும் வள்ளுவன் வாக்கால் வலிபுறுத்தப் படவில்லையா? இல்லறதருமம் நடத்தப் படடவேண்டிய முறையும் ஸ்திரீ புருஷர்கள் ஒருவரோடொருவர் அன்பு பூண்டொழுக வேண்டிய நெறியும் இவ்வாறிருக்க இந்த உண்மையை உணராது பெண்கள் தம்மை விடத் தாழ்ந்தவர்கள், ஆதலின் அவர்களுக்கு ஒருவிஷத்திலுஞ்சுயாதிகாரம் கிட்டாது. எல்லாம் புருஷனுக்குப் பின்தான் பார்த்துக் கொள்ளல் வேண்டும். புருஷன் உண்ணுவிட்டால் பெண்ணும் உண்ணக் கூடாது. பட்டினி கிடந்து தான் சாக வேண்டும் எனறு சொல்லும் புருஷர்கள் அறியாமையுள் மூழ்கினவர் களேயன்றி அவ்வாறு செய்தற்குப் போதிய நூலுமில்லை. காரண முங்கிட்டாது. ஆதலின் நீ சுறுக்கிற் சென்று உண்டுவா வெனக் கூறிய புருஷன் கட்டளையை

"தற்காத்து தற்கொண்டாற் பேணித்த கைசான்ற
சொற்காத்து சோர் விலாள் பெண்"

என்றபடி வேத வாக்கியமாகக் கொண்டு தாம் போஜன சாலையை யைடந்தாள்

18-வது அத்தியாயம்.

இரவு எட்டு மணி யிருக்கலாம். அந்தப் பெண் போஜன சாலை யடைந்ததும் இங்கே சன்னியாசியு மந்தப் புருஷருந்தனிமையாயிருக்குந் தறுவாயாயிருந்தது. அப்போது சன்னி

பாசி அந்தப் புருஷனை நோக்கி, ஐயா! பண்டைக் காலத்தில் நாய கருக்கு முன் நாயகிகள் போஜனம் செய்து கொள்ளும் வழக்க மில்லாதிருக்க, சிறிது முன் தாமிங்கு கூறியது "பழயனகழி தலும் புதியன புகுதலும் வழு வலகால வகையினானே" என்னும் நன்னூற் சூத்திரப் படி தற்காலத்திய நாகரீகத்தான். பெண்கள் நாயகருக்கு முன் போஜனம் செய்து கொள்ளலா மென்பது தகுதி யுடையதெனக் கூறிய நூல் அருமையினு மருமையே. ஆனால் அது போன்று மற்றிதர விஷயாதிகளினு மிந்நாகரீகமடுக்கு மென்று நானெண்ண வில்லை எனின் சில விஷயங்களைத் தவறபி னும் புலாலுண்ணும் விஷயத்தில் மட்டும் அந்த நாகரீக மேற்ப டாது என்பது திண்ணம். என்றது கேட்ட அந்த வாலிபர், ஓ ஐ யனே! நம்மிந்துக்கள் தம் பெண்ணை நடத்தும் அநீதிகளுள் முக் கியமீதொன்றே. ஒரு ஸ்திரீ தமக்கு எவ்வளவுதாம் வயிறு பசித்து வருந்தின போதிலும் அவள் புருஷன், மாமன், மாமி, மதி னி, நாத்தி, முதலிய சகலரும் உண்டான பின்னர் அவர்களது உச்சிஷ்டத்தை தாம் புசிக்க வேண்டுமே தவிர ஒரு போதும் முன் புசிக்கலாகாவாம். "தாயும் பிள்ளையுமானாலும் வாயும் வயிறும் வேறல்லவா."? அவ்விதம் அவள் முந்திப் புசித்தலால் இதாற் குப் பற்றுகிற கேடென்னவோ? இது எவ்விடத்து நடப்பு. எத் தேசத்தாசாரம். இவ்விதம் செய்ய வேண்டு மென்பது எவ் வேதத்தினது துணிவாயிருக்கலாம்? அந்தோ! பரிதாபம்! இவ்வி தம் பெண்களுக்குக் கொடுமைசெய்யுங் கொடும்பாவிகள் அடை யும் நரகத்தை நான் எவ்வாறு வர்ணிக்கக் கூடும். ஓ ஐயனே! இவ் விதம் நம்மிந்துப் பெண்களுக்கு மாமி மதினி முதலியோர் செய் யுந்திய செயல்கள் பலவுள. அவைகளை விரிக்கிற் பெருகு மாதலின் சுருக்கி விடுத்தோம். நிற்க, இனியும் "பழயன கழிதலும் புதியன புகுதலும் வழுவலகாலவகையினானே" என்னும் நன்னூல் விதிப் படி புலாலுண்ணும் விஷயத்திலும் ஏற்படுமா வென்று தாம் வின வியது விந்தையினும் விந்தையே. யாங்ஙன மெனின் இவ்வின வால் பண்டைக் காலத்தியர் அவரது அநாகரீகமான வேதத்தின் கொள்கையைக் கொண்டு புலாலருந்தி வந்தன ரென்றும் தற்கா லத்தியர் தாம் புதிய நாகரீகராகையின் முற்கூறிய நன்னூல் விதி யைக் கொண்டு புலாலுண்ணும் வழக்கத்தை நீக்குவார்களா?

அது சந்தேகமல்லவா? என்று வினவியதாயன்றே விளங்குகிறது. இத்துச் சங்கை தங்களுக்கேற்பட்டது வியக்குந்தரமன்றே? ஏனெனின் பண்டைக் காலத்தாயினும் இக்காலத்தாயினும் புலாலருந்துவதற்கு ஒரு வேதமெனினும் அனுவதிக்கப்பட்டுளதாயிருந்தாலன்றே? அதையனுசரித்துப் புலாலுண்ணுவார்கள். நிற்க, சிலபேர் புலாலுண்ணினும் அன்னோர் வேத வெறுப்புக்கும் ஈசுவரகோபத்துக்கும் அதனால் பெரும் பாவத்துக்குமாளாவாரேயன்றி அன்னோர் ஒரு போது மீடேறார். இது உறுதியான கொள்கை. உயிர்வதை செய்கிற பாவம் பெரிதல்லவா?

சன்னியாசி:—(புஞ்சிரிப்போடு) ஐயா! சிறுவரே தற்காலத்தாயினும் முற்காலத்தாயினும் புலாலருந்த வேதம் அங்கீகரிக்கப் படவில்லை யென்றும், அவ்விதம் நடக்கும் நாகரீக காலத்தவராயினும், நிகழ்ந்த அநாகரீக காலத்தவராயினும், புலாலருந்தவுமில்லை. அன்றி வேதத்துக்கு அயுக்தமாய்த்தாம் அருந்தினவரும், அறிந்து பவருமாயிருக்கிறார்கள் என்றுதானா நீவிர் கூறுவது?

அந்தப் புருஷர்:—ஆம் அப்படியே. புலாலருந்துவதற்கு தற்காலத்தாயினும் அன்றி முற்காலத்தாயினும் வேதத்தங்கீகரிக்கப் படாமலே சில மாந்தர்கள் புலாலருந்துகிறார்களென்பதும், இது வேபாவமென்பதுந்தாம் நமது கொள்கை.

சன்னியாசி:—(கனநகைபுடன்) நன்று உம்மைமட்டும் கூறிக்கொள்ளாமல் வேதத்தையுங் கூட இழுத்துப் போட்ட நீவிர் ஒருவாறு எல்லா வேதங்களும் முற்றக் கற்றும் குறையிருக்கிறது போல் தோற்றுகிறதே?

அந்தப் புருஷன்:—மகாப் பிரபு! எல்லாங் கற்றவனென்ற எண்ணம் எமக்குச் சிறிதுமில்லை. இனியும் சரஸ்வதியே தாம் கற்றது கைமண்ணள வென்றுங் கல்லாததுஉலகள வென்றுஞ் சொல்லுகிறாள். ஆயினும் சாஸ்திரங்களனேக முண்டு. ஆயிளோ அற்பமாகத்தானிருக்கிறது. அதனைப் படிப்பதற்கும் பல இடையூறுகள் நேரிடுகின்றன. ஆனால் நாம் என்ன செய்ய வேண்டும். நீர க்ஷீர நியாயம் போல் அதாவது பாலும் ஜலமும் கலந்து வைத்திருந்தால் அன்னங்களானது அந்தப் பாலை மட்டும் உண்டு ஜலத்தை மீதியாக்கி விடுவது போல நாமும் சமுத்திரம்

போலிருக்கிற இந்த சாஸ்திரங்களை யொருங்கே திரட்டி சுத்தான சாஸ்திரங்களைக் கையாடி வரவேண்டு மென்பது விங்கவில்லையா? ஆனாலும் நாம் புலாலருந்த அனுவதிக்கப் பட்டுள்ள ஒரு வேதத்தைக் கூறுக.

சன்னியாசி:—(மந்தஹாசத்துடன்) ஓகோ! அவ்வித நூலை இது காறும் நீவிர் கண்ணுற்றதில்லையா?

அந்த புருஷர்:— ஆம் நானிதுகாறு முணர்ந்ததில்லை. ஆனால் தாம் கூறும் நூல் தக்க நூலாயிருத்தல் வேண்டுமே தவிர தூத்துக்குடி இருபதாம் நெம்பர் நூலா யிருத்தலாகாது

சன்னியாசி:—(புன்னகையுடன்) அதென்னய்யா? தூத்துக்குடி இருபதாம் நெம்பர் நூல் எவ்வாறிருக்கும்.

புருஷர்:— அது தெரியாதா? ஜமக்காளம் முதலானது நெய்கிறார்களல்லவா? அந்த நூல்தான் தூத்துக்குடி இருபதாம் நெம்பர் நூலென்றது.

சன்னியாசி:—(குறுநகையுடன்) அந்த நூலுக்கு விசேஷ மென்ன?

புருஷர்:—(பரிகாஸமாய்) ஒன்று மில்லை. ஐயா! தாம் கூறும் சுருதி கரடு முரடா யிருத்தலாகாது.

சன்னியாசி:— கரடு முரடென்றால்.

புருஷர்:— அதாவது ஒரு விதத்திலும் ஒருவராலும் ஆட்சேபணைக் கிடம் பெறா திருத்தல் வேண்டு மென்பது தான்.

சன்னியாசி:— அவ்வித மெனின் இருக்கு, யஜுஸ், சாமம், அதர்வணம் இந்நான்கு வேதமும் ஆட்சேபணைக் கிடமாமா?

புருஷர்:— அதென்னவோ ஆட்சேபணைக் கிட முண்டெனின் ஆட்சேபணை தானே?

சன்னியாசி:— ஆகா! அப்படியா? ஐயா! இவ்வுலகில் யாவற்றுக்கிரந்தங்களுக்கும் தாய் போல் விளங்குவதும் பகவனாலேயே அருளிச் செய்யப்பட்டதுமான இருக்கு, யஜுஸ், சாமம், அதர்வணம் இந்நான்கு வேதத்தைப் பிரம்மன் திருவாய் மலர்த்தருளினதை கேட்டுக் கொண்டிருந்த மனு என்னுமரசன் மாந்தற்கு

எளுதில் விளங்குமாறு அந்நான்கு வேதத்தையுந் திரட்டி தம் பெயருக்கேற்ப மனுஸ்மிருதி யென்றொரு போதிய நூல் வரைந்துளார். அதனை இந்து மதத்தினரான வேதியர் முதலிய யாவரும் கையாண்டு வருகிறார்கள். இனியும் இந்நூலை மறுக்கு மொருமாந்தன் இவ்வுலகத்தாயினும் அன்றி பரத்தாயினும் உண்டோ என்னும் சந்தேகம் கிஞ்சித்தும்வேண்டுவனயில்லை. மனுஸ்மிருதியை ஆக்ஷேபிக்கும் ஆண்பிள்ளைகள் யார்? நிற்க, இந்த மனுஸ் மிருதியை நன்குணர்ந்தால் பிதிர் களுக்கு திதிகொடுக்கு முறையை விளக்கு மிடத்தில் ஆட்டுமாமிசத்தை திதிகாலத்தில் தியாகஞ் செய்தலினப் பிதிர்க்களடையும் பயனின்ன தென்றும் இவ்விதமேபன்றி, கோழி, மான், மீன், முயல் முதலிய ஊண்களையும் விவிததான்யதனுதிகளையும் திதிக்காலத்தில் தியாகம் செய்தலின் அந்தப் பிதுர்க்களடையுஞ் சுவர்க்க மின்னதெனவும் உண்மையில் விளக்குகின்றது. நீவிர் அதனைக் கண்ணுற் றெனினும் தெளிதல் வேண்டும். இனியும். 100· அசுவமேதயாகஞ் செய்தால் இந்திரப்பட்டம் கிட்டு மென்றும், அவ்விதம் யாகத்துக்கு கோவையும் மேஷத்தையும் கொன்றமாருக்கவிசையளிக்க வேண்டுமென்றுங் கூறுகின்ற வேதங்களெத்தனை? இதனை எல்லாங்கண்ணுற்றுத்தெளிந்த பின்னரன்றோ? புலாலநுந்துதல் பாவமாகுமாகாதென்றாராயப்புகவேண்டும். இனியும் இக்கொள்கையைக் கைக்கொண்டே பண்டைக் காலத்துள்ளோர் புலாலருந்தினரென்றும் தற்காலத்தியர் நாகரீகமேப்பாட்டால் அதனை மறைக்க முயன்று வருகின்றார்களென்பதும் விளங்க வில்லையா? இதற்குத் திருஷ்டாந்த மாயன்றோ ஒருகாலத்தில் விசுவாமித்திரர் வேடன் குடில் புகுந்து நாய் மாம்சத்தைப் புசித்ததும், இப்படியே இன்னும் அனேகர் செய்திருக்கிறார்களய்யா; இனியும் இதையிட்டு அதிகம் விரிக்க வேண்டுவன அவசியமில்லை என்றது கேட்ட அந்தயுவா கடுங் கோபக்குறிப்புட னறயத்துடங்கினர்.

ஆம் ஐயா! உண்மையே இந்துக்களாகிய நாம் நம்முடைய சாஸ்திரங்களை ஈசுவரனுல் சொல்லப் பட்டவை யென்று சொல்லிக் கொள்ளுகிறோம். அவைகளி னொருபாகம் சுருதியெனப் படுகிறது. சுருதி என்றால் தருமத்தைக் கேட்பதற்குச் சாதன மென்பது பொருள். இதுவே வேதம். இதில் முக்கியமாய் மதசம்பந்த

மான விஷயங்கள் கூறப்பட்டுள்ளன. அவைபிரம்மனுடைய வாக்கிலிருந்துண்டானபடி எழுதப் பட்டுள்ளதாய் நம்பப் படுகிறது. இவையில் மற்றொரு பாகைக்கு ஸ்மிருதி என்று பெயர். ஸ்மிருதி என்றால் நினைக்கப் பட்டது என்பது பொருள். அதில் நியாய சபைக்கடுத்த வியவகார விதிகள் சொல்லப் படுகின்றன. அவைகளை இருஷிகளால் வெளியிடப் பட்டதாய் எண்ணுகிறார்கள். தர்ம சாஸ்திரத்தின் எல்லாவிஷயங்களை அல்லது சிலவிஷயங்களை விவரிக்கும் பிரகரணக் கிரந்தங்களும் ஏற்பட்டிருக்கின்றன. இவ்விரண்டு விதக்கிரந்தங்களுக்கும் நிபந்தனக் கிரந்த மென்று பெயர். ஸ்மிருதிகள் இருபதெனவும் முப்பத்தாறெனவும் தெகுக்கப்பட்டுள்ளன. இவையுள் தாம் கூறும் மனுஸ்ம்ருதி ஆதிக் கிரந்தமாகவும் முக்கியப் பிரகரணமாகவு மிருக்கின்றன வென்பது உண்மையே. இதை ஸற்உல்லியம் ஜோன்ஸு துரையவர்கள் இங்கிலீஷில் மொழிபெயர்த்துள்ளார். மற்ற ஸ்மிருதிகள் ஏற்பாடுகளிலும் விதிகளிலும் மனுஸ்மிருதியைப் போலிருக்கின்றன. ஆனாலும் மனுஸ்மிருதி தவிர மற்றொன்றும் இப்போது சம்ஸ்கிருதத்திலிருந்து மொழி பெயர்க்கப்படவில்லை. இனியும் தாம் கூறு மிம்மனுஸ்மிருதி கிருதயுகத்திற்கு உண்டானதாக விருக்கிறது. தேசாசாரங்களினால் ஸ்மிருதி விதிகள் வேறுபட்டு காலாந்தரத்தில் அவைகளின் தாத்பர்யங்கள் அப்பிரகாசத்தை யடைந்துள்ளன. ஆகையால் அவைகளினது யதார்த்த பாவமின்னதென்றறிய வியாக்கியானங்களையும் நிபந்தனக்கிரந்தங்களையும் பார்க்கவேண்டிய தத்தியாவசிகமாய்த் தானிருக்கிறது.

இனியும் காலாந்தரத்தால் தருமசாஸ்திரங்களுக்கு வெவ்வேறு சம்பிரதாயங்களேற் பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு வியாக்கியாதாவை யனுசரித்துக் கொண்டு ஏற்பட்டது. பங்காள தேசத்தில் கௌட சம்பிரதாயமென்றும், நாற்பத்பெஹாரில் மைதிலசம்பிரதாய மென்றும், காசி தேசத்தில் காசிஸம்ப்ரதாய மென்றும், மகாராஷ்டிர இராஜ்யத்தில் மகா ராஷ்டிர சம்பிரதாய மென்றும், ஐந்து சம்பிரதாயங் களுண்டாயின. சித்தாந்த விஷயத்தில் இந்த சம்பிரதாயங்களுக்கு ஒன்றுக் கொன்று அத்தனை பேதமில்லை. ஆனாலும் பங்காள சம்பிரதாய மானது பலவிசேஷங்களால் வேறுபட்டிருக்கின்றது. இந்த ஹேதுக்களால் தாம் கூறின

மனுஸ்மிருதியை ஒரு வேதமென்றோ அன்றி சாஸ்திரமென்றோ இங்கெடுத் துரைப்ப தற்குப் போதிய நியாய மில்லை. இனியும் முற் கூறிய வாறு அவை நியாயசபைக் கடுத்த கிரந்தங்களே தவிர இந்த விஷயத்தை யடுக்கும் புத்தகமே யன்று. நிற்க, இனியும் நாம் கூறுவது போல் இருஷிச்ரேஷ்டராகிய விசுவாமித்திரரும் ஒரு ஸமயத்தில் ஊனுண்ண வில்லையா? அப்போது அவரைக் கேட்டவேடனுக்கு அவர் கூறிய நியாய மென்ன? அதை நீ யறிய வில்லையா? அதே விசுவாமித்திரர் அரிச்சந்திர காண்டத்தில் வஸிஷ்டரோடுள்ள தர்க்கத்தில், அந்த விசுவாமித்திரன் தாமே கூறிய தென்ன? அறிச்சந்திரன் பொய் பேசுங்கால் வஸிஷ்டர் தம்தவப் பயனை விசுவா மித்திரனுக்கு நல்கி தாம் பச்சை மாமிசந்தின்று காசி யாத்திரைபோய் வரவேண்டுமென்பதாயன்றோ? அவ்விதமெனின் அந்த விசுவாமித்திரன் தவப்பயனை மட்டும் வேண்டாது பச்சை மாமிசம் தின்று காசியாத்ரை போய் வரவேண்டுமென ஏன் வற்புறுத்தினர்? ஆனல் மாம்ச முண்ணுவது தீதென்றும் கூடாதென்றும் பாவமென்று மிருந்ததாலன்றோ இவர் அங்ஙனம் வற்புறுத்த இடையாயிற்று. பின்னர் வேடனுக்கு எங்ஙனம் சமாதனங் கூறினரோ? ஒருகாலத்தில் பட்டினத்துப்பிள்ளை ஓர் மங்கையைக் கண்டுதமக்கு ஆசையுண்டான வப்போது "விடப்படுமோ பிறபஞ்சவாழ்க்கையை விட்டு மனந்திரடப்படுமோ" வென்றும், தமது காமவிடாய் தணிந்தகாலையில் தன்னை அப்பெண் மணி விரும்பினதும் அவ்வேளை "தோகைபரு மடமாதே யுனைத்தேடினவர் போய் விட்டார், நாடிநீ யென்னை நினைந்திடி லிடுப்பிலே யுதைப்பேன் காணுன்னை நினைந்தாலுதை" என்று பாடினரல்லவா? அதுபோல் அவரவர் ஆத்திரத்துக்குகந்தாப் போல சொல்லிக்கொண்டதென்று விளங்கவில்லையா? இனியும் யாககாலத்தில் புலாலருந்த வேதம் விதிக்கப்படவில்லையா வெனினே? ஆம் விதிக்கப் பட்டுள்ளது. அதுயாருக்கு? அவ்விதம் விதிக்கப்பட்ட வேதத்தின் கருத்து யாது? அந்த (அத்வைதத்தைக் கிளப்பின் நீண்டுவிடும். ஆதலின் பொதுவே நோக்குவோம்) ஐயா! யாக காலத்தில் உயிர்வதை செய்து புலாலுண்ணுபவர் அந்த உயிரை மீண்டும் உயிர்ப்பிக்கச் சக்தியுள்ள வராயிருத்தல் வேண்டுமெனக் கூறியுள்ளது. அவ்விதமுள்ள ஓர் புருஷருளரெனினே? அவரு

க்குங் கடவுளுக்கும் பேதமேற்படாது. அப்படியானல் அவர் சாக்ஷாத்ஜகத்சு வரூபியாகிய பிரம்மமாகி விடுகிருர். எனின் கடவுளுக்கின்னது தாம் செய்யக் கூடுமென்பதை நாம் வற்புறுத்தலாமா? கூடாதே. ஆதலின் அவ்விஷயத்தை மீண்டும் வரைய அவகாச மிங்கில்லை.

இனியும் தாம் கூறிய இம்மனுஸ்மிருதி யொரு போதும் வேதமாகாது. ஒன்றை வேதமென்றோ அன்றி சாஸ்திரமென்றோ அங்கீகரிக்கப் படவேண்டு மெனின் அவை ஆதியோந்தம் சொற் பிறழா திருத்தல் வேண்டும். இவ்விதமுள்ள தம்மிந்து மதக்கிரந் தங்கள் சுருங்கும். ஆனல் இக்காலத்தில் வேதமென்று கையாட வேண்டுமெனின் அவை மிகப் பரிசுத்த முடைத்தாயிருத்தல வசியம். அங்ஙன மில்லாவிட்டால் இந்தக் கிரந்தம் தாம் கூறின மனுஸ்மிருதியையும் விசுவாமித் திரனது கதையையும் ஒக்குமென்பதில் எட்டுணையு மய்யமிலை. இனியும் நீமெத்தக் கட்டிகாறன் போல் இந்து மதக்கிரந்தங்களை ஒருங்கே ஆட்சேபணை செய்து விட்டனையே. அவ்விதம் ஆட்சேபணைக் கிடமில்லா இந்துக் கிரந்தமொன்றை நீபகறு எனிலோ? பகறுவாம். அவற்றுள் ஏதேனு மாட்சேபணை யிருந்தால் தாம் கூறி எம்மைத் தாழ்த்துதல் நன்கு.

"பழபனகழி தலும்பு,கியன புகுதலும் வழுவல காலவகையினனே" என்னும் நன்னூற் விதிப்படி தற்காலத்தில் இருக்கு, யஜுஸ், சாமம், அதர்வணம் என்னு மிந்நான்கு வேதங்களும் வேதங்களாக தொகுக்கப் பட்ட அவ்வாதி காலத்தே நிகழ்ந்தவையாதல் பற்றி அவை பூர்வ வேதமெனவும்

"நீடாழிபுலகத்து மறைநான் கோடய்ந்தென்று நிலைநிற்கவே
வாடாததவவாய் மைமுனி ராஜன் மாபார தஞ்சொன்னநாள்
ஏடாகவடமேரு வெற் பாகவெண் கூரெழுத் தாணிதன்
கோடாக வெழுதும் பிரானைப் பணிந்தன்பு கூர்வாமரோ"

என்னுஞ் செய்யுளாற் ஐந்தாம் வேத மென நிலை நிற்குமாறு கவி லுற்பவித்த அந்தப் பாரதம் மத்திம வேதமெனவும் கூறுமிவைகள் தம் வியாக்கியாதாவை நோக்குற்று அவையின் தாத்பர்யாதிகளும் அற்ப சொற்பம் மாறுபட்டும் போனமையால் மாந்

தர்கள். தருமத்தைத் தாண்டி நடப்பது கண்ணுற்ற கமலஜன் "அணுவைத்துளைத் தோள் கடலைப் புகட்டிக் குறகத் தறித்த குறள்" என்ற வாறு முற்கூறிய இவ்விரு வேதங்களின் அந்த ரார்த்தங்களை விளக்க மீண்டும் பூதலத்தில் ஆதிபென்னும் பறச்சி வயிற்றில் பகவனென்ற வைதிகருக்கு மைந்தராய்ப் பிறந்து செந்தமிழில் அருளிச் செய்த இனிய திருக்குறள் முற்கூறப்பட்டுள்ள வேதங்களுள் மேலானதாய் உத்தரவேதமென்னும் பெயர் பெற்றுலாவுகின்றனவன்றோ? அதுவே வேதம். அதுவே கலை. அதுவே காவியம். அதுவே இதிஹாசம். அதுவே புராணம். அதுவே சரித்திரம். அதுவே சர்வவுமாயிருக்கும்போது, பிறிதொரு கிரந்தத்தை நாமேன் தேடிப் பிடிக்க வேண்டும். நிற்க, இந்த திருக்குறளென்னும் மாட்சிமை தங்கிய புத்தகத்தில் எவ்விடத்தாயினும் புலாலுண்ண அனுமதிக்கப் பட்டுளதா? இனியும் புலாலருந்துதல் கூடாதென்பதாய் வற்புறுத்திபன்றோ அனேகஞ் செய்யுள்களியற்றியுளார். அவையிற் சில.

"அவி சொறிந்தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர் சொகுந்துண்ணாமை நன்று" என்றும்.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லாவு யிருந் தொழும்" என்றும்.

"அறவினையா தெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும்" என்றும்.

இத்தரமன்றோ இன்னும் அனேகஞ் செய்யுளியற்றியுளார். அவ்விதமுள்ள இந்த வள்ளுவன் தம் கிரந்தத்தில் எவ்விடத்திலேனும் புலாலுண்ண அனுமதிக்கப்பட்டுள்ளரா? இல்லவே இல்லை. ஆதலின் புலாலுண்ணுதல் ஒரு போதுங் கூடாவென்பதுவும், அது அநீதி யென்பதையு மறியாதது யார்?

"முட்குத்தி னொத்தறி கிலோர் பிறவுயிருட்புகுத்தி
யூன் றின்பதேன்"?

என்னும் வள்ளுவர் வினவிற்கு மட்டும் விடைபகர்ந்தால் போதுமானது. இனியுமிந்த நியாயத்தைக் கடை பிடிப் போர் தாம் புலாலருந்தினு மருந்தார். அருந்து பவரையும் அருந்த

விடார் என்பது எம்மட்டும் திண்ணம்! என்ற சொற்களைக் கேட்ட சன்னியாசி பேரானந்த முடையவராகி பலே! சபாஷ்! நீவிர் கட்டிக்காறர் தாம். உம்மை இது விஷயத்தில் வெல்ல எம்மாலியலாது. நன்று என்றது கேட்ட அந்த யுவா இல்லை. இதனால் யான் வல்லமைசாலி எங்ஙனமாகக் கூடும்? இது வெல்லாந் தேவரீருக்கே என்ற புருஷரை நோக்கி, உமது வரலாறென்னவென்று அவரது சரிதங்களை ஆராயத்துடங்கின அந்த பால சன்னியாசி அவரை நோக்கி, ஐயா! வாலிபரே உமது புத்திசாதுர்யத்தை யாங்ஙனம் வர்ணிப்பது. உம்மைப் போன்ற அசாத்திய மூளையுடையோரை எங்கும் பார்த்ததில்லை. ஆனாலு மிரண்டொரு வல்லமை சாலிகளுக் கொம்மை உவமிக்கலா மென்றெண்ணுகிறேன் என்று கேட்டு.

அந்த புருஷர்:—அது யாரை ஐயா? பெரிய மகான் கட்கு நம்மை உவமித்தாற் சரியாகுமா?

சன்னியாசி:—இல்லை இல்லை. உமக்கு மவருக்கும் முகவாட்டமொன்று போலிருக்கிறதே.

புரு:—ஐயா; ஆனாலும் தாம் கூறும் வித்வத்சிரோன்மணி யாரோ?

சன்:—இந்நகரிக்குச் சற்றேறதலைபில் சுந்தரபுரி யென்றும் ஜம்புகாத்ரி யென்றும் இரண்டு பெரிய நகரமுண்டு. அதில் உம்மைப் போன்ற வாலிபப் பிராயமுடைய இரண்டு சிறுவர்கள் சினேகிதராயிருக்கிறார்கள். அவரில் ஒருவர் பெயர் செல்வகேசவ முதலியார். மற்றவரைப் பானுமார்த்தாண்ட முதலியாரென்று சொல்லிக் கொள்ளுவார்கள். ஆனால் அந்த பானுமார்த் தாண்ட முதலியார் தாம்தானோ என்று சம்சயிக்கத் தக்கதான நடைநொடி பாவனைகளெல்லாந் தம்மிடங்காணுகிறது. எனின் அவரை நான் நன்கறிவேன். அவ்விருவரும் நமக்கு நெருங்கிய சினேகராயுமுளர். என்று சமாசாரம் பேசிவருந் தருணத்திலேயே அந்தப் புருஷர் அடங்காவியசனத்துடன் அழத்துடங்கினதைக் கண்ட சன்னியாசி இதென்ன? விந்தை! நீவிர் ஏன் கதற வேண்டும்? உண்மையில் நீர் தான் அந்தப் பானுமார்த் தாண்ட முதலியார்? உண்மை பகறுகிறதுதானே. அழும் மட்டுமிப்போதென்ன வந்து விட்டது?

புரு:—ஐயா நீவிர் இந்த இடைக்குளெப்பவாகிலும் அவரதூர் போயிருந்த துண்டா.

சன்:—ஆம் நான் அங்கு போய் விட்டுத் தானே இப்போ தும் இங்கு வந்தேன்.

புரு:—ஆனாலப்போது தங்கள் நண்பரிருவரையும் அவ்வி டத்தில் கண்டதுண்டா?

சன்:—இல்லை. அவ்விருவரும் பம்பாய்க்குப் போயிருப்பதா யும் கொஞ்ச நாளில் வருவார்களென்றும் கேள்விப் பட்டேன். ஆதலால் தாம் நீவிர் அவராயிருக்கலாமோ வென்று சம்சயிக்கி றேனென்றது கேட்ட புருஷன் மீண்டும் அழ ஆரம்பித்தார். இது கண்ட சன்னியாசி என்ன ஐயா; ஒன்றுஞ் சொல்லாமல் அழுது கொண்டிருந்தால் பயன்யாதென்று வற்புறுத்தினதை நோக்குற்ற அந்தப் புருஷராம் தங்கம்மாள் தமது வரலாறு யாவற்றையும் ஒன்றொழியாமல் கூறக் கேட்ட சன்னியாசிக்கு "பிறந்தே டத்தே நோக்குமே பேதை மடநெஞ்சம் கறந்தேடத்தை நோக்குமே கண்" என்றபடி கண்களிற் நீர் ததும்ப ஹா! நீ இவ் விதக் கஷ்டங்களெல்லாம் அடைய நேர்ந்ததா? ஏ ஜகதீசா? என் தங்கையை நீ இவ்வாறு வருத்தினது தகுமா? இதுவும் முன் னாட் செய்ததவப்பயனோ? என்று பிரலாபித்து தம்மை இன்னா ரென்றும் தாமடைந்த துக்கச் செய்தியையும் கேசவமுதலியார் கெதி முதலிய யாவையும் தங்கம்மாளுக்குக் கூற இருவரும் ஒன் ருய்த்துயருற்று ஒருவாறு சமாதான மடைந்த பின்னர் சன்னி யாசி அந்தப் புருஷராம் தங்கம்மாளை நோக்கித் தங்காய் இன்னுங் கொஞ்ச நாள் வரையிலும் நீ சஞ்சல மில்லாமல் இவ்விதமே ஆருங்காணாமலிரு. எல்லாம் நண்பன் செல்வகேசவ முதலியா ரைக் கண்டு உன்னிதம் பகறி வருகிறேனென்று சொல்லி வருந் தருவாயில் போஜனச்சாலை சென்ற பங்கஜாட்சி அறுசுவையுண்டி யுடன் அங்கு ஆகமனமானதும் அவ்விருவரும் தம் பேச்சை விட்டுப் போஜனந்தின்று சயன வரையுற்றுத்துயிலலானார்.

19-வது அத்தியாயம்

அவ்விரவு கழிந்ததும், சன்னியாசி அதி காலையிலெ ழுந்து காலைக்கடன் முதலியன முடித்து இரத்நஸ்வாமி முத லியாரை அருகே அழைத்து, ஐயா! யான் இனியும் சொற்பகாலம் தேசசஞ்சாரம் செய்ய வேண்டிய தாயிருக்கிறது. ஆனல் இன்னுங்கொஞ்ச நாளையில் உனது புதல்வி மங்களதெசையைய டைவாள். இதுவிஷயமாய்த் தாம் சிறிதும் கவலை வைத்தல் வேண்டாம். அக்காலம் நீரும் என்னைக் கண்டு களிப்பீர். ஆதலின் அனுக்கிரகிக்க வேண்டுமென வேண்டிய சன்னியாசியை நோக்கி தேவரீர் சித்த மெங்கள் பாக்கியம். அடியேன் விஷயத்தில் மட்டும் கருணை யிருகட்டு மென்றறைந்ததைக் கேட்ட சன்னியாசி தங்கம்மாளாகிய புருஷனை நோக்கி, அப்பனே, நீ கிலேசம் வைய்யாதே. கூடிய சீக்கிரமுன்னெண்ண மீடேறும். எல்லாம் வல்ல இறைவனிருக்கிருனென்று சொல்லி அச்சிறுமியாம், பங்கஜாட்சியை அருகே யழைத்து அம்மே! உனது சாந்த சௌசில்யாதிகுணங்களுக்குத்தகுந்தவான் இன்னுஞ் சின்னுட்களிற் உன்னெண்ண மீடேற்றுவார். கிலேசம் வையாதே. ஆமாம். இருவரும் சௌக்கிய மாயிருங்கள் மனதிலொன்றுமெண்ண வேண்டாம். நான் இனியும் சில நாளையில் வருவேன். அப்போது உங்களிருவரெண்ணமும் ஈடேறும். தடையில்லை என்று சொல்லி விடைபெற்று அங்கிருந்து திரும்பி, நேரே ஜம்பு காத்ரிப் பட்டினம் வந்ததும் முன் போலவே தம்மை இன்னுரென்று ஆரும் அறியாதபடி வர்த்தமானம் விசாரித்ததில் தங்கமா ளென்னும் பெண் எங்கோ கடலில்விழுந்து உயிர் மடித்தாளென்றும் அவள் மூலியம் ஸோமசுந்தர முதலியார் முதலியோர் அடிதடிக்குள்ளாகி கேஸிலாயிருக்கிறதென்றும் அந்தக் கேஸ் இரண்டொரு நாட்களில் விடுதலையடையு மென்றும் இந்தக் கேஸ-சம்பந்தமாய் குற்றம் சாட்டப் பட்ட செல்வ கேசவமுதலியார் உண்மையில் ஒன்று மறியாதவராதல் பற்றி உண்மை வெளிப்பட்டதும் விடுதலை யடைந்து மாஜிஸ்ட்ரேட்டு அதிகாரம் பெற்று உத்தியோகம் பண்ணிவருகிருரென்றும், அவருக்கு ஜம்புகாத்

ரிப்பட்டினத்திலேயே கமலாம்பாள் என்ற பெண்ணின் பெற்றோர் பெண்ணைக் கட்டும்படி சிபாரிசு செய்வதாகியும், அது அவருக்குச் சம்மதமாயில்லை யென்றும், அறியக் கிட்டினதுடன் நிபராதியான பானுமார்த்தாண்ட முதலியாரை வனமத்தியில் பாரோவஞ்சநெஞ்சர் கொன்று வெகுநாளாயிற்றென்றும் கேட்டு மிகக் களிப்புடன் ஆகா! இப்படி யாயிருக்குது இவிடம் செய்தி. ஆம் உலகம் பேயன்றோ? வாயுடையோர் பலதும் கூறுவார். அதெல்லாம் வகை வைக்கலாகாது. இவிடம் வதந்தி என்னவாயினு மாகட்டும். செல்வ கேசவ முதலியாரைக் கண்டு வருவோ மென்று சுந்தரபுரி நோக்கித் திரும்பினதும் சூரியன் மேற்குக் கடலில் ஒளிந்தான். ஆனாலும் அவன் சரேலென நடந்து ஒருவாறு சுந்தரபுரி கிட்டினதும் சூர்யாஸ்த மனமாகி அஞ்செட்டு நாழிகை யிருக்காம். அப்போது கார்மேகங்களால் ஆகாசம் மூடப்பட்டு நக்ஷத்திரங்களின் வெளிச்சங்கூட இல்லாமற் றிசையெல்லாம் அந்தகாரமயமாகி தீபமின்றி வெளிவரும் ஆள்களுக்கு ஒரு அடியானாலும் முன்தெரிவது பிரயாச மாயிருக்கிறது. விருக்ஷலதாதிகள் நிற் விடோல்லாசமாய் நிற்கின்றன. அதிபயங்கரமான சுழல் காற்றினது அறிகுறியாய் சராசரங்களும் சாந்ததையைச் சேர்ந்தது போலே சலிப்பற்று நிற்கின்றன. அந்தப் பங்களா வினது மேற்கு வாசல் திறக்கப்பட்டிருந்தும் அங்குள்ள விளக்கு ஊர்த்துவகதியாய் யாதொரு அணுக்கமில்லாமல் ஜ்வலித்துக் கொண்டிருக்கிறது. திடீரெனவே ஏதோ ஒரு சத்தம் கேள்க்கப் படுகிறது. அது கார் இளக்கத் தானுண்டாயின தென்றெண்ணி அந்த வாசலை அடைக்கிறார்கள். இது எல்லாம் கண்டு போது விடிந்து பார்த்துக் கொள்ளுகிறதென்றெண்ணி அங்கோரிடத்தில் மெள்ளக் கிடந்துறங்கினான் பாலச்சன்னியாசி.

மறுநாள் சொர்ப்பமான பிரகாசத்தைக் கண்டு உதயமாயிற்றென்று ஜனக்கள் விசுவசித்தாலும் ஆதித்தியதர்சனம் அசாத்தியமா யிருக்கிறது எனின் சற்வோன் மேஷணத்தினையும் பரிகண்டனம் செய்கின்ற தபஸோடு கூடியிருந்தது அன்றைய அருணோதயம். உதயவிராசிகளைக் களைந்தும் ஆகாசமண்டலத்தினுடைய மனோஹரமான நீல நிறத்தைக் கார்மேகக் கூட்டங்கள் மறைத்துக் கொண்டிருக்கிறது. இனியும் புகைபோன்ற நிறத்தைஉடைய

ஒரு கருத்த நிறம் பூமிக்கொருபரிவேஷம் போல் ஆவிருதமாறிக் காணப்படுகிறது. இடிமேகங்கிளினது காற்நிறம் ஆகாசத்தில்வியாபிக்கப்பட்டுள்ள ஜலவிந்துக்களில் பிரதிபிம்பிக்கிறதினுடையவும் சேர்க்கையிலிருந்துண்டாயிருக்கிறது. இனியும் சில ஜீவராசிகளின் சப்தங்களிற் சமாதான மில்லாமல் இதரப் பட்சிகளின் சப்தம் செவிடு படமுழங்கிக் கேள்க்கப் படவில்லை. எனின் ஹுங்காரத்தோடு மேற்குக் கடலிலே அலைகள் பூபேதனம் செய்வது போல்கர்ஜிக்குங் கம்பீரத்வனி ஒருமுறையில் கேள்ககப் படுகின்றன. உதிப்பதற் குள்ள முதல் யாமம் கழிந்ததும் அதிகோரமான மழையும் மாருதப்பிரசாரமும் ஆரம்பித்தன. விருக்ஷத்திலும் வீட்டிலும் பூமியிலும் அதிவிருஷ்டி தூறுகிற மூன்று விதமான சப்தங்கள் இடைவிட்டுசிரவண புடைபேதனஞ் செய்கிறதுகள். இவ்வாறு சூரியன் வெளிக் கிளம்பினதும் சுந்தரபுரி என்னு மந்நகர் மேற்கு ரதவீதியில் கும்பல் கும்பலான ஜனங்கள் கூட்டங் கூட்டமாக நிற்கிறார்கள். இனியும் அவர்கள் அங்கங்கே கூடி நின்று எதையோ பேசிக் கொள்ளுமவர்களில் முக்கியமும் இராஜபரி வாரங்களான ஜனங்களா யிருக்கிறார்கள். அந்த ஆட்களினது மொத்தத்துகை முன்னூறுக்குக் குறைவடையு மென்று தோற்றப் படவில்லை. அவரெல்லோரும் நிருத்த வீர்யராக்கப் பட்டுள்ள பாதாள லோகப்பன்னகங்களைப் போல் யாதொரு சேஷ்டை இல்லாமல் நிற்கிறார்கள். பிரயாணிகளான மனிதர்கள் அவரவரது யாத்திரையில் கிழக்கருகில் ஒதுங்கியும் குடைகளை அவ்வசம் தாழ்ந்துபிடித்து இடையில் மேற்குப் பக்கத்தை அதிபயபக்தியோடு ஒருமுறை கடாட்சிப்பதும் இவ்விதமே அங்குமேற்பக் கத்துள்ள ஒரு மாளிகையை மேல் அடுப்பதும் கையிலுண்டா யிருந்த சாதன மனைத்தையும் பூமியில் வைத்து மற்வேஷ்டியை அரையிலோ அன்றி தலையிலோ வயதுக்குத் தகுந்தபடி கட்டி பூமியில் விழுந்து தண்டம் சமர்ப்பிப்பதும் மற்று முண்டான விசேஷக் கிருத்தியம் பலசெய்வதுங் காணப்படுகின்றன. நிற்க,

மேற்கூறப்பட்ட மாளிகை சுந்தரபுரி யென்னும் அந்தவூர் வடக்கு ரதவீதியி லிருக்கிறது. இங்குள்ள தெருக்கள் இதர நகரங்களைப் போல் ஒரு இராஜகிருஹத்தை யெனினும் அன்றி ஒரு ஆலயத்தை யெனினும் சுற்றியுள்ள தல்லாமல் சாதாரண

மாய் வீடுகளைச் சுற்றி ரமேதோற்சவத்துக்காக அமைக்கப் பட்டுள்ளது தான். இவ்வித முள்ள வீதிகளுள் தெற்கு வீதி மாஜிஸ்ட்ரேட்டு கோர்டுக்குச் சமீபமாயிருக்கிறது. அந்த மாளிகை யினுள்ளிருந்து பிரதானர்களான சிலர் சிலவேளை ஓடிவருவதும் பலரைக்கைகாட்டிக் கூப்பிட்டு ஒவ்வொரு வேலைகளில் நியமித் தனுப்புகிறது மாயிருக்கிறது. அந்தமாளிகையின் மேலிருந்து காரியக்காறனென்ற ஒருவன் யாரோ கூப்பிடும் சப்தங் கேட்டு எஜமானே என்று செல்லி தங்கக் குழூழ் பிடித்த வேத்திரக் கோல்தாங்கிக் கொண்டு கும்போதரனைப் போல மேலே ஏறியும் உடன் கீழிறங்கியும் அங்கு மிங்கும் ஓடித்திரிந்து ஒவ்வொரு வரையும் வேலைகளின் பொருட்டு நியமிப்பதும் பின்னரும் சப்தம் கேட்ட போது இவ்விதமுள்ள செய்கைகளை இரண்டாவது ஆவர்த்தனம் செய்வதுமாயிருக்கிறான். சுந்தரபுரி டவுண் சம்மாஜிஸ்ட்ரேட்டு கனம் செல்வகேசவமுதலியார் B. A. B. L. அவர்களுடைய சேவகன்மார் தாம் அவ்விதம் தெருவில் நிற்பதும், அவருடைய ஆக்ஞையை அனுசரிப்பது மாயிருந்தது. இவ்விதம் அங்குமிங்கும் ஓடித்திரிவதும் பிரயாணிகளான ஜனங்கள் பலரும் கண்டு சாஷ்டாங்க தண்டனிட்டதும் மாஜிஸ்ட்ரேட்டு எஜமான் அவற்களை உத்தேசித்த தாயிருந்தது. ஆனாலவர் அந்த மாளிகையினிரண்டாவது மெத்தையில் கொஞ்சமும் பொறுமை யில்லாத ஸ்திதியிலிருக்கிறார். அவரது நிறம் பரிபூர்ணபக்வ அவஸ்தையைச் சமீபித்துப் பத்தரை மாற்றுத்தங் கத்தை வெட்கிக்கச் செய்யுமாறான ஜம்பீர பலத்தினது நிறத்திலும் அதிசோபாயமாயிருக்கிறது. அவருடைய ரூபம் புண்டரீகபவன் சிருஷ்டி கௌசல மண்டலமாய் விளங்குகின்றன. இனியும் அவரது கேசபாரமானது சேதோமோகினிகளான ஸ்திரீரெத்நங்களின் கேசபாரத்தைத் தோல்வியடையச் செய்கிற நீண்ட சேவல் கோழியினுடைய அக்க வாலைப்போல் பக்கத்தில் வளைந்து கிடக்கின்றன. காதிலணியப் பட்டுள்ள கடுக்கனில் காற்றுத் தட்டுவதாலுண்டாகும் வெளிச்சமானது காற்மேகங்களின் இடையில் விளங்குகிற நக்ஷத்திரங்களைப்போல் சோபிக்கிறது. மாறுனுடைய வீதியும் அரையினது ஒடுக்கமும் கைகளுடைய நீளமும் உருண்டுள்ள இருதோள்களும் அவரிடம் காணப்படுவன

போல் குஸ்திக்காறரான வஸ்தாத்களுக்குமிராது. செல்வகேசவ முதலியாரது கைவீச்சும் மூச்சடக்கி மேல் நோக்கியுள்ள பார்வையும் காணும் மாந்தர் அவரது மகிமையை நினைந்து மிகவு மதிசயப் படுவார்கள். இனியும் கழுத்தில் நல்லதான ஒருபச்சைக் கற்பதக்கமும் கைகளில் இரண்டு காப்புகளும் விரல்கள் எட்டுக்கு மோதிரங்களும் அணியப்பட்டிருக்கிறது. இடுப்பில் கட்டியுள்ள பட்டுக்கரைவேஷ்டி அவ்விதம் உடுப்பதாலுள்ள பிரயோஜனத்தை பயக்காதிருக்கவில்லை. அரையிலணியப் பட்டுள்ள பொன் அரை நாணும் தேஜோமயமாய் ப்ரகாசித்துக் கொண்டிருக்கிறது. நிற்க,

முற்கூறிய செல்வ கேசவ முதலியாருக்கு ஐப்புகாத்ரிப் பட்டினம் கனம் ஏகாம்பரமுதலியார் குமாரத்தி கமலாம்பாள் என்னும் பெண்ணை விவாகம் செய்து கொடுக்க வேண்டுமாய் அவளது சுற்றத்தார் சிபார்சுகள் செய்து வருவதாகியும், அது விஷயம் முதலியாருக் கிஷ்டமில்லை யென்றும், அவரது பெற்றோர் முதலியாரை அது நிமித்தியம் ரொம்ப வேண்டுவதாயும் உள்ள விருத்தாந்தங்கள் நேயர்களறியக் கூடு மன்றோ? இனியும் இது விஷயமாய் நாடோறும் செல்வகேசவ முதலியாருக்கும் அவரது அன்னை தந்தையருக்கும் சிலவிவகார விதிகள் அடிக்கடி ஏற்படுவதுண்டு. ஆனால் இவர் அதைமோர் பொருட்படுத்தாது தம் மூலியம் சாகரத்தைச்சரண கதியடைந்த பெண்ணின் பெருந்தகையை எண்ணி எண்ணி ஆறாத்துயரத்தாழ்ந்த வராகவே நாடோறும் தம்மந்தக் கரணத்தை அதில் அற்பணம் செய்து கொண்டே வருகிறார். இதிவ்வாறிருக்க அங்கொருபக்கம் அவரது தாய் தந்தையர் முற் கூறிய பெண்ணைப் பேசி நாளை தினம் நிச்சிததாம்பூல மென்று தீர்மானித்து விளங்க, சுந்தரபுரி அந்த கிருகத்தில் மாஜிஸ்ட்ரேட்டு அவர்களின் மாதாவான விசாலாட்சி அம்மை செய்யும் காரியத்தால் கல்யாண தினம் இன்னும் ஐந்தோ ஆறோ உள்ளது போல் தோற்றப் படுகின்றன. உரல்களத்தில் பணியாரங்களுக்கு அருசி இடிப்பதில் தெள்ளினது சரியாகவில்லை என்றும், உப்பேரிக்கு சற்கரை போராதென்றும், பாவுருக்கு மிடத்தில் முறுகிப்போகக் கூடாதென்றும், குணதோஷங் கூற அந்தவிசாலாட்சி அம்மாள் ஆஜர். சமயல் அறையில்

எருசேரிக்குக் காய் கறி துண்டிக்கிற விடத்தும் வேண்டுமட்டும் வெட்டிக் கொள்ள வேண்டும். ஆட்கள் அதிகம் வந்து விடுவார்கள். அருசிஅதிகம் எடுத்துக் கொள்ளலாம் என்று உத்தரவு விடுவதும் விசாலாட்சி அம்மாள் தான். அங்கங்கே யிருந்து வரும் பழக்குலை முதலியதுகளை வாங்கி வைத்துக் கொள்ளுவதற்கும் வேறொருவருமிலர். விளக்கு முதலியவைகளை துடைத்து வைக்கும் ஏவலாட்கள் சற்றே உபேக்ஷை செய்ததா யெண்ணி ஏண்டி கையிலென்ன கொள்ளையா? வெள்ளிபோல் மினுங்க வேணும் என்று ஏமிப்பதும் அந்தப் பெண்பிள்ளையே. இருபத்திநான்கு திரிபோடுகிற நிலைவிளக்குகள் மூன்றுள்ளதில் ஒன்று பக்களாவிலும் மற்றொன்று உட்கட்டில் வைப்பதற்கும் இனி யென்று போஜச் சாலையில் வைப்பதற்கும் நேற்மையான வேஷ்டியொன்றைக் கிழித்து திரிகள் திருத்தினதும் நமது விசாலாட்சி அம்மாள் இவ்விதப் பெரிய வேலைகளுடன் வெள்ளிக்கிண்ணத்தில் வடிக்கட்டின சிற்பிச் சுண்ணும்பு அடைத்தும், மற்றொன்றில் நேற்மையான பூ வெட்டுப்பாக்குப் பொடித்தடக்கியும், ஏலம், க்ராம்பு, கொட்டை தேங்காய் குங்குமகப்பூ முதலிய எட்டுக் கூட்டம் வாசனைதிரவியங்களை வெள்ளியில் செய்பப் பட்டுள்ள வாழை யிலையில் பரப்பினதும், வெள்ளி தட்டத்திற் பள்ளிப் புரம் தளிர் வெற்றிலை நிறையப் பரப்பி சுமாருக்கினதும் புத்திரனைக் குறித்த அபரிமிதமான சினேகம் ஹேதுவால் எந்த வேலையையும் சடுதியிற் முடிக்கசித்த மாயிருந்தாள் நமது விசாலாட்சி அம்மை. இது நிற்க இவ்வாறுள்ள சிறிது நேரத்துக் குள்ளேயே சமபற் முதலிய ஜோலிகள் முடிவு பெற்றதும் அந்த பங்களா அண்டர் கோனுடைய மணிமந்திரத்தைப் போல் சோபித மாயிற்று. மேற்கு வாசலிலிருந்து சிவந்த சீலைகளையும் வெள்ளை மேற் கட்டியையும் சூர்ய படமெத்தை தலையனை முதலிய வற்றையும் பக்களாவில் நிறுத்தப் பட்டுள்ள கட்டிலி னுடைய சுற்றிலும் விரிக்கப் பட்டு புல்லுபாயுந் தீவற்த்திபோல் எரிகிற தீபத்தினையும் கண்டு சந்தோஷத்தாம்ரபர்ணியிலாழ்ந்துள்ள அந்த விசாலாட்சி அம்மை உட்சட்டிடத்தையடைந்தாள். அப்போது மறுநாள் சூரிய னுதிப்பதற்கு இன்னுமிரண்டு நாழிகை யளவிருக்கு மென்று தோற்றப் படுகிறது.

20-வது அத்தியாயம்

திருவிதாங்கோடு முழுதும் ஒருகாலத்தில் செந்தமிழ் நாடாயிருந்ததெனக் கூறின் தற்காலத்திய நிலைமையை மட்டும் கவனிப்பவரெவரும் ஒப்பவே பொப்பார் எனினும் இப்போது தமிழ் வழங்கும் நாடுகளான மதுரை திருநெல்வேலி யாழ்பாணம் முதலிய விடங்களில் சாமானிய ஜனங்கள் தினப்பேச்சில் வழங்காதனவும் தமிழ் அகராதியில் மட்டும் இடம் பெற்றிருப்பனவுமான ஆசான், தொடுதல், (அணிதல்) தந்தை, குடைதல், (நீராடல்) அச்சன் கிழி (பொக்கிஷம்—பொக்கிஷதாரி) அங்காடி, முதலிய செந்தமிழ் மொழிகள் கொடுமலைபாளக்குடியிருப்பான மாவேலிக்கரை, கோட்டயம், வைக்கம், பறவூர் முதலிய விடங்களில் இன்றும் சாமன்னிய ஜனங்களின் தினப் பேச்சில் வழங்கப்படுகின்றன என்றால் அனேகர் பெரும் வியப்பெய்துவர். இத்தகைய அபூர்வ உதாரணங்களை திருவிதாங்கோட்டில் தமிழ் மொழிக்குள்ள உரிமையை நன்கு விளக்குமெனினும் நற்றமிழ் வழங்கும் நாஞ்சிநாடும் இன்னும் திருவிதாங்கோட்டினோர் பகுப்பாயிருப்பதால் அவ்வுரிமை நிலை நாட்டற்கு மிதமிஞ்சிய பிரமாணமேயாம்.

நஞ்சைப்பயிர் மிகுதிபற்றி நாஞ்சி நாடெனும் பெயர் பிறந்ததெனவொரு பகுப்பாரும் நாஞ்சில் வள்ளுவன் அல்லது நாஞ்சிற்பொருநன் என்னுமோர் சிற்றரசன் ஆளுகையில் உட்பட்டிருந்தது பற்றி அப்பெயர் வந்ததென இன்னொரு பகுப்பாரும் அவ்வவர் புத்தி நுண்பத்துக்கேற்றவாறு நியாயம் கூறி வாதியா நின்றனர். அவ்வறிவாளிகளின் கூற்று உண்மையோ பொய்யோ வென்றாயப் புகுவது நம் கருத்தன்றெனினும் இன்னும் நாஞ்சி நாட்டினைத் தாம் முன் நான்காம் அத்தியாயம் அறைந்துள்ளதென்றும் இங்கு கூறி நம் கதையைத் துடங்குகின்றோம்.

இந்நாஞ்சி நாட்டினின்றும் சுமாற் நாற்பது நாழிக்கு வடமேற்கே சுந்தரபுரி யென்னுமோர் பெரிய சிற்றூரிருக்கிறது. அங்கே அழகிய மாதர் வதனம் வெளிக்காட்டும் சாளரங்களை

யுடைய மாளிகைகளும் கைகட்டுவாய் புதைத்து நிற்கும் மாந்தர்கள் நிறையப் பெற்ற வாயில்களை யுடைய சர்க்கார்ஸ்தலங்களும் ஐந்தெழுத்தோதும் அடியவர் குழாம் நெருங்கிய ஆலயமும் கடல் முழக்கை யவிக்கும் பேரிரைச்சலையுடைய அங்காடி வீதிகளும் அப்போது அவ்வூர் பெற்றிருந்தன எனின் அவ்வூரில் மிக்காரும் உழவரே. காலை மாலைப் பொழுதுகளை வயல்களில் வேலை செய்து போக்கியும் மத்தியான வேளையைத் தாயப்போர், நாய்ப்புலி வேட்டு, முதலிய வஞ்சமற்ற விளையாட்டுகளால் தள்ளியும், அர்வகள் நேரம் போக்கி வந்தார்களாகையால் பட்டின வாஸத்துக்குரிய பொய் புரட்டு கெடுவழக்குத் தொடுத்தல் பெய்ச்சாட்சி கூறுதல் முதலிய தற்கால நாகரீகங்களில் அவர் கைதேர்ந்தவர்களாயில்லை. உண்மை யன்றி பொய்ப் பேசவறியார். பகைவர், நட்பினரென்ற பாகுபாடறியவே மாட்டார். வெளுத்ததெல்லாம் பாலென்னுந் தன்மையை யுடையோர். எளியோர்க்கு எதுவும் ஈயும் இயல்பை உடையவர்.

இத்தகை சான்றோர் சமைந்த அவ்வூரில் முத்துசுவாமி முதலியாரென்னுமோர் உழவரிருந்தார். அவர் செல்வப் பெருக்குடைய வரல்ல ராயினும் தன்குடும்பத்தாரின் வாழ் நாட்களை போக்கப் போதுமான நஞ்சை நிலகங்களை யுடையவர். மிதச்சிலவும் நல்லுழைப்புமுடைய வராதலின் வருஷந் தோறும் சிறிது பொருள் சேமித்தும் வைப்பார். அவர் பனைவியர் பெயர் விசாலட்சி அம்மாள். அவளும் புருஷரைப் போன்ற நற்குணமுடையவள். கல்விப் பயிற்சியை யுடையவளல்ல வெனினும் அநுபவ முறையால் எவ்வகைப் பொருள்களைப் பற்றிய நுண்ணறிவும், எவ்வெக்காரியங்களையும் இனிது முடிக்குமாற்றலும், கணவன், உற்றார், உறவினர் முதலியோர் பால் போன்பும் உடையவள். இத்தம்பதிகளுக்கு ஒரே புத்திரன் தானுண்டு. ஆனாலவர் இளம் பிராயமாகிய இப்போது விவாகமாகாதவர். அன்பும் ஒழுக்கமும் கருணையு முடைய இத்தர்பதிகள் அதிகப்புத்திரப் பேறை அடையாதிருந்த காரணம் யாது? ஒருவன் புத்திரப் பேறு அடையா திருப்பதும் மற்றும் அவனது பூர் வஜன்மாந்திரக்குறையே. நிற்க,

எவ்வகையான இன்பதுன்பங்களுக்கும் விதியே காரணம் எனச் சிலர் சமாதானங் கூறுவர். சிலர் ஏதேனும் துன்பங்கள் சம்பவிக்க விடத்து ஐயோ! பாவி! தெய்வத்துக்குக்கண்ணில்லையா? நேற்றுத்தானே பத்திர காளிக்குப் பூஜை போட்டேன். போனமாசம் தானே போக்கற்ற கிராமம் நாக்கற்ற பாப்பானுக்கு பொற்கிழி தானம் கொடுத்தேன். சென்ற வெள்ளிக்கிழமைதானே செந்தூர்ப் பொத்தை சப்பாணிப் பிள்ளையாருக்கு அப்பமும் வடையும் வழிபாடியற்றினேன். இந்தத் துன்பம் எனக்கு வரலாமா? தெய்வங் களுக்கும் கண் பொட்டையாச்சா? எனக் கடவுளைக் குறை கூறுகின்றனர். ஐயோ! இது என்ன மடமை? ஒருவன் ஓடும்போது கீழே விழுகிறார். குற்றவாளியார்? தெய்வம். பிள்ளைக்குத் தாய் பால் கொடுக்கும் போது பால் மூக்கிலேறி பிள்ளை சாகின்றது. குற்றவாளியார்? தெய்வம்! மரமேறினவன் கீழே விழுகிறான். குற்றவாளியார்? தெய்வம். இவ்வாறாக நாமிருந்ததற்கும், விழுந்ததற்கும், எல்லாம் குற்றவாளி தெய்வமானால். அவ்வேழைத் தெய்வத்தின்பாடு வாணியன்கை மாட்டிலும் இழிவானது தான். ஏன்? மரமேறினவனை விழச் செய்தது தெய்வம்! இம்மட்டோ! உலகத்திலுள்ள ஒவ்வொரு ஜீவராசியும் அனுபவிக்கும் இன்பதுன்பங்களை நிகழச் செய்வது தெய்வம். ஐயோ! கடவுளுக்கு இதுவே அல்லும் பகலும் ஓயாத வேலையாகிவிட்டது. வாணியன் கைமாட்டுக்காவது இராப் பொழுது ஓய்வுண்டு. கடவுளுக்கு அதுவுமில்லை. உலகத்தில் நாகரீகம் பரவப் பரவ தெய்வத்தின் வேலையும் ஜாஸ்தியாகின்றது. "சோடா" சாப்பிடும் போது புட்டிவெடித்து சாப்பிடுகிறவன் கண் பொட்டையாகும் போது கடவுளுக்கு வேலை மிகுதி யாகின்றன. இந்தவேலை நாகரீகம் பரவுமுன்னே கடவுளுக்கேற்படா திருந்த தன்றோ?

சகோதரர்களே! மனிதன் சர்வசுவாதந்திரமுடையவன். மனிதன் எவற்றிற்கும் அடிமை யன்று. முழுமைக்கும் முதற் கடவுள் ஒருவனுண்டாயினும் ஒவ்வொரு ஜீவராசியின் தொழிலையும் நடத்தி வைப்பவர் கடவுளன்று. தொழில் நடத்துபவன் மாந்தனேயாம். நல்வினை செய்வோன் நற்பயன டைவான். தீவினை செய்வோன் தீவினையைப் பெறுவான். ஆகையின் நம் தொழிலானுண்

டாகும் நன்மை தீமைகட்குக் கடவுளைக் குறை கூறுதல் மடமையிலும் மடமை. இவ்வாறாக நாம் உற்று நோக்குவோமெனின் நம்முடைய மதியில்லாமையாலும் முயற்சி யின்மையினாலும் அளவற்ற துன்பங்களை அனுபவித்து வீணாகக் கடவுளைக் குறை கூறி நமது வாழ்நாளை வீணாக்குகின்றோமெனத் தெளிதல் உணர்வோம். இனியும் கடவுளுக்கு வழிபாடியற்றியும், பிராமணருக்குத் தானமுதவியும், நல்வாழ்வடைய விரும்புவோன் சோம்பேறி யல்லது மூடனே யாவான். கடவுள் தற்கால உத்தியோகத்தர் சிலரைப் போல் லஞ்சம் வாங்குகிறவனன்று. குறைக்குவளைத்து வேலை பண்ணாமல் வீட்டினுள் உட்கார்ந்து சந்திப் பிள்ளையாருக்குத் தேங்கா யெறிந்து தரித்திரம் போக்க நினைப்போர் அஷ்டதரித்திரரேயாவர். ஜீவித காலமெல்லாம் பொய் சாக்ஷி கூறிப் பிடித்துப் பறித்துப் பொருள் தேடி கடசி காலத்தில் காசிக்குச் சென்று கர்மந்தீர்க்க விரும்புவோர் அடையும்கதி அதோகதியேயாம். நிற்க,

நமது முத்து சுவாமி முதலியார் ஒருநாள் காலையில் எழுந்து வழக்கம்போல் வெளியே செல்ல எத்தனித்தார். மனைவி விசாலாட்சி அம்மாள் ஒருசெம்பில் ஏதோ பானீயம் கொண்டு வந்து அவர் கையிற் கொடுத்து மிவகணக்கத்தோடு அன்னவர் வாய் மொழியை எதிர் பார்த்து ஒதுங்கி நின்றாள். அவர் பானீய மருந்திச் செம்பை மனைவிகையிற் கொடுத்து தோளிற் கிடந்த துணியால் வாயைத் துடைத்து "அப்பா எப்படியிருக்கிறானென" மனைவியைக்கேட்டார்.

மனைவி:—இது வரையிலும் கண் திறக்க வில்லை. தண்ணீரும் குடிக்கவில்லை. அயர்ந்து தூங்குகிறான்.

முத்து:—வைத்தியர் நோய்க்குறி யொன்று மில்லை யென்றும் மனப்பீடையே தளர்ச்சிக்குக் காரணமென்றும் செல்லுகிறார். "பிணியை மாற்ற மருந்தைக் கொடுக்கலாம். பீடையை மாற்ற நம்மாலாகுமா?"

மனைவி:—பீடைக்குக் காரணமின்ன தென்றறிந்தாலும் போக்கவழியுண்டா? பாற்கலாம். வாய்திரந்து பேசுகிறது மில்லை. நேற்றிரவு விழித்திருந்த பொழுது கண்ணுநீர் சொரிவதும் பரக்கப் பரக்க விழிப்பதும் வேலையாயிருந்தானே யன்றி

என் கேள்விக் கெல்லாம் ஒரு வார்த்தையாவது மறுமொழி சொல்லவே இல்லை.

முத்துசு:—ஆம் "பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்" என்பது போல் நமக்கு துன்பத்துக்கு மேல் துன்பம் வந்து கொண்டே இருக்கிறது. நிச்சித தாம்பூலம் நிச்சயித்து சகல ஒழுங்குகளும் திட்ட மாயிற்றே. இனியும் இதில் பெரும் நஷ்டமும் நமக்கு நேர்ந்து விட்டது. என்ன செய்யலாம். அதில் கூடக் காரிய மில்லை. எல்லாம் கடவுள் செயல். ஆம் அவனை தொந்தரை செய்ய வேண்டாம். நீ எப்பொழுதும் பக்கத்திலேயே இரு. நான் வைத்தியரை அழைத்து வருகிறேன் என்று வெளியே போனார்.

முத்துசுவாமி முதலியார் வெளியே சென்றதும் மனைவியார் அவரது கட்டளைப் படியே பிணியாளண்டை சென்றாள். அவளோ மிகச் சாந்தகுண முடையவள். துன்பத்து ளெலாம் பெருந்துன்பத்திலாழ்ந்து எட்டும் இரண்டு மறியாத இளம் பிராயத்திலேயே அவதரித்த அந்த நோயாளியை யிட்ட பீடை தற்போது தம்மை அணுகிய மையால் வாழ்கை நலமிழந்து மெய் வனப்பு மகிழ்வு அற்று வெய்யலில் வாடிய மலர் போலும், பிணி கூடிய உயிர் போலும், கார்மூடியமதி போலும் சிறப் பிழைந்து, உல்லாச கலியாண வாழ் நாளாமன்று தினத்தை ஒவ்வொரு நிமிஷமாக எண்ணித் துலைக்கின்றாள்.

ஐயோ! இத்தகைய கொடுந்துயரக் கடலுளாழ்ந்து மனஞ் சோர்ந்து மெய் மெலிந்து வாடியுழலும் மங்கையர் யாருளர்? மன மொழி மெய் களால் யாதொரு தீங்கு மிழைத் தறியாத இப் பேதை தன் பொன்னுயிரை இன்னருளி கூறி வதம்புரிய ஆயத்த மாயுள "இயமன் "தருமன்" எனப் பெயர்பெற்ற இவரின் கருணையில்லாச் செய்கையுள் முதற் விது தானே? ஆகவே அவள் மனந் தளர்ந்து நிலை குலைந்து வாழ்க்கை நலந்துறந்து பலபலப் பழம் பேச்சுக்களை நினைந்து அகாலமரண மடையப் போதைக் கண்மூடாக்கண்டிருந்தும் அன்னிலையிலேயே சிர்திருந்த முயலா. இவள் மதி என்னே! என்னே!! என்னே!!!

இனியும் எள்ளள வேனும் இரக்ககுண முடைய லெவர்கள் இக்கொடு மையைக் கண்ணுற்றும் உயிர் வகித்திருப்பார்களோ?

ஆத்மகதிக்காக தீர்த்தஸ்தலங்கள் தேடி போடியும், கண்மூடி ஜெபித்தும், தானங்கள் புரிந்தும், கபடபக்தி காட்டிேருக்குத் தான் கருணு நிதியாம் கடவுள் அவர்களிடம் திணையள வேணும் கருணை செலுத்துவார் போலும். அந்தோ! அங்ஙன மெனின் இப்பேதை யர்கள் மனம்புழுங்கி அழுது சிந்துங் கண்ணீர் தாம் வீண் போகுமா? அம்மா! கொடுமை!! கொடுமை!!! ஈசனே! இவ்வேழைபர் மீதுகவனஞ் செலுத்தும்படி கிருபை செய்யட்டும். ஈசனே! இப்பேதையர்களின் பரிதாப நிலைமை உந்தன் மனத் தில் பதியும்படி திருவருள் புரியட்டும். ஈசனே! இப்பாவங்களுக்கு மனச்சமாதானத்தையும், மனோவலிமையையும், மனோ வமைதி யையும், சந்துஷ்டியையு மீன்றருளட்டும்.

கணவன் சொற்படி ஏழை விசாலாக்ஷி பிணியாளி யண் டைவந்தாள். பிணியாளியோ சலனமற்று நித்திரை செய்கின் ருன். எழில் நிரம்பிய அவள் வதனம் இருட்டினுட் பெட்ட இரத் தினம் போல் மங்கி யிருக்கின்றது. கண்களும் கன்னங்களும் பற் களும் கறுத்திருக்கின்றன. இடை இடையே பெருமூச்சு விடு வதைக்கண்டு மனந்தேறினள். அவ்வண்ணம் பத்து நிமிஷங்கள் சென்றன. அவ்வாறே சிறிதும் சப்தமின்றி மௌன மாயிருந்தது. விசாலாட்சியின் பார்வை பிணியாளி முகத்தினின்றும் கணப் பொழுதெனினும் மாறவுமில்லை. தாம் வந்திருக்கும் விபரம் பிணியாளியை உணர்த்தும் பொருட்டு விசாலட்சி மெல்ல மெல்ல இருமினுள். அவளுடைய இத்தந்திரம் பயனடையாதிருக்க வில்லை. பிணிக் காறன் உடன் கண்திறந்தனன். விசாலாட்சி கால் மாட்டி லிருப்பதைக் கண்டான். முத்துபோன்ற இரண்டொரு துளி கண்ணீரைப் பெருக விட்டனன். பிணி யாளி கண்ணீர் வடிக்கக் கண்டதும் விசாலாட்சி மனம் வெடித்து விட்டது. கடல் மடைதிறந்தது போல் அவள் கண்களிலிருந்து கண்ணீர் பெருகிற்று. தன் மேல் முந்தாணையால் கண்ணீரைத் துடைத்து விட்டு பிணியாளியை அடுத்து அவனது கண்களையும் மெது வாய்த் துடைத்து, ஐயா! துயரப்படவேண்டாம். எல்லாம் ஈசன் செயல். ஆதிபட்டால் வியாதி மிகும் எனக்கூறலும் பின்னும் கண்ணீர் "சரசர" வென்று வடிந்தது. அந்தோ! ஏழையர் துன் பம் ஏழையரே யறிவார்?

விசாலாட்சியின் நயமொழி கேட்ட பிணியாளி அவளின் கையைப் பரிவோடு பற்றிப் பக்கதிலிருத்தி, அம்மா! அகதியனை எனக்கு அபய மளித்துக் காப்பாற்றும். என்தந்தையும் நீரும் நீடூழிகாலம் வாழக்கடவீர். என் பொருட்டு நீங்களேடுக்குங்கவலை பயனுளதோ? எனக்கூறலும் கண்களிலிருந்து கண்ணீர் வடியப் பின்னும் கண்மூடி மூர்ச்சித்தான்.

இத்தருணத்தில் முத்துசுவாமி முதலியாரும் வேறொருவரும் அறையுட் புகுந்தனர். உடன் விசாலாட்சி எழுந்து மிக ஆதரவோடு ஒதுங்கி நின்றாள். முத்துசுவாமி முதலியார் மனைவியை நோக்கி என்ன நடந்தது? ஏன் இப்படி முழிக்கிறாய் என்றதும் விசாலாட்சி நடந்த யாவற்றையும் சொன்னாள். முத்துசுவாமி முதலியார் முகம்வாடினது. பிணியாளி முகத்தை நோக்கியே சிறிது நேரம்அசைவற்று நின்றார். பெருமூச் செறிந்தார். பின் தன் கூட வந்தவரை நோக்கி "வைத்தியரே நாடி பாரும்" என வைத்தியர் தோளிற் கிடந்த துணியை தலைமேற் சுற்றிக் கட்டி மேலே நோக்கிக் கடவுளை தியானித்து பிணியாளியின் வலக்கையை மெதுவாகவெடுத்து விரற்களோவ்வொன்றையும் மெல்ல மெல்ல இழுத்து நாடிபிடித்துப் பார்த்து விட்டு முத்துசுவாமி முதலியாரை நோக்கி, "ஐயா! ஒண்ணுக்கும் பயப்பட வேண்டாம். நாடிபலமாயிருக்கு. பிணிக் குறி ஒன்றுங் காணவில்லை. மனப் பீடையினாலே உடம்புக்குத் தளர்ச்சி. எல்லாம் ரெண்டு நாளையிலே சரியாக்கிப் போடுகிறேன்" என்று உறுதி மொழிகூறினர்.

பின்னும் மௌனமே அறையில் குடிகொண்டது. யாவரும் அசைவற்று நின்றனர். பிணியாளியும் சலன மற்றுக் கிடந்தான். இப்பரிதாபகர மான நிலைமையைக் கண்ணுற்ற தோல்வாயராம் அந்த வைத்தியருக்கு உடன் தத்துவகியானம் பிறந்து விட்டது போல் முத்துசுவாமி முதலியாரை நோக்கி, "ஐயா! மனிதர் வாழ்வு என்ன? பார்த்தால் ஒண்ணுமில்லை. இன்றைக்கிருந்தவனை நாளைக்குக் காணோம். இராசன் போலிருந்த ஜெம்பு காத்ரி பானு மார்த்தாண்டனைப் பாருங்கோ. ஆரோ கொண்ணுட்டாளாம். இராசாத்தி போலே இருந்த தங்கம்மாள் யார் கூடவோ போய் கடலில் விழுந்துட்டாளாம். என்ன அனியாயம். இதறிஞ்சா மனிதன் நடக்கிறான்" என்று கூறிய வைத்தியனுடைய பிர

சங்கம் முடிந்ததும் பிணியாளி கண் திறந்தார். மடமடவென்று கண்ணீர் வடித்தார். பின்னும் கண்மூடினர்.

தோல்வாய்ப் பண்டிதர் தத்துவஞானப் பிரசங்க மாரிபொழிந்த அன்றிரவு பிணியாளியின் நிலைமை மிகப் பயங்கரமாயிருந்தது. பிணிக்குறியாது மில்லையென்றும், ஆதியே தளர்ச்சிக்குக் காரணமென்றும், இரண்டு தினத்தில் யாவற்றையும் சரிசெய்து விடுவதாகவும், வைத்தியர் உறுதிமொழி கூறிச்சென்றுள்ளாராயினும் நோயாளியின் நிலை நிமிஷந்தோறும் மாறுதலடைந்து கொண்டே வந்தது. நெற நெறவென்று பற்களைக் கடிப்பான். அங்கு மிங்கும் தடபுடலாய் உருளுவான். பிரமை கொண்டவன் போல் பரக்கப் பாக்க விழிப்பான். மாலை மாலையாய்க் கண்ணீர் சோர விட்டழுவான். மறு நிமிஷத்திலேயே குலுங்கக் குலுங்க நகைப்பான். கைகளை முறுக்கிச் சுவர் மேலடிப்பான். கால்களால் கட்டிலையுதைப்பான். பின்னும் அழுவான். இன்னும் நகைப்பான். பின்னும் உருளுவான். இன்னும் புரளுவான். ஐயோ! கஷ்டம்! ஏழைப் பிணியாளியின் நிலைமை இவ்விதமாயிருக்கின்றது.

விசாலாக்ஷியும் பக்கத்திலேயே சித்தாப் பதுமை போலிருக்கின்றாள். அவள் கணவன் முத்துசுவாமி முதலியார் நிமிஷந்தோறும் அறைக்குள் வருவதும், பிணியாளியின் நிலைமையைக் கண்ணுற்றுக் கண்ணீர் விடுவதும், விசாலாட்சியை கவனமாயிருக்கும்படி எச்சரிப்பதும், அடிக்கடி வைத்தியனிடம் சென்று, பிணியாளியின் நிலைமையையிட்டு ஆலோசிப்பதுமாயிருந்தார். பின்பு முத்துசுவாமி முதலியார் திண்ணையில் எரிந்து கொண்டிருக்கும் விளக்கண்டை பெரும் வியாகூலத்தோடு உட்கார்ந்திருந்தார். களங்கமற்ற அவர் முகம் நெருப்பில் விழுந்த நளினம் போல் வாடியிருந்தது. தெய்வமே! உன்னை நம்பினோருக்கு மனத்துயர் வருவது தகுதியன்று. மனமொழி மெய்களால் ஒருவருக்கொரு தீங்குஞ் செய்தறியோம். எங்கள் பிழைகள் யாவையும் மன்னித்து அகதிகளான எங்களை இத்துயரக் கடலினின்று கரையேற்றியருளும். உமக்கரிய செயல் யாதேனுமுளதோ? நீவிர் சர்வவல்லவராயிற்றே! நானும் என் சார்பினரும் உன்சரணம் புகுந்தோம். திக்கற்ற ஏழைக் குழைந்தையினுயிரைக் கொள்ளை கொள்வது உமக்கு

சிதமாயிருக்குமா? கடவுளே எங்களைக் காப்பாற்றும். இத்துயர் தாங்க நாங்கள் வல்லவரல்ல. இத்தகைய சிந்தனைகளே முத்து சுவாமி முதலியாரின் தூய நெஞ்சத்துள் உலாவிக் கொண்டிருக்கின்றன. "மனிதன் துன்பங்களாற் சூழப்படும்போதும் பிணிகளையும் பீடைகளையும் போக்க மருந்தும் வழியும் இல்லாதொழியும் போதும் பிரார்த்தனையே எவ்வகைத் துன்பங்களையும் நீக்க ஏற்ற நன்மருந்தாயிருக்கின்றது" நமது சங்கடங்களை எல்லாம் சர்வ வல்லவரான கடவுளிடம் விண்ணப்பஞ் செய்து முழுமனதோடு நிவிர்த்தி வேண்டினால் நம்மனத்துயர் நீங்கி சமாதானம் உண்டாவது உண்மையினும் உண்மையே!

ஆம்! பிணியாளியின் நிலைமை மிகப் பயங்கரமாயிருந்தது. விசாலாட்சி அம்மாள் அவன் பக்கத்திலேயே இருந்தாலும் சிந்தை கலங்கி அடுக்குள்ளுக்கும் அறைக்கும் திண்ணைக்குமாக நடக்கிறாள். முத்துசுவாமி முதலியார் விளக்கண்டை அசைவற்றிருக்கிறார். நாழிகையும் பத்துக்கு மேலாயிற்று. விசாலாட்சி அம்மாள் கணவனண்டை சென்று, "நடுச்சாமமாச்சே. இப்படியிருந்தால் காரியமென்ன? கடவுள் நம்மிடம் கருணையற்றவரா யிருக்க மாட்டார். எழுந்திருங்கள்; சாப்பிடுங்கள்; அகாலமாகிறது. சுவரிருந்தால் தான் சித்திரம் எழுதலாம். நீங்களும் பசித்து இருந்து பிணியை வருத்திக் கொண்டால் என்பாடு மிகக்கஷ்டமாகும். எல்லாம் தெய்வச் செயலென்று சமாதானப் படுங்கள்" என்றனள். முத்துசுவாமி முதலியாரு மெழுந்து சாப்பிட்டதாகப் பேர் வருத்திக் கொண்டார். விசாலாட்சியும் அவ்விதமே செய்தாள். "மனத்துயருடையாருக்கு தீயென விச்சை யிருப்பது அருமை தானே" பிணியாளி படுக்கையிற் கிடைகொள்ளாது அங்குமிங்கும் உருண்டு புரண்டு பொழுது போக்குகின்றான். அவனுக்கு ஏதேனும் சிறிது ஆகாரம் கொடுக்க வேண்டுமென்று விசாலாட்சி படித்த வித்தை பதினாறும் காட்டினளாயினும் ஏதுவும் பயனடையவில்லை இதற்குள் நாழிகை பதினைந்துக்கு மேலாயினதால் படுக்கை புகுதலே நலமெனத் தேறி முத்துசுவாமி முதலியார் திண்ணையிலும் விசாலாட்சி அம்மாள் பிணியாளி படுத்திருக்கு மறையிலும் படுத்துக் கொண்டனர். முத்துசுவாமி முதலியார் பகவானைத் தியானித்த வண்ணமே படுக்கையில் கிடக்கிறார். மெய்க்

களைப் புமிகுதியால் படுத்தமறு நிமிஷத்திலேயே கண்ணுறங்கினர். ஏழைவிசாலாட்சி மட்டும் கண்மூடாது கிடக்கின்றாள். பிணியாளி உருளும் போதும், புரளும் போதும், மினு மினுக்கும் போதும், பற்கடிக்கும் போதும், பத்து வருஷங்களுக்கு முன் அதேமாதிரி மரணாவஸ்தைப் பட்டு உயிர் துறந்த அன்னவளது மூத்ததனயனது ஞாபகம் அவள் மனத்திடை உதிக்கின்றது. அந்நினைவை யொழிக்கப் பலவழி முயன்றும் முடியவில்லை. அவள் மனதின் ஆழ்ந்த பாகத்தில் வேரூன்றிக்கிடக்கும் அவளது புதல்வன் ஞாபகம் எங்ஙனம் அவளிட மிருந்து மாறும். பூவின் மணமும், நீரின் தண்மையும், நெருப்பின் வெம்மையும், மணியின் ஒளியும், மாறுமாயின் அதுவும் ஒருவாறு நீங்கும்.

அந்த ஞாபகம் தோன்றத் தோன்ற விசாலாட்சி யினுடல் நடுக்க முறுகின்றது. கைகால்கள் சோர்வடைகின்றன. நாவீரமிழந்துலர் கின்றது. நெஞ்சம் கூட்டிலடை பட்ட பறவைபோல் பதைத்துக்கொண்டிருக் கின்றது. ஐயோ! பாவம் கண்மூடினள். அறைமுழுதும் அமைதியே குடி கொண்டிருக்கிறது. கட்டிலிற் கிடந்த கயிற்றை எடுத்து அறைமோட்டிற்கட்டிச் சுருக்கிட்டு தன் கழுத்தை மாட்ட எத்தனிப்பதாய் விசாலாட்சி உணர்ந்தாள். இமைமூடாது தம்மால் பாதுகாக்கப் பட்டுவந்த அப்பிணியாளி தற்கொலை புரியவெத்தனிப்பதை யுணர்ந்த விசாலாட்சி விரைவா யெழுந்து அவனைத் தடுக்க எண்ணங்கொண்டு இருகைகளையும் மேலே தூக்கினள். அந்தோ! கைகள் பூமியில் தறைக்கப் பட்டிருந்தன போல்தோற்றின. நெஞ்சம் முன்னிலும் பதின்மடங்கு துடிதுடித்துஅடிக்கத் துடங்கிற்று. உடம்பு முழுவதும்வியர்வை ஜில்லென்றெழும் பியது. மூச்சுவிரை வாய்ப்பாயத் துடங்கிற்று. ஏழைப்பிணியாளன் கதி என்ன வாகுமோயென்னும் இயக்கமும் மனத்திடை முளைத்து வருத்தத் தலைப்பட்டது. தன்னண்டை சற்று தூரத்தில் படுத் திருக்கும் கணவரை உருண்டுருண்டு சென்றாவது எழுப்பலாமென்றெண்ணி அவள் உருள முயன்றாள். அம்முயற்சியும் வீணயது. உடல் உறுதியாய் பூமியில் வேரூன்றிக் கிடந்தாற் போல் தோன்றிற்று. ஐயோ! வாய் விட்டலறியாவது மைந்தரின் தந்தையை எழுப்பலா மெனத் துணிவு கொண்டு வாய் திறக்க எத்

தனித்தாள். வாய்பூட்டிட்டிருக்கப் பட்டதுபோல் காணப்பட்டது. சாகத்துணிந்த பிணியாளன் பின்னும் கட்டிலிற் சென்றுபடுத்ததாக விசாலாட்சி உணர்ந்தாள். அவ்வேளை இவ்வாபத்தினின்றும் வெளிப் போந்ததை யெண்ணி யெண்ணி மனம் மகிழ்ந்தாள். அந்நன் மதியை அந்நிமிஷம் பினியாளிக் களித்த பரம்பொருளை இருகரங் கூப்பித் தொழ நினைத்து கைதூக்கினாள். கையெழவில்லை. பிணியாளி இத்தீச்செயல் செய்யத் துணிபு கொண்ட காரணம் யாதெனக் கேள்க்க எண்ணினாள். நாவெழவில்லை. அவள் நிலைமை இங்ஙனமாக பிணியாளி பின்னு மெழுந்ததாகவும் அலுமாருவின் மேலிருந்த லட்டர் பேப்பரும் பென்சிலு மெடுத்து ஏதோ எழுதிக்கட்டிலின் மேல் போட்டு விட்டு எரிந்து கொண்டிருந்த விளக்கை யணைத்து கதவைத்திறந்ததும் மூன்று பயங்கர கிங்கரர் கையில் கப்பு தடியுடன் உள்ளே வ தாம், அவருடன் கூட வெளியேகினதாகவும் அந்த விசாலாட்சி அம்மாளுணர்ந்தாள். எழுந்திருக்தும் திறமையற்றிருந்த அந்தப் பிணியாளி இவ்வணம் வெளியே போவதாகக் கண்டபொழுது அவளுக்குண்டான துயரம் சிவ! சிவ!! அளவிடப் பாலனதன்று. ஓடிப்பாய்ந்து பிடித்து நிறுத்த வெண்ணி கை கால்களைத் தூக்க முயன்றாள். ஐயோ! கைகால்களை அசைக்கவும் முடியவில்லை. மனக்கவலையும் ஆத்திரமும் வலுவாய் நெருங்க விசாலாட்சி தன்னூக்க முழுதும் ஒன்றுப்க் கூட்டி "ஐயோ"! வெனக்கத்தினாள். அருகிற் படுத்திருந்த முத்துசுவாமி முதலியார் திடுக்கிட்டு எழுந்து அவசரமாயோடி அறைக்குட் சென்றனர். ஆங்கே காரிருள் நிறைந்திருக்கின்றது. விசாலாட்சி அம்மாள் தப்பித் தப்பி அடுக்கரையுட் புகுந்து அடுப்பூதி நெருப்புப் பெருக்கி கைவிளக்கைக் கொளுத்தி அறைக்குள் கொண்டு வந்தாள். பிணியாளன் பிணம் போல் கிடப்பதைக் கண்டு திடுக்கிட்டாள் மகனை மெதுவாய்த் தூக்கி மாற் போட்டணைத்தாள். முத்துசுவாமி முதலியாரும் காரண மறியாது கண்ணீர் தாரைதாரையாய் வடிக்கின்றார். அவர் பார்வைக் கட்டிலிற் பதிய பிணியாளி சலன மற்ற பிணம் போலிருப் பதைக் கண்டு பிரமை கொண்டார். தம் கண்கள்தாம் தம்மை ஏமாற்றுகின்றனவோ என ஐயுற்று கட்டிலை தடுத்து உற்று நோக்க, ஆங்கோர் காயிதத் துண்டுடன் சலமற்றிருக்கும் பிணிச் சரீரத்தினை

யும் கண்டார். உடனே பேராவலுடன் காயிதத்தை எடுத்து நோக்க, "நல்லவரான என் தந்தையே! தம்மிடம் விடைபெறுது நான் கடவுள் பால் செல்லத் துணிந்ததை மன்னிக்க வேண்டும்" என எழுதி இருப்பதைக் கண்டதும் மூர்ச்சைபால் பூமியில்விழுந் தார். அப்போது ரவியும் பரியிலேறி கீழ்திசையினுதய மாயி னன். இவ்விதம் மாணமடைந்த யுவா ஆரென்பதும் அதன் காரணம் இன்ன தென்பதும் முன்னத்தியாயம் வாசித்தவர் ஊகிக்கத் தக்கது.

21-வது அத்தியாயம்.

மறுநாள் காலை உத்தேசம் சுமார் ஏழுமணி யிருக்கலாம். இராவணன் இலங்கைக் க்திபனுயிருந்த காலத்தில் உத்தராயணத்திலிருந்து மாற்ற மின்றி காலம் தள்ளிக் கொண்டு வந்த சூரியன் பிணிபாளியின் அபஜய காலத்தில் தன்னுடைய கிரணங்களை அச்சுந்தாபுரி நாட்டிற் பதிப்பிப்பது விபசனத்துடனிருக்கும் அன்னகர் வாஸிகளுக்கு அயுக்தமாகி விடும் என்றசங்கைபால் மேக மென்னும் குடைகொண்டு தன்னுடைய பிரபையை மறைத்து ரதாரோகணித்துயிரும் இரண்டு நாழிகைக்கு முன்னர். அவ்வீடு பிறளயகாளம் போல் பெரிய கோஷதுடன் நான்கு பாகத்துள்ள ஆட்களும் நெருங்கி நோயாளியின் சரீரம் கிடக்கும் வீதியிலும் பங்களாவிலும் பங்களா முன்னிலையிலும் பின்புறத்திலும் கூடுகிறுர்கள். பெரிதான பரிதாபக் குறியில்லாத முகம் ஒருவரிடத்தேனும் காணப் படவில்லை. விருத்தை, விருத்தன், பாலன், பாலிகை, யுவா, யுவதி, முதலிய எல்லோரும் உயிற் கூச்செறிந்து அவரது விபசனமான சொற்களை கிஞ்சித்தும் சந்துஷ்டி இல்லாமல்க் கூக்குரலில் கோஷிக்கச் செய்கிறுர்கள். அவர்கள் அங்கங்கே நின்று பேசிக் கொள்வதின் கடைசி "ஜம்புகாத்ரிப் பட்டினம் கனம் ஏகாம்பரமுதலியார் நிச்சித தாம்பூலம் பண்ணப் பரிவாரங்களுடன் பிணிபாளி வீட்டை இரவு கிட்டினுரெனவும், அங்கு ஏதோ திருடர்கள் செய்த மோசத்

தால் சில நட்டு நகைகள் நஷ்டமாய் விட்டதுந் தவிர, மாஜிஸ்ட்ரேட்டு கனம் செல்வகேசவமுதலியார் அவர்களும் அந்தோ! நமனுலகு அடைந்து விட்டார்" என்று சொல்லிக் கேதித்தலும் கேள்க்கப் படுகிறது.

நேயர்களே! இவ்விதம் பிணியுட் பொருந்தி யிருக்கும் நண்பர் யாரென்பதை நீங்களறியக்கூடுமே? ஆயினும் அவ்விதம் பிணியுட் பட்டு பொன்னுலகேறி விட்ட நண்பரான மாஜிஸ்ட்ரேட்டு கனம் செல்வகேசவ முலியாரை நாமும் சென்று கண்டு வருவது உசிதமாயிருக்கு மன்றோ?

சுந்தரபுரி மாஜிஸ்ட்ரேட்டு இவ்வுலகவாழ்கையைத் துறந்து விண்ணுலகேறி விட்டார். முத்து சுவாமி முதலியார் விசாலாட்சி அம்மை கோபாலஸ்வாமி முதலாயினோர் பிணிச்சரீரம் கிடக்கும் மஞ்சத்தைச் சூழ்ந்து, கண்ணீரும் கையுமாய் சஞ்சலத்துடன் நிற்கின்றார்கள். கச்சேரி யுத்தியோகஸ்தர்களும் மூலைக்கொருவராய் தலைவிரி கோலமாய் நிற்கின்றார்கள். ஆங்கோர் மூலையில் கணக்கர்களுட்கார்ந்து மாஜிஸ்ட்ரேட்டினது ஈமக்கடன்களுக்கு வேண்டிய சிலவுக்குக் கணக்கு முடிக்கிறார்கள். இன்னோர் பக்கம் தீட்சதர் தானவகைபராக்களுக்கு சாஸ்திரம் படித்து விவர மெழுதுகின்றார். பின்னோர் பக்கம் சந்தனக் கட்டை, இராமிச்சம், கொட்டம், தேவதாரு, நெய்க்குடம் முதலியது சேகரித்து வைக்கப் படுகின்றன. மற்றோரிடம் வெள்ளி நாணயங்கள் பைபைய்யாகக் கட்டி அடுக்கப் படுகின்றது. ஆங்கோரிடம் கச்சேரிச் சேவுகர்கள் மாஜிஸ்ட்ரேட்டின் பெருமைக் குணங்களை வியந்து பேசிப் புகழுகின்றார்கள். பிறிதோர் பக்கம் மறுநாள் மாஜிஸ்ட்ரேட்டு உத்தியோகத்துக்கு வரவிருப்பது எந்தப் பாக்கியவானோ அன்னோரது பாக்கிய விசேஷத்தை வியந்து அனேகம் பேசுகின்றார்கள். அறைக்கு வெளியே ஆள்கள்கும்பல் கும்பலாய் கூடிநின்று, மாஜிஸ்ட்ரேட்டின் மனுநீதியைச் சிறப்பித்துப் பேசியும் ஈமைக்கடன் முடிப்பதற்கு புத்திரப் பேறில்லா தொழிந்ததை எண்ணி வருந்தியும், நீதிநெறிதவறாது நியாயம் நடத்திய இறைவனுக்கு இத்தகைய இடுக்கண் வந்ததை எண்ணி மனம் புழுங்கியும் பொழுது போக்கு கின்றார்கள்

இக்கொடிய செயல் காணச் சகியாதவன் போல் சூரியனும் மேற்குக்கடலுள் ஆழ்ந்தான். சுந்தரபுரி நாட்டைச் சூழ்ந்திருக்கும் துன்பம் போல் எண்டிசையும் இருள் கவிந்தது. உடனே தீட்சதர் கோபாலசுவாமியை அழைத்து, ஐயா! தேசாலம் ஆறது. ஒரு நாழிகைக்குள்ளே எல்லாம் சுமாருகும். தானம் ஆரம்பிச்சாலுக்கால் நேக்கு மஹா! சிரமமுண்டு. இப்பவே ஆரம்பிச்சிடுவோ மென்றது கேட்ட கோபாலசுவாமி தீட்சதர் வேண்டுகோளுக் கிணங்கி தானத்துக்கு வேண்டிய பொன், இரத்தினங்கள், வஸ்திரங்கள், பாத்திரங்கள் முதலியன குடுத்தான். பிணியாளி கண் திரந்த வண்ணமாய் சலனமற்றிருக்கின்றனன. கைகால்கள் முன்னர்தாமே அசைவிழந்து விட்டது. நெஞ்சில் மட்டும் ஏதோ! சிறிது மெல்ல மெல்ல மூச்சு ஓடிக் கொண்டிருக் கிறது போல் தெரிகிறது.

சர்வ பிராயச்சித்த தானச் சடங்கு துடங்கிற்று. பிராஹ்மணோத்தமர்களுக்கும், தீட்சதருக்கும், ஆசனங்களளிக்கப்பட்டன. யாவரும் கிழக்கு முகமாய் உட்கார்ந்தார்கள். வாழை இலை, பச்சருசி. தேங்காய், பழம், பூர்ணகும்பங்கள், தற்பை, மாவிலை, சமித்துக்கள், நவதானியம், நெருப்பு, சாம்பிருணி, கற்பூரம், கோடிவஸ்திரம், விளக்கு, நிறைநாழி, பிள்ளையார், புஷ்பங்கள், முதலியன அவர்கள் முன் கொண்டு வைக்கப் பட்டது. உடனே உதவி தீட்டதர் எழுந்து பதினேரிலை பரப்பி பச்சருசி பெய்து பதினேரு கும்பங்களும் ஆரோகணித்து தூபதீபங்காட்டி ஜெபம் துடங்கினர். தீட்சதர் தொண்டை கிழிய கூப்பிட்டு ஜெபித்தார். தமக்கு மண்ணும், பொன்னும், பணமும், பிணியும், வேண்டு மட்டும் உதவி உபகரிக்க, உயிர்துறக்கும் மாஜிஸ்ட்ரேட்டு அவர்களின் ஆத்மகதிக்காக தீட்சதர் மெய் வியர்க்கப்பாடு படுவது தகுதியன்ரே? தீட்சதர் கூப்பிடக் கூப்பிட முகத்தினின்றும் ஊற்று எடுத்துப் பாயும் வியர்வை நீர் தொந்தி வழியாய் வடிந்து அரையில் சுற்றியிருக்கும் வஸ்தி ரத்தையும் நினைக்கின்றது. கூடி நிற்பவ ரெல்லாம் தீக்ஷிதரது நன்றியறிதலை வியந்து பேசத் துடங்கினர்.

இத்தருணத்தில் அறைக்கு வெளியே கடல் முழக்கையவிக்கும் பேரொலி யொன்றுண் டாயிற்று. காரண மின்ன தென

வறிய ஆங்குள்ளோர் வெளியேகும் முன்னமையே ஓர் யௌவனச் சன்னியாசி யுட் புகிந்தனர். மாஜிஸ்ட்ரேட்டுக்கு ஜே! சன்னியாஸிக்கு ஜே! தங்கம்மாளுக்கு ஜே! கோபால சுவாமிக்கு ஜே! மூத்து சுவாமி முதலியாருக்கு ஜே! விசாலாட்சி அம்மாளுக்கு ஜே! சுந்தரபுரிக்கு ஜே! என்னும் வாழ்த்தொலிகளும் கேள்க்கலாயின. உள்புகுந்த சன்னியாசியை இனியேன் மறைக்கிறேன் தங்கம்மாளின் சோதரனும் மாஜிஸ்ட் ரேட்டின் நண்பருமான பானுமார்த் தாண்டமுதலியார் மஞ்சத்தை யடுக்க பிராணவல்லதை யிற்கிடந்த மாஜிஸ்ட்ரேட்டு

"இழந்தமணிப் புற்றரவே திரந்த தெனல் ஆனான்
பழந்தன மிழந்தன படைத்தவரை யொத்தான்
குழந்தையை உயிர்த்த மலடிக்கு வமை கொண்டான்
உழந்து விழிபெற்றதோர் உயிர்ப் பொறைநிகர்தான்"

தெய்வீகமாய் யாவரும் வியக்கத் தக்கபடி எங்ஙனமோ எழுந்திருக்கும் சக்தி பெற்று பானுமார்த்தாண்டனைக் கட்டியணைத்து முத்த மிட்டு நண்பா! நண்பா!! வெனக் கதறினர். பானுமார்த்தாண்டன் மாஜிஸ்ட்ரேட்டைத் தாங்கி தன் விரிந்த மார் போடணைத்து நிகழ்ந்த யாவும் கூறினதும் மாஜிஸ்ட்ரேட்டு மாலை மாலையாய் ஆனந்த நீர் சொரிந்தார். ஆங்கு நின்ற கச்சேரிச் சேவகர்களும் வெளியில் நின்ற ஆட்களும் இச்சம்பவத்தின் உண்மையறியாது நின்று திகைத்தார்கள். நகர மாந்தரிற் பலர் ஆனந்த மேலீட்டினால் வெளியில் நின்று ஆற்பரித் தார்கள். அம்முழக்கம் மகனுக்குத் துன்பம் செய்யுமென உணர்ந்த முத்துசுவாமி முதலியார் விசாலாட்சியை நோக்க, அவ்வம்மையார் வெளியே வந்து நகரமாந்தரை நோக்கிக் கூறினர். அன்புமிகுந்த ஆட்களே! (அம்மையாருக்கு ஜே! என்னும் வாழ்த் தொலி எழும்ப) உங்களாற்பரிப்பைத் தயை கூர்ந்து நிறுத்துங்கள். நீங்கள் மாஜிஸ்ட்ரேட்டு குலத்தாரிடம் கொண்டுள்ள பக்திக்குக் கரையில்லையென்று நாங்களறிவோம். மாஜிஸ்ட்ரேட்டின் நிலைமை மிகுந்த அபாயகரா மாயிருக்கிறது. இங்கு வந்த வயித்தியர் கிருபையாலும், சன்னியாசியினருளாலும், கடவுள் கருணையாலும், மைந்தனின் நிலை காலை விடியுமுன்னே நன்றாகும். இன்னும் சில நாளையில் மாஜிஸ்ட்

ரேட்டுக்கு விவாகம் நேரிடும். அப்பொழுது நீங்களெல்லோரும் வரலாம். இத்தருணம் தம் தம் வீடு செல்லுங்கள். உங்கள் ஆனந்தக் கூச்சல் மைந்தனுக்குத் தொந்தரையை உண்டுபண்ணுகிறது.

அம்மையின் பிரசங்கம் முடிந்ததும் ஆட்கள் ஒவ்வொருவராய்ப் பிரிந்தனர். அம்மையாரும் மதலை மஞ்சத்தை யடுத்தாள். இதற்குள் நமது முத்துசுவாமி முதலியாரும் கோபாலசுவாமி முதலியாரும் ஆண்டடைந்தபர்ந்தனர். சன்னியாசி மாஜிஸ்ட்ரேட்டு நாடிக்கு நன்மருந்தாயுதவி மஞ்சத்தை பமர்ந்தார். சூர்யனும் கீட்டிசையில் உதயம் பண்ண வெண்ணினன். சேசவ முதலியாருக்கு ரோகமும் பறந்து விட்டது. முத்துசுவாமி முதலியாரும் மனைவியும் தம் வேலையைப் பண்ணலாயினர். நண்பர் மூவரும் உல்லாஸமாய் ரகசியம் பேசிக் கொண்டிருந்த கொஞ்ச நேரத்துக்குள் ளெல்லாம் களைப்பால யர்ந்தனர்

22 வது அத்தியாயம்

சூர்யனும் மேற்குக் கடலில் அழுந்தினன்; நெல் மணி நெருங்கிய கதிர் குலைதாங்கி இளங்காற்றால் இனிதாடி நிற்கும் நன்செய்ப்பயிர் நிறைந்த வயல்களிலும்; கண்ணுக்கினிமை பயக்கும் பசும்புல் நிறைந்த ஏரிக்கரையிலும்; மறுநாள் அல்லது மறுவாரம் தனக்கு வர விருக்கும் பெருநாசத்தை யுணராது பொலிவுற்று விளங்கும் வாழைத் தோட்டங்களிலும்; இன்முகங் காட்டினும் முன்னுறு பகையெண்ணி முகங்கவிழ்க்கும் அறிவுடைப்போரொப்பத்தலை சாய்க்கும் தாமரைத் தடாகங்களிலும்; அந்திப் பொழுதின் அழகிய பொன்னிறம் பாவி, இது மண்ணுலகோ, விண்ணுலகோவென ஐயுறச் செய்கின்றது. காலிகளும் கன்று தத்தம் உடையவர்கள் வீடு நாடி எக்களிப்புடன் சாய்கின்றன. பறவைகளும் தத்தம் குஞ்சுகளைத் தேடி கூக்குர லிடுகின்றன. வீடு நோக்கித் திரும்பு மிடையர்களின் குழலோசையும் இசைமுழக்கும் அப்பறவைகளின் இன்னொலியை அவித்துத் துவனிக்கின்றன. அந்தியங்

காடி நாடிச் சென்ற ஏழைப் பெண்கள் வழிப்பறிக் கஞ்சி அங்கு மிகுந்தும் ஏக்கத்துடன் உற்று நோக்கியும், பஞ்சமென்னும் பகைவர் னைக்கும், கட்குடியான கணவர் கண்ணுக்கும் தப்பி நின்று காதணிகளையும் கழுத்தணிகளையும் மறைத்தும் மூடியும் பதுங்கிப் பதுங்கிச் செல்லுகின்றனர். சிவநேசத் தொண்டர்கள் மெய்முழு தும் வெண்ணீறணிந்து ஐந்தெழுத்தோதி ஆலயம் தேடி யோடு கின்றனர். தேர் நிலையங்களிலும் பாழுங் கோவில்களிலும் பதுங் கிக் கிடந்த பள்ளிக் கள்ளர்கள் குங்குமம் சுமந்த கழுதைகளொ ப்ப ஏட்டுச் சுருள்களை சுமந்து கொண்டு வீடுநாடி யோடினர்.

இவ்வேளையில் "தௌரீ" நதிக்கரையருகில் மூன்று மனிதர் குதிரை மீதேறிச் செல்லுகின்றனர். முதல் பிரயாணி நடுப்பிராய முடையவன். வயது இருபத்தைந்திருக்கும். உயரம் ஐந்தடிக்கு மேலிராது. தேகப்பருமனை உயரத்துக்கு மிகவும் ஒப்பானது தேகவுறுப்புகள் இயற்கனவே நன்கமைப்பப் பெற்றன வாயினும் தேகப் பயிற்சியால் திரட்சையடைந்து நிரம்பவும் அழகுடைத்தா யிருக்கின்றன. முகம் உருண்டை வடிவமும் காம்பீரத் தோற்றமும் உடையது. கண்கள் நீண்டுருண்டு நன்கு கறுத்த இமை மயிர்களை யுடைத்தாய் ஆண்மை மிகுதியாய் நிறையப் பெற்று விளங்கு கின்றன. மூக்கு சிறித்துருண்டு திரண்டு முகத்தினுக்கும் கண் ணிணை கட்கும் வனப் பீன்று பிரகாசிக்கின்றது. இத்தகை அழகு வாய்ந்த முகத்திற் கேற்றவாயும், இதழும், பற்களும், பிரம்ம தேவனமையாறுயின் "செய்வன திருந்தச் செய்ய வறியான்" என்னும் பழி தம்மைச் சேருமென்றஞ்சியே அவ்வுறுப்புகளையும் நன்கமைத் திருக்கின்றனன். ஆகவே நமது பிரயாணி அழகிய தோற்றமும் கம்பீரப் பார்வையு முடையவன். பெரிய குடும்பத் தைச் சார்ந்தவனே வென ஐயுறுதற் கேற்ற தோற்றமும் அடை யாளங்களும் அவனிடத் தில்லா தொழிந்ததில்லை. அரையில் ஜரி கையுடைய ஓர் வெள்ளாடை தொடுத் திருக்கின்றான். சரீரம் ஒரு பச்சைப் புட்டாங்கியால் மூடப் பட்டிருக்கிறது. தலையில் குஞ்சம் வைத்துக் கட்டிய ஒருவெண் பட்டுத் தலைப்பாகையும் பிரகாசிக் கின்றது. காதுகளில் இரண்டு வைரக்கடுக் கண்கள் விண்மீனென ஒளிவீசுகின்றன. அரையில் ஓர் வாளுறையும் தொங்கு கின்றது. மற்றிரண்டு பிரயாணிகளுள் ஒருவர் முதற் பிரயாணியின்பின்னே

கிதரென்றும் ஒருவர் ஓர் சன்னியாசியென்றும் தெரிகிறது முதற் பிரபாணி குதிரை விட்டிறங்க மற்றவிருவரு மிறங்கினர். பரியை அங்கொரு பக்கம் படுக்க வைத்து தாம் நதியிலிறங்கி கைகால் முகங்களைச் சுத்திபண்ணி நீருண்டுக் கரையேறி ஓர் மரத்தடியில் உட்கார்ந்தனர். அவரில் மாலைப் பொழுதின் பொற் கதிர் படவே மன்மதன் உருவாய் விளங்கினர்.

இவ்வாறு கழிந்த சிறிது நேரத்துக்குள் பின்னும் பரிமேலழகனும் விளங்கி அதிதுரிதத்தில் செல்லும் வாசி சாலைப்புதூர் என்னும் கிராமத்தை கிட்டினதும், சத்திரமொன்றையடுத்தும் பரியை அங்குகட்டி விட்டு மூவரும் வெளியேறினர். அப்போது இரவு உத்தேசம். 9. மணி யிருக்கும். அந்தச் சாலைப்புதூர்ப் பட்டினம் மேலவீதியில் ஓர் மாளிகையிருக்கின்றது. புராதன சிற்பசாஸ்திரிகளின் விசித்திர வேலைகள் நிரம்பப் பெற்ற அக்கோயில் பார்ப்பவர் மனத்தைத் தன் வசப்படுத்தும் தன்மை யுடையது. மேலும் கீழும் யாளித்தலை வைக்கப் பட்டுள்ளதும், நோக்குவோர் முகம் காட்டும் வண்ணம் நன்கழுத்தப் பட்டது மான "தோதகத்தி" தூண்டுகள் மேற் கூட்டைத் தாங்கி நிற்கின்றன. சுற்றுச் சுவர்கள் அழகிய புராணச் சித்திரங்களால் அலங்கரிக்கப் பெற்று விளங்கு கின்றன. மேற்றட்டு வெள்ளாடை களாலும் பன்னிறமுடைய அழகிய பட்டுக்களாலும் இடத்தின் உயர்வு தாழ்வுக் கேற்பமூடப் பட்டிருக்கின்றது. ஓர் பக்கம் படுக்கை யறையாகவும், மற்றோர் பக்கம் பாடகர் சாலையாகவும். இன்னொரு சார்பு ஓதுவிடமாகவும் இனியோர் புறம் ஏவளாளர் தோழியர் முதலியோர் தங்குமிடமாகவும், பல பாகங்களாகப் பகுக்கப் பட்டிருக்கின்றன. ஆகவே மாளிகையின் தோற்றம் மிகமனோகர மானது. இக்குதாரம்பத்தில் கொஞ்சநாட்களாய் புருஷோத்தம முதலியாரும் அவர் மனைவி பங்கஜாட்சியும் ஓர்சன்னியாசியும், இந்தமாளிகைக்கு பிற்பக்கம் வஸித்துவந்தார்கள். ஆனலிப்போது அந்தச் சன்னியாசி எங்குற்றாரோ தெரியவில்லை. இப்பொழுது அப்பூஞ்சோலை யடுத்த அறையில் தூக்குமஞ்சத்தில் இளவரசரோ வென்று சொல்லதக்க ஓர் புண்ணிய புருஷர் விளங்குகின்றார். அவரிப்போதுள்ள சரீர எடுப்பை நோக்கின் வயதிருபதிருக்கு மெனக் கூறலாம். இவர் பிராயத்தைக் கடந்த அறிவும் உலகப் பழக்கமும் உடையவர் கடுஞ்சொல்

களவிலும் மொழிந்தறியார். ஏவளாளர் முதலிய சேவகர் மீது மிருந்த பக்ஷமும் முதிர்ந்தோரிடம் அதிக பக்தியும் வணக்கமும் இப்புருஷோத்தமனது குணாதிசயங்களை யிட்டுப் பேசாத நாட்களை அன்னட்டார் இதுகாறும் அறியவே அறியார். இத்தகைய பெருந்தகைக் குணங்கள் வாய்ந்த புருஷோத்தமன் ஏவலாளொருவனைச் சாடையாய் அழைக்க அவனும் அன்போடு சென்று பணிந்தனன்.

புரு:— (ஏவலாளை நோக்கி) அப்பா! கோபாலா! நேற்று மாலையில் அப்புலவர் தந்த புஸ்தகம் எங்கே? என்றது கேட்டு. ஐயனே! அரைநொடிக்குள் கொண்டு வருகிறேன். எனக்கூறி கோபாலன் மறைந்தனன். உடனே அருகிற் நின்ற பங்கஜாட்சி அன்னவரடிபணிந்து காதலீ! அந்த புத்தகத்தை நோக்கிநோக்கி சென்ற இரவை இமைமூடாமற் போக்கினீர். இப்பொழுதும் கொண்டுவர ஆஜ்ஞை யளித்தீர். ஹா! தங்களுக்கு இவ்வளவு விருப்பம் தர தக்கதாய் அவ்வேட்டில் யாதுளது என்றாள்.

இம் மொழிகளை அமைதியோடும் அன்போடும் கேட்டிருந்த புருஷோத்தமன் புன்முறுவல் பூத்து பங்கஜம்! நீ அப்புத்தகத்தி னருமை யறியாய். அதன் பெயர் திருக்குறள்; தெய்வப் புலமை திருவள்ளுவர் திருவாய் மலர்ந்தருளியது. அம்ம! அதன் பெருமையை நானுனக் கெவ்வாறு விளக்க? அதன் மகிமை அநிர்வசநீயமே. அது வருந்திப் பயில் வோர்க்கே விளங்கும் பெற்றியது. அம்ம! எண்பாவாகிய அவ்வெண்பாக்கள் சிந்தைக்கினிய செவிக்கினிய; வாய்க்கினிய; வந்த இருவினைக்கும் மாமருந்து. என்னுயிரை அனைய காதலர் (காதலர்-நண்பர் அல்லது சிநேகிதர்) பிரிவும் என்னை மிக வருத்தா தொழிந்தது இந்நூலின் மாட்சியாலேயாம் என்று முடிப்பதற்குள் கோபாலன் புத்தகத்தை புருஷோத்தமன் முன் வைத்தான். அதை அப்புருஷோத்தம முதலியார் தம்மிரு கரங்களாலும் அன்போடெடுத்து, இருகண்களிலும் ஒத்தித்தாள்களை திருப்பி முதற் பாவை பின்வருமாறு படித்தான்.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல்"

இப்பாவைப் படித்தவுடன் அன்னேன் முகத்தில் தோன்றிய பொலிவும் மகிழ்ச்சியும் அளவிடப் பாலன வல்ல. அருகில் நின்ற பங்கஜத்தை யழைத்து அடீ! இப்பாவின் பொருள் நின்செவிடு பட்டதோ? அதன் ஆழ்ந்த கருத்தினருமையைப் பாராய். இக்கட்டுரையை உலகம் கடைப்பிடித்தொழுகின் பாவந்தானேது? பழிதானேது? இவ்வுலகமே பொன்னுலகாமே! என்று ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனன்.

இவ்வேளையிலோர் ஆடவன் அறைக்குட் புக புருஷோத்தமனெழுந்து சென்று அன்னவனை அழைத்து வந்து சுகுண! கண்டு நாட்கள் அனந்தமாயின. நீயும் வீட்டாரும் க்ஷேமந்தானே?

சுகுணன்:—தங்கள் கிருபை எங்களுக்கிருக்கு மட்டும் க்ஷேமத்துக்குக் குறைவென்ன?

புரு:— ஏது உன்னைக் காளை இப்பொழுது ஒருநாளெனினும் வரக்காணேம்? இவிடம் வருதலில் விருப்ப மில்லையா?

சுகு:—இல்லை! இல்லை! இங்குவரப் பலமுறை எண்ணினேனாயினும் பற்பல கவலைப் பெருக்கால் வரமுடிய வில்லை.

புரு:—கவலைக்குக் காரண மென்ன? மாலையிடுங் காலமன்றோ? மங்கைபற்கு மகிழுங் காலம். அக்காலம் அடுத் திருக்கும் போது கவலையேன்?

சுகு:—(பெருமூச் செறிந்து) ஐயா! இதிலும் பன்மடங்கதிகமான கேலியையும் நான் சகிக்கக் கூடியவனே. ஆனல் என்மனம் இப்பொழுது பெரிதும் புண்பட்டிருப்பதால் தங்கள் இன் மொழிகள் எனக்குத் தாங்கொணுத்துன்பத்தைத் தருகின்றன.

புரு:—சுகுண! உன்பேச்சு எனக்கொன்றும் விளங்கவில்லை. என் செவிக் கெட்டிய சமாசாரங்களுக்கும் உன் பேச்சுக்கும் வெகு தூரமிருக்கின்றது. என்னிடம் ஒளிக்காமல் யாவற்றையும் தெளிவாய்ப் பகரு.

சுகு:— என்ன சொல்லச் சொல்லு கிறீர்கள். "நேசமில் வதுவை நாசகாரணமே" என்பது தெரியாதா? என்றதும் ஓர் சேவகன் அறைக்குள் வந்து புருஷோத்தமனை வணங்கி, ஐயனே!

யாரோ ஒருவாலிபர் வேர்க்கத் துடிக்க ஓடிவந்து தங்கட்கோர் கடித முண்டெனச் செப்புகின்றான். கேட்டுந் தந்திலன். தங்கள் திருக்கரங்களில் மட்டும் தருதற்குரியதாம். என்ன சுகுணனை அங்கிருக்கச் செய்து "அவன் எங்குளன்" என்று வினவிக் கொண்டே சேவகன் பின் சென்றனன். நிற்க,

அப்போது வந்தவன் சுந்தரபுரி வாஸி யென்பதை அறிந்து புருஷோத்தமன் ஏவலாள் களை உள்ளே போகும்படி தூண்டி விட்டு வந்தவனை ஏறவிறங்கப் பார்த்து "ஐயா! சவுக்கியமா? வந்த காரியம் என்ன? என்று வினவினன்.

வந்தவன்:—காரியஸ்தரய்யா சுகமாயிருக்கின்றார்கள். அவர்கள் தங்களிடம் சில அந்தரங்கச் சங்கதிகள் அறியும் பொருட்டு ஒருகடிதமும் தந்து என்னை அனுப்பினார்கள். எனக் கூறி யோர் கடிதத்தை நீட்டினான்

புரு:— கடிதத்தை விரித்து படித்துப் பார்த்து சிறிது நேரம் மௌனமாயிருந்து கடைசியாக வந்தவனை நோக்கி, ஸ்ரீ காயிதத்திலுள்ள கையெழுத்து அவர்களுடையது போல் தானிருக்கிறது. ஆனாலும் எப்படி நம்ப? காலக் கொடுமை அப்படிக்கிருக்குமே என்றான்.

வந்தவன்:— ஐயா! அப்படி ஒரு சந்தேகமும் வேண்டுவதில்லை. நான் அவர்கள் நண்பனென்று முன்னமே தெரியாதா? அதனுண்மையை விளக்க எல்லா சமாசாரமும் சவிஸ்தாரமாய்ச் சொல்லுகிறேன் என்று சொல்லி அவனை அடுத்து அவன் செவியில் சில மொழிகளை இரகசியமாய்க் கூறி, அவனது முகத்தோற்றத்தை வேகு ஆவலோடு நோக்கி நின்றான்.

புரு:—அவன் மொழிகளை அமைதியோடு கேட்டு மறுமொழி யுரையாது மௌன மாயிருந்தான். வந்தவன் பார்வை புருஷோத்தமன் முகத்திலேயே பதிந்திருந்தது. புருஷோத்தமன் அவனை ஏற இறங்கப் பார்ப்பதும் ஆழ்ந்த யோசனை செய்வது மாயிருந்தான். இதுகண்டு வந்தவன் வாரும் போவோம் என அழைத்துக் கொண்டு வெளியே சென்று, இருவரும் சுமார் கால் நாழிகை நடந்த பின்னர். சத்திரத் திலோர் அறையண்டை கொண்டு விட்டு, தம்பி! இந்த அறைக்குள் பித்தன் கிடக்கிறான்

சன்னியாசி வெளியே போயிருக்கிறான் போலிருக்குது. உமக்கு அறிய வேண்டியதை எல்லாம் சுருக்காய் அறிந்துக் கொள்ளும். நான் ஒரு நாழிகை கழித்து வருவேன் என்று சொல்லி அவன் சென்றதும் புருஷோத்தமன் அறைக்குட் புகுந்தான். அந்தோ! அவ்வறைக்குள் என்ன அபரிமிதமான காக்ஷி! அவ்வறையி லுட்கார்ந் திருந்த ஓர் மனிதரூபம்.

“ நண்பர் உறவினர்கள் நமை நாடியுறைவாடல்
நறுநெயுறு குடந் தெறும்பு நண்ணலென வெண்ணெப்!
பெண்கள் அகக்காத லெலாம் பேசுமுபற் கொம்பே!
பெருங்கபட மிடுகலனே பிறக்கு மவருடலம்! ”

என்னும் எண்பாவை மிகத் தாழ்ந்த குரலோடு பாடிக் கொண்டு இருந்தது.

புருஷோத்தமன் அம்மனித ரூபத்தை யுற்று நோக்க, அம் மனிதரூபமும் அவனையுற்று நோக்கிற்று.

உடனே புருஷோத்தமன் ஐயா! நீங்கள் பாடிய பாட்டின் பின்னடிகளிரண்டும் உண்மைக் கருத்துடையனவோ வென ஒரு சந்தேக முளது என்றான்.

மனித ரூபம் ஒன்றும் எதிருரை யாட வில்லை. பின்னும்:—

“ ஐயோ! இவ்வப்பகத்தில் அமைந்த சுகமனைத்தும்
அழலால் இங்கெழுந் தடங்கும் நிழலாக நினைபாய்
கைபாரும் பொருளென்னக் கருதி மணல் வகைபைக்
காப்ப தெலாமிலவு கிளிகாத்தலினும் வறிதே! ”

[எனப்பாடிற்று.]

புரு:—ஐயா! என் கேள்விக்குப் பதிலுரைக்கவில்லையே? பெண்கள் அகக்காதல் மூயற்கொம்புக் கொப்பாயின்புருஷர் அகக் காதல் உளத்தால் உன்னத்தகா இன்மையே யாம் என்றான்.

பின்னும் அம்மனித ரூபம்.

இதுகாறும் உதித்த செல்வர் எத்தனைபேர்? உலகே.
இலகு பலசாலிகளும் எத்தனைபேர்? ஐயோ!
மதன் போலும் எழிலுடையர் எத்தனைபேர்? கல்வி
மடுத்த அறிவாளர் தொகை எடுத்துரைக்கப் போமோ!

[என்றுபாடிற்று.]

புரு:— ஐய! இன்னும் என்கேள்விக்குப் பதிலுரைக்கவில்லையே. பெண்களை மட்டும் குறை கூறுவதில் பயன்யாது? காதல் பரஸ்பர தொந்த முடையதோர்குணம். பெண்களுக்குப் புருஷன் மீதுள்ள காதல் நிலையுடையதா வென அறிய விரும்புவோர் பிறர் குணக்களை நிதானிக்க நமது குணங்களைவிடச்சிறந்த அளவுகோல் வேறொன்று மில்லை. நமது புலன்களைந்தும் அவைகட்கு எவ்வழியிலேனும் எட்டுணை இன்ப மீவனவற்றையே நாடுகின்றன. கொடுங் குளிர் காற்றை விரும்பும்மெய்யும்; விஷத்தை விரும்பும் வாயும்; கடியகாட்சிவிரும்பும் கண்ணும், மல நாற்றம் விரும்பும் மூக்கும்; இடியோசை விரும்புங் காதும்; உளதாயின் காதலில்லாக் காதலனை விரும்பும் பெண்ணும் உளஎனத்துணியலாம் என்றான்.

இங்ஙன் மொழியெல்லாம் அம்மனிதரூபத்தின் மனதில் ஏதேனும் ஒருஉணர்ச்சியை எழுப்பும் வண்மையுடையன வையா யிருந்ததில்லை. ஆனால் இம்முறை மனிதரூபம் ஒன்றும் பாடமுயலவில்லை. வந்த புருஷோத்தமன் முகத்தையே இமை கொட்டாது நோக்கிக்கொண்டிருந்தது.

ஐய! தலைவிதி ஒருவரையும் விடாது.

“பல்லா வுளுய்த்து விடினுங் குழக்கன்று
வல்லாதாந்தாய் நாடிக் கொடலைத்—தொல்லைப்
பழவினையு மன்னதகைத் தேதற்செய்த
கிழவனை நாடிக் கொளற்கு”

என்றபடி நாம் எம்மூலையிலிருப்பினும் நம்வினை நம்மைத் தேடிப்பிடித்துச் சேர்ந்துகொள்ளும். நீங்கள் ஜெம்பு காத்ரியில் உமது நண்பன் பானுமார்த் தாண்டனுடன் டள்ளியிற் பயின்று களிப்புற் றிருக்குங்கால் இவ்வகைத் துன்பங்கள் சூழு மென்று கனவிலேனும் எண்ணியிருந் தீர்களோ? உமது காலக்கொடுமை நீங்கும் போது யாவும் மங்களகரமாகவே முடியும்.

இப்பொழுதும் அம்மனிதரூபம் உரையாட வில்லை. புருஷோத்தமன் முகத்தை நோக்கிய வண்ணமாகவே இருந்தது.

கடைசியாக அப்புருஷோத்தமன் வெம்மை மிகுதியினாலே அன்றி வேறெக்காரணத்தினாலோ தன்தலையில் சுற்றப்பட்டிருந்த துணியையும் தன் மேனியை மறைத்திருந்த சட்டையையும்

கழற்றி எறிந்து விட்டு நிற்க, அவ்வுருவம் திடுக்கிட்டெழுந்து கனவோ!? நினைவோ!? மாயமோ!? சூதோ!? என வாய் விட்டுக் கதறி புருஷோத்தமனைக் கட்டித் தழுவி விம்மி விம்மி அழுதது. புருஷோத்தமனும் மழலைபோல் அழுதான்.

இத்தருணத்தில் அறைக் கதவு "தம்பி! தம்பி!" என்று வெளியிலிருந்து தட்டப்பட புருஷோத்தமன் பனிதரூபத்தின் செவியில் ஏதோ சிலமொழிகளைச் சொல்லி விட்டு தலைப்பாகையும் சட்டையு மெடுத்து முன் போலணிந்து கதவண்டை வந்து "என்னய்ய!" என்று அழைக்க, கதவு திறக்கப் பட்டது. அறைக்குள் ஒரு சன்னியாசி யுடன் சென்ற மனிதனும் வருவதைக் கண்ட புருஷோத்தமன் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகச் சன்னியாசிக்கு சாஷ்டாங்க தெண்டம் சமர்ப்பித்தான். இது கண்ட சன்னியாசி தம்பி! நீ இனியும் ஏன் கேதிக்க வேண்டும்? நாளையுதையம் நானும் பித்தனும் கோபாலசுவாமியும் உன் மாமாவீடு வருவோம். அப்போது காரியம் முறைபே நடக்கும். இனிக் கவலை கொள்ளாதே. இரவு வெகு நேரமாயிற்று. உன் வீட்டில் யாராவது தேடுவார்கள். நீ அதற்கு முன் அங்கு செல்லு. கோபாலசுவாமியையும் கூட்டிப் போவென்று சொல்லி, கோபாலசுவாமியை அழைத்து, கோபாலா! உன் தம்பி புருஷோத்தமனை கூட்டிப்போய் அவன் மாமாவீடு சேர்த்துவா. அவன் வந்து வெகு நேரமாயிற்றென்க, அவ்வாறே யாகுகவென்று கோபாலசுவாமியும் புருஷோத்தமனும் அங்கிருந்திறங்கி நடந்த சிறது நேரத்துக்குள்ளெல்லாம் வீடு சென்றதும், ஆங்கே தம் வரவுநோக்கியிருந்த பங்கஜாட்சிக்கு முன் வந்த சன்னியாசி வந்திருக்கிறாரென்றும் அவர் நாளை நம்மள் வீடு வருவாரென்றும் அப்போது நம்மெண்ணங்கள் சாத்தியமாய் விடுமென்று சொல்லித் தேற்றி இருவரும் அவ்வவரது சயனவறை சென்று சயனிக்கலானார். இங்கே அம்மூவரும் காலைச் சூரியனை எப்போது காணலா மென்ற எண்ணத்துடன் அவ்விரவொன்றையும் ஓர் யுகமாகப் போக்கி வருகின்றார்கள். இவ்விதமுள்ள இந்த மூவருடன் இன்னுமொன்றும் அவருள் நடந்த செய்தி இன்ன தென்பதையும் எடுத்துரைப்பது அவசிய மில்லையென்று விடுத்தேன்

23-வது அத்தியாயம்.

இவ்வாறு அந்தச் சத்திரத்திற்றங்கி யிருந்த அம்மூவரும் மறுநாள் காலையிலெழுந்து காலைக் கடன் முடித்து போஜனம் செய்தாயின பின்னர் சன்னியாசி கோபாலசுவாமியை அழைத்து, ஐயா! தாம் இப்பொழுதே புருஷோத்தமன் வீடு சென்று அவன் மாமா இரத்நஸ்வாமி முதலியா ரென்பவரைக் கண்டு முன்னொருக்கால் உம் வீடு வந்து பலநாட் கழித்துச் சென்ற சன்னியாசி இப்போது சத்திரத்திலமர்ந்துள ரென்றும் உம்மை அழைத்து வரக்கூறினர் என்றும் சொல்லி சீக்கிரம் அழைத்துவா வெனக் கூற, அவ்வாறே யாகுக வென்று சென்ற கோபாலன் சிறிது நேரத்துக்குள்ளேயே ரத்நஸ்வா முதலியாருடன் அங்கு வந்ததும், ரத்நஸ்வாமி முதலியார் சன்னியாசிக்குத் தண்டம் சமர்ப்பித்ததுகண்ட சன்னியாசி! ராம்! ராம் முதலியாரே (தண்டத்துக்குப் பதில்செய்து) சௌக்கியமா?

ரத்ந:—ஆம். தங்கள் கிருபையால் இன்றுவரை க்ஷேமமே?

சன்னி—சரி, குழந்தைகள் சுகமா.

ரத்ந:—ஆம். எல்லோரும் சௌக்கியந்தான்.

சன்னி:—ஜாமாதா வென்ன செய்கிறன்?

ரத்ந:—அவர்களும் சொஸ்தமாக விருக்கிறர்.

சன்னி:—குழந்தை கற்பவதியா?

ரத்ந:—இல்லை ஐயா! இல்லை.

சன்:—அதென்ன? இவ்வளவு வெறுப்பாகச் சொல்லுகிறீர்?

ரத்:—ஐயா! பின் என்னபண்ணச் சொல்லுகிறீர்கள். இல்லற வாழ்க்கையி லிருப்பவர்கள் பிரம்மச்சாரி சன்னியாசி வானப்பிரஸ்தன் என்னும் மற்றமூன்று ஆச்ரமத்தாரை காப்பாற்றும் கடமையுடைத்த வராயிருக்கிறர்கள். பிதிர்க்கர்மங்களையும் தேவபூஜையும் முடங்காமற் பரிபாலிக்க வேண்டும் அதிதி அப்பியாசிகளுக்கன்னம் பருகல் வேண்டும். ஜெபதப ஹோமம் சிவபூஜை சிவார்ச்சனைமுதலிய நித்திய கருமங்களைத் தவருமற் செய்ய வேண்டும்.

பழிபாவங்களை அஞ்சி நல்வழியிலேயே பொருளைச் சம்பாதிக்க வேண்டும். பிதுரார்ஜித சொத்துக்களை விருத்தியாம்சம் செய்து வர வேண்டியதுடன் தேகத்தை யுழைத்துச் சம்பாதிக்கும் பொருள்களை மேலான தாகக் கொள்ளுதல் அவசியம். ஒவ்வொரு வகுப்பாரும் அவ்வவர் குலாசார தருமங்களுக்கேற்ற தொழில் களிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து வருதல் வேண்டும். இந்தியாதி கருமங்களுடன் தலைவனும் தலைவியும் ஒருவழிப் பட்டொழுகல் வேண்டும். யாருக்கேனும் கீழ்ப்படிந்து அன்னவர் தாமிருவரும் தொண்டு பண்ண நேர்ந்து விடலாகாது. இனியும், மானம் பெரிதாக மதிக்க வேண்டுமேயன்றி, பணம் திருணமெனக் கொள்ளல் வேண்டும். இததாம் செய்கைகளுடன் பெண்ணும் பிள்ளையும் ஒருவரை யொருவர் நேசித்து வாழ்ந்தாலன்றோ புத்திரப் பேறும் புகழும் கீர்த்தியும் பெறப்பாத்திரமாய் பவிப்பார் என்று கூறிய ரெத்நசுவாமி வாக்கியத்தைக் கேட்ட சன்னியாசி சொற்பநேர ஆலோசனை யோடுகூடி அடியிற் வருமாறு அறையத் துடங்கினர்.

ஐயா! தாம் கூறு மனைவற்றும் உண்மையே. இதுவிஷயம் பற்றி சில செய்திகள் கூறத்தான் தங்களை இங்கு அழைக்கலானதும். எனெனின்.

"செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும் வானகமு மாற்றலரிது".

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய் நன்றிகொன்ற மகற்கு"

வள்ளுவனார் வாங்கொலியை நோக்க, இது விஷயம் நம்மை அறியச் செய்யாதிருக்க எம்மனம் சிறிதளவும் சம்மதப்பட வில்லை. அது என்னை எனிலோ தமது புதல்வியாம் பங்கஜாட்சிக்கு மணாளனயமர்ந்துள்ள புருஷோத்தமன் உண்மையில் புருஷனன்று. அது ஓர் யௌவனப் பருவ மடைந்த ஸ்திரீ ஜடலம். அவள் பெயர் தங்கம்மாளெனப்படும். அவள் எனக்குத் தங்கை. இதோ இருக்கும் என் நண்பர் செல்வ கேசவ முதலியாரை முன்னரே வரித்துள காரணம் என்பெற்றோர் சம்மதியாதிருந்தது. ஓர் கட்குடியனுக்குக் கலியாணஞ் செய்யயத்

தனிக்கவும் கல்வியுடைய அவர். மிக வருத்த முற்றிருக்குங் காலம் அருணாசலமென்னும் ஓர் காதகப் பயலால் கடத்தி இவள் அவனிடமிருந்து யாங்ஙனமோ தம்மை தப்பித்து. இனியும் இவ்வித இடையூறுகள் நேரிடா திருக்கும் பொருட்டு இவ் வேஷமிட்டு தமக்கு நெருங்கிய பந்துவாய் வீற்றிருக்கின்றாள். எங்க குடும்பத்தில். 20. இலட்சத்துக்கு ஆஸ்தியுண்டு. நானும் என் தங்கையும் எங்கள் பெற்றோருக்குச் சந்ததிகள். நான் கல்வியில் B. A. பாஸ்பண்ணி B. L. க்கு வாசித்து வருகிறேன். என் தங்கையும் B A. பரீட்சை ஜயித்திருக்கிறாள். இந்த செல்வ கேசவ முதலியார் B. A. B. L. பரீட்சையிற் தேறினவர். இப்போது ஓர் சப்மாஜிஸ்ட்ரேட்டு வேலையிலிருக்கிறார். இதோ! நிற்பவர் எங்கள் நண்பர். கோபாலசுவாமி என்றுள்ள ஆகிவிருக்தாங் தங்களைக் கூறிஎங்கள் தெரிவையை எங்களுடன் அனுப்பிவிடுவது சம்மதியா? அன்றி தங்கள் வீட்டில் வைத்துக் கானேவிவாகச் சடங்கு நடத்தி விடுவதுதான் சம்மதியா? இந்தவிஷயங் களுக்கு பதில் கூறுகவெனக் கேட்ட அவரை நோக்கி, தங்கள் பெயரென்ன?

அவர்:—என் பெயர் பானுமார்த்தாண்ட முதலியார்.

ரெத்ந:—தந்தையின் பெயரும் சொந்தமான ஊரும் யாது?

பானு:—தந்தையின் பெயர் ஸோமநாத முதலியார். சொந்த ஊர் ஜம்புகாத்ரிப் பட்டினம். இவ்வாறு சங்கதிகள் நடக்குந் தருணம் முதல் நாளிரவு வந்த புருஷோத்தமனும் அங்கு வந்தான். பானுமார்த் தாண்டன் அவனை நோக்கித் தங்காய்! தனது இவ்வேஷத்தை மாற்று என்று சொல்லித் தாமும் அச்சன்னியாசி வேஷத்தை மாற்றினது கண்ட ரெத்நஸ்வாமி ஹா! இதென்ன விந்தை! இதென்ன மாயம்! என்று புலம்பி பானுமார்த் தாண்டன் கூறியது உண்மை தாமெனக் கொண்டு, ஐயா! தங்கள் கன்னிகையை அழைத்துப் போகும் பக்ஷத்தில் யாம் சிறிதும் தடஸ்தம் பண்ண வல்லவனல்லேன். இனியும் மோகத்தால் தங்களோ என்று சம்சயிக்கத் தக்கதான தங்கள் தங்கையை மணந்து கொண்ட என் மங்கையின் காதல் வீண் போவதுடன் நான் பெரும் பயித்தியக் காறனாகவும் ஆய்விடுகிறேன். இதுவிஷடம் எம்மைச் சாரா

திருக்கத் தாம் எமது தெரிவையை தயைசெய்து மணத்தல வசிய மென்னக் கேட்டு பானுமார்த்தாண்டன் அங்ஙனமே யாகுக வென்றிசைய இரத்நஸ்வாமி அப்படியானால் இவர் கலியாணமும் நம்மள் வீட்டிலேயே நடக்கட்டும். நீங்கள் அவ்வவர் சம்பந்திகளுக்கறிவு கொடுங்கள். நான் கலியாணத்துக்கு திட்டம் செய்கிறேனென்ன அவ்வாறே ஓர் புரோகிதனை யழைத்து கலியாணத்துக்கு நாள் நிச்சயம் செய்து விட்டு அவ்வவர் அவரவர் களுக்கு வேண்டும் சம்பந்தி களுக்குக் கடிதம் அனுப்பினர். அவையுள் செல்வகேசவ முதலியாரும் பானுமார்த்தாண்ட முதலியாரும் தம் பெற்றோர் களுக்கனுப்பிய கடிதம் கிட்டினதும் அவர்கள் ஆங்குள்ள ஆட்களில் ஒருவரேனும் பாக்கியில்லாமல் புறப்பட்டு கலியாணதினத்துக்கு ரெண்டு நாட்களுக்கு முன்தானே சாலைப்புதூர் வந்து சேர்ந்தார்கள். கலக்டர், ஜட்ஜ், இன்ஸ்பெக்டர், மாஜிஸ்ட்ரேட்டு, தாசில்தார், முன்ஸீப்பு, கௌவுன் ஸிலர்கள், கிளார்க்குகள் முதலிய உத்தியோகத் தர்களும் வந்தார்கள். இனியும் அப்பட்டினத்திலும் மற்றிதர தேசங்களிலு முள்ள இரத்நஸ்வாமி முதலியாரினது சகலமான பந்துக்களும் சினேகிதர்களும் பிராமணோத்தமர்களும் நானாஜாதிப் பெரிய மனிதர்களும் கலியாணச் சமாசாரந் தெரிந்து அவரவரது விநோத வஸ்திரங்களை யுடுத்திக்கொண்டு சந்தோஷத்துடனே அந்தப் பட்டினம் வந்து சேர்ந்தார்கள். அப்போது அனேகம் குதிரைகள் யானைகள் சிவிகைகள் முதலிய வாகனங்களாலும், மோட்டார் வண்டி முதலிய வண்டிகளாலும், அந்தந்தத் தேயங்களி லிருந்து வரும் வரிசை களாலும். கணக்கற்ற ஜனங்களாலும், பட்டணத்துக்குப் புறத்தி லிருக்கும் சகல விடங்களும் நிறைந்து பேரோசை களினால் சமுத்திரம்போலவும் ஸகலபோக பாக்கியங்களால் தேவலோகம் போன்றும் விளங்கிற்று. அந்தச் சாலைப் புதூரென்னும் நகரி இனியும் நானாவிதங்களிலாய் அலங்கரிக்கப் பட்டு மங்களவாத்தியங்கள் முழங்க விளங்குமப் பட்டின மானது தம்மைப் போன்ற பொறுமையை உடைய தங்கம்மாளின் கலியாண மாதல் பற்றி அவளுடைய விவாகத்துக்குத் தாம் போகாதிருப்பது நன்றல்ல வென்றும் நாட்டத்தில் தாமே இயற்கையில் வகித்து கலியாணத்துக்கு வருபவரை சந்தோஷத்துடனே எதிர்கண்டு உபசரிப்பன போலுமிருந்தது.

ஸகல ஜனங்களும் கேசவப் பானு மார்த் தாண்டனுக்கும் தங்கம் மாள் பங்கஜாட்சிக்கும் நடக்கும் திருக்கலியாணம் தங்கள் வீட்டுக் கலியாண மாக நினைத்து உற்சாகத்துடன் மனக்களிப் படைந்து முகூர்த்த விராசியை எதிர் நோக்கிய வண்ணமாகவே இருந்தார்கள். இத்தாம் பட்டின வலங்காரமாயின பின்பு கலியாணவீடு, மண்டபம், சதிர் மண்டபம் முதலிய விடங்களும் விசித்திர வஸ்திரத்தாலும் கண்ணாடி களாலும், பூமாலைகளாலும், அகிற்புகையினாலும், பொற்றோரணங்களாலும் புதுக்கினார்கள். அந்தந்தச் சிறப்புகளும் நாம் இந்த மகாத்துமாக்கள் கலியாணத்துக்கு உபயோக மாகினோம் என்று சந்துஷ்டி அடைந்தனபோல் பிரகாசித்தன. அம்மண்டபத்தி னடுவில் விவாக வேதிகை செய்து பொற்றகட்டினால் அலங்கரித்து சுருக்கு, சுருவம், சங்கு, பாத்திரம், தர்ப்பைகள், பொரிகள், அக்ஷதைகள் முதலிய சுப வஸ்துக்களால் நிறைத்து புரோகிதர்கள் சிறந்த வேதியர் கூட்டத்தோடு நிறைந்திருந்தார்கள். செல்வகேசவமுதலியாரும் தமது புரோகிதரை அழைப்பித்து சமாவர்த்தனம் செய்து கொண்டு அனேகம் வஸ்திரங்கள் பசுக்கள் சுவர்ணங்கள் முதலிய ஆபரணாதிகளையும்விலையுயர்ந்த பட்டு வஸ்திரத்தையு மணிந்து பரிமள மிகுந்த கந்தமாதிகளைப் புனைந்து கொண்டு மணவாளக் கோலத்துடன் விளங்கினார்.

அங்கே வந்துள்ள சைவமரபினரான மாங்கல்யப் பெண்கள் புடைசூழ்ந்து மங்கலவாழ்த்துக்கள் கூறி உபசரித்து தங்கம்மாள் நலுங்கிட்டாயின பின்னர் புனுகுச் சட்டம், கொட்டம், ஆரியக் கொட்டம், நாகப்பூ, முத்தக்காசு, சயிலேலாகம், விலாமிச்சம் இருவேரி, மாஞ்சில், மலைபிருவேரி, பச்சிலை, கச்சோலம், அதிமதுரம், தக்கோலம், வாழைப்பூ, நன்னாரிப்பூ, கண்டில், வெண்ணெய், மகிழம்பூ, தவருசி, ஏலம், ஜாதிக்காய், வெண்குங்கிலியம், லவங்கம், நாகணம், மஞ்சட்டி, சண்பகமொட்டு, அரத்தை, சாம்பிராணி, தகரம், கருங்குங்கிலியம், வெட்டிவேர் என்னு முப்பத்திருபொருட் களுடன் கஸ்தூரி, குங்குமம், கற்பூரம், அகில், சந்தனம் என்னும் ஐவகை வாஸனைத் திரவியங்களும், நாவல், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், ஆல், அரசு, அத்தி, இத்தி, கோரைக்கிழங்கு, மாந்தளிர் என்னும், பத்துவகை துவர்ப்புத் திரவியங்களும் சேர்த்து, வெள்ளி லோத்திரப் பட்டையையும்,

அரைத்த சந்தன வண்டலையும் கலந்து, மிக்கப் பக்குவத்தோடு காய்ச்சப் பட்டிருக்கின்ற, பரிமளமிகுந்த தயிலத்தைக் கூந்தலிற்றிமிர்ந்து பின்னல்களை மெல்லனச் சிக்கறுத்து யானையின் பிடரியிற் கொணர்ந்த பல கங்காஜலத்தினாலும் வேத வேதியர்களால மந்திராவாகனஞ் செய்யப்பட்டு வாஸனை யூட்டியிருக்கின்ற பூரணகலச கங்காஜலத்தினாலும் திருமஞ்சனமாட்டி பனியைப் போன்ற மெல்லிய ஒற்றாடையால் சரம் புலர்த்தி இழையாயிரம் பொன்மதிக்கும் இந்திரவர்ணப்பட்டாடை யணிந்து அலங்கார மண்டபத்தழைத்து வந்து பீடத்திலிருத்தி அளகத்திரமகலச்சாம்பிராணிப் புகைபோடு அகிற்புகையும் புகட்டி கூர்வேல் விழிக்கு மையிட்டு புரிகையிரண்டினையும் திருத்தி தனத்துக்குமேலும் கழுத்துக்குக் கீழுமான விடத்தில் ஐந்து கணைகளையும் நாட்டியவாறு சந்தனம், புனுகு, கஸ்தூரி, கற்பூரம், சவ்வாது, குங்குமம் இவைகளணிந்து கூந்தலுக்குச் சம்பங்கி எண்ணெயிட்டு சீப்பினால்வாரி மேகமத்தியில் மக்சம்தோன்றினது போல் பொற்பாவட்டை எடுத்து உயர்ந்த இரத்நங்களை யழுத்திய சடைப் பில்லையும் பிறைபில்லையும் வைத்துப் பின்னிய ஜடைக்குக் குச்சுகுப்பியணிந்து, கிளியைப் போலவும், மயிலைப் போலவும், தாழம்பூவைப் போலவும் பசும்பொன்னாற் செய்து இரத்நங்களை யழுத்திய பலபூஷணங்களைப் பின் குழலில் முடித்து சந்திரப்பிரபை, சூரியப்பிரபை, முன் கொண்டைப்பூ சிரபூஷணம் முதலியதும் தலைக்கணிந்து, சுட்டி, முகவீரப்பட்டம், மூக்குப்பொட்டு, மூக்குத் தொங்கட்டம், நத்து முதலிய யணியை நெற்றியிலும் நாசியிலும் மாட்டி, குண்டலம், கத்திரிப்பூ, என்னப்பூ, கன்னப்பூ, கொப்பு, முருகு, நாரைமுட்டையை யொத்த நீரோட்ட நிறைந்த ஆணிமுத்துக் கோவையாலாகிய மயிர் மாட்டி இவை முதலிய அணிகளை செவியிலணிந்து, உட்கழுத்தில் மணி உயர்ந்த முத்துமாலை, மோகனமாலை, பஞ்சரெத்தினமாலை, நவரத்தினமாலை, பிறைவடம், கடலைமணித்தாழ்வடம், மின்னூல், கண்டசரம், உத்தாஞ்சம் இவை முதலானவைகளைக் கச்சையணிந்தக் குபாசலத்தை மறைக்க மார்பிலணிந்து வாகுவலயம், கடகம், கேயூரம், கங்கணம், அங்குலிகம், முதலிய பூஷணங்களைத் தோளிலும் முன்கையிலும் அகக்கையிலும் விரல்களிலும் திருத்தி

இடைக்கு 16-மணிக் கோவையை யுடைய மேகலாபரணங் கெட்டி முகப்பில்மாணிக்கம் பதித்த ஒட்டியணத்தைக் கட்டி பாதகடகம் தண்டை நூபுரம் பாதசரம் முதலிய காலணிகணி றைந்து கால் விரல்களுக்கு மீன்போலும் உருவம் செய்திருக்கும் பீலியென்னும் மோதிரங்களையிட்டு கூந்தற் சடைக்கு மல்லிகை முல்லை சண்பகம் சம்பங்கி முதலிய பரிமள மிகுந்த நறுமலர் மாலைகளை யணிந்து பாதத்துக்கு செம்பஞ் சூட்டி இத்தரம் சர்வ அலங்காரங்களும் பணிந்தாயின பின்னர் தெய்வத்தை வாழ்த்தித் திரு நீறிட்டு திருஷ்டிகழிய நீராஞ்சனம் முதலிய ஆர்த்தி யெடுத்து ஆன்றோர் உத்திரவுப்படி அலங்கார மண்டபத்திலிருந்து வேத வேதியர்கள் நியமித்திருந்த முகூர்த்த வேளையில் மாங் கிளியப் பெண்கள் புடைசூழ்ந்துவர தங்கம்மாளெழுந்து முரசு பேரிகை டமாரம், நாகசுரம், காகனம், பேப்க்காளம், துத்தாரி, சின்னம், பேரியாழ், சகோடயாழ், செங் கோட்டியாழ், மகரயாழ் முதலிய வாத்தியம் முழங்க, விருத்த வேதியர் பூரணகலசமெடுத் துச் செல்ல, மங்கள ஸ்திரீகள் மங்களம் பாட, கிளி நாகணவாப் பட்சி, கழங்கு, அம்மானை, பலவிதப் பிரதிமை, வெள்ளிலை, அடைக் காய், மான், புழுகு பூனை, சவ்வாதுப்பூனை. சவுரி மிருகம், அன் னம், மயில், குயில், சிறுமணிக்குன்று, ஆடற் கருவிகள் முதலிய வற்றைச் சேடிய ரெடுத்து புடைசூழ்ந்து வர, முத்துக் குடை சுற்றிலும் நெருங்க, ஆலவட்டம்போட, வெண்சாமரை வீச, ஆட வர் பலர் பின் செல்ல, அவ்வவர் கண்களாகிய வண்டுகள் ஸ்திரீகள் முகமாகிய கமலத்தில் மொக்க அனிச்சமலரும் அன்னத்தின் தூவியும் பரப்பிய வழியில நடந்து வருகின்றாள்.

அந்தக் கலியாணப் பெண்ணானவள் ஒருபொற்கொடியானது இரத்ந மயமான வளங் கொழுமியதுபோல் விளங்கினாள். அன்றி யும் பௌர்ணமியின் இராத்திரியானது தீபங்களினால் ஒளிர்வது போலுமிருந்தனள். கனகச்சித்திரஞ் செய்து மினுமினுக் கிட்ட வெண்பட்டு வஸ்திரத்தை இவளுக் குடுத்திய தெவ்வாறிருந்த தென்னில் பொற் சிறகினையுடைய அன்னங்கள் விளங்கிய சங்கா நதியானது ஆசாரவீனர்களால் தனக்கு நேரிட்ட அசுசியை நீக்கிக் கொள்ளும் பொருட்டு, மகா பரிசுத்தையான தங்கம்மாள் தேகத்தைக் கட்டிக் கொண்டது போன்று மிருந்தது. கஸ்தூரி

முதலிய வாசனைத் திரவியங்கள் இவள் சரீரத்திலுண்டாயின சுவபாவவாஸனைக்குத் தோல்விபை அடைந்தமையாலோ? அன்றி மற்ற யேது காரணத்தாலோ? அவைகளை நைய அரைக்கப் பட்டு தனது திருமேனி முழுதும் பூசப் பிரகாசித்தாள். பரிமள மிகுந்த மெல்லிய புஷபங்கள் பலவும் இவள் இபற்கை வாசனையோடுங் கூடிய சரீரம் மேன்மைக்குத் தோற்றன வென்று புலவர்கள் மதிக்கும் படி அம்மலர்களை நாரிஞலிறுகக்கட்டி அன்னவள் முடியிலும் கழுத்திலுஞ் சூட்டி சிறை செய்தார்கள். இவ்விதம் சிங்காரிக்கப் பட்ட தங்கம்மாளை புரோகித பத்னி முதலியப்ராமணப் பெண்களுடனே பங்கஜாட்சி முதலிய. (பங்கஜாட்சி ஸோமசுந்தரம் மனைவி. அதாவது அருணசலம் என்பானது தமக்கை) சைவமரபினராம் சுமங்கிலிகள் கந்த புஷ்பதாம்பூல முதலிய மங்களவஸ்துக்கள் நிரம்பியுள்ள பொற்பாத்திரத்தை ஏந்திக் கொண்டு அழகிப கலியாணப் பாடல்களைப் பாடி சகலதேவப் பெண்களும் இலக்ஷ்மியைச் சூழ்வது போல் சூழ்ந்து வாதியங்களும் சங்கீதங்களும் முழங்க மெள்ள மெள்ள அந்தப் புரத்திலிருந்து கலியாணமண்டபம் அழைத்து வந்ததும் மூகூர்த்த விராசியாயிற்று

இங்கே புரோகிதர்கள் செல்வகேசவ முதலியாரை யழைத்து பக்கத்தில் வைத்துக் கொண்டு சபைக்கும் பூஜையும் சங்கல்ப்பமும் செய்வித்து அங்குரார்ப் பணமும் பிரதிசரங்களும் நடத்தி தங்கம்மாளை பாணிக்கிரகணம் செய்வித்து, பெரியோர்களால் ஆசீர்வாதஞ் சொல்லிவைத்து பின்பு அவ்வேதிகைபில் அக்கினியில் உபசமாதானஞ் செய்து விதிப்படியே ஹோமம் வளர்த்தி, கேசவ முதலியார் கையினுல், தங்கம்மாளுக்கு மங்கல சூத்திரந் தருப்பித்து, வேதியருடைய ஆசீர்வாதமும் வேதவாத்தியமும் முழக்குவித்தார். பின்பு புரோகிதர்க்கிணைப்படி செல்வ கேசவமுதலியார் அக்கன்னியின் கைபிடித்து அக்கினி வேதிகையைப் பிரதட்சணமாக வந்து மந்திரத்துடனே அம்மி மிதித்து அருந்ததி தருசித்து; சாயாதேவியுடன் சூரியன் மேருகிரியை பிரதட்சணம் வருவதுபோல் அஷ்ட மங்கலத்துடன் பிரதட்சணம் செய்து உட்கார்ந்து கொண்டு அப்பெண்ணுக்கு சுமங்கிலியத்தன்மை வளரும் பொருட்டு புரோகிதருடைய அனுமதிப்படி மந்திரங்களை உச்சரித்துக் கொண்டு பொரி

களைக் கைகளால் வாரியிறைத்து, அக்கினியில் ஹோமஞ் செய்தார். இவ்வாறு நடந்தவுடனே எல்லாரையும் உட்கார வைத்து, மகா சபைக்கு சந்தனம் முதலியவைகளாற்பூஜை செய்து மங்கள அக்ஷதைகளைப் பெரியோர்கள் கைப்பிற் கொடுத்து, வேதவாக்கியங்களாலே ஆசீர்வாதம் செய்வித்தார். சுமங்கிலிகளும் மங்கள கீதம்பாடிக் கொண்டு ஆலத்தி முதலானவைகளைச் சுழற்றினர்கள். பின் பலவிதத் தானங்களும் வழங்கப்பட்டது. ஏழை இரப்போருக்கு அன்னம் பருகப்பட்டது. நிற்க, திருமங்கலிய தாரணமானவுடன் மாப்பிள்ளை, பெண் இருவரும் பந்துக்களில் பெரியோர்களுக்கு நமஸ்காரம் செய்யும் வழக்கம் போல் தங்கம்மாளின் பாட்டி பாக்கியத்துக்கு நமஸ்காரம் செய்தவுடன், அவள்

"ஆபன்பதி தான்றன்பதி யுற்றுற்ற வுளம்
மாயனாது சங்காக மட்டும் நேயமாய்
குன்றுபோல் விம்முங்கு விமலையாடன் னுடனே
இன்றுபோ லென்றுமிரு"

என்னும் செய்யுளைக் கூறி ஆசீர்வாதஞ்செய்தாள். இந்தப்படியே அடுத்த மறுநாள் பானுமார்த் தாண்ட முதலியாருக்கும் பங்கஜாட்சி அம்மாளுக்கும் விவாகம்பண்ணி வித்து தினதோறும் அனுஷ்டிக்க வேண்டிய அவுபாசனாதிகளையும் மற்றுமுள்ள சேஷஹோமங் களையும் நடத்தி வைத்தார்கள். செல்வகேசவ முதலியார் பின் ஓர் ஜட்ஜ் வேலையிலிருந்து, முறையே கூடுதல் சம்பளம் பெற்று, தங்கம்மாளுடன் ரதியும் மதனும் போலவும், பானுமார்த்தாண்ட முதலியார் பங்கஜாட்சி அம்மாளுடன் இந்திரனும் இந்திராணிபோல் ஓர் சப்கலக்டராகவும் இருந்து வந்த அக்காலையில் பங்கஜாட்சி மதிமுகம் போன்ற மூன்று பெண் மகவையும் அழகிய விரண்டு குமாரர்களையுமியன்றனள் எனின் தங்கம்மாள் மூன்று புதல்வர்களையும் இரண்டு புதல்வியரையும் பெற்று மனவொற்றுமை யுடனிருந்து இவ்வில்லறமென்னும் நல்லறத்தைக் கிரமமாகவும் செவ்வையாகவும் நடத்திவர்தகதையைச் சமர்ப்பித்தேன். ஓம் சுபம்! சுபம்!! சுபம்!!!

தங்கம்மாளென்னுந்தமிழ்நாவல்

முற்றிற்று.